யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

சங்கத்தமிழ்

குரல் – 118 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 01 2026

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

Sangathamil

சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

ஒரு
விடுதலை வீரனின் சாவு, ஒரு
சாதாரண மரண நிகழ்வல்ல
அந்தச் சாவு ஒர சரித்திர நிகழ்வு,
ஓர் உன்னத இலட்சியம்
உயிர்பெறும்
அற்புதமான நிகழ்வு, உண்மையில்
ஒரு விடுதலை வீரன்
சாவதில்லை, அவனது உயிராக
இயங்கி வந்த இலட்சிய நெருப்பு
என்றுமே அணைந்து
விடுவதில்லை.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

சுதந்திரத்தைத்தேடி
கப்டன்
பூமகள் (விஜயா)



பூத்துக் குலுங்கும் நெல் வயலும், பசுமை நிறைந்த பனை மரங்களும், பார்ப்பவர் மனங்கவரும் கடலும், கடலுடன் சேர்ந்த கண்ணகி அம்மன் கோவிலும், தம்மையே அறியாது தம் மனங்களைப் பறிகொடுக்கும் பக்தர் கூட்டமுந்தான் அவ் வூரின் சிறப்பு. அப்படி எல்லோரையும் தன்வசம் இழுக்கும் அந்த ஊர்தான் உதயராணியின் ஊர். அது…புங்குடுதீவு.

17.01.1966 அன்று செல்லையா. உருத்திராதேவியர் தம்பதிக் குப் புத்தம் புது மலராக வந்துதித்தாள் உதயராணி. அவர்களின் மூன்றாவது மகளான இவள் தனது தொடக்கக் கல்வியைப் புங் குடுதீவுப் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பயின்றாள். தனது மேற்படிப்பைப் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கும்போது தான் அந்த எண்ணம் தோன்றியது. நீண்டகாலமாக நீறுபூத்த நெருப்பாக அவள் உள்ளத்தினுள்ளேயே இருந்த எண்ணம் அகன் படிப்பை முடித்ததும் நிறைவேறியது.

தாய்போல் நேசித்த தாய் மண்ணை அந்நியனிடம் இனியும் விடமுடியாது என்றெண்ணியவள். புறப்பட்டாள் புலியாக; இனி அவள் கிளி அல்ல; புலியே.

படிப்பிலே படு சுட்டியாக இருந்த இவள், விளையாட்டிலும் துடியாட்டமாகவே இருந்தாள். குண்டெறிதல், தட்டெறிதல் சான்றிதழ்கள் எல்லாமே இவளின் கைக்கே வரும்.

அதுபோலவே பயிற்சிப்பாசறையிலும் சூட்டிகையாகவே இருந் தாள்.

ஒரு நாள் காலை. பாசறை மைதானத்திலே ஓடிக்கொண்டிருந்த அவளுக்கும் தோழிக்குமிடையே ஒரு உரையாடல்,

“எடி விஜயா! ஓடக் களைக்குது. இந்தமுறை நிண்டுவிட்டு, அடுத்த றண்ணோடை ஓடுவமே?”

“என்னடி நீ என்ன சின்னப் பிள்ளையோ? அக்காமார் ஆரும் உன்னை வீடு தேடிவந்து, இயக்கத்துக்கு வா எண்டு கூப் பிட்டதோ?” என்று தொடங்கி, இயக்கத்தையும் பயிற்சி எடுப் பதன் முதன்மைத்துவத்தையும் பற்றி ஓடிக்கொண்டிருக்கும் போதே ஒரு குட்டிப்பிர சங்கம் செய்துவிட்டாள். இதைக் கேட்ட தோழி மறுபேச்சுப் பேசாமல் ஓடினாள்.

இப்படி எதையுமே யோசித்து முடிவெடுக்கும் இயல்பைக்கொண் டவள் அவள்.

அன்றொரு நாள் தன் அறைத் தோழி ஒருத்தியிடம் அன்றைய வகுப்பில் பயிற்சியாசிரியர் கற்பித்ததைப்பற்றிக் கதைத்து அலசிக் கொண்டிருந்த போது ஒரு விசில்சத்தம். எல்லோரும் விழுந் தடித்துக்கொண்டு வரிசையாக நின்றார்கள். உடனேயே வரா விட்டால், தண்டனையில் ஓடுபாதையில் ஓடவேண்டுமே!

கப்டன் பூமகள் / விஜயா

உ

உதயராணி செல்லையா
புங்குடுதீவு

பிறப்பு:- 1966-01-17
வீரச்சாவு:- 1993-11-11

அணியின் முன்வந்த பயிற்சி ஆசிரியர். “எல்லோரும் சமைய லறைக்குப் போங்கோ. எல்லோருக்கும் புண்ணாக்குத்தரப் போறன்”, என்றார். விஜயாவின் அறைத்தோழி விஜயாவைப் பார்த்து, “என்னடி? எங்களைப் பார்க்க ஆடு, மாடு மாதிரியே கிடக்குது? புண்ணாக்குத் தரப்போகினமாம்” என்றாள். அதற்கு அவள். நீ ஏன் இப்படி அவசரப்பட்டுக் கண்டதையும் நினைச்சுக் கஸ்ரப்படுறாய்? ஏதாவது எங்களுக்குத் தெரியாத சாப்பாடா கவும் இருக்கலா மெல் லோடி? இப்படியெல்லாம் நினைக் காமல் வரிசைக்கு வா. உன்ரை கேள்விக்கு அங்க பதில் கிடைக்கும்” என்றாள்.

அங்கே சென்றவுடன் உண்மை நிலை புரிந்துவிட்டது. புண்ணாக்கு எனப்படும் எள்ளினால் ஆன உணவு தரப்பட்டது. விஜயாவைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன் தலையாட்டினாள் தோழி.

இப்படிச் சிரிப்பும் பயிற்சியுமாக நாட்கள் கழிந்து கொண்டிருந்த போதுதான், கோட்டைக்குச் செல்வதற்காக அழைப்பு வந்திருப்ப தாக எமக்கு அறிவிக்கப்பட்டது. இரவு பகலாக அங்கே கோட்டை வாசலையே நோக்கியபடி ஏந்திய துப்பாக்கிகளுடன் காவல் நின்ற எம் மூத்த சகோதரிகளுக்குத் துணையாக நாமும் அங்கே சென்றோம். எமக்குத் தரப்பட்ட வேலைகள் பதுங்குகுழி வெட்டுவது, காப்பகழிகளை அமைப்பதுஎன்பனவேயாகும்.

அங்கே எனக்கு அடுத்த குழுவினருடன் நின்ற இவளுக்கு. இடையிடையே என்னையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்படி ஒரு நாள் சந்திக்கும் போதுதான் நான் கேட்டேன்:

“என்னடி விஜயா? அடிபாட்டுக்கு எண்டு கூட்டிவந்து, இஞ்சை என்ன மண்வெட்டியோடையும் பிக்கானோடையுமோ அடிபாடு நடத்திறது?” இந்தக் கேள்விக்கு அவள் தந்தபதிலை இன்று நான் மட்டுமல்ல, அன்று எம்மோடு நின்ற இன்னும் பலரும் கூட ஞாபகத்தில் வைத்திருக்கின்றார்கள்.

“சுவர் இருந்தால்தான் சித்திரம் கீறலாம். அத்திவாரம் ஒழுங் காக இருந்தால்தான் கட்டிடம் பலப்பா நிக்கும் என்றாள்.”

உடனே நான், “சுவர் மறைவு இருந்தால் மணியா அடிபடலாம்” என்றேன். என்பதிலைக்கேட்டு அவள் மகிழ்வுடன் சிரித்தாள். இப்படிச் சின்னச் சின்னச் சிரிப்புகளுடனும் வேலைகளுடனும் நாட்கள் போய்க கொண்டிருந்தபோது, திரும்பவும் பயிற்சிப் பாசறைக்குச் செல்வதற்காக அழைப்பு வந்தது. மீண்டும் அங்கே சென்று பயிற்சியைத் தொடர்ந்தோம். பயிற்சி முடிவுக்கு வந்துவிட்டது.

ஒவ்வொருவரும் ஒவ்வொருதுறைக்குப் பிரிக்கப்பட்டனர். அப் போது விஜயாவின் பெயர் மருத்துவம் பிரிவில் வந்துவிட்டது. இதை அறிந்த விஜயாவின் முகம் போன போக்கை வார்த் தைகளால் சொல்ல முடியாது. விஜயாவின் முகம் மாறியதை அறிந்த எங்களின் பயிற்சி ஆசிரியர் கப்டன் திலகா விஜயாவைக் கூப்பிட்டு,

“என்ன விஜயா? ஒரு உயிரைக் காப்பாற்ற உங்களுக்கு விருப் பமில்லையோ? இயக்கத்தில் இதுவும் வேலைதான். இதுவும் சண்டை பிடிப்பது போல முக்கியமானதுதான்” என்றார்.

கனவு நினைவெல்லாம் சண்டையைப் பற்றியே எண்ணிக்

கொண்டிருந்தவளின் எண்ணத்தில் மண் விழுந்தது. அவள் இதயத்திலே சிறு புயல் வீசி ஓய்ந்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, செய்கிறேன் அக்கா" என்றாள்.

அன்றுமுதல் அவள் மருத்துவப் போராளிகளுக்குரிய பயிற்சிக் குத் தன்னை உட்படுத்தினாள். மூன்று மாதகாலம் இடை விடாத படிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவள் நல்ல மதிப்பெண்களைப் பெற்றது மட்டுமல்ல, நல்ல மதிப்பையுமே பெற்றிருந்தாள்.

சிறந்த ஓர் மருத்துவப் போராளியாக வெளியேறினாள். எந்த ஒரு பிரிவானாலும் அதிலே முழுமையான அறிவைப் பெற்றிருக் கவேண்டுமெனப் பேரவா கொண்டவள் அவள். அவளின் எண்ணம் அப்போது நிறைவு செய்யப்படமுடியாது போனாலும், தற்போதைய மருத்துவப் போராளிகள் முழுமையான ஓர் பூரண அறிவைப் பெற்றிருக்கின்றார்கள். செயற்பட்டுக்கொண்டிருக் கின்றார்கள். அவளது அன்றைய எண்ணம் இன்றைய போராளிகளால் நிறைவு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. "எந்தத் துறையானாலும் எந்தப் பிரிவானாலும் அதில் ஆண்-பெண் என்ற பேதம் கூடாது" என்ற கொள்கையுடையவள் அவள். "எல்லோருமே விடுதலைப் புலிகள்" என்று சொல்பவள்.

நீண்ட காலமாக கனவு கண்டதைப் போல் அன்று அவளை அழைத்து,

"நீ குறூப்புக்குப் போகவேண்டு மெண்டு நிக்கிறாய். சிரி நீ இண் டையிலிருந்து குறூப் போடை போய் நில். உன்ரை மெடிக்ஸ் சாமான்கள் எல்லாத்தையும் பொறுப்பாளரிட்டை ஒப்படைச்சிட்டு வா. நான் றைபிள்தாறன்" என்றார் தளபதி.

அவளின் சந்தோசத்திற்கு அளவே இல்லை. காணுகின்ற எல் லோரிடமும் தான் சண்டைக்குப் போகப்போகிற விடயத்தையே சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவளின் முதலாவது அடிபாடு கட்டைக்காடு ஆயுதக்கிடங்கு எம்மால் கைப்பற்றப்பட்ட அடிபாடுதான். இவ்வளவு நாளும்கூட அவள் எத்தனையோ சண்டைகளில் பங்குபற்றியிருக்கிறாள். ஆ.க. வெ தாக்குதல், மின்னல் போன்ற மிக முக்கியமான தாக் குதல்களில் அவன் மருத்துவப் போராளியாகக் களம் கண்ட வள். இப்போதுதான் இராணுவத்தோடு நேரடியாக மோதினாள். இதுதான் அவள் அன்றும் இன்றும் களம் செல்வதில் உள்ள வித்தியாசம். பலாலி 15 மைல் நீளமான காவலரண்கள், அப் படியே தொடர்ந்து அளவெட்டி, மண்கிண்டிமலை, புலோப்பளை எனப் பல சண்டைகளுக்குச் சென்று வந்தாள். பூநகரி அடிபாட் டுக்கான பயிற்சியில் ஈடுபட்ட போராளிகளுடன் தன்னையும் இணைத்துக்கொண்டாள். அப்போதுதான் அவள் என்னைச் சந்தித்தாள்.

"எப்படிப்போகுது? முகம் ஒரு மாதிரி இருக்குது. என்ன ஏதும் வருத்தமோ?" நான்கேட்டேன்.

"வருத்தமோ? அப்படியொண்டும் இல்லை. இருந்தாப் போலை அம்மான்ரை யோசினை வந்திட்டுது. அதுதான் இந்தச் சண்டை முடிய ஒருக்காப் போய் எல்லோரையும் பாத்துவிட்டு வர வேணும்" என்றாள்.

அதற்கு நான் என்னடி "லீவில" வீட்டை விட்டாலும், வரச் சொன்ன நேரத்துக்கு முந்தியே வந்திடுவாய். இப்ப என்னடா வெண்டால் லீவு கேக்கப்போகிறன் எண்டிறாய். என்ன சொல்ல வேணும்? ஏதேனும் சொல்லுறதெண்டால் என்னட்டைச் சொல்லன். நான்போய்ச்சொல்லிவிடுறன்" என்றேன்.

"நல்லா இருக்கடி நீ சொல்லிறது. நீ வீட்டுக்குப் போக. உன்னை அம்மா பிடிச்சு வைச்சுக் கொண்டு எங்க என்ரை பிள்ளை நிக்கிறாள்? நானும் போய்ப் பாக்கப் போறன்" எண்டு சொல்ல, நீதான் வீணாக் கஸ்ரப்படுவாய். அது இருக்கட்டும். எல்லாம் சண்டை முடியத்தான். உன்ரை வேலை எல்லாம் எப்படி?" என்று என்னைக்கேட்டாள்.

"எல்லாம்நல்லம்"

எனச்சிரித்துவிட்டு, அவளின் வீட்டுக் கேட்க வாயைத் கதை யைக் திறந்தேன்.

"அதை இப்ப விடு எண்டெல்லோ சொன்னனான்" என்று கூறி விட்டு, பயிற்சி வாழ்க்கையைச் சொல்லிச் (பூநகரிச் சமருக்கான பயிற்சி) சிரிக்கின்றாள். பழையவைகளைப் பேசிக்கொண் டிருக்கும் போது "லைன் அப்" என அறிவிக்கப்பட்டது. பறந்து விட்டான்.

பின்பு அவளை, சண்டை தொடங்கப்போகின்றகடைசி நேரம் சந்தித்தேன். என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "இதுதான் கடைசி அடிபாடோ, என்னவோ?" என்றுகூறினாள்.

"என்ரை கடைசி மூச்சுவரையும் சண்டை பிடிப்பன். காயப்பட் டிட்டன் எண்டு பின்னுக்கு வரமாட்டன். ஆமி முழுவதும் செத் திட்டான், முகாம் எங்களிடம் எண்டால்தான் நான் வருவன். அப்படி நான் காயப்பட்டாலும் என்னோடை இறங்கிற மருத் துவப் போராளியிட்டை மருந்து கட்டிக்கொண்டு நிண்டு அடி படுவன். சண்டை முடிய வீடியோக் கொப்பியைப் பாரன். நான் என்னமாதிரி அடிபட்டனான் எண்டு. வீடியோ எடுக்கிற போராளி என்னை எப்படி எடுக்கிறா எண்டுபாரன்" என்று சொல்லிப் போனவள் போனவள்தான்.

பூநகரித் தளத்தின் பெரும் பகுதி எம்மிடம் வீழ்ந்தது என்ற வெற்றிச் செய்தியுடன். விஜயாவின் வீரசாவுச் செய்தியும் கலந்து வந்து எம்காதுகளில் மோதியது. எப்படியெல்லாம் சிரித்துக் கதைத்து, பம்பலடித்துவிட்டு, இந்த மண்ணின் வீரப்புதல்வியர் வரிசையில் அவளும் ஒருத்தியாய்.. கல்லறையிலிருந்து கண் சிமிட்டும் வாசமலர்களுள் ஒன்றாய்…



விஜயா நன்றாக சண்டை பிடித்தானாம். உயிருள்ள வரை விடாது சண்டை பிடித்தாளாம். அவளுடன் நின்று சண்டை பிடித்த போராளிகள் பின்னர் இவ்வாறு சொன்னார்கள்.

"தமிழீழம் வரும்வரை போராட வேணும். இடையில எந்தக் கஸ்ரம் வந்தாலும் தமிழீழத்தை மறக்கக்கூடாது"

என்று அடிக்கடி அவள் வாயிலிருந்து கேட்ட நாம், இன்று அவளின் நினைவுடன் நேரான பாதையில்…

-யோகா- களத்தில் 07.04.1995

தமிழீழச் செய்திகள்



யாழில் நிலத்தடி நீர் தொடர்பான கலந்துரையாடல்

16.03.2026

வடமாகாண நீர்வளம் பேணுதற்கான பேராய்வுச் செயற்திட்டத் தினரின் ஏற்பாட்டில் நீர்வளம் சார்ந்த கலந்துரையாடல் அண்மையில் யாழ். கந்தர்மடத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்ல மண்டபத்தில் சுவீடன் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இளைப்பாறிய மூத்த விரிவுரையாளர் கலாநிதி.செல்வராஜா பத்மராஜா கலந்து கொண்டு "யாழ்ப்பாண நிலத்தடி நீரின் நீடித்த நிலைத்திருப்பும் நீர் தொடர்பில் இலங்கை முழுவதிலிருந்தும் கற்ற பாடங்களும்" எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களின் நீராதாரம் தொடர்பில் பல உதாரணங்களுடன் விளக்கமாக எடுத்துரைத்தார்.

கிளிநொச்சி விவசாயத்திணைக்களத்தின் மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான காணி சிறிலங்கா இராணுவத்தினரால் விடுவிப்பு

16.03.2026

கிளிநொச்சி - விவசாயத்திணைக்களத்தின் மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான 07 ஏக்கர் காணி சிறீலங்கா இராணுவத்தினர் வசமிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இது வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையத்திற்குரிய 07 ஏக்கர் காணி விடுவிப்பு ஆகும்.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

ரவிகரன் எம்.பியின் தொடர் அழுத்தத்தினால் குஞ்சுக்கால்வெளியில் அத்துமீறி உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொண்ட முல்லை மாவட்டச் செயலாளர் அ. உமாமகேஸ்வரன்

15.03.2026

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவில், கொக்குதொடுவாய் குஞ்சுக்கால் வெளியிலுள்ள தமிழ்மக்களின் பூர்வீக தனியார் காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு மகாவலி அதிகாரசபை பெரும்பான்மை இனத்தவர்களுக்கு முறையற்ற விதத்தில் அனுமதி வழங்கியுள்ள நிலையில், அங்கு தமிழ் மக்களின் பூர்வீக தனியார் காணிகளில் பெரும்பான்மை இனத் தவர்கள் அடாவடித்தனமாக அத்துமீறி உள்நுழைந்து உப்பளம் அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே குறித்த அத்துமீறிய உப்பளம் அமைக்கும் செயற் பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ச்சியாக உரிய தரப்பினருக்கு அழுத்தங்களை வழங்கிவந்தார்.

இந்நிலையில் குறித்த உப்பளம் அமைக்கப்படும் இடத்தின் நில உரிமை தொடர்பில் ஆராயும் வரை குறித்த உப்பளம் அமைக் கும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்றினை அனுப்பிவைத் துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறிப்பாக கடந்த23.02.2026 அன்று கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகளை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அழைத்துச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இந்த அத்துமீறிய செயற்பாடுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச்செயலாளர் அ.உமாமகேஸ்வரனுக்குத் தெரியப்படுத் தியதுடன், குறித்த அத்துமீறல் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்து மாறும் வலியுறுத்தினார்.

அத்தோடு இவ்விடயம் தொடர்பில் கவனஞ்செலுத்துமாறு கடந்த 25.02.2026அன்று வடக்கு மாகாண ஆளுநருக்கு நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களால் கடிதம் ஒன்று அனுப் பிவைக்கப்பட்டதுடன், கடந்த 26.02.2026 அன்று முல்லைத் தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்கவிடமும் நேரடியாக கடிதமொன்று கையளிக் கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து 27.02.2026அன்று குறித்த குஞ்சுக்கால்வெளி பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அங்கு அத்துமீறி உப்பளம் அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மை இனத்தவர்களின் செயற்பாடு களைத் தடுத்து நிறுத்தினார். தொடர்ந்து அதே தினத் தில் கொக்குத்தொடுவாய்ப் பகுதி தமிழ் மக்களுடனும், காணி உரி மையாளர்களுடனும் முல்லைத்தீவு மாவட்டச்செயலகத் திற்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த அத்துமீறிய உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை உட னடியாக தடுத்து நிறுத் துமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் கரைதுறைப்பற்று உதவி பிரதேசச் செயலாளர் ஆகியோரிடம் தெரிவித் திருந்தார்.

இத்தகைய சூழலில் குறித்த அத்துமீறிய உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை பெரும்பான்மை இனத்தவர்கள் தொடர்ந் தும் முன்னெடுத்து வந்த நிலையில், குறித்த அத்துமீறல் செயற் பாட்டை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்தொள்ளுமாறு கடந்த 07.03.2026 அன்று மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களால் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டதுடன், குறித்த கடிதம் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமர சூரிய மற்றும் விசாயம், கால்நடை, காணிமற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, முல்லைத்தீவு மாவட்ட அபி விருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் நாடாளு மன்ற உறுப்பினரால் பிரதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது தொடர் அழுத்தத்தினையடுத்து குறித்த உப்பளம் அமைக்கப் படும் இடத்தின் நிலஉரிமை தொடர்பில் ஆராயும் வரை குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு கடந்த 10.03.2026 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடித மொன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

"மகாவலி அதிகார சபையினால் தனியார் காணிகளை உப் பளம் அமைப்பதற்காக வழங்கியமை தொடர்பான முறைப்பாடு" எனத் தலைப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட் டிருப்பதாவது,

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக, பல நில உரிமையாளர்கள், கிராம மட்ட அமைப்புகள் மற்றும் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கௌரவ துரைராசா ரவிகரன் அவர்களினால் கடந்த 2026 பெப்ரவரி 27 அன்று என்னிடம் ஒரு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவின் குஞ்சுக் கால்வெளி தொட்டப்பனிக்கட்டி பகுதியில் அமைந்துள்ள சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பு, முறையான அனுமதியின்றி உப்பளம் அமைப்பதற்காக மகாவலி அதிகார சபையினால் ஒதுக்கப்பட் டிருப்பதாகவும், சம்பந்தப்பட்ட நபர் தனியார் காணிகளை ஆக் கிரமித்துள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்த முறைப்பாட்டை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் உங்கள் பார்வைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது, நில அளவைத் திணைக்களத்தின் பதிவுகளின்படி, கேள் விக்குரிய இப்பகுதியில் TOPO PP70 வரைபடத்தின் Inset இலக்கங்கள் 17, 18 மற்றும் 19 ஆகியவற்றுக்குள் உள்ளடங்கும் தனியார் காணிகளும், அவற்றுக்கு இடைப்பட்ட மேய்ச்சல் நிலங்களும் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

இப்பகுதியில் மேலும் தவறான புரிதல்களையும் பதற்றத்தையும் தவிர்ப்பதற்காக, தற்போது உப்பளங்கள் அமைக்கப்பட்டு வரும் நிலத்தின் உரிமையை முறையாக விசாரணை செய்து உறுதிப் படுத்துவது அவசியமாகும். எனவே, நிலத்தின் உரிமை திட்ட வட்டமாக உறுதிப்படுத்தப்படும் வரை, இந்த நடவடிக்கைக்காக வழங்கப்பட்ட அனுமதியை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், மாவட்ட அபிவிருத் திக் குழுக் கூட்டத்தில் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப் படலாம். இதன் மூலம் இவ்விடயம் வெளிப்படையான மற்றும் சட்டபூர்வமான முறையில் தீர்க்கப்படுவதை உறுதி செய்ய முடியும் - என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 12.03.2026 வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாயம், கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையிலான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், குறித்த அத்துமீறிய உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நிறுத்து வதுடன், உரியவிசாரணைகளை மேற்கொண்டு, சட்டவிரோத அனுமதி வழங்கியோருக்கும், அத்துமீறிய செயற்பாடுகளில் ஈடுபட்டோருக்கும் எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு முல்லைத்தீவை மாவட்டச் செயலர் உமாமகேஸ்வரனிடம் இவ்விடயத்தை பாரப்படுத்துவதாக அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.











அனுர அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் தமிழர்களது பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கப்படும் கொக்குத்தொடுவாய் மத்தி குஞ்சுக்கால்வெளியில் மக்கள் போராட்டம் – 16.03.2026

16.03.2026

அனுர அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் தமிழர்களது பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கப்படும் கொக்குத்தொடுவாய் மத்தி குஞ்சுக்கால்வெளியில் போராட்டம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி விடயம் சார்ந்து மூன்று மாணவர்களை சிறீலங்கா பொலிஸ் விசாரணைக்கு அழைப்பு

17.03.2026

சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் தேசியக் கொடி இறக்கப்பட்டு, கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மூவருக்கு யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் உள்ளிட்ட மூன்று மாணவர்களை விசாரணைக்கு வருமாறு பல்கலைக்கழக பதிவாளர் ஊடாக எழுத்து மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதம் 13ஆம் திகதி திகதியிடப்பட்டு , 16ஆம் திகதியான நேற்றைய தினம் காலை 09.30 மணிக்கு விசாரணைக்கு சமூகமளிக்க வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், கடிதம் 17ஆம் திகதியான இன்றைய தினமே பதிவாளரால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் ஊடாக அனுப்பட்ட கடிதத்திற்கு தாம் விசாரணைக்கு செல்ல வேண்டுமா என்பது தொடர்பிலும் 13ஆம் திகதி திகதியிடப்பட்டு 16ஆம் திகதிக்கு விசாரணைக்கு வருமாறு கோரப்பட்ட கடிதம் 17ஆம் திகதியே பதிவாளரால் கையளிக்கப்பட்டமையால், விசாரணைக்கு செல்வது தொடர்பில் மாணவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

பின்னணி.

சுதந்திர தினத்தன்று தேசிய கொடியை இறக்கி கறுப்பு கொடியேற்றியமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு பணித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் இன நல்லிணக்கப் பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர், மாணவர் ஒழுக்காற்று அதிகாரி மற்றும் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்தது.

குறித்த விசாரணை அறிக்கையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விசாரணைகளின் அடிப்படையில் கறுப்பு கொடியேற்றிய சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையதாக 2 மாணவிகள் உள்ளிட்ட 30 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாணவர்களிடம் பல்கலைக்கழக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, சிறுபான்மைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு உரிய மதிப்பு வழங்கப்படாத வரை இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்கு உகந்த நாளல்ல

என்பதை வெளிப்படுத்தவே இந்தச்செயலில் ஈடுபட்டதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், கடந்த 11ஆம் திகதி பல்கலைக்கழகத்தினுள் தமது வாகனத்தில் சென்று துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரிடம் சுமார் 3 மணி நேரம் விசாரணைகளை முன்னெடுத்து வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர்.

பொலிசார் வாகனத்துடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் சென்று, பல்கலைக்கழகத்தினுள் வைத்து துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரிடம் சுமார் 3 மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டமை தொடர்பில் மாணவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.



දුරකථන අංකය } 0212217904
TP No

මගේ අංකය } DCDB/ /2026
My No
ඔබේ අංකය }
Your No

කොට්ඨාස අපරාධ විමර්ශන කාර්යාංශය,
ශ්‍රී ලංකා පොලීසිය -යාපනය.
மாவட்ட குற்றத்தடுப்பு காரியாலயம்
பொலிஸ் நிலையம் - யாழ்ப்பாணம்.
Divisional Crime Detective Bureau
police Headquarters – jaffna.

දිනය
Date 2026.06.13

email }- dcdc.jaffna@police.gov.lk

பதிவாளர் ஐயா
யாழ் பல்கலைகழகம்
யாழ்ப்பாணம்

மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளுதல்

2026.02.04 ம் திகதி நடாத்தப்பட்ட தேசிய சுதந்திர தினத்திற்கு யாழ்ப்பாணம் பல்கழைகலகத்தில் உயர்தப்படட்டு காணப்பட்ட தேசிய கொடியினை யாழ்பாம் சிரேஸ்ட மாணவர் சங்கத்தின் தலைவர் மற்றும் கலைபிரிவு சங்கத்தின் தலைவர உட்பட்ட மாணவர்கள் சிலர் மூலம் அந்த தேசிய கொடியினை நிலத்தில் எறிந்து கருப்பு நிற கொடியினை உயர்த்தியது தொடர்பாக கௌரவ பொலிஸ்பதி ஐயாவின் கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐயாவின் கட்டளை மற்றும் ஆலோசனைக்க அமைய எனது காரியாலயத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு கீழ் பெயர்குறுஜப்பிட்ட மாணவர்களை 2026.03.16ம் திகதி காலை 0930 யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொண்டு தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(01). தரமலிங்கம் ஜதுர்சன் தே.அ.அ.இல (2021/A/422) கலைபிரிவு சங்க தலைவர்
(02). தயாபரன் லஜிதரன் தே.அ.அ.இல - சிரேஸ்ட மாணவர் சங்க தலைவர்
(03). ஏ.அபிசேக் (2022/A/506)

பொறுப்பதிகாரி
மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு
யாழ்ப்பாணம்.

இந்நிலையில் கொடியேற்றப்பட்ட வேளை பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டவர்களிடமும், அடையாளம் காணப்பட்ட சில மாணவர்களிடமும் விசாரணைகளை முன்னெடுத்து , வாக்கு மூலங்களை பதிவு செய்ய குற்றத்தடுப்பு பிரிவினர் நடவடிக்கை எடுத்து வந்த நிலையில், மாணவர் ஒன்றிய தலைவர்கள் உள்ளிட்ட மூவரிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்ய அவர்களை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா இராணுவத்தின் பிடியிலுள்ள முல்லை. கேப்பாபிலவு மக்களின காணிகளை விடுவிக்க வலியுறுத்திய ரவிகரன் துரைராசா எம்.பி: காணி விடுவிப்பு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் அறிக்கை கோரியுள்ள சிறீலங்கா ஜனாதிபதி செயலகம்

18.03.2026

முல்லைத்தீவு - கேப்பாபிலவில் சிறீலங்கா இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி கடந்த 14.01.2026அன்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் ஜனாதிபதி அனுர குமாரதிஸாநாயக்கவிற்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு அமைய, பாதுகாப்புப் பிரிவினரிடம் வினவுதல்களை மேற்கொண்டு கேப்பாபிலவு பிரதேசத்தில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான விரிவான ஒரு அறிக்கையை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி செயலகம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் கடந்த 07.01.2026 அன்று இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முல்லைத்தீவு - கேப்பாபிலவில் தமிழ் மக்களுக்குரிய காணிகள் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும், விடுவிக்கப்படாத மக்களின் காணிகளுக்கு பதிலீட்டுக் காணிகள் வழங்கப்பட்டதுடன், அந்த மக்களுக்கு வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரிகளால் ஜனாதிபதியிடம் பொய்யான தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த கூட்டத்தில் இவ்வாறு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட பொய்யான தகவலுக்கு உடனடியாக எதிர்ப்புத்தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேப்பாபிலவில் 55 பேருக்குரிய 59.5 ஏக்கர் காணிகளும் 4 பேருக்குரிய 100 ஏக்கர் மத்தியவகுப்புக் காணிகளுமாக மொத்தம் 59 பேருக்குரிய 159.5 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் கேப்பாப்புலவில் விடுவிக்கப்படவேண்டியுள்ளதாக ஜனாதிபதியிடம் உண்மைநிலையினை சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் கேப்பாபிலவு காணிவிடுவிப்பு விடயம் தொடர்பாக அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான அனுரகுமார திசாநாயக்கவால் இதன்போது இராணுவத்தினரிடம் கோரப்பட்டிருந்தது.

இத்தகையசூழலில் கேப்பாபிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 159.5 ஏக்கர் மக்களின் காணிகள் தொடர்பான உண்மையான விபரங்களை தாமும் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதற்கமைய கடந்த 12.01.2026அன்று முல்லைத்தீவு மாவட்ட மாவட்டசெயலாளர் அ.உமாமகேஸ்வரனை நேரில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேப்பாபிலவில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மக்களின் காணிகளின் விபரங்கள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினமே கேப்பாபிலவில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மக்களின் காணிகள் தொடர்பான அதிகாரபூர்வ தரவுகளை தம்மிடம் கையளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு கடிதமொன்றையும் அனுப்பிவைத்தார்.

04

துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

பார்லிமேன்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

மின்னஞ்சல் E-mail ravikaranmpoffice@gmail.com
எனது இல. My No. Mul/Sec/2026/002
கைப்பேசி Mobile +94770657751
உமது இல. Your No.

2026.01.14

மாண்புமிகு இலங்கை சனாதிபதி அவர்கள்
His Excellency the President of Democratic Socialist Republic of Sri Lanka.

மாண்புமிகு ஐயா,
Your Excellency,

முல்லைத்தீவு -கேப்பாபிலவு காணி விடுவிப்பு தொடர்பானது
Release of Lands – Kepapilavu, Mullaitivu District

மேற்படி விடயம் தொடர்பாக, கடந்த 2025.01.07 அன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

The above matter was discussed at during the Ministerial Consultative Committee meeting held at the Parliamentary Complex on 07 January 2025.

குறித்த கூட்டத்தின் போது, கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு தொடர்பாக மொத்தம் 44 பேருக்கு காணிகள் விடுவிக்க வேண்டியிருந்ததாகவும் அதில் பெரும்பாலானோரின் காணிகள் விடுவிக்கப்பட்டதாகவும் சில அதிகாரிகளால் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், குறித்த தகவல்களில் பல உண்மைக்குப் புறம்பானவை என நான் கூட்டத்திலேயே தெளிவாக மறுத்து உரையாற்றியிருந்தேன். மேலும், இவ்விடயம் தொடர்பான அதிகாரபூர்வமான மற்றும் துல்லியமான தகவல்களை கரைத்துறைப்பற்று பிரதேச செயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் ஊடாகவே பெற்றுக்கொள்ளமுடியும் என்பதையும் எடுத்துரைத்திருந்தேன்.

At the said meeting, it was stated by certain officials that land was to be released to 44 individuals in Kepapilavu and that most of such lands had already been released. However, several statements made in this regard were factually incorrect. I categorically refuted those claims during the meeting and clearly stated that accurate and official information relating to this issue could only be obtained through the Maritimepattu Divisional Secretariat and the Mullaitivu District Secretariat.

அதற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கு நான் அனுப்பிய கடிதத்திற்குப் பதிலாக, DSM/LAN/KEP/MPP/2025/21 ஆம் இலக்க 2026.01.12ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக மாவட்டச் செயலர் எனக்கு அனுப்பிய அதிகாரபூர்வ தரவுகளை தங்களின் மேலான பார்வைக்கும் அவதானத்திற்கும் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

Accordingly, further to my letter addressed to the District Secretary, Mullaitivu, I hereby submit for Your Excellency's kind perusal the official data forwarded to me by the District Secretary on 12 January 2026 with the letter no DSM/LAN/KEP/MPP/2025/21

[1/2]

மக்கள் தொடர்பகம் - மன்னார்
Public Relations Office - Mannar
Cilawaththurai, Mannar
TP No : 076 8640 413

தலைமை அலுவலகம்
Head Office
Kallappadu North, Mullaitivu
TP No : 076 8450 411

மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு
Public Relations Office - Puthukkudiyiruppu
Iranappalai Road, Puthukkudiyiruppu
TP No : 076 8850 412

துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

பார்லிமேன்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

மின்னஞ்சல் E-mail ravikaranmpoffice@gmail.com
எனது இல. My No.
கைப்பேசி Mobile +94770657751
உமது இல. Your No.

பதினாறு ஆண்டுகளாக தங்களின் சொந்த காணிகளில் குடியேறக் கோரிக்கொண்டிருக்கும் முல்லைத்தீவு – கேப்பாபிலவு மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை இயல்தக விரைவில் நிறைவேற்றும் வகையில் அவர்களை அவர்களின் சொந்த மண்ணிலேயே பாதுகாப்பாகவும் மரியாதையுடனும் குடியிருக்கச் செய்வதற்கு தேவையான உத்தரவுகளையும் உடனடி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

I humbly request Your Excellency to take immediate and necessary steps, including issuing appropriate directions, to ensure that the long-standing aspiration of the people of Kepapilavu, who have been seeking resettlement on their own lands for the past sixteen years, is fulfilled without further delay, enabling them to resettle on their ancestral lands with security and dignity

மேற்படி நீடித்த மனிதாபிமான வேண்டுகைக்கான தங்கள் கனிவான கவனத்தையும் விரைவான – நீதியான நடவடிக்கையையும் எதிர்பார்க்கிறேன்.

I earnestly look forward to Your Excellency's kind attention and prompt intervention in this long-standing humanitarian issue.

மக்கள் சேவையிலுள்ள | In the service of the people,

[2/2]

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

மக்கள் தொடர்பகம் - மன்னார்
Public Relations Office - Mannar
Cilawaththurai, Mannar
TP No : 076 8640 413

தலைமை அலுவலகம்
Head Office
Kallappadu North, Mullaitivu
TP No : 076 8450 411

மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு
Public Relations Office - Puthukkudiyiruppu
Iranappalai Road, Puthukkudiyiruppu
TP No : 076 8850 412

அதற்கமைய 12.01.2026ஆம் திகதியிடப்பட்ட DSM/LAN/KEP/MPP/2025/21ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரால் கேப்பாபிலவில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மக்களின் காணிகள்தொடர்பான அதிகாரபூர்வ தரவுகள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடமிருந்து பெறப்பட்ட கேப்பாபிலவில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மக்களின் காணிகள்தொடர்பான அதிகாரபூர்வ தரவுகளை கடந்த 14.01.2026 அன்று ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு கடிதத்துடன் இணைத்து அனுப்பிவைத்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறு இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள கேப்பாபிலவு மக்களின் பூர்வீக வாழ்விடத்தை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 18.01.2026 அன்று கேப்பாபிலவு மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, கேப்பாபிலவு மக்களின் காணிவிடுவிப்புத் தொடர்பான கோரிக்கைக் கடிதத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தவகையில் பதினாறு ஆண்டுகளாகத் தமது சொந்த நிலத்தில் குடியேறக் காத்துக்கொண்டிருக்கும் கேப்பாபிலவு மக்களை அவர்களின் சொந்த நிலத்தில் பாதுகாப்பாகவும், மரியாதையுடனும் குடியிருக்கச்செய்வதற்கு தேவையான உத்தரவுகளையும், உரிய நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளுமாறு குறித்த ஜனாதிபதிக்கான கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினரால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 14.01.2026 அன்று நாடாளுமன்ற உறுபினர் ரவிகரன் கேப்பாபிலவு காணிவிடுவிப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தை மேற்கோள் காட்டி ஜனாதிபதி செயலகம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிரதேசத்திலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பானது எனத் தலைப்பிடப்பட்டுள்ள PS/DA/SAD/06/41-Vol.01ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

மேற்குறித்த விடயம் தொடர்பாக வன்னி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. துரைராசா ரவிகரன் அவர்களால் கௌரவ சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட 2026.01.14 திகதிய கடிதம் தொடர்பானது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

அந்த கடிதத்தின் மூலம், முல்லைத்தீவு கேப்பாபிலவு பிரதேசத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவிலான காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்களால் மாதாந்தம் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படும் காணி விடுவிப்பு பற்றிய முன்னேற்றம் தொடர்பான ஆவணத்தை ஆய்வு செய்தபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காணிகள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருப்பது அவதானிக்கப்படுகின்றது.

அதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிரதேசத்

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இலக்கம்: PS/DA/SAD/06/41-Vol.01
திகதி : 2026 மார்ச் மாதம் ஆம் திகதி

செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிரதேசத்தில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக

மேற்குறித்த விடயம் தொடர்பாக வன்னி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. துரைராசா ரவிகரன் அவர்களால் கௌரவ சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட 2026.01.14 திகதிய கடிதம் தொடர்பானது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

02. அந்த கடிதத்தின் மூலம், முல்லைத்தீவு கேப்பாபிலவு பிரதேசத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், பெருமளவிலான காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. தங்களால் மாதாந்தம் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படும் காணி விடுவிப்பு பற்றிய முன்னேற்றம் தொடர்பான ஆவணத்தை ஆய்வு செய்தபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காணிகள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருப்பது அவதானிக்கப்படுகின்றது.

04. அதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிரதேசத்தில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான விரிவான ஒரு அறிக்கையை பாதுகாப்புப் பிரிவினரிடம் வினவுதல்களை மேற்கொண்டு உடனடியாக அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/ டபிள்யூ.எம்.எஸ்.பி. விரசிங்க
சனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(அபிவிருத்தி நிர்வாகம்)
சனாதிபதியின் செயலாளருக்காக

தொலைபேசி இலக்கம் : +94114354354 - 3562
மின்னஞ்சல் : sas2.dcd@presidentsoffice.lk

பிரதி :

01. திரு. துரைராசா ரவிகரன் அவர்கள், வன்னி தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் - தயவுடன் தகவலுக்காக

16 MAR 2026

தில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான விரிவான ஒரு அறிக்கையை பாதுகாப்புப் பிரிவினரிடம் வினவுதல்களை மேற்கொண்டு உடனடியாக அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன் - எனக் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இக் கடிதம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

www.sangathamil.ca

விரிவுரைகளை புறக்கணித்து போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

19.03.2026

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று பேர் காவல்துறையினர் விசாரணைக்கு அழைக்கப்பட்டமையை கண்டித்து இன்றையதினம் விரிவுரைகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 04ம் திகதி கறுப்பு கொடி ஏற்றிய விவகாரம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று பேர் யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டமையை கண்டித்து மாணவர்கள் விரிவுரைகளை புறக்கணித்து குறித்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

காவல்துறையினரால் அழைப்பு விடப்பட்ட மூன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் இன்றையதினம் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு காவல்துறையினர் அலுவலகத்தில் ஆஜராகவுள்ளனர்.

இந்த நிலையில் யாழ் பல்கலைக்கழக முன்றலில் இன்று வியாழக்கிழமை (19) காலை 10 மணிக்கு குறித்த போராட்டம் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தில் அனைத்து தரப்புகளையும் கலந்து கொண்டு வலுசேர்க்குமாறு மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சிறீலங்கா குற்றத் தடுப்புப் பிரிவினரால் சுமார் ஐந்து மணி நேர வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது

19.03.2026

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது விசாரணை என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களைக் கண்டித்தும், ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தியும் இன்று வியாழக்கிழமை (19) விரிவுரைகளைப் புறக்கணித்து கவனயீர்ப்பு போராட்டமொன்றை மாணவ சமூகம் முன்னெடுத்துள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தன்று வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட கறுப்புக் கொடி போராட்டத்தின் போது, பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி ஏற்றிய விவகாரம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சிறீலங்கா குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்படடிருந்தனர். அவர்களிடம் சுமார் ஐந்து மணி நேரவாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய ஆட்சியின் கீழும் தொடரும் மாணவர் மீதான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக வளாகத்தினுள் இடம்பெறும் ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் மீதான சிறீலங்கா பொலிசாரின் விசாரணைகள் நிறுத்தப்பட்டு, அவை பல்கலைக்கழக நிர்வாக மட்டத்திலேயே தீர்க்கப்பட வேண்டும். மாணவர்களின் கருத்துச் சுதந்திரத்திற்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படக் கூடாதென மர்ணவர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் அனைத்து விரிவுரைகளையும் புறக்கணித்த மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலை மூடி அதன் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்றைய தினம் விசாரைணக்காக அழைத்துச்செல்லப்பட்டுள்ள மாணவர்கள் திரும்பி வரும் வரை போராட்டத்தை

கைவிடப்போவதில்லை எனவும் மாணவர்கள் தெரிவித்த நிலையில் போராட்டத்திற்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து இணைந்திருந்தனர்.

தமிழ் மக்களின் உணர்வுகளையே யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வெளிப்படுத்தினர்

தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன்

19.03.2026

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தேசிய கொடியை இறக்கி கறுப்பு கொடியை ஏற்றினார்கள் என விசாரணைக்கு உட்படுத்தப்படும் மாணவர்களுக்கு எமது பூரண ஆதரவினை தெரிவித்து , அவர்களுடன் தொடர்ந்து பயணிப்போம் என தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

கறுப்பு கொடியேற்றப்பட்ட விடயம் தொடர்பில் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் சுமார் 5 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேளை, அவர்களுக்கான சட்ட பிரதிநிதித்துவத்தை மூத்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் வழங்கி இருந்தார்.

மாணவர்கள் மீதான பொலிசாரின் விசாரணைகள் முடிவுற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமான செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களாக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அது அவர்களின் உணர்வுபூர்வமான விடயம்.

அது மாத்திரமின்றி தமிழ் மக்களின் உணர்வோடும் உரிமையோடும் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்களாக அவர்கள் பங்களிக்கின்றனர்.

எனவே நியாயபூர்மான மாணவர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக பொலிசாரினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு எதிராக மாணவர்களுக்கான சட்ட ஆலோசனைகளை வழங்கி, இன்றைய தினம் விசாரணையின் போது மாணவர்களுக்கான சட்ட பிரதிநிதித்துவத்தையும் வழங்கினேன்.

பொலிசார் இன்றைய தினம் மாணவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு பெற்ற வாக்கு மூலங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி, அவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

அதனால் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மாணவர்களோடு தொடர்ந்து பயணிப்போம் என மேலும் தெரிவித்தார்.

இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்கு முறையாலும்,தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

யாழ். பல்கலைக்கழகக் கறுப்பு கொடியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மாணவர்களிடம் விசாரணை: பல்கலைக்கழகம் முன் மாணவர்கள் போராட்டம்

19.03.2026

சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தேசிய கொடியை இறக்கி, கறுப்பு கொடியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மாணவர்களிடம் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, யாழ். பல்கலைக்கழகம் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கறுப்பு கொடியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அந்த வகையில் கடந்த 10ஆம் திகதி, பொலிஸ் வாகனத்தில் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்து, துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோரிடம் சுமார் மூன்று மணி நேர விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலங்களை பதிவு செய்தனர்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் பொலிசார் வாகனத்தில் நுழைந்தமை மற்றும், துணைவேந்தர், பதிவாளர் ஆகியோரிடம் மூன்று மணி நேர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமை போன்றவருக்கு எதிராக மாணவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் கறுப்பு கொடியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் மூவரை கடந்த 17ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு பதிவாளர் ஊடாக மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் அழைப்பாணை வழங்கியுள்ளனர்.

குறித்த விசாரணைக்கு மாணவர்கள் அன்றைய தினம் செல்லாத நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைய, பல்கலைக்கழக மட்டத்தில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, எமது தரப்பு நியாயங்களை தெளிவாக விசாரணை குழு முன் தெரியப்படுத்தியுள்ளோம். இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பிறிதொரு தரப்பினராக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு எம்மை விசாரணைக்கு அழைப்பது மாணவர்களை அச்சுறுத்தும் செயற்பாடாகும்.

எனவே குறித்த சம்பவம் தொடர்பில் மாணவர்களை பொலிசார் விசாரணைக்கு அலைக்கும் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக இன்றைய தினம் வியாழக்கிழமை விரிவுரைகளை பகிஷ்கரித்து பல்கலை முன்றலில் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

விசாரணைகளை தொடர்ந்து பொலிசார் முன்னெடுத்து, மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவர்களாயின் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்னை பூபதி தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை, தமிழீழத் தாய்க்குலத்தின்எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

1990, 1991களில் சிறீலங்காப் படைகளினால் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அராலிச் சந்தியில் நினைவுச் சதுக்கம்!

19.03.2026

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறீலங்காப் படைகளினால் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுகூர பொதுவான நினைவுச் சதுக்கம் ஒன்றை அராலிச் சந்தியை அண்டிய பகுதியில் அமைக்க பிரதேச சபை அனுமதியளித்துள்ளது.

வேலணை பிரதேச மக்களின் நிதிப் பங்களிப்புடன் 1990 மற்றும் 1991 காலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட தமது பிரதேச மக்களின் நினைவுகளை நினைவுகூர ஒரு பொது நினைவுச் சதுக்கம் அமைக்க எடுக்கும் முயற்சிக்கு உரிய இடத்தை அடையாளப்படுத்தி, அவ்விடத்தில் குறித்த தூபியை அமைக்க சபை அனுமதிக்க வேண்டும் என சபையின் உறுப்பினர் திருநாவுக்கரசு சிவகுமாரால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த முன்மொழிவின் நோக்கம் வேலணை பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவுகளை மையப்படுத்தி நினைவுகூரும் வகையில் அமைக்கபடுவதால் சபையின் உறுப்பினர்கள் அதற்கு தமது சம்மதத்தை வழங்கியமைக்கு அமைய பிரதேச சபை அனுமதியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைப்பு: மீண்டும் வடக்கில் அச்சம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஜீ. சிறிநேசன்

19.03.2026

யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளமை மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் வடக்கு மக்கள் மத்தியிலும் மீண்டும் அச்சமான சூழ்நிலையை உருவாகியுள்ளதது என இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஜீ.சிறிநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஒழுங்குவிதிகள் திருத்தச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். இதனால் மீண்டும் மாணவர்கள் மத்தியிலும் வடக்கு மக்கள் மத்தியிலும் அச்சமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் செயற்பாடுகளில் குறைபாடுகள் இருப்பின் அதற்கான காரணங்களை ஆராய்ந்து அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் அச்சுறுத்தலான சூழ்நிலை உருவாகியுள்ளதாக இப்போது அந்த மாணவர்கள் கூறியுள்ளனர். இந்த விடயத்தில் கவனம் செலுத்தி முற்போக்கான சிந்தனையில் அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம் என்றார்.

வடபகுதி கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்றொழில்களைக் கட்டுப்படுத்து

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

20.03.2026

வடபகுதிக் கடற்பரப்புக்களில் தற்போது வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, டைனமெற் வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளும், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளதால் வடபகுதி மீனவர்கள் நொந்துபோயுள்ளதாகத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 25ஆளணியில், 15ஆளணி வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படாதிருப்பதையும் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைகளையும் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் 20.03.2026இன்று இடம்பெற்ற உலகில் தற்போது நிலவும் நிலைமை தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கௌரவ தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்களே...

கடற்கரையோடு அண்டி இருப்பவர்கள் பெரும்பாலும் மீனவர்களே. இவர்களுடைய வாழ்வாதாரம் என்பது மீன் பிடித்தலே ஆகும். அந்த வருமானத்தின் மூலமே தங்களுடைய குடும்ப வாழ்க்கையை சீராககொண்டுசெல்கின்றனர். முன்னைய காலங்களில் இப்படி மோமான தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இருக்கவில்லை. அண்மைக்காலமாக மிக மோசமான வகையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பிட்ட சில சட்டவிரோதிகள் இவ்வாறு பாரிய அளவில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்வதால், கடற்றொழிலே கதி என்று இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அதேவேளை இந்திய இழுவைப்படகுகள் எமது கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தடைசெய்யப்பட்ட சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்வதால் எமது மீனவர்களின் சீரான கடற்றொழில் செயற்பாடுகள் பாதிக்கப் படுவதுடன், கடற்றொழில் உபகரணங்களும் சேதப்படுத்தப் படுகின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதிக் கடற்பரப்புக்கள் உள்ளூர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் பலத்த பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றன. அதிலும் குறிப்பாக தீவுப்பகுதி மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, டைனமெற் வெடிவைத்து மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் எமது மீனவர்கள் நொந்துபோயுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அலுவலகங்களில் ஆளணிப் பற்றாக்குறைகள் காணப்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

அண்மையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளரிடம் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் தம்மிடம் போதிய ஆளணிகள் இல்லை எனத் தெரிவித்து, தம்மால் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியாதென உதவிப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் 17.01.2025ஆம் திகதிய தரவுகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் 25 பணியாட் தொகுதியில், வெறுமனே 10பேரே கடமையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் 15பேருக்குரிய ஆளணிப் பற்றாக்குறைகள் காணப்படுவதாகவும் அந்த தரவுகளில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இவ்வாறாக பாரிய ஆளணிப் பற்றாக்குறைகள் காணப் படுகின்றன.

எனவே இன்னும் எவ்வளவு காலம்தான் போதிய ஆளணி இல்லை, எம்மால் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியாது எனக் கூறிக்கொண்டு இருக்க போகின்றீர்கள்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களத்தில் உள்ள இந்த ஆளணி பற்றாக்குறைகள் தொடர்பில் கடந்த 2025ஆம் ஆண்டு முற்பகுதியிலேயே கடற்றொழில் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன்.

எனினும் அந்த ஆளணிப் பற்றாக்குறைகளைப் பூர்த்தி செய்வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

கடற்றொழில் அமைச்சரே...

விரைவாக இந்த ஆளணிப் பற்றாக்குறைகளை பூர்த்தி செய்வதோடு, சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளையும் முற்றாகக் கட்டுப்படுத்துங்கள்.

வடக்கிலிருந்து மகாவலி அதிகாரசபையை உடனடியாக வெளியேற்றுங்கள்: குஞ்சுக்கால்வெளி உப்பள விவகாரத்திற்கும் கடும் கண்டனம்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

20.03.2026

கடந்த 1988ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அரசாங்கங்களின் அனுசரணையுடன் மகாவலி அதிகார சபை வடக்கு மாகாணத்திற்கான அபிவிருத்தி என்னும் பெயரில் கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டுவருவதாக சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மாகாவலி நீர் வராத வடக்கிற்கு மகாவலி அதிகாரசபை தேவையில்லையெனவும், மகாவலி அதிகாரசபையை வடபகுதிகளிலிருந்து உடனடியாக வெளியேற்றுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு அண்மையில் கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால் வெளியிலுள்ள தமிழ் மக்களின் தனியார் காணிகளில் உப்பளம் அமைப்பதற்கு பெரும்பான்மையினத்தவருக்கு சட்டவிரோத அனுமதி வழங்கிய மகாவலி அதிகாரசபையின் இனவிரோத செயற்பாட்டிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துடன், குறித்த விவகாரத்திற்கு உரிய நீதியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் 20.03.2026 இன்று இடம்பெற்ற உலகில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைமை தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நிலம் என்பது வெறும் சொத்தல்ல. அது உறவினர் நம் ஒவ்வொருவருக்கும், பெற்றோர், மூதாதையர்கள், மற்றும் நிலத்துடன் பிணைக்கப்பட்ட தொடர்பு உள்ளது. அந்தவகையில் நிலத்துடன் ஆழமாக இணைக்கப்பட்ட ஒரு காலச்சாரம் எமக்கு உள்ளது. என்று ஹிரிகம காணி உரிமைப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் அநுராதபுரத்தில் கடந்த 27.02.2026 வெள்ளிக்கிழமை ஜனாதிபதியவர்கள் உரையாற்றியுள்ளார். பாராட்டுகின்றேன்.

இதனைத்தான் நாங்களும் எதிர்பார்க்கின்றோம். கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் நிலப்பறிப்பினாலேயே விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்தகால ஆட்சியாளர்களினால் பறிக்கப்பட்ட காணிகளை மீட்டெடுக்க மக்கள் தொடர்ச்சியாக போராடிக்கொண்டிருக்கும் இந்நேரம் இப்போதைய ஜனாதிபதி நியாயமாக நடந்துகொள்வார் என்ற நம்பிக்கையுடனும் ஒருபகுதி மக்கள் ஒருபகுதிமக்கள் நம்பிக் கொண்டிருக்கும்சமயம் இது.

ஆனால் வவுனியாவடக்கு, முல்லைத்தீவு, தையிட்டி. வலி வடக்கு, கேப்பாப்புலவு, முள்ளிக்குளம், திருகோணமலை, அம்பாறை. மட்டக்களப்பு என வடக்கு கிழக்கெங்கும் தமது நில மீட்பிற்காகத்தான் தமிழ்மக்கள் உரமாகப் போராடுகின்றார்கள்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பரப்பிலுள்ள தமிழ் மக்களுக்கும் தமது நிலம் தமது உறவுகளின் பின்னிப்பிணைந்த கலாச்சாரத்துடனான பூர்வீகத் தமிழ் மண்தான் என்பதை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு நினைவூட்டிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஜனாதபதி உரை நிகழ்த்திய அதே நாளில் கடந்த 27.02.2026 அன்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவின், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் குஞ்சுக்கால்வெளி என்னும் இடத்திலுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக விவசாயக் காணிகளை மகாவலி அதிகார சபை ஆக்கிரமிக்க முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அந்தக் காணிகள் தமிழ்மக்களுடைய பூர்வீக தனியார் அறுதி உறுதிக் காணிகளாகும். நில அளவையாளர் நாயகம் அவர்களால் அளந்து வரையப்பட்டு, பேணப்பட்டுவரும் Top off pp 70 இலக்க வரைபடத் தொகுதியில் தனியார் காணியாகவும், மேச்சல் தரை நிலங்களாகவும் உள்ளன.

எனவே மகாவலி அதிகாரசபைக்கு அந்த நிலங்களை நிர்வகிக்கும் அதிகாரம் கிடையாது.

ஆனால் மகாவலி அதிகாரசபை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் அதிகார எல்லைக்குட்பட்ட இந்த தமிழ் மக்களின் அறுதி உறுதிக் காணிகளைத் திருடி சிங்கள வர்த்தகருக்கு குத்தகைக்கு வழங்கும் சட்டவிரோத நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மகாவலி அதிகாரசபையிடமிருந்து தமிழ்மக்களின் அறுதி உறுதிக் காணிகளை சட்டவிரோதமாகக் குத்தகைக்குப் பெற்றுள்ள அந்தநபர், அந்தக் காணியில் உப்பளம் அமைக்கும் வேலையைத் தொடங்கியதால் அங்கு ஒரு அமைதிக்குலைவு ஏற்பட்டு பதற்றமான சூழ்நிலை உருவாகியிருந்ததது.

இவ்வாறான இனவிரோத செயற்பாட்டைச் செய்தது மகாவலி அதிகாரசபையே என்பதைக் கூறிக்கொள்வதுடன் அதற்காக எனது வன்மையான கண்டனத்தை இந்த உயரிய சபையிலே பதிவுசெய்துகொள்கின்றேன்.

இவ்வாறான இனவிரோத செயற்பாடு தொடர்பாக உரிய விசாரணை முன்னெடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இந்த உயரிய சபையைக் கோருகின்றேன்.

கடந்த 1988ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அரசாங்கங்களின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்திலே மகாவலி அதிகார சபையினால் வடக்கிற்கான அபிவிருத்தி என்னும் பெயரில் அப்பகுதி தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்தல், தமிழ் கிராமப்பெயர்களை சிங்களப் பெயராக மாற்றி அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றம் செய்தல் உள்ளிட்ட கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகளை மகாவலி அதிகாரசபை மேற்கொள்கின்றது. மகாவலியின் இத்தகைய அத்துமீறிய அடாவடித்தனமான செயற்பாடுகளால் நாட்டில் இனங்களுக்கிடையில் முறுகல் நிலையும், சமாதானக் குலைவும் ஏற்படுகின்றது.

மகாவலி அதிகாரசபை அபிவிருத்தி என்னும் சொல்லாடலைக் கையாண்டு தீய எண்ணத்துடன் தமிழர்களின் நிலங்களை திட்டமிட்டு அபகரித்து தமிழர்களது பூர்வீக ஊர்களின் பெயர்களை இலங்கை வரைபடத்திலிருந்து நீக்குவதுடன், அந்த இடங்களுக்கு சிங்களப் பெயர்களைச் சூட்டி தமிழ் இனத்தின் தேச அடையாளத்தை அழிக்கின்றனர். அத்தோடு தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு அதிகளவில் சிங்களக் குடியேற்றங் குடியேற்றங்களையும் மேற்கொண்டு தமிழ்மக்களை அவர்களின் தாயகப்பரப்பிலேயே சிறுபான்மையினராக்கும் இனப்பரம்பல் கோலத்தை மாற்றுகின்றவிதமான மிக மோசமான செயற்பாட்டையும் மகாவலி அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.

எனவே மாகாவலி நீர் வராத வடக்கிற்கு மகாவலி அதிகாரசபை தேவையில்லை. எமது தமிழ் மக்களுக்கு மரணத்தை ஏற்படுத்துகின்ற வலியான இந்த மகாவலி அதிகாரசபையை எமது பகுதிகளிலிருந்து உடனடியாக வெளியேற்றுமாறு இந்த உயரிய சபையைக் கோருகின்றேன் – என்றார்.

கிவுல் ஓயாத் திட்டத்தை கைவிடக்கோரி பருத்தித்துறை பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

21.03.2026

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி பருத்தித்துறை பிரதேச சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் இத்திட்டம் கொண்டுவரப்படுவதாகக் குறிப்பிட்டு, சபை உறுப்பினர் குறிஞ்சி குமரனால் நேற்று (20) இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நடைபெற்ற இந்தச் சபை அமர்வின் போது, குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 16 உறுப்பினர்களும், எதிராக 4 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இதனடிப்படையில் 12 மேலதிக வாக்குகளால் இந்த தீர்மானம் வெற்றிபெற்றது. எனினும், இந்தப் பிரேரணை பிரதேச சபையுடன் தொடர்புடைய விடயம் அல்ல எனக் கூறி தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நால்வரும் இதற்குத் தமது எதிர்ப்பினைப் பதிவு செய்திருந்தனர்.

இதேவேளை, சபை உத்தியோகத்தர்களுடன் உறுப்பினர்கள் நேரடியாகப் பேசுவதைத் தவிர்த்து, சபை சார்ந்த விடயங்களைத் தவிசாளரிடமும் ஆலோசனைகளைச் செயலாளரிடமும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தவிசாளர் இதன்போது அறிவுறுத்தினார்.

மேலும், சபையின் நிதி அனுமதிகள், மக்கள் முறைப்பாடுகள் மீதான நடவடிக்கைகள் மற்றும் வீதி அபிவிருத்தி, மின் விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களுக்கும் இந்த அமர்வில் அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

மன்னார் வங்காலை காற்றாலை மின்கம்பிகளில் சிக்கி விபத்துக்குள்ளான நிலையில் வெளிநாட்டுப் பறவைகள் மீட்பு!

22.03.2026

மன்னார் மாவட்டத்திற்கு வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பிளமிங்கோ (Flamingo) இனத்தைச் சேர்ந்த மூன்று பறவைகள், வங்காலை பறவைகள் சரணாலயப் பகுதியில் அமைந்த அதிவலு காற்றாலை மின்கம்பிகளில் சிக்கி விபத்துக்குள்ளான நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

விபத்துக்குள்ளான பறவைகளில் இரண்டு உயிரிழந்த நிலையில், ஒன்று கடுமையாக காயமடைந்து மன்னார் மாவட்ட வன விலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டு, அதற்கான மருத்துவ சிகிச்சைகள் உரிய அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது வெளிநாட்டு பறவைகள் மன்னார் தீவு பகுதிக்கு வருகை தரும் காலமாகும். இந்தச் சம்பவம் வருகை தந்த பறவைகள் காற்றாலை மின்கம்பிகளில் சிக்கி விபத்துக்குள்ளான நிலையை வெளிப்படுத்துகிறது.

பிளமிங்கோ போன்ற அரிய வெளிநாட்டு பறவைகளை நேரில் காண உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் மன்னார் மாவட்டத்திற்கு வருகை தருகின்றனர்.

இந்தப் பறவைகளை பாதுகாக்க வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இராணுவ நிலையங்களில் எரிபொருள் பெற முடியாது: நாடாளுமன்றச் செயலாளருக்கு ரவிகரன் எம்.பி. கடிதம்!

22.03.2026

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இராணுவத்தினால் நிர்வகிக்கப்படும் நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்கும் நடைமுறையை நிராகரிப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு இன்று ஞாயிற்றுக்கிழமை (22) கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியினை அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென இராணுவத்தினால் நிர்வகிக்கப்படும் நிலையங்கள் ஊடாக எரிபொருள் விநியோகிக்கும் விசேட ஏற்பாடு குறித்து அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்குத் தனது கடும் மறுப்பைத் தெரிவித்தே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இக்கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில்,

"எரிபொருள் விநியோகம் போன்ற அத்தியாவசிய மக்கள் மயப்பட்ட சேவைகளை இராணுவத் தலைமையீட்டின் ஊடாகப் பெறுகின்ற முறைமை, வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய எமது அரசியல் நிலைப்பாட்டினைப் பாதிக்கும் வகையில் அமைகிறது. போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் சார்பாளராக, இராணுவப் பொறிமுறைக்குள் ஒப்படைக்கப்பட்டுப் பத்தாண்டுகளைக் கடந்தும் தேடப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும், படுகொலைகளுக்கான நீதிக்காகவும் நாம் இன்றும் போராடி வருகின்றோம்."

துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

பார்லிமேந்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

மின்னஞ்சல்
E-mail ravikaranmpoffice@gmail.com

கைப்பேசி
Mobile +94770657751

எனது இல.
My No.

உமது இல.
Your No.

போரினால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் சார்பாளராக, எமது மக்களோடு சேர்ந்து நாமும் இதே இராணுவப் பொறிமுறைக்குள் நம்பி ஒப்படைத்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை பத்து ஆண்டுகள் கடந்தும் இன்றளவும் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

As representative of a war-affected community, we, together with our people, continue even after more than a decade to search for our loved ones who were forcibly disappeared after being entrusted to this very military structure.

இறுதிப்போரில் இதே இராணுவக்கட்டமைப்பால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கான நீதிக்காகவும் நீதிக்கான சர்வதேச தலையீட்டுக்காகவும் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்றோம். இத்தகைய சூழலில், அதே இராணுவத் தலையீட்டின் ஊடாக முன்மொழியப்பட்டுள்ள எரிபொருள் வழங்கல் முறை எங்களின் இயல்பிருப்புக்கும் அரசியல் நிலைப்பாட்டுக்கும் முரணாக அமைகின்றது.

At the same time, we continue to struggle for justice and for international intervention regarding the atrocities committed during the final stages of the war under this same military framework. In such a context, the proposed fuel distribution mechanism through military involvement stands in contradiction to our lived realities and political position.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தை தளமாகக் கொண்டு செயற்படும் எமக்கு, வவுனியாவுக்குச் சென்று எரிபொருள் பெற்றுக்கொண்டு மீள்வது நடைமுறையில் சாத்தியமற்றதுடன் காலத்தையும் எரிபொருளையும் தேவையற்ற வகையில் வீணாக்குவதாக அமைகிறது.

Furthermore, being based in Mullaitivu District, it is neither practical nor reasonable to travel to Vavuniya solely to obtain fuel and return. This results in unnecessary expenditure of both time and fuel, thereby undermining the intended purpose of facilitating access.

எனவே மேற்கண்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு சனநாயக நிருவாகத்தின் கீழ் மாற்று வழிமுறையொன்றின் ஊடாக எமக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குமாறு பணிவுடனும் உறுதியுடனும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

In the light of the above, I respectfully yet firmly request that my fuel allocation be provided through an alternative mechanism under civilian administration.

[2/3]

மக்கள் தொடர்பகம் - மன்னார்
Public Relations Office - Mannar
Cilawaththurai, Mannar
TP No : 076 8640 413

தலைமை அலுவலகம்
Head Office
Kallappadu North, Mullaitivu
TP No : 076 8450 411

மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு
Public Relations Office - Puthukkudiyiruppu
Iranappalai Road, Puthukkudiyiruppu
TP No : 076 8850 412

துரைராசா ரவிகரன்
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி தேர்தல் மாவட்டம்

பார்லிமேந்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

மின்னஞ்சல்
E-mail ravikaranmpoffice@gmail.com

கைப்பேசி
Mobile +94770657751

எனது இல.
My No.

உமது இல.
Your No.

இதற்காக, பின்வரும் முன்மொழிவுகளை தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்:

In this regard, I propose the following for your kind consideration:

1. பொதுமக்கள் பயன்படுத்தும் சாதாரண எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நடைமுறையிலுள்ள விரைவுக்குறி முறைமையின் மூலம் (QR Code) பாராளுமன்ற உறுப்பினர்களாக எமக்குரிய ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள அனுமதித்தல்

That Members of Parliament be permitted to obtain their allocated fuel quota through the existing QR-based system at regular fuel stations used by the general public;

2. முல்லைத்தீவு உட்பட உறுப்பினர்கள் தங்களது சொந்த மாவட்டங்களுக்குள்ளேயே எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வசதியை உறுதி செய்தல்

That arrangements be made to ensure Members can access fuel within their respective districts, including Mullaitivu, without the need for inter-district travel;

3. இராணுவத் தலையீடு அற்ற வகையில் இலங்கை போக்குவரத்துச் சபை அல்லது பொருத்தமான வேறு அரச நிறுவனங்கள் ஊடாக விநியோகத்தை மேற்கொள்ளல்.

That fuel distribution be carried out through civilian institutions such as SLTB or any other appropriate government mechanism, without military involvement.

மேற்கண்ட நடவடிக்கைகள் நடைமுறையில் சாத்தியமானதுடன் பல்வேறு சமூகங்களின் உணர்வுகளையும் மதிக்கும் வகையில் அமையும் என நம்புகிறேன்.

Such measures would be both practical and respectful of the realities and sensitivities of different communities.

மேற்படி விடயம் தொடர்பாக தங்களின் கனிவான கவனத்துக்கு நன்றி.

Thank you for your kind attention to this matter.

மக்கள் சேவையில், | In the service of people,

Thurairasa Ravikaran
Member of Parliament
Vanni Electoral District

[3/3]

மக்கள் தொடர்பகம் - மன்னார்
Public Relations Office - Mannar
Cilawaththurai, Mannar
TP No : 076 8640 413

தலைமை அலுவலகம்
Head Office
Kallappadu North, Mullaitivu
TP No : 076 8450 411

மக்கள் தொடர்பகம் - புதுக்குடியிருப்பு
Public Relations Office - Puthukkudiyiruppu
Iranappalai Road, Puthukkudiyiruppu
TP No : 076 8850 412

முல்லைத்தீவு மாவட்டத்தைத் தளமாகக் கொண்டு செயற்படும் தாம், வவுனியாவுக்குச் சென்று எரிபொருளைப் பெற்றுத் திரும்புவது நடைமுறையில் சாத்தியமற்றதுடன், காலத்தையும் எரிபொருளையும் வீணாக்குவதாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத் தலையீடு அற்ற வகையில் ஜனநாயக நிருவாகத்தின் கீழ் பின்வரும் வழிமுறைகளை அவர் முன்மொழிந்துள்ளார்.

பொதுமக்கள் பயன்படுத்தும் சாதாரண எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நடைமுறையிலுள்ள விரைவுக்குறி (QR Code) முறைமை மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள அனுமதித்தல்.

உறுப்பினர்கள் தத்தமது சொந்த மாவட்டங்களுக்குள்ளேயே (முல்லைத்தீவு உட்பட) எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வசதியை உறுதி செய்தல்.

இலங்கை போக்குவரத்துச் சபை அல்லது பொருத்தமான வேறு அரச நிறுவனங்கள் ஊடாக விநியோகத்தை மேற்கொள்ளல்.

பல்வேறு சமூகங்களின் உணர்வுகளையும் மதிக்கும் வகையில் இந்த மாற்று நடவடிக்கைகள் அமையும் என எதிர்பார்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு – வெறுப்புக்களற்ற, உணர்வுகளுக்கும் பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத, ஒரு நேர்மையான பார்வை அவசியம்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

தமிழர்களும் சிங்களவர்களும் இன ரீதியில் பொதுவான அடிப்படை கொண்டவர்களே!

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன்

22.03.2026

இலங்கையில் உள்ள சிங்களவர்களும் தமிழர்களும் இன ரீதியாக ஒரு பொதுவான மூலத்தைக் கொண்டவர்கள் என்பதிலும், எமது இரு மொழிகளினால் மட்டுமே நாம் வேறுபடுகிறோம் என்பதிலும் சந்தேகமில்லை. இலங்கையர்களாகிய நாம் இன ரீதியில் எமது பொதுவான தன்மையை உணர்ந்து, ‘ஒற்றையாட்சி’ அரசியலமைப்புக்குப் பதிலாக ‘ஒருமித்த’ அரசியலமைப்பை நோக்கிப் பயணிக்கவேண்டிய தருணம் இதுவாகும். ‘ஒருமித்த’ அரசியலமைப்பானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டத்தின் முதலாம் பிரிவின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கான சுயாட்சி உரிமையை வழங்கும் என தமிழ்மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

‘சமீபத்திய மரபணு ஆய்வுகள், குறிப்பாக கடந்த ஆண்டு Current Biology எனும் இதழில் வெளியான மரபணு வரிசை முறை ஆய்வானது இலங்கையில் உள்ள சிங்கள மக்கள் தென்னிந்திய மக்களுடன் வலுவான மரபணுத் தொடர்புகளைக் கொண்டிருப்பதைக் காண்பிக்கின்றனவா? அவ்வாறெனில், இன ரீதியாக சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே மரபணுத் தொடர்பைக் கொண்டவர்கள் என்பதும், அவர்கள் மொழியால் மட்டுமே வேறுபடுகிறார்கள் என்பதும் உண்மையா?’ என எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது:

ஆம், நிச்சயமாக மரபணுத் தொடர்பு இருக்கிறது. சிங்கள வரலாற்று ஆசிரியர்கள், இலங்கையில் உள்ள தமிழர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுவதற்காக மகாவம்சம் மற்றும் ஏனைய ஆதாரங்களின் அடிப்படையில் சிங்களவர்களுக்குப் பிரத்தியேகமான வட இந்திய ஆரிய மூலம் இருப்பதாகக் கூறிவந்தனர்.

ஆனால் நவீன மரபணுச் சான்றுகள் இதுவரை அவர்களால் முன்வைக்கப்பட்ட தவறான கண்டுபிடிப்புகளை ஆதரிக்கவில்லை. உண்மையில் விஜயனும் அவனது 700 தோழர்களும் அவனுடைய தந்தையால் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டதாகக் கூறப்படும் கதைக்கு இணையான குறிப்புகள் எவையும் வட இந்திய வரலாற்று நூல்களில் இல்லை. எனவே இந்தக் கதை மத நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு புனைவாகும்.

மகாவம்சம் என்பது ஒரு வரலாற்று ஆவணம் அல்ல. மாறாக அது பௌத்த மதத்தை மேன்மைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட ஒரு புனைவு என்று நாம் நீண்டகாலமாகக் கூறிவருகிறோம். மகாவம்சத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் முழு வரலாற்று விவரிப்பையும் பௌத்த வழிபாட்டின் பின்னணியில் சித்தரிக்கும் வகையில் முடிவடைகிறது.

இலங்கையில் பௌத்த மதத்தை நிறுவுவதற்காகவும், அதன் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவுமே மகாநாம தேரரினால் மகாவம்சம் இயற்றப்பட்டிருக்கிறது. எனவே அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை வேதவாக்காக எடுத்துக்கொள்ளாமல், அரசர்களின் வரலாறு உள்ளிட்ட புறம்பான சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தவேண்டும்.

மகாவம்சம் எழுதப்பட்ட காலத்தில் சிங்கள மொழி இருக்கவில்லை. ஆகையினாலேயே அது பாலி மொழியில் எழுதப்பட்டது. அக்கால மக்களின் மொழியாகத் தமிழ் இருந்தது. தேவநம்பியதீசன், பண்டுகாபயன் மற்றும் துட்டகைமுனு ஆகிய மன்னர்களின் மொழி கூட தமிழ் தான். துட்டகைமுனு தமிழ் பேசும் பௌத்தராக இருந்தார். எல்லாளன் தமிழ் பேசும் சைவராக இருந்தார்.

அதேவேளை வட, கிழக்கு தமிழ் வம்சாவளியை 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்ததாகக் கண்டறியமுடியும். ஆனால் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவின் மதுரையிலிருந்து தமிழ் பிராமணர்கள் இங்கு வந்து, உள்ளூர் பெண்களைத் திருமணம் செய்து, தம்மை சிங்களவர்களாக அடையாளப்படுத்திக் கொண்டு குடியேறியது எத்தனை சிங்களவர்களுக்குத் தெரியும்?

இலங்கையில் உள்ள சிங்களவர்களும் தமிழர்களும் இன ரீதியாக ஒரு பொதுவான மூலத்தைக் கொண்டவர்கள் என்பதிலும், எமது இரு மொழிகளினால் மட்டுமே நாம் வேறுபடுகிறோம் என்பதிலும் சந்தேகமில்லை. நான் 1950 களின் ஆரம்பத்தில் கொழும்பு ரோயல் கல்லூரியில் பயின்ற வேளையில், கீழ்நாட்டு சிங்களவர்கள், மேல்நாட்டு சிங்களவர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள், மட்டக்களப்புத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், ஏனைய இலங்கைத் தமிழர்கள், சோனகர், மலாயர்கள் மற்றும் ஏனைய முஸ்லிம்கள், பரங்கியர்கள் என சகல இனங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஒன்றாகப் படித்தோம். நாம் ஆங்கில மொழியாலும், எமது பாடசாலையினாலும் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாக இருந்தோம். எனினும் 1956 ஆம் ஆண்டு அரசியல் காரணங்களுக்காகக் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச்சட்டம் எமது ஒற்றுமையை மிகமோசமாகப் பாதித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையர்களாகிய நாம் இன ரீதியில் எமது பொதுவான தன்மையை உணர்ந்து, ‘ஒற்றையாட்சி’ அரசியலமைப்புக்குப் பதிலாக ‘ஒருமித்த’ அரசியலமைப்பை நோக்கிப் பயணிக்கவேண்டிய தருணம் இதுவாகும். ‘ஒருமித்த’ அரசியலமைப்பானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டத்தின் முதலாம் பிரிவின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கான சுயாட்சி உரிமையை வழங்கும். அதேவேளை சுயாட்சி தேவைப்படும் இவ்விரு தரப்பினரைத் தவிர ஏனைய மக்களின் உரிமைகளும் அந்த அரசியலமைப்பின் ஊடாக அங்கீகரிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் எண்ணிக்கை குறித்த நீதியமைச்சரின் அறிவிப்பின் அடிப்படை என்ன?

சட்டத்தரணியும் சிவில் செயற்பாட்டாளருமான ஜங்கரன் குகதாசன்

22.03.2026

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் பரணகம ஆணைக்குழுவிடம் 22,000 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் அளிக்கப்பட்டன. அதேவேளை காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதன் விசாரணைகளை இன்னமும் முடிவுறுத்தவில்லை. அவ்வாறிருக்கையில் நீதியமைச்சரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட எண்ணிக்கை எதனடிப்படையில் மதிப்பிடப்பட்டது? என சட்டத்தரணி ஜங்கரன் குகதாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் எண்ணிக்கை தொடர்பில் இரா.சாணக்கியன் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (20) எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றிய நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, ‘இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணாமல்போனோர் குறித்த மதிப்பீடுகளில் இன்னமும் கணிசமானளவு நபர்கள் கணக்கில் வராமல் உள்ளனர் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது.

இந்த எண்ணிக்கைகள் ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் மாறுபடுகின்றன. எவ்வாறிருப்பினும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அண்மைய மதிப்பீடுகளின்படி அந்த எண்ணிக்கை 2,764 ஆகும்’ எனக் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் வெளியிட்ட இந்தத் தகவலை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கும் சட்டத்தரணியும் சிவில் செயற்பாட்டாளருமான ஜங்கரன் குகதாசன், அமைச்சரால் வெளியிடப்பட்ட இந்தத் தரவுகள் எவ்வாறு பெறப்பட்டன என்பதை அறிய விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

‘வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் பரணகம ஆணைக்குழுவிடம் 22,000 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் (சுமார் 5000 முப்படை உறுப்பினர்கள் உட்பட) அளிக்கப்பட்டன. அதேவேளை காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதன் விசாரணைகளை இன்னமும் முடிவுறுத்தவில்லை. அவ்வாறிருக்கையில் அமைச்சரால் எந்த அடிப்படையில் இந்த எண்ணிக்கை முன்வைக்கப்பட்டது?’ என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை இது மிகமுக்கியமான கேள்வி எனக் குறிப்பிட்டிருக்கும் சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் தெற்காசியப்பிராந்திய ஆய்வாளர் அலன் கீனன், காணாமல்போனோரின் எண்ணிக்கை நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட எண்ணிக்கையை விடப் பல மடங்கு அதிகம் என்பது சகல ஆய்வாளர்களுக்கும் சுயாதீன அவதானிகளுக்கும் தெரியும் என்று தெரிவித்துள்ளார்.

ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ, ஆயுதபலமோ அல்ல; அசைக்கமுடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

யாழ். மணல்காட்டில் மதுபோதையில் இருந்த சிறீலங்காப் பொலிசார்: பொதுமக்கள் மீது தாக்குதல், இருவர் வைத்தியசாலையில்!

24.03.2026

யாழ்ப்பாணத்தில் நிறைபோதையில் காணப்பட்ட சிறீலங்காப் பொலிஸார் சுற்றுலாவினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிரிவு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் வட மராட்சி கிழக்கு மணற்காட்டு பகுதிக்கு நேற்றைய தினம் தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் சுற்றுலா சென்று, அங்கு சமைத்து உணவுண்டு மது அருந்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் போது பருத்தித்துறை பகுதியில் இருந்து மணற்காட்டுக்கு சுற்றுலா சென்ற குழு ஒன்றுடன் தர்க்கப்பட்டு, இரு குழக் களுக்கும் இடையில் கைக்கலப்பு ஏற்பட்டுள்ளது.

அதன் போதையில் இருந்த பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளான இருவர் காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

பொலிசார் தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் சுற்றுலா சென்றமை தொடர்பில், பொது இடமொன்றில் மேலாடைகள் அற்ற நிலையில், நிறை போதையில் அட்டகாசத்தில் ஈடு பட்டமை தொடர்பிலும் பொலிஸ் திணைக்கள ரீதியான விசா ரணைகளை முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் அரசினால் அபகரிப்பு!

24.03.2026

கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அரசின் ஏழு வகையான பொறிமுறையின் ஊடாக அபகரிக்கப்பட்டு சுவீகரிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண நில மீட்பிற்கான வலையமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

2026ஆம் ஆண்டிற்கான காணி வாரத்தினை முன்னிட்டு திரு கோணமலை விடுதி ஒன்றில் இன்றையதினம் திங்கட்கிழமை (23) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே கிழக்கு மாகாண நில மீட்பிற்கான திருகோணமலை மாவட்ட செயற்பாட்டாளர்கள் இதனை தெரிவித்தனர்.

யுத்தம் நிறைவுக்கு வந்த சூழ்நிலையிலும் இன்று வரை குறிப் பிட்டளவு மக்கள் தங்களது நிலங்களுக்கான முறையான காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருப்பதுடன் அரசு வேற்று இனத்தினர் மற்றும் முதலாளிக ளால் திட்டமிட்ட வகையில் மக்களின் குடியிருப்பு மற்றும் ஜீவ னோபாயத்திற்குரிய தொழில் இடங்கள் மற்றும் மத கலாச்சார இடங்கள் சட்ட ரீதியாகவும் சட்ட முறையற்றும் அபகரிக்கப்படுவ துடன் சுபீகரிக்கப்பட்டும் வருகின்றது.

குறிப்பாக எமது கிழக்கு மாகாணத்தில் சுமாராக ஒரு லட்சத்து இருபதாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அரசின் 07 வகை யான பொறிமுறைகள் ஊடாக அபகரிக்கப்பட்டும் சுபீகரிக்கப் பட்டும் வருகிறது. குறிப்பாக தொல்லியல் இடம் எனவும் பாது காப்பு பகுதி எனவும் வன வளப்பகுதி என்றும் பூஜா பூமி இடம் எனவும் வன விலங்கு பகுதி எனவும் அபிவிருத்தி இடம் எனவும் சுற்றுலா பிரதேசம் எனவும் அடையாளப்படுத்தி பல தேவைகளுக்கு பயன்படுத்தி வருதாகவும் குறிப்பிட்டனர்.

அந்தவகையில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1958 சிங்கள குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் அங்கு 32 விகாரைகளும் அதனுடன் இணைந்த இடங்களு மாக பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ் முஸ்லீம் மக்களுடைய பூர் வீக இடங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்த வழிபாட்டு இடங்கள் அபகரிக்கப்பட்டு வழிபாட்டு உரிமை மறுக் கப்பட்டுள்ளதோடு எங்களுடைய ஆலயங்களை வழிபடுவதற்கு அங்கு இருக்கின்ற பௌத்த மதகுருமாரின் அனுமதியைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதாகவும் திரியாய் பகுதியைச் சேர்ந்த செயற்பாட்டாளர் டனுசன் குறிப்பிட்டார்.

அதேபோன்று முத்துநகர் பகுதி விவசாயிகள் 53 வருடங்க ளுக்கு மேலாக விவசாயம் மேற்கொண்டு வந்த 1200 ஏக்க ருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் சோலார் மின் திட்டத்திற்திற் காக வழங்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தமது வாழ் வாதாரத்தையும், ஜீவனோபாயத்தையும் இழந்துள்ளனர்.

இதனால் 352 விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாவும் இதற்கான நீதியைக் கோரி 70 நாட்களுக்கு மேலாக சத்தியாக் கிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதும் இதுவரை எவ்வித தீர்வும் ஆரசால் வழங்கப்படவில்லை எனவும் முத்துநகர் பகுதியைச் சேர்ந்த சகிலா சபருல்லா என்ற செயற்பாட்டாரள்

யாழ். வடமராட்சி கிழக்கில் பெருமளவான மக்களின் நிலப் பரப்பைக் கையகப்படுத்தி வைத்துள்ள வனஜீவராசிகள் திணைக்களம் உடன் வெளியேறவேண்டும்

கட்டைக்காடுப் பங்குத்தந்தை வசந்தன் அடிகளார்

26.03.2026

யாழ்.வடமராட்சி கிழக்கில் பெருமளவான மக்களின் நிலப்பரப்பைக் கையகப்படுத்தி வைத்துள்ள வன ஜீவராசிகள் திணைக்களம் மக்களின் காணிகளை மக்களிடமே கையளித்துவிட்டு உடன் வெளியேற வேண்டுமெனக் கட்டைக்காடுப் பங்குத் தந்தை வசந்தன் அடிகளார் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கோவில் பகுதியில் யானைகள் ஏற்படுத்திய சேதத்தை புதன்கிழமை (25.03.2026) நேரில் பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டுக்குப் பின் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை வடக்கு - கிழக்கில் நடந்து கொண்டிருக்கின்றன. அரச திணைக்களங்கள் ஊடாக இவ்வாறான செயற்பாடுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பிரதேசத்துக்கும், வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை. இங்கே காட்டு விலங்குகள் இல்லை, அடர்ந்த காடுகள் இல்லை. இந்தப் பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்தினுடைய பகுதி என்று கூறிக் கொள்வதற்கான எந்தச் சான்றுகளுமில்லை. இந்தப் பகுதிக்குள் யானைகளைத் திட்டமிட்டுக் கொண்டு வந்து விட்டு இந்தப் பகுதி யானைகள் வசிக்கின்ற இடம், இது தேசிய பூங்கா என்பதனை ஊர்ஜிதம் செய்வதற்காக இத்தகைய செயற்பாட்டைச் செய்திருக்கக் கூடும். எங்களுடைய காணிகள் இவ்வாறு தான் அபகரிக்கப்

பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ரவிராஜ் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவு: எதிரிகளின் விடுதலையும் இரத்து

27.03.2026

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில், சிறீலங்காவின் மூன்று கடற்படை புலனாய்வு அதிகாரிகள் உள்ளிட்ட எதிரிகளின் விடுதலையை இரத்து செய்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் புதிய விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் செய்த மேல் முறையீட்டைத் தொடர்ந்து, நீதியரசர்களான பி. சசி மகேந்திரன் மற்றும் அமல் ரணராஜா ஆகியோர் அடங்கிய அமர்வு, நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜைப் படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டியது, அவரது மரணத்திற்குக் காரணமானது, மற்றும் அப்போது அவருடன் பயணம் செய்த காவலர் லக்ஸ்மனை கொலை செய்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில், பிரதிவாதிகள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் மூன்று பேர் சிறீலங்கா கடற்படை புலனாய்வு அதிகாரிகளாவர்.

இந்த வழக்கு 2016ஆம் ஆண்டில் ஒரு சிறப்பு நடுவர் மன்றத்தின் முன் விசாரிக்கப்பட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்ட அனைவரும், ஒருமனதாக விடுவிக்கப்பட்டனர்.

இந்த விசாரணை நடைமுறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, சட்டமா அதிபர், நடுவர் மன்றத்தின் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்தார்.

நீதிபதியின் வழிகாட்டுதல்கள் நள்ளிரவு வரை நீடித்ததாகவும், விசாரணை இரவு சுமார் 11:00 மணி வரை தொடர்ந்ததாகவும், நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் சட்டமா அதிபர் குறிப்பிட்டிருந்தார்.

பதிவேடுகளை ஆய்வு செய்த பின்னர், வழக்கை முன்னெடுத்துச் செல்லப் போதுமான சான்றுகள் இருப்பதாக மேன்முறை

யீட்டு நீதிமன்றம் தீர்மானித்து, பிரதிவாதிகளின் விடுவிப்புத் தீர்ப்பை இரத்து செய்து உத்தர விட்டதுடன், இந்த வழக்கை மேல் நீதி மன்றத்தில் மீண்டும் விசாரிக்கவும் உத்தரவிட்டது.

தியாகி திலீபன் – அன்னை பூபதி இந்திய அரசின் சதியால் உயிர் நீத்த தியாகிகள்…!

பா. அரியநேந்திரன்

28.03.2026

1988 ஏப்ரல் 19இல் மட்டக்களப்பு மாமாங்கேஷ்வரர் ஆலயத்தின் முன்றலிலே…, 56 அகவைத்தாய் 31 நாட்கள் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார்!
தியாகச்சுடர் அன்னைபூபதி (1988 மார்ச் 19 - 1988 ஏப்ரல் 19)

1987 செப்டம்பர் 26இல் நல்லூர் ஆலய முன்றலிலே…, 24 அகவை இளைஞன் 12 நாட்கள் பசித்திருந்து உயிர் துறந்தார்!
தியாகி தீலீபன் (1987 செப்டம்பர் 15 - 1987 செப்டம்பர் 26)

தியாகி திலீபன் உயிர் நீத்து சரியாக 06 மாதங்கள், 23 நாட்களால் அன்னை பூபதி ஆகுதியானார்.

ஒரு மகனும், ஒரு தாயும் உண்ணாவிரம் இருக்க என்ன காரணம்?

இரண்டு இன்னுயிர்களையும் சாவடையகாரணமானவர்கள் இந்திய வல்லரசின் சதியாகும்.

[1]. தியாகி திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள்:

1. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

2. தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

3. மறுவாழ்வு என்ற பெயரில் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப் பட வேண்டும்.

4. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
5. இடைக்கால நிர்வாகச் சபை அமைக்கப்படும் வரை, இடைக் காலக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்காமையால் 12 தினங்களால் தியாகி திலீபன் உயிர்நீத்தார்.

1987 செப்டம்பர் 15இல் தியாகி திலிபனின் கோரிக்கையை அன்று பாரததேசம் ஏற்றிருந்தால் …

1988 மார்ச் 19இல் அன்னை பூபதி உண்ணா விரப்போராட்டம் ஆரம்பித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிராது.

[2]. அன்னை பூபதி முன்வைத்த இரண்டு கோரிக்கைகள்:

1. உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் இந்திய அரசு ஏற்காமையால் அன்னைபூபதி உயிர் நீத்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா காந்தி அறவழிப் போராட்டங்களான சத்தியாகிரகம், அகிம்சை, உண்ணா நிலைப் போராட்டம் மற்றும் ஒத்துழையாமை இயக்கம் மூலம் இந்தியாவை சுதந்திரத்தை நோக்கி வழிநடத்தி விடுதலையை பெற்றுக்கொடுத்தார் என்பது வரலாறு.

ஆனால் அதே இந்திய தேசம் இலங்கையில்?

1987 யூலை 29இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடக இந்திய அமைதிப்படை எனும் போர்வையில் ஈழத்தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையால் அதை

நிறுத்த கோரி உண்ணா விரதம் மேற்கொண்ட இரண்டு உன்னத உயிர்களை ஆயுதம் ஏந்தி போராடாமல், அறவழிப் போராட்டமாக சாகும் வரை உண்ணா விரதம் இருந்த உயிர்களை சாகடித்த வரலாறு பாரத தேசத்துக்கு உண்டு. இந்த வரலாறு ஈழத்தமிழர்களால் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

இலங்கை இந்திய ஒப்பந்தம், 13 வது அரசியல் திருத்தம், மாகாணசபை தேர்தல் முறை, இணைந்த வடகிழக்கு தாயகம், என்றெல்லாம் 1987 யூலை 29இல் அறிமுகமாகி இன்று 39 வருடங்கள் கடந்தும் ஈழத்தமிழர்களாகிய நாம் அரசியல் உரிமையோ, அரசியல் தீர்வோ இன்றி மாகாணசபை தேர்தல் எப்போ நடக்கும் என எதிர்பார்த்து “இலவு காத்த கிளிகளாக” தமிழ்த்தேசி கட்சிகள் கதிரைக்கும், பதவிக்கும் காத்து நிற்கும் அரசியல் நிலைமையாக மாறி உள்ளது என்பதே உண்மை…!

இந்த இந்திய அரசின் துரோகத்தால் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் 38 வது ஆண்டு நினைவின் உண்ணாவிரதம் ஆரம்பித்து 10 வது நாளில் இளையோர்கள் வரலாற்றை அறிவதற்காக இந்த பதிவை தருகிறேன்..!

கடந்த கால வரலாறுகளை மறந்து சமகால அரசியலுக்குள் செல்லமுடியாது..

மட்டக்களப்பில் பெண் கொலை: நீதிக்காக நீதிமன்றம் மற்றும் கச்சேரி முன்பாக மக்கள் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம்

27.03.2026

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த தொடர் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் கொடூரமான கொலைச் சம்பவங்களைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கோரியும் இன்று (27.03.2026) மட்டக்களப்பில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மார்ச் 20ஆம் திகதி கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாந்தாமலை, நெல்லிக்காடு வயல் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

விசாரணைகளின் போது, அது வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாற்பதாம் கிராமத்தைச் சேர்ந்த பெண் என்பது தெரியவந்தது.

இச்சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்று வந்த தொடர் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையது என்பதும், கொள்ளையின் போது இக்கொலை இடம்பெற்றிருப்பதும் சிறீலங்காப் பொலிசாரால் கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக இதுவரை 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவரை 4 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்கவும், மற்றைய இருவரை இன்று (27.03.2026) வரை விளக்கமறியலில் வைக்கவும் மட்டக்களப்பு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே இப்பாரிய போராட்டம் வெடித்தது.

மனிதாபிமானமற்ற இந்தச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக எந்தவொரு சட்டத்தரணியும் நீதிமன்றில் முன்னிலையாகக் கூடாது.

கொலைகாரர்களைத் தூக்கிலிட வேண்டும் அல்லது இனி வரும் காலங்களில் இவ்வாறான குற்றங்கள் நிகழாத வகையில் ஆகக்கூடிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

காணாமல் போன பெண் குறித்து முன்னரே முறைப்பாடு செய்யப்பட்டும், சிறீலங்காப் பொலிசார் துரித நடவடிக்கை எடுக்கவில்லை எனக் போராட்டக்காரர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் ஆரம்பமான இந்த எதிர்ப்புப் பேரணி, மட்டக்களப்பு கச்சேரியை நோக்கி அமைதியான முறையில் நகர்ந்தது.

போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொலிசார் வீதிகளில் பஸ்களைக் குறுக்கே நிறுத்தியும், கச்சேரியின் பிரதான நுழைவாயிலை மூடியும் தடுத்தனர். இதனால் கச்சேரிக்கு முன்னால் பதற்றமான சூழல் நிலவியதுடன், போராட்டக்காரர்கள் அங்கேயே அமர்ந்து கோஷங்களை எழுப்பினர்.

பின்னர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் நேரில் வந்து போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார். பாதிக்கப்பட்ட தரப்பைச் சேர்ந்த நால்வருடன் அவர் நடத்திய நேரடிப் பேச்சு வார்த்தை மற்றும் வழங்கிய உறுதிமொழியை அடுத்து போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

இப்போராட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர், நாற்பதாம் கிராம பொதுமக்கள், சிவில் அமைப்புகள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் இறுதியில் சிறீலங்கா ஜனாதிபதி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் ஆகியோருக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

சிறுமியை துஸ்பிரயோகம் செய்த குற்றத்தில் யாழ். நாவற்குழி விகாரையின் பிக்கு கைது!

29.03.2026

யாழ். நாவற்குழி விகாரையின் இளநிலை பிக்கு, சிறுமியை துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி விகாரைக்கு அருகில் வசிக்கும் சிறுமி விகாரை வளாகத்தில் வடிகட்டிய (பில்டர்) நீரினை பெறுவதற்காக நேற்றைய தினம் சனிக்கிழமை சென்ற வேளை விகாரைக்கு புதிதாக வந்த இளநிலை பிக்கு சிறுமியை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்த நிலையில், தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார் குறித்த இளநிலை பிக்குவை கைது செய்து இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீத்தவனின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியவேளை பிக்குவை எதிர் வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்

இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்கு முறையாலும்,தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

சட்டவிரோத கடற்தொழில்களுக்கு எதிராகத் தொடர் கவனயீர்ப்பில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள்!

30.03.2026

சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளுக்கு எதிராக முல்லைத்தீவு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு அருகில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் தொடர் கவனயீர்ப்பு நடவடிக்கையொன்றினை 30.03.2026இன்று ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மீனவர்கள் முன்னெடுத்துள்ள இந்த சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கைகளுக்கு எதிரான கவனயீர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களும் குறித்த தொடர்கவனயீர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்றுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

அண்மைக்காலமாக முல்லைத்தீவு கடற்பரப்பில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம் மற்றும் கடற்தொழில் அமைச்சர் என உரியதரப்பினர்களிடம் பலதடவைகள் முறையிட்டுள்ளபோதும் குறித்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த உரியதரப்பினர் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்தோடு இந்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரிடம் முறையிட்டபோது, குறித்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த தம்மிடம் போதிய ஆளணி வசதிகள் இல்லையெனத் தெரிவித்ததுடன், எனவே தம்மால் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தமுடியாதெனத் தெரிவித்ததாகவும் மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய சூழலில் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ளதால் தமது வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ள குறித்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை முற்றாக கட்டுப்படுத்த வலியுறுத்தியே முல்லைத்தீவு மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த கடற் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து இவ்வாறாக தொடர் கவனயீர்ப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். அந்தவகையில் கடற்றொழிலாளர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் அவர்களும் இந்த தொடர் எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்றுள்ளார்.

அத்தோடு நாளையதினம் செவ்வாய்க்கிழமை (31) முல்லைத்தீவிற்கு கடற்தொழில் அமைச்சர் வருகைதரவுள்ளதாக கூறப்படும் நிலையில், அவ்வாறு வருகைதருகின்ற கடற்தொழில் அமைச்சர் முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தமக்கு முறையான தீர்வினை வழங்கவேண்டுமென மீனவர்களால் இதன்போது தெரிவிக்கப்பட்டது. தவறினால் தமது சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனம் மீனவர்களால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கடந்த 20.03.2026அன்று முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறும், முல்லைத்தீவு கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திலுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புமாறும் நாடாளுமன்றில் கடற்தொழில் அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் இவ்வாறு கடற்தொழிலாளர்களால் தொடர் கவனயீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவரும் இடத்திற்கு அதிகளவான பொலிசார் பேருந்தில் வரவளைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடாத்த முடியாது;
இழப்புகளை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருத வேண்டும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

கனடியச் செய்திகள்

கனடாவிற்கு 8,500க்கும்மேற்பட்ட கனடியர்கள் நாடு திரும்பினர்

15.03.2026

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் பிப்ரவரி 28 அன்று ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கியதைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் சிக்கியுள்ள கனடியர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதே அரசின் முக்கிய முன்னுரிமை என்று வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி, சுமார் 8,500 கனடியர்கள் மற்றும் நிரந்தர குடியிருப்பாளர்கள் வெற்றிகரமாக கனடா திரும்பியுள்ளனர்.

மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான மூன்றாம் நாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளோபல் அஃபர்ஸ் கனடா (Global Affairs Canada) இதற்கெனத் தனி அவசர மையத்தை அமைத்துள்ளது. இது தூதரகங்களுடன் இணைந்து வணிக ரீதியான விமானங்கள் மற்றும் சிறப்பு விமானங்களை (Charter Flights) ஒருங்கிணைக்கிறது.

கனடா தனது நட்பு நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து செயல்படுகிறது.

உதாரணமாக, சூடானிலிருந்து வெளியேற பிரெஞ்சு இராணுவ விமானங்களையும், துபாயிலிருந்து வெளியேற இஸ்தான்புல் செல்லும் சிறப்பு விமானங்களையும் கனடியர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்த வெளியேற்றப் பணிகள் முழுமையாக இலவசம் அல்ல. விமானங்களுக்கான கட்டணத்தை அந்தந்தப் பயணிகள் ஏற்க வேண்டும்.

எனினும், நெருக்கடியான நேரங்களில் அரசாங்கம் முன்கூட்டியே இருக்கைகளை முன்பதிவு செய்து (Block-booking) மக்களுக்கு உதவுகிறது.

துபாயில் அதிக ஊதியம் தரும் வேலைகள், பெய்ரூட்டில் குடும்ப உறவுகள் மற்றும் ஈரானில் முதியவர்களைப் பராமரிக்கும் கட்டாயம் போன்றவற்றால் சுமார் 24,000-க்கும் மேற்பட்டோர்

லெபனானிலும், 30,000-க்கும் மேற்பட்டோர் ஐக்கிய அரபு அமீரகத்திலும் தொடர்ந்து தங்கியிருக்கின்றனர்.

மத்திய கிழக்கின் வான்வெளி மூடப்பட்டுள்ளதால் கடவுச்சீட்டு (Passport) வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்படலாம் என்றும், நிலைமை சீராகும்போது இது சரி செய்யப்படும் என்றும் அமைச்சர் ஆனந்த் உறுதியளித்துள்ளார்.

கனேடிய குடியுரிமைத் தேர்வு தொடல்பில் மாற்றம்

15.03.2026

கனேடிய குடியுரிமைத் தேர்வு தொடர்பில் கனடா அரசு சில மாற்றங்களைச் செய்துள்ளது.

கனேடிய குடியுரிமைக்கு விண்ணப்பிப்போர், ஒன்லைனில் எழுதும் குடியுரிமைத் தேர்வு தொடர்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கனேடிய புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

கோவிட் காலகட்டத்துக்கு முன், குடியுரிமைத் தேர்வு எழுத 30 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுவந்த நிலையில், தற்போது தேர்வெழுதும் நேரம் 45 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முதல் முறை தேர்வில் வெற்றிபெறவில்லை என்றால், மேலும் இரண்டு முறை என, மொத்தம் மூன்று வாய்ப்புகள் தேர்வெழுதுவோருக்குக் கொடுக்கப்பட உள்ளது.

தேர்வு எழுதுவோர், 20 கேள்விகளுக்கு பதிலளிக்கவேண்டும். அவற்றில் 15 கேள்விகளுக்காவது சரியான பதில் எழுத வேண்டும்.

முன்பு, குடியுரிமைத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், அடுத்ததாக, குடியுரிமை அதிகாரி ஒருவரின் முடிவின் பேரில், குடியுரிமை பெறும் விழாவில் பங்கேற்கலாம் என வழிகாட்டும் நெறிமுறைகளில் கூறப்பட்டிருந்தது.

இப்போது, அதிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது, ஒருவர் குடியுரிமைத் தேர்வில் வெற்றிபெற்றாலும், அவர் குடியுரிமை பெறுவதற்கான மற்ற தேவைகளை சந்தித்துள்ளாரா என குடியுரிமை அதிகாரிகள் மேற்கொண்டு சோதனைகள் மேற்கொள்ள முடியும்.

அத்துடன், குடியுரிமை பெறுவதற்கான தகுதிநிலைகளில், ஒரே ஒரு தேவை சந்திக்கப்படவில்லை என்றால் கூட, அந்த நபருடைய விண்ணப்பத்தை குடியுரிமை அதிகாரிகள் நிராகரிக்க முடியும்.

ஆக, குடியுரிமைத் தேர்வைப் பொருத்தவரை மாறாத விடயங்கள் என்னென்னவென்றால், தேர்வில் 20 கேள்விகள் கேட்கப்படும், தேர்வு எழுதுபவர் அவற்றில் 15 கேள்விகளுக்கு சரியான பதிலளிக்கவேண்டும். தேர்வில் மோசடி செய்து ஏமாற்றுவது தெரியவந்தால், தேர்வு இடையிலேயே நிறுத்தப்படும்.

ரொரான்ரோ பெரும்பாகத்தில் மீண்டும் உயரும் பெட்ரோல் விலை!

20.02.2026

ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் (GTA) பெட்ரோல் விலை லிட்டருக்கு 1.72 டொலர் என்ற அளவைத் தாண்டியுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இந்த விலை மேலும் உயரக்கூடும் எனவும், கோடை காலத்தில் ஒரு லிட்டர் பெட்ரோல் 2 டொலர் என்ற உச்சத்தைத் தொட வாய்ப்புள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

எரிபொருள் சந்தை ஆய்வாளர் டான் மெக்டீக் (Dan McTeague) இது குறித்து பல முக்கியத் தகவல்களை பகிர்ந்துள்ளார்.

ஏப்ரல் மாத நடுப்பகுதியில் கோடைக்காலத்திற்கு ஏற்ற சிறப்பு எரிபொருள் கலவை அறிமுகப்படுத்தப்படும். இதனால் லிட்டருக்கு சுமார் 10 சதங்கள் வரை விலை உயரும். இஸ்ரேல்-ஈரான் இடையிலான போர்ச் சூழல் உலகளாவிய எரிசக்தி சந்தையைப் பாதித்துள்ளது.

குறிப்பாக, உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு விநியோகஸ்தரான கத்தார் மீதான தாக்குதல்கள் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

உலகின் ஐந்தில் ஒரு பங்கு கச்சா எண்ணெய் செல்லும் இந்த வழித்தடம் தற்காலிகமாக முடங்கியுள்ளது.

இதன் விளைவாக, சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை போர் தொடங்கியதில் இருந்து சுமார் 50% அதிகரித்துள்ளது.

பெட்ரோல் விலை உயர்வதுடன், டீசல் விலையும் அதிகரிப்பதால் அது நேரடியாக உணவுப் பொருட்களின் விலையில் எதிரொலிக்கும். "பெட்ரோல் விலை உயர்வு என்பது வெறும் வாகனங்களுக்கு மட்டுமல்ல, அது உங்கள் மளிகைப் பொருட்களின் விலையையும் (Grocery Bills) பல மடங்கு உயர்த்தும்," என மெக்டீக் எச்சரிக்கிறார்.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

பிராம்டனில் உள்ள தமிழீழத் தமிழ் இனப்படுகொலை நினைவிடம் சேதமாக்கப்பட்டுள்ளது!

22.03.2026

பிராம்டனில் உள்ள தமிழீழத் தமிழ் இனப்படுகொலை நினைவிடம் சேதப்படுத்தப்பட்டதைக் கண்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன் என்று ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

மேலும், "இந்த நினைவுச் சின்னம் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை நினைவுகூரும் புனித இடமாகவும், உயிர் தப்பியோர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலின் அடையாளமாகவும் உள்ளது. இதனை சேதப்படுத்தியிருப்பது மிகவும் வெறுக்கத்தக்க செயல்" என தெரிவித்துள்ளார்.

தென் ஆசியாவிற்கு வெளியே மிகப்பெரிய தமிழ் சமூகங்களில் ஒன்றாகக் கருதப்படும் கனடா தமிழர்கள் வாழும் சமூகத்தின் அடையாளம் மற்றும் வரலாற்றுக்கு எதிரான நேரடி தாக்குதலாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"வெறுப்பு மற்றும் இனப்படுகொலை மறுப்பு போன்ற செயல்களுக்கு ஒன்ராரியோவில் இடமில்லை" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

Vijay Thanigasalam
@TheThanigasalam

I am absolutely disgusted by the vandalism of the Tamil Genocide Monument in Brampton. This monument is a sacred sanctuary of remembrance for the tens of thousands of lives lost and a foundational symbol of healing for survivors and their families who have made Canada their home.

As the MPP for Scarborough—Rouge Park, I represent a community that is home to a vibrant and resilient Tamil population, one of the largest outside of South Asia. For my constituents and the hundreds of thousands of Tamils across Ontario, this desecration is a direct attack on the identity and history of the Canadian Tamil community. Hate and genocide denial have no place in Ontario.

We will continue to stand firm in protecting Tamil history and honouring the inalienable right of the Tamil people to remember and mourn their dead.

தமிழ் மக்களின் வரலாற்றை பாதுகாக்கவும், உயிரிழந்தவர்களை நினைவுகூரும் அவர்களின் உரிமையை மதிக்கவும் தொடர்ந்து உறுதியாக நிற்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் நியூயார்க்கில் ஏர் கனடா விமான விபத்து!

22.03.2026

மார்ச் மாதம் 22ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை இரவு, கனடாவின் மொன்றியலிலிருந்து அமெரிக்காவின் நியூயார்க்கிலுள்ள LaGuardia விமான நிலையத்தில் சென்று இறங்கிய ஏர் கனடா விமானம் ஒன்று, தீயணைக்கும் ட்ரக் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விமானம் பத்திரமாக தரையிறங்க, இன்னும் சில நிமிடங்களில் விமானத்திலிருந்து இறங்கிவிடலாம் என்னும் எண்ணத்திலிருந்த பயணிகள், எதிர்பாராத ஒரு அதிர்ச்சியை சந்தித்தார்கள்.

அதே விமான நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு விமானத்தில் ஏதோ துர்நாற்றம் வீசுவதாக தகவல் கிடைக்க, அந்த விமானத்தை பரிசோதிப்பதற்காக செல்வதற்காக தீயணைக்கும் வாகனம் ஒன்று விமான கட்டுப்பாட்டு அறையிடம் அனுமதி கோர, அலுவலர் ஒருவர் அதற்கு அனுமதி கொடுத்துள்ளார்.

அதைத் தொடர்ந்து அந்த தீயணைப்பு வாகனம் வேகமாக புறப்பட, அப்போது ஏர் கனடா விமானம் வந்து விமான ஓடபாதையில் தரையிறங்கியுள்ளது.

விமானம் தரையிறங்கும் நேரத்தில் தீயணைப்பு வாகனத்துக்கு அனுமதி கொடுத்தது தவறு என்பதை உணர்ந்த விமான கட்டுப்பாட்டு அலுவலர், தீயணைப்பு வாகனத்தை நிறுத்துமாறு அவசர அவசரமாக குரல் கொடுக்க, ஆனால், அதற்குள் காலம் கடந்துவிட்டது.

மணிக்கு 39 கிலோமீற்றர் வேகத்தில் ஓடுபாதையில் சென்றுகொண்டிருந்த விமானம் ட்ரக் மீது மோத, விமானத்தின் முன் பகுதி சிதைந்துபோனது.

இந்த துரதிர்ஷ்ட சம்பவத்தில், விமானத்தை செலுத்திக்கொண்டிருந்த விமானியும் சக விமானியும் உயிரிழந்துள்ளார்கள்.

விமானத்தில் 72 பயணிகளும் நான்கு பணிப்பெண்களும் இருந்த நிலையில், அவர்களில் 41 பேர் காயமடைந்ததாகவும், அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பலர் பின்னர் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், தற்போது, உயிரிழந்த விமானிகள் குறித்த சில விவரங்கள் வெளியாகியுள்ளன.

விமானத்தை இயக்கியவர் ஆண்டோயின் ஃபாரஸ்ட் (30).

கனடாவின் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த ஃபாரஸ்ட், சிறுவயது முதலே விமானியாகும் ஆசை கொண்டிருந்தவர் என்றும், கடின உழைப்பாளி என்றும் அவரது சகாக்கள் கூறுகிறார்கள்.

ஃபாரஸ்டின் சக விமானியின் பெயர் மெக்கன்ஸி குந்தர் (Mackenzie Gunther). ஒன்ராறியோவில் விமான பயிற்சி பெற்ற குந்தரைக் குறித்து அதிக தகவல்கள் வெளியாகவில்லை.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

கனடாவில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் மத்திய அரசாங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு

25.03.2026

கனடாவில் மத்திய அரசாங்கத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச மணிநேர ஊதியம் வரும் ஏப்ரல் 1 முதல் உயர்த்தப்பட உள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 17.75 டொலர் என்ற ஊதிய அளவு, இனி ஒரு மணிநேரத்திற்கு 18.15 டொலராக இருக்கும் என்று கனடாவின் வேலைவாய்ப்பு மற்றும் சமூக மேம்பாட்டுத் துறை (ESDC) தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் பணவீக்கத்திற்கு ஏற்ப இந்த ஊதிய உயர்வு வழங்கப்படுவதாகவும், இதன் மூலம் கனடியர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து அவர்களுக்கு நிதி ரீதியான உறுதியை வழங்க முடியும் என்றும் அந்தத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் நுகர்வோர் விலை குறியீடு (CPI) 2.1 சதவீதம் உயர்ந்ததை அடிப்படையாகக் கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊதிய உயர்வு முக்கியமாக சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து, தொலைத்தொடர்பு மற்றும் வங்கித் துறைகள் போன்ற மத்திய அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களில் பணிபுரிவோருக்குப் பொருந்தும்.

ஒருவேளை ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் குறைந்தபட்ச ஊதியம், இந்த மத்திய அரசாங்க ஊதியத்தை விட அதிகமாக இருந்தால், அங்குள்ள மத்திய அரசு நிறுவனங்கள் அந்த அதிகப்படியான ஊதியத்தையே தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் என்.டி.பி கட்சியின் புதிய தலைவர் அவி லிவிஸ் தேர்வு

29.03.2026

கனடாவின் புதிய ஜனநாயகக் (NDP) கட்சியின் புதிய தலைவராக அவி லிவிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கூட்டாட்சித் தரத்தில் தனது செல்வாக்கை இழந்துள்ள கட்சியை மீண்டும் வலுப்படுத்தும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைமைத் தேர்தலில் 56% ஆதரவு பெற்று, 39,734 உறுப்பினர்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற லிவிஸ், "எங்கள் கட்சி மீண்டும் எழுகிறது" என உறுதியளித்தார்.

புதிய தலைவர் தனது உரையில், அமெரிக்காவின் பொருளாதார அழுத்தங்களையும், டிரம்ப் தலைமையிலான உலக அரசியல் சூழ்நிலையையும் கடுமையாக விமர்சித்தார்.

சாதாரண மக்களுக்கு வாழ்க்கை நடத்துவதும் கடினமான சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், கனடாவின் முக்கிய அரசியல் கட்சிகள் செல்வந்தர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளதாக குற்றம் சாட்டிய அவர், பணக்காரர்களுக்காக அல்ல, பொதுமக்களுக்காக செயல்படும் அரசை உருவாக்குவோம்" என தெரிவித்துள்ளார்.

அவி லிவிஸ் ஒரு அனுபவமிக்க பத்திரிகையாளர், ஆவணப்பட இயக்குநர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கு சமூக ஊடகத் தடை?
கனடாவின் சஸ்கட்ச்வான் மாகாணத்தில் புதிய விவாதம் தீவிரம்!

30.03.2026

கனடாவின் சஸ்கட்ச்வான் மாகாணத்தில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்வது குறித்து பொது மக்களின் கருத்தை கேட்க திட்டமிட்டுள்ளதாக மாகாண முதல்வர் ஸ்கொட் மோ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா அண்மையில் 16 வயதிற்குட்பட்டவர்களுக்கு முழுமையான சமூக ஊடகத் தடை அமல்படுத்தியதை குறிப்பிட்டு, கனடாவும் இதுபோன்ற நடவடிக்கைகளை பரிசீலிக்க வேண்டும் என அவர் சமூக ஊடகமொன்றில் பதிவிட்டுள்ளார்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில், 4,000-க்கும் மேற்பட்டவர்களில் சுமார் 75% பேர், ஆஸ்திரேலியாவில் அமல்படுத்தப்பட்டதுபோன்ற தடை நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தத் தடை, டிக்டாக், முகநூல், இன்ஸ்டாகிராம், யுடியுப் மற்றும் ஸ்னெப்சாட், போன்ற தளங்களில் 16 வயதிற்குட்பட்டவர்கள் கணக்குகள் உருவாக்குவதைத் தடுக்கிறது.

இதேவேளை, கனடாவின் பிரதமர் மார்க் கார்ணி இந்த விவகாரம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என தெரிவித்தார்.

எனினும், இது குறித்து விரிவான விவாதம் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

மேலும், ஆன்லைன் பாதிப்புகளை கட்டுப்படுத்தும் சட்டங்கள் அவசியம் என்றும், சமூக ஊடகங்களுக்கான "வயது வரம்பு" குறித்த விவாதமும் அதில் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

தமிழ் நாட்டுச் செய்திகள்

நிலுவையில் உள்ள வழக்கு விவரங்களை வேட்பாளர்கள் ஊடகங்களில் விளம்பரம் செய்ய வேண்டும்!

21.03.2026

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நிலுவையில் உள்ள வழக்குகள் விவரங்களை விளம்பரம் செய்ய வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் அல்லது தண்டனை விவரங்களை உரிய படிவங்களில் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்ய வேண்டும்.

அதேபோல், அத்தகைய வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் கட்சிகளும் அந்த விவரங்களை ஊடகங்கள் மற்றும் கட்சியின் அதிகாரப்பூர்வ வலைதளங்களில் வெளியிட வேண்டும்.

தேர்தல் ஆணையம் இதற்கென பிரத்யேக படிவங்களை வரையறுத்துள்ளது. வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளுக்கு அடுத்த நாள் முதல், வாக்குப்பதிவு முடிவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பு வரை 3 முறை வெவ்வேறு நாட்களில் இந்த விளம்பரங்களை வெளியிட வேண்டும்.

வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட 48 மணி நேரத்துக்குள் அல்லது வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பாகவே (இதில் எது முந்தையதோ அதன்படி) விவரங்களை வெளியிட வேண்டும்.

இது தொடர்பான அறிக்கையை அடுத்த 72 மணி நேரத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான முழுமையான அறிவுரைகள், அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பட்டியலை அறிந்து கொள்ள பொதுமக்கள் மற்றும் வேட்பாளர்கள்

www.elections.tn.gov.in என்ற இணையதளத்தை பார்வையிடலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பறவைக் காய்ச்சல் எதிரொலி: தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

23.03.2026

அடையாறு பகுதியில் சமீபத்தில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், எச்5என்1 எனப்படும் பறவை காய்ச்சல் பாதிப்பு இருந்தது உறுதியானது.

இதையடுத்து, கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமை செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியது. அதன்படி, தமிழக சுகாதாரத்துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பறவை காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடம் இருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவக்கூடும்.

பாதிக்கப்பட்ட பறவையிடம் இருந்தோ, மனிதரிடம் இருந்தோ மற்றவர்களுக்கு, ஹவெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

அதனால், காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுமாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், சென்னையை தொடர்ந்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் காகங்கள் உயிரிழந்தன. கிண்டி உயிரியல் பூங்காவில் பறவைகள் உயிரிழந்ததால், பூங்கா மூடப்பட்டது.

இது தொடர்பாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் பறவை காய்ச்சலால் காகங்கள் உயிரிழந்தாலும், மற்ற பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பாதிப்பு கண்டறியப்படவில்லை. காகங்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இறந்த பறவைகளை வெறும் கைகளால் அப்புறப்படுத்தக் கூடாது. அறிகுறிகள் இருந்தால், அலட்சியமாக இல்லாமல்

உடனே மருத்துவரை அணுக வேண்டும். பறவை காய்ச்சலால் கோழிகள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

கோழி இறைச்சியை நன்கு வேக வைத்து சாப்பிட வேண்டும். தமிழகம் முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை எடுத்து வருகிறது. பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம்" என்றனர்.

ஒன்பது நாட்களில் ரூ.179 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்

தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்

25.03.2026

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் மார்ச் 15ஈம் தேதி பொதுத்தேர்தல் அறிவிப்பை வெளியிட்டதும் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

இவை தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நேற்று வரை, பொது இடங்களில் இருந்த 4,54,321 சுவர் விளம்பரங்கள், தனியார் இடங்களில் இருந்த 2,56,041 விளம்பரங்கள் அகற்றப்பட்டு, 544 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதிகளைத் தீவிரமாகக் கடைபிடிக்கவும், தேர்தல் விதிமீறல்களைத் தடுக்கவும் தமிழகம் முழுவதும் மொத்தம் 2,169 பறக்கும் படை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் சி விஜில் செயலி மற்றும் பிற வழிகள் மூலம் பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. முக்கிய இடங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் மொத்தம் 2,166 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

பறக்கும்படை, நிலை கண்காணிப்புக் குழுக்கள் நடவடிக்கையில் இது வரை, ரூ.34.64 கோடி ரொக்கம், ரூ.79 இலட்சம் மதிப்பிலான மதுபானம், ரூ.6.76 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ.112.37 கோடி மதிப்பிலான தங்கம், வைரம், ரூ.24.22 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் என ரூ.178.78 கோடி மதிப்பில் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏப்.9ஆம் தேதி காலை 7 மணி முதல் ஏப். 29ஆம் தேதி மாலை

6.30 மணி வரை, வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்துவது மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது தடை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்ளவார்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

மத்திய கிழக்கு மோதல் மேலும் 45 மில்லியன் மக்களைப் பட்டினிக்குத் தள்ளக்கூடும்!

ஐ.நா

17.03.2026

மத்திய கிழக்கில் மோதல் தொடர்ந்தால், கூடுதலாக 45 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர்கொள்ள நேரிடலாம் என ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

மத்திய கிழக்கு மோதல் ஜூன் மாதம் வரை தொடர்ந்தால், விலை உயர்வுகளால் கூடுதலாக 45 மில்லியன் மக்கள் கடுமையான பட்டினிக்குத் தள்ளப்படலாம் என்று ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்தின் துணை நிர்வாக இயக்குநர் கார்ல் ஸ்காவ், ஜெனீவாவில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இது உலகளாவிய பசியின் அளவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உச்சத்திற்குக் கொண்டு செல்லும், மேலும் இது மிகவும் மோசமான ஒரு நிலைமையாகும் என்று அவர் கூறினார். தற்போது உலகம் முழுவதும் 31.9 கோடி மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிப்ரவரி 28 அன்று ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடங்கியதிலிருந்து, தங்களது கப்பல் போக்குவரத்துச் செலவுகள் 18% அதிகரித்துள்ளதாக ஸ்காவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நன்கொடையாளர்கள் பாதுகாப்புக்காக அதிகம் செலவிடுவதால், இந்தக் கூடுதல் செலவுகளுடன் கடுமையான செலவினக் குறைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன என்று ஸ்கா கூறினார்.

அமெரிக்க – இசுரவேல் தாக்குதலில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலி!

20.03.2026

ஈரான் மீது அமெரிக்க - இசுரவேல் தாக்குதலை தொடர்ந்து ஈரானில் 3 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் ஆர்வலர்களின் செய்தி நிலையம் இந்த புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதி போர் ஆரம்பமானது முதல் இதுவரையில் ஈரானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,186 ஆக அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 1,394 பேர் பொதுமக்கள் என்றும், அவர்களில் குறைந்தது 210 சிறுவர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1,153 பேர் இராணுவத்தினர் என்றும், ஏனைய 639 பேரின் மரணங்கள் எவ்வகையைச் சேர்ந்தவை என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அந்த அமைப்பு

ஈராக்கிலிருந்து நேட்டோப் படைகள் பின்வாங்கப்பட்டது

நேட்டோ இராணுவக் கூட்டணி

21.03.2026

ஈராக்கிலிருந்து நேட்டோ தனது படையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

ஈராக்கிலிருந்து தனது பாதுகாப்பு ஆலோசனைக் குழுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டதாக நேட்டோ இராணுவக் கூட்டணி தெரிவித்துள்ளது.

தனது பணியாளர்கள் அனைவரையும் தெற்கு இத்தாலியில் உள்ள நேபிள்ஸில் இருக்கும் தனது வளாகங்களுக்கு இட மாற்றம் செய்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.

ஈராக்கிலிருந்து நேட்டோ படையினரை பாதுகாப்பாக இடமாற்றம் செய்ய உதவிய ஈராக் குடியரசுக்கும், அனைத்து நேச நாடுகளுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்று அமெரிக்க ஜெனரல் அலெக்சஸ் கிரின்கேவிச் கூறினார்.

இந்தப் பணிக்குழு, ஈராக் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2018இல் நிறுவப்பட்ட ஒரு போர் புரியாத படையாகும்.

அமெரிக்கா மற்றும் இசுரவேலுக்கு இடையேயான ஈரான் போர் தொடங்கியதிலிருந்து, ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்கள், பாக்தாத்தில் உள்ள வாஷிங்டன் தூதரகம் உட்பட, ஈராக்கில் உள்ள அமெரிக்க இலக்குகளைத் தாக்கி வருகின்றன.

இந்நிலையிலேயே படைகள் பின்வாக்கப்பட்டன.

இலங்கையின் யுத்த கால மீறல்களில் முன்னாள் சிறீலங்கா இராணுவத்தளபதி தயா ரத்நாயக்கவின் வகிபாகம் என்ன?

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம்

22.03.2026

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியிலும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட மீறல் குற்றங்களில் முன்னாள் இராணுவத்தளபதி (ஓய்வுபெற்ற) தயா ரத்நாயக்கவின் வகிபாகம் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டமை மற்றும் யுத்தத்தின் பின்னர் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த புனர்வாழ்வு நிலையங்களுக்குள் பரவலாக நிகழ்ந்த மீறல்கள் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவ்வறிக்கையில் தயா ரத்நாயக்க இராணுவத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் பொதுமக்கள் மீதான சட்டவிரோதப் படுகொலைகள், வலுகட்டாயமாகத் தடுப்புக்காவலில் வைத்தல், சித்திரவதைகளுக்கு உட்படுத்தல், வலிந்து காணாமலாக்குதல் என்பன உள்ளிட்ட மிகமோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளின்போது பீரங்கிகள், வான் வழித்தாக்குதல் உபகரணங்கள் மற்றும் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள்மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாகவும், அக்காலப்பகுதியில் பொதுமக்கள் இடம்பெயர்ந்து தஞ்சம் புகுந்திருந்த வாகரையில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும் எனவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி அக்காலப்பகுதியில் 23 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய தயா ரத்நாயக்க, இந்த மீறல்களில் முக்கிய பங்கு வகித்ததாக விபரிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தினால் புனர்வாழ்வு நிலையங்கள் என

அழைக்கப்பட்ட கட்டமைப்புக்களுக்குள் அடித்துத் துன்புறுத்துதல், நீருக்குள் மூழ்கடித்தல், மூச்சுத்திணைச்செய்தல், பாலியல் வன்புணர்வு மற்றும் உளவியல் சித்திரவதைகள் என்பன உள்ளிட்ட பரவலான சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழத்தை பூர்வீகமாகக்கொண்ட தமிழ்ப் பெண் பிரான்ஸில் துணை மேயரானார்

24.03.2026

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண்ணான ஆதித்யா ஆனந்தராசா பிரான்ஸின் பொன்டால்ட்-கொம்பால்ட் நகரின் துணை மேயராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பிரான்ஸ் நாட்டின் பொன்டால்ட்-கொம்பால்ட் நகரில் நடைபெற்ற நகராட்சி தேர்தலைத் தொடர்ந்து, தமிழீழத்தை பூர்வீகத்தைக் கொண்ட ஆதித்யா ஆனந்தராசா துணை மேயராக தனது பதவிப் பொறுப்புகளை திங்கட்கிழமை (23) அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த இவரின் இந்த வளர்ச்சி, வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு பெருமையை ஏற்படுத்தும் முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

இளம் வயதிலேயே அரசியலில் ஆர்வம் கொண்ட ஆதித்யா ஆனந்தராசா, 19 வயதிலேயே நகர மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர், தொடர்ந்து பொதுச் சேவையில் ஈடுபட்டு, மக்களுடன் நெருக்கமாக செயல்பட்டதன் பலனாக தனது 25 ஆவது வயதில் துணை மேயர் பதவியை அடைந்துள்ளார்.

அவரது இந்த முன்னேற்றம், இளம் தலைமுறையினருக்கு அரசியல் மற்றும் பொதுச் சேவையில் ஈடுபட ஊக்கமளிக்கும் சிறந்த முன்னுதாரணமாகக் கருதப்படுகிறது.

மேலும், பல்துறை சமூகத்துடன் இணைந்து செயல்படுவதிலும், உள்ளூர் நிர்வாகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் அவர் முக்கிய பங்காற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பநிலை அதிகரிப்பு: உலக வானிலை அமைப்பு கடும் எச்சரிக்கை!

24.03.2026

புவியின் காலநிலை இதுவரை கண்டிராத ஒரு அபாயகரமான கட்டத்தை எட்டியுள்ளதாகவும், மனித நடவடிக்கைகளால் ஏற்படும் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தால் உலகம் “மீள முடியாத” அழிவை நோக்கிச் செல்வதாகவும் உலக வானிலை அமைப்பு தனது வருடாந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திங்கட்கிழமை (23) வெளியிடப்பட்ட ‘உலகளாவிய காலநிலையின் நிலை’ என்ற அந்த அறிக்கையில்,

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியே உலகின் வரலாற்றில் பதிவான மிக வெப்பமான 11 ஆண்டுகளாகும்.

கடந்த 2025 ஆம் ஆண்டானது 1850 களுக்குப் பின்னர் பதிவான 2 ஆவது அல்லது 3 ஆவது மிக வெப்பமான ஆண்டாகக் கருதப்படுகிறது.

புவி வெப்பமடைதலுக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு சராசரி வெப்பநிலை 1.43°C அதிகமாகப் பதிவாகியுள்ளது.

புவி சூரியனிடமிருந்து பெறும் வெப்பத்தை விடவும் குறைவான வெப்பத்தையே விண்வெளிக்குத் திருப்பி அனுப்புகிறது. வளிமண்டலத்தில் கார்பன்-டை-ஒக்சைட்டு, மீத்தேன் போன்ற வாயுக்கள் கடந்த 8 இலட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதால், பூமி அதிகப்படியான வெப்பத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது.

இந்த அதிகப்படியான வெப்பத்தில் 91 சதவீதத்தை சமுத்திரங்களே உறிஞ்சுகின்றன. இதனால் கடல் நீர் வெப்பமடைதல் இருமடங்காக அதிகரித்துள்ளதுடன், கடல்வாழ் உயிரினங்களும் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன.

துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் வேகமாக உருகி வருவதால் கடல் மட்டம் அபாயகரமாக அதிகரித்து வருகின்றது.

1993 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 இல் கடல் மட்டம் சுமார் 11 சென்றிமீற்றர் அதிகரித்துள்ளது. இது கடலோர நகரங்கள் மற்றும் சிறிய தீவு நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், “புவி தனது எல்லைகளைக் கடந்து தள்ளப்படுகிறது. காலநிலை குறிகாட்டிகள் அனைத்தும் சிவப்பு நிறத்தில் ஒளிர்கின்றன. இது தற்செயலானது அல்ல, இது செயல்படுவதற்கான ஒரு அழைப்பு எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் ‘லா நினா’ காலநிலை மாறி, 2026 ஆம் ஆண்டின் இறுதியில் ‘எல் நினோ’ தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்பட்டால், 2027 ஆம் ஆண்டு உலக வெப்பநிலை புதிய உச்சங்களைத் தொடும் என விஞ்ஞானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

காலநிலை மாற்றம் என்பது வெறும் சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல, அது உலகளாவிய பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கும் விடுக்கப்பட்டுள்ள சவால் என ஐநா எச்சரித்துள்ளது. படிம எரிபொருட்களிலிருந்து விலகி புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாற வேண்டியதன் அவசியத்தை இந்த அறிக்கை மீண்டுமொருமுறை உலக நாடுகளுக்கு வலியுறுத்தியுள்ளது.

கட்டுப்பபடைட்டை மீறி போரின் விளிம்பிற்கு வந்துள்ளது

ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டரெஸ்

25.03.2026

மத்திய கிழக்கில் நிலவும் மோதல் சூழல் ஏற்கனவே “கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிட்டது” என்றும், உலகம் தற்போது ஒரு “பாரிய போரின் விளிம்பிற்கு வந்துள்ளது” என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானுக்கு எதிராக முன்னெடுத்து வரும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இதுவே “மிகப்பொருத்தமான காலம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த மோதலில் சம்பந்தப்படாத அண்டை நாடுகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு அவர் ஈரானிடமும் கோரிக்கை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

“இப்போது செய்ய வேண்டியது போர் மோதல்களைத் தீவிரப்படுத்துவதல்ல, மாறாக இராஜதந்திர தீர்வுகளை நோக்கி நகர்வதாகும்.

சர்வதேச சட்டங்களுக்கு முழுமையான மதிப்பளித்து, அமைதியை நிலைநாட்ட அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என பொதுச்செயலாளர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

அமெரிக்காவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கு எதிராக அமெரிக்க மக்கள் ஆர்ப்பாட்டம்

29.03.2026

அமெரிக்கா முழுவதும் உள்ள நகரங்களில் ஜனாதிபதி ட்ரம்ப் ட்ரம்ப்பிற்கு எதிராக மாபெரும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகள், அதிகரித்து வரும் விலைவாசி, ஈரானுக்கு எதிராக நடந்து வரும் போர் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சுமார் 70 இலட்சம் மக்கள் இந்தப் போராட்டங்களில் பங்கேற்றிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

“ட்ரம்ப் ஒரு சர்வாதிகாரியைப் போல எங்களை ஆள நினைக்கிறார். ஆனால் இது அமெரிக்கா, இங்கு அதிகாரம் மக்களுக்கே உரியது; மன்னர்களுக்கோ அல்லது அவர்களின் கோடீஸ்வர நண்பர்களுக்கோ அல்ல” எனப் போராட்ட அமைப்பாளர்கள் கோசமிட்டுள்ளனர்.

தேசிய நினைவிடங்கள் மற்றும் லிங்கன் நினைவிடம் அமைந்துள்ள பகுதிகள் போராட்டக்காரர்களால் நிரம்பி வழிந்துள்ளன.

டைம்ஸ் சதுக்கத்தில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் திரண்டதால், மன்ஹாட்டன் பகுதியின் போக்குவரத்து முழுமை யாக முடக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் குடிவரவு அதிகாரிகளால் கொல்லப்பட்ட அமெரிக்கப் பிரஜைகளான ரெனீ நிக்கோல் குட் மற்றும் அலெக்ஸ் பிரெட்டி ஆகியோரின் மரணத்திற்கு நீதி கோரி அங்குப் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

பிரபல பாடகர் புரூஸ் ஸ்பிரிங்ஸ்டீன் அங்குப் பாடல்களைப் பாடி போராட்டக்காரர்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் மட்டுமன்றி, லண்டன், பாரிஸ் மற்றும் லிஸ்பன் போன்ற உலக நாடுகளின் தலைநகரங்களிலும் புலம்பெயர் அமெரிக்கர்கள் திரண்டு ட்ரம்ப்பிற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினர்.

அங்குப் ஜனாதிபதி ட்ரம்ப்பை “போர்க்குற்றவாளி” மற்றும் “பாசிசவாதி” எனப் போராட்டக்காரர்கள் விமர்சித்துள்ளனர். போராட்டங்கள் அமைதியான முறையில் நடைபெற்று வந்தாலும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கப் பல மாநிலங்களில் தேசிய பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளைத் தண்டிக்க முற்படுவதாகவும், இராணுவத்தை உள்நாட்டு நகரங்களில் நிலைநிறுத்துவதாகவும் எதிர்க்கட்சியினர் கடுமையாகக் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இசுரவேலில் புதிய சட்டம் நிறைவேற்றம்; பாலஸ்தீனர்களுக்கு கட்டாயத் தூக்குத் தண்டனை!

31.03.2026

இசுரவேலியர்களைக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு, குற்றவாளிகளாகக் காணப்படும் பாலஸ்தீனர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு அனுமதி அளிக்கும் புதிய சட்டமூலம் இசுரவேலிய நாடாளுமன்றமான “க்னெசட்” (Knesset) நிறைவேற்றப்பட்டுள்ளது.

இசுரவேலின் தீவிர வலதுசாரிக் கட்சியினரால் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்த இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமையானது அவர்களுக்குக் கிடைத்துள்ள ஒரு முக்கிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

இசுரவேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேரில் வருகை தந்து இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக “ஆம்” (Yes) என வாக்களித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் (West Bank) இசுரவேலியர்களைக் கொலை செய்ததாகக் குற்றம் நிரூபிக்கப்படும் பாலஸ்தீனர்களுக்கு “தூக்குத் தண்டனை” வழங்குவதை இந்த சட்டம் கட்டாயமாக்கியுள்ளது.

இந்த சட்டத்தின் கீழ், இசுரவேலிய நீதிமன்றங்கள் தனது சொந்த நாட்டுப் பிரஜைகளுக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்க அதிகாரம் பெற்றுள்ளன.

இந்த சட்டம் ஏற்கனவே முடிவடைந்த வழக்குகளுக்குப் பொருந்தாது. இனிவரும் காலங்களில் பதியப்படும் புதிய வழக்குகளுக்கு மட்டுமே இது நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த சட்டமானது இனவாதத் தன்மையுடையது என்றும், மிகவும் கொடூரமானது என்றும் இசுரவேலிய மற்றும் பாலஸ்தீன மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும், இவ்வாறான தண்டனைகள் தாக்குதல்களைத் தடுக்க உதவாது எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன. இந்த சட்டம் நடைமுறைக்கு வரும்போது இசுரவேலிய உயர் நீதிமன்றத்தில் பல சட்ட ரீதியான சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com



சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

பெண்களின் விடுதலைப் போராட்டம்: இயக்கத்தின் அக்கினிக் குழந்தை

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம் கால மாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி விழ்த்தி வருகிறது. எமது மனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புப் பெற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும், எழுச்சியும் ஒப்பில் லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும் பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப் பெண் புலியாக மாறிவிட்டான். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுத மேந்தி நிற்கிறான். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழி சமைத்துக்கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாகப் பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறு பாட்டின் அடிப்படையில் சமத்துவ மற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டு வடிவங்களிலும் இந்த, சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கும் .ந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க் கொடி உயர்த்தி நிற்கிறது.

பால் ரீதியான உடற்கூற்று வேறு பாடு என்பது இயற்கையின் திருவிளையாடலாக இனவிருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை உயிர்ப் படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற் கூற்றின் அடிப்படையில் ஆணையும் பெண்ணையும் வேறு படுத்தி சமத்துவமற்ற உறவுகளை சமூகம் பின்னிவிட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும். அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை பெண்மீது பதித்துவிட்ட படிமங்களும், பார்வை களும், ஆண், பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.

மனித ஆளுமை பாலியல் வேறு பாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது.

இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்கமுடியாது. எதையும் பெண்ணால் சாதிக்க முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஒரு உன்னத உதாரணமாகத் திகழ்கிறது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம் பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம் கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக் கொள்ளும் போதுதான் ஆண் பெண் சமத்துவம் சாத்திய மாகும்.

(தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உலக மகளிர் தினத் தையொட்டி விடுத்த அறிக்கையிலிருந்து)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

Shiyara
Financial Services
(An Agency for the Real Estate, Mortgages & Finance)
BUSINESS LOANS - LINE OF CREDITS
MORTGAGES
SECOND MORTGAGES
REFINANCING
CALL:
KRISHNA
647 308 6069
Shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
K
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



மரணம் மட்டுமல்ல விடுதலையும் கூடத்தான்...

நான் உன்னோடு கதைக்கத் துடிக்கிறேன்
நீயோ என்னைக் காப்பாற்றத் துடிக்கிறாய்
போராளிக்கு –
கிடைக்கின்ற விடுதலை மட்டுமல்ல...
வருகின்ற சாவும் உறுதிதானே.

நண்பனே, எனக்கு நீ –
விளையாட்டுத் திடலில் கைமுறிந்தபோது
வீட்டுப்பாடம் எழுத உதவிய நாளில்...
கவண்கொண்டு காகம் அடித்த காலத்தில்...
ஊரை அண்டிய ஆற்றில்
அக்கரை தொடும் போட்டியில்...
திருட்டுத்தனமாகப் படம் பார்க்கையில்...
அரட்டைச் சந்தியில் கலந்து கதைக்கையில்...
நண்பனாகவில்லை.

நம் நட்பு நடப்பட்டதும் வேர்விட்டுக் கிளைபரப்பியதும்
எப்பொழுது என்று தெரியவில்லை.
நம் தேச அடிமையை உணர்ந்து திசை திரும்பியபோது...
இனவெறியன் –
நம் இனத்தின் தலையில் வைத்த கொள்ளியும்
நம் நம்பிக்கைகள்; எதிர்காலம் நாசமானதும்
விடுதலைக் கைகளின் வீரக்கதைகளும்
சகோதார்களைப் பிடித்து அரசு செய்த வதைகளும்
நம் நட்புக்கு விதை போட்டிருக்கலாம்.

ஆனால்...
நம் புலிப்படைப் பயிற்சியின்போது
தொட்ட துவக்குகளும், கற்ற பாடங்களும்,
விழுந்து எழுந்து ஓடிய மதில்கள்,
தரைகள், ஏணிகள், படுத்து எழும்பிய பாய்கள்...
மலை உச்சியில் ஓலைக் கொட்டிலில்
உறையவைத்த ஊதல்காற்று.
போர்வைக்கு மேலாக கூரையால் விழுந்த
மழைநீரச் சொட்டு, நம் பசியை விரட்டிய –
பயறு நிறைந்த ஒற்றை ஈயத்தட்டு
விடியலில் எழு அடிக்கும் ஊதுகுழல் இவையெல்லாம்
உறுதியாக நம்மை இணைத்திருக்கும் களத்தில்,
நாம் கண்ட வெற்றிகள், சாதனைகள், இழப்புகள், கனவுகள்,
நம் நட்பில் வேர்விட்டிருக்கும்.
இந் நட்புவேர் கிளைபரப்ப...
எதிரி நம்மைச் சிந்தவைத்த குருதித் துளிகளால்
எத்தனைமுறை நீர்விட்டான.

நண்பனே!
நீயோ என்னைக் காப்பாற்றத் துடிக்கிறாய்
நானோ உன்னோடு கதைக்கத் துடிக்கிறேன்.

போராளி –
விதை போடாமல் விழுவதில்லை வாழையைப் போல்.
இது உனக்குப் புரிந்தது தானே!

விடியலில் வீசும் உப்புக் காற்றுத் தடவ,
கடலலை தழுவிக் கிடந்த அப் போராளித் தோழனின் உடுப்பில்
கொழுவிக் கிடந்த ஆயுதமும்,
குண்டு வெடிப்புகளுக் கிடையில் தவழ்ந்து
உடலையும் உயிரையும் இம் மண்ணுக்குக் கொடுக்குமுன்
தன்துவக்கினை நம்மிடம் கொடுக்க
துடித்த துடிப்பும், கொடுத்தபின்...
அவன் அடைந்த உவகையும்.

இந்தேசத்தின் காவல் கருவிகளை
எடுத்துச் செல்ல கடைசி முறையாக
நம்மை அழைத்து அக்குரலும் எம்மிடம் சொல்லியது
அவர்களின் வீரச் சாவைமட்டுமா?

இல்லை –
போராளிக் கைகள் மீது கொண்ட நம்பிக்கையையும்,
மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும்
நம் இலட்சியத்தையுமல்லவா?

நன்றி: களத்தில் 06.03.1992

வரலாறு சொல்லும் பாடம்

தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –



புத்தளம் பள்ளிவாசல் படுகொலை பற்றி சுதந்திரன் செய்தி 1976


1978 அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த அன்று புலிகளால் தகர்க்கப்பட்ட அரசின் விமானம்

தமிழர்களின் நிலைமையோ சற்றும் திருந்தவில்லை. முதலாவது குடியரசு போலவே இலங்கை ஒரு பௌத்த சிங்களக் குடியரசு என்பதை, புதிய அரசியல் யாப்பும் உறுதி செய்தது. புத்த சாசனத்துக்கு முதன்மையுடன் சீராட்டலும் சிங்களமொழிக்கு ஆளுகை மொழி அந்தஸ்தும் வழங்க இரண்டாவது யாப்புந் தவறவில்லை. 1980 வரையில் தமிழர்களின் உரிமைக் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது. இராணுவ வல்லமை கொண்ட சிறீலங்கா அரசுக்கு வெறுங் கையரான தமிழர்களின் ஈனக்குரல் கேட்காமல் இருந்ததில் வியப்பேதுமில்லை 1977 இன் பின், மெல்ல மெல்ல வளர்ச்சியடையத் தொடங்கிய ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்கள் அவ்வப்போது சிங்களப்படையினரைத் தாக்கியபோதும், சிங்கள அரசு அக்கறை கொள்ளவில்லை. 1961 இல் கச்சேரிமுன் நடந்த பெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நசுக்க ஏவிவிடப்பட்ட இராணுவம் தமிழர் நிலங்களிலே தங்கி விட்டமையாலும் தமிழ் நிலங்களில் அமைந்த காவல் நிலையங்கள் கூட பெரும்பாலாகச் சிங்களவரையே கொண்டிருந்தமையாலும் எப்போதாவது எழக்கூடிய தமிழர் ஆயுதக்கிளர்ச்சியை முளையோடு கிள்ளிவிடலாம் என்ற நினைப்பே அரசுக்கு இருந்தது. மேலும் முப்படைக்கும் ஆட்சேர்க்கப்பட்டபோது ஓரிரண்டு தமிழர்களைத் தவிர எல்லோருமே சிங்கள இனத்தவர்களாகவே சேர்க்கப்பட்டனர். எனவே "தேசியப்படை" என்ற பெயர் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. தனிச்சிங்களப் படையாக வடிவமைக்கப்பட்டு சிங்கள மாமன்னர்களினதும் தளபதிகளினதும் பெயர்களிலே அணிகள் பிரிக்கப்பட்டு தமிழர்களின் உரிமைக் குரல்வளையைத் தேவைப்படும் போதெல்லாம் நெரிப்பதற்கு வசதியாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புப் படைச்சேர்ப்பில் மட்டும் இது நிகழ்ந்ததென்பதல்ல. தொழில்வாய்ப்பின் எல்லாத் துறைகளிலும் 90 இற்கு மேற்பட்ட விழுக்காட்டினைச் சிங்களவர்களே பெற்றுக் கொண்டனர். இது காலப்போக்கில் இன்னும் அதிகரித்துக் கொண்டே போயிற்று. திட்டமிட்டு குடியேற்றத் திட்டங்களால் சிங்களத் தாயக எல்லை, கிழக்கில் மட்டுமன்றி வடக்கு நோக்கியும் மெல்லமெல்ல நகரத் தொடங்கியது.

இந்தத் திட்டங்களை அரசே செயற்படுத்தியது. அல்லது இனவாதிகளான சிங்களவர் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த, பொருண்மியப் பாதுகாப்புக் கவசங்களை அரசு அளித்தது. சிங்கள வருக்கு மீள்வாழ்வு, விவசாய விரிவாக்கங்கள் என்ற பெயரில் நடத்தப்பட்ட குடியேற்றங்கள் இலங்கை, இந்தியத் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கத் தொடங்கிய போது, தமது தாயக நில இழப்பினால் வெகுண்ட தமிழர்கள் தமது எதிர்ப்புக்களைப் பல்வேறு வழிகளில் காட்டத் தொடங்கினர்.

1977இல் ஜே.ஆரால் உருவேற்றப்பட்ட

இயக்கங்களில் 1976.05.05 ஆம் நாள் முதன்முதல் தோன்றியதுதான் "தமிழீழ விடுதலைப் புலிகள்" இயக்கம். முதலில் "புதிய தமிழ்ப் புலிகள்" இயக்கமாக அது இருந்தது. திரு. வே. பிரபாகரன் தலைமையில் இன்றுவரை வலிமையும் அர்ப்பணிப்பும் கட்டுப்பாடும் நிறைந்த இயக்கமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ மீட்புப் போரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். புளொட், போன்ற பல இயக்கங்கள் தொடக்கத்தில் ஆயுதப்போராட்டத்தை நிகழ்த்த முனைந்தாலும் காலப்போக்கிலே தமது வலுவினையும் கொள்கை முனைப்பையும் இழந்து சிங்களப் பேரினவாத அரசியலுக்குள் தம்மை முற்றாகவே கரைத்துக் கொண்டன. ஈரோஸ் அமைப்பின் ஒருபகுதியினர் மட்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தையும் தேவையையும் உள்ளப்படி உணர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராட முன்வந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வட்டுக்கோட்டை மாநாட்டில் 1976 மே14 இல், தமிழீழக் கோரிக்கைகளை முன்வைத்தது. தமிழ் மக்கள் தமது விடுதலை வேட்கையை 1977 தேர்தலில் மிக ஆணித்தரமாக வெளிப்படுத்தினர். தமிழீழ விடுதலையை நோக்கிய தமது செயற்பாட்டை விரிவாக்குவதற்குப் பதிலாக த.ஐ.வி.கூ பராளுமன்ற எதிர்க்கட்சிப் பதவியிலும், தேர்தல் அரசியலிலும் தன்னை முற்றாகக் கரைத்துக் கொண்டது. இதனால் தமிழ் மக்களிலிருந்தும் ஆயுதம் ஏந்திய தமிழ் இயங்கங்களிலிருந்தும் தன்னைப் பெரிதும் அந்நியப்படுத்திக் கொண்டது.

1977 இனவெறித்தாக்குதலின் போது எரிகாயங்களுக்குள்ளான குழந்தைகள்.



இனவெறித்தாக்குதல்

இதற்கெல்லம் சிறீலங்கா அரசு கேளாச் செவியராகவே இருந்து வந்தது. 1977இல் பிரதமரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா "போர் என்றால்போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற வீறாப்புப் பேச்சுடனும் அதனைத் தொடர்ந்து, 1977இன் வன்முறையுடனுந்தான் ஆட்சியைத் தொடர்ந்தார். வழமையான இனக் கலவரங்கள் போலவே, 1977இலும் தமிழர் உயிர், உடைமை இழப்புக்களை எதிர்கொண்டனர். தமிழ்ப்பெரியவர்களின் கல்லுருக்கள் (சிலைகள்) உடைமைகள், ஊர்திகள் கோவில்கள் என்பன சிங்கள இராணுவ, காவற்படையினரால் அடித்து நொருக்கப்பட்டன. தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்ட விரக்தி, அவர்களை ஆயுதக்கிளர்ச்சி மூலம் தமிழீழத்தை மீட்கவேண்டுமென்ற ஆவலை அவர்களுக்கு ஏற்படுத்தியது வியப்பல்ல. இந்த இருப்பினும், தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகக்கூட இருப்பதைச் சிங்களபௌத்த பேரினவாதத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அரசிலோ எதிர்க்கட்சியிலோ கடிவாளம் பிடிப்பவர்கள் சிங்களப் பௌத்தராகவே இருக்கவேண்டும் என்பது அவர்களின் வரலாற்றுத் தத்துவம். இதனாற்றான் டி.எஸ். சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா போன்ற கிருத்தவச் சிங்களவர்கள் கூட, தம்மைப் பௌத்தசாசனத்தின் பெருந்தூதுவராக புரவலராக இனங்காட்டியே தமது பதவிகளையும் வாக்கு வங்கியினையும் தக்கவைத்துக் கொண்டனர்.

தமிழரும் இந்துவுமான த.ஐ.வி.மு. செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித்தலைவராக வந்தபோது. சிங்கள பௌத்தப் பேரினவாதம் அவரை அப்பதவியிலிருந்து அகற்று

தமிழீழ விடுதலைப்புலிகளை உருவாக்கிய தலைவர் பிரபாகரனும் அவர் உருவாக்கிய புலிகள் அமைப்பின் சின்னமும்

வதற்காக மாற்று வழியை ஆராய்ந்தது. ஆளும் ஐ.தே.கட்சியிலிருந்து சிலர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாறி அதன் மூலமாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தொகை த.ஐ.விடுதலை முன்னணியின் தொகையை மேவுமாறு செய்தனர். இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத வகையில், எதிர்க்கட்சித்தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, உலகில் எங்கும் நடக்காத புதுமையையும் சிங்கள இனவாதம் அரங்கேற்றியது தமிழரான எதிர்க்கட்சித் தலைவர் தனது வாய்ப்பினை இழக்க அந்த இடத்தை அநுராபண்டாரநாயக்கா பிடித்துக் கொண்டார். தமிழர்களுக்கு வாய்ப்பையும் உரிமையையும் மறுப்பதில்,

சிங்கள அரசு எவ்வளவு உறுதியும் கவனமுமாக இருந்தது என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு நல்ல சான்றாகும். கொஞ்சம் கொஞ்சமாக தாயக நில இழப்பு. கல்வி, பொருண்மிய இழப்பு போன்ற வன்கொடுமைகளுக்கானான தமிழர், செயலற்றிருந்த த.ஐ. விடுதலை முன்னணியிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டு. விடுதலைப் போரில் வீறோடு செயற்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு அனுதாபமும் ஆதரவும் காட்டத் தொடங்கினர்.

1979ஆம் ஆண்டு சிங்களப் படையினரால் வீட்டிலிருந்து பிடித்துச் செல்லப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு தெருவில் வீசப்பட்ட இன்பம், செல்வம்.

1971இல், ஜே.வி.பி. இயக்கத்தைக் கருணையேதுமின்றி நசுக்கிய சிங்கள ஆட்சி தமிழர்களைச் சும்மா விடுமா?

1979 இல், நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற கொடுஞ்சட்டத்தினால் தமிழ் இளைஞர்கள் கேவலமான வகையில் ஒடுக்கப்பட்டனர். பல இளைஞர்கள் சிங்கள ஆயுதப் படையினரின் தாங்கொணாச் சித்திரவதைக்கு ஆளாயினர். பல தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு பல இடங்களிலும் எறியப்பட்டனர், நவாலியில் இன்பம், செல்வம் ஆகிய இளைஞர்கள் கொடூரமாக. வெட்டிச் சிதைக்கப்பட்டு. யாழ் பண்ணைவெளியிலே வீசப்பட்டனர். குட்டிமணி உட்பட நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொடுஞ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

1977இனவெறித்தாக்குதலின் போது கொல்லப்பட்டோர்.

சிங்கள அரசினதும் மேன்மட்டச் சிங்கள மக்களினதும் பார்வையில் இந்தத் தமிழ் இயக்கங்கள் பயங்கரவாத இயக்கங்களாகவும் அழித்தொழிக்கப்பட வேண்டியவையாகவுமே பார்க்கப்பட்டன. தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளும் அடக்கு முறைகளுக்குள்ளே அவர்கள் வடித்த கண்ணீரும் துயரங்களும் அரசின் கண்களுக்குப் புலப்படவில்லை. தமிழ் அரசியற் கட்சிகளின் வன்முறைப் போராட்டங்களும் அதைத் தொடர்ந்து. கொழும்பிலும் புறநகரங்களிலும் சிங்களவர்களின் இனவெறியாட்டங்களும் காலத்துக்குக் காலம் தொடர்ந்தாலும் சிலநாட்களுக்குள் கட்டுப்பாட்டுக்குள் அவை கொண்டுவரப்பட்டன. காலங்காலமாக சிங்களப் படைகளின் (இராணுவத்தினரது) வெறியாட்டங்களில் பலநூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டபோதும், உடைமைகள் சூறையாடப்பட்ட போதும், தமிழ்ச் சான்றோர்களின் கல்லுருக்கள் நொருக்கப்பட்ட போதும் அறிவுச்சுரங்கமெனத் திகழ்ந்த நூல்நிலையம் தீக்கிரையாக்கப்பட்டபோதும் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த சிங்களப் பேரினவாதிகள், 1983 யூலை 23 ஆம் நாள், 13 இராணுவத்தினர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளினாற் கொல்லப்பட்ட போது, பொங்கி எழுந்து தமிழினத்திற்கு எதிராகத் தென்னிலங்கையில் ஆடிய வெறியாட்டமும் இனப்படு கொலைகளும் உலகம் நன்றாக அறிந்ததுதான்.

சிங்களப்பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களின் சொத்துக்களோடு

1981 இல் சிங்கள இனவெறியரால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ் நூல் நிலையம்

சேர்த்து அவர்களும் எரிக்கப்பட்டனர். வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிங்களக்கைதிகளால் அங்குவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியற்கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டனர். யூலை 25இல், 35பேரும் 27இல், 17பேரும் மிகக்கேவலமான முறையிற் சாகடிக்கப்பட்டனர். டெலோத் தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை போன்றோரும் இம் மிருகத்தனமான தாக்குதலிற் சாவடைந்தனர். குட்டிமணியின் கண்கள் பிடுங்கி எடுக்கப்பட்டு சிறைச்சாலை வளவுக்குள் இருந்தப் புத்தர் சிலைக்குப் படைக்கப்பட்டன. ஏதிலிகளாக எங்கும் ஓடி அகதி முகாம்களுக்குட் புகுந்த தமிழர்கள் கூடத் தாக்கப்பட்டனர். இவ்வளவு நிகழ்ச்சிகளும் நடந்தபோது தடுத்து நிறுத்துவதற்குச் சிங்களக் காவலர்களோ இராணுவத்தினரோ முன்வரவில்லை. தமிழர்கள் ரயர் போட்டு எரிக்கப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அல்லது தாக்குதலில் தாமும் பங்கு கொண்டனர். இக் கலவரத்திலேயே 200இற்கு மேற்பட்ட தமிழர்கள் உயிரை இழந்தனர். 1,000,000இற்கும் மேற்பட்டோர் வீடற்றவராகினர்.

1983 இல் வெலிக்கடைச் சிறையில், படுகொலை செய்யப்பட்ட 52 பேரில் அறுவர் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், நடேசதாசன், தாமு கந்தையா, சத்தீஸ்வரன்.

தமிழர்களுக்கு உரிமையான 70இற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் தரைமட்டமாக்கப்பட்டன. பலநூறுகோடி ரூபா பெறுமதியான தமிழர் உடைமைகள் சூறையாடப்பட்டன. எரியூட்டப்பட்டன. இனப்படுகொலை தற்செயலாக உணர்ச்சியாலே தூண்டப்பட்டு நிகழ்ந்த செயலல்ல. அரசினால் நன்கு திட்டமிடப்பட்டு, ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்து அரங்கேற்றப்பட்ட நிகழ்வுதான் அது. உலக நாடுகள் இந்த நிகழ்வை மிகவும் கண்டனம் செய்த பிறகுதான் சிங்கள அரசு கண்விழித்துச் செயற்பட முன்வந்தது.

1983இல் கொழும்பில் எரியூட்டப்பட்ட தமிழரின் உடைமைகளில் சில.

ஜே. ஆர் கக்கிய உள்ளத்து உணர்வுகள்

பௌத்த கலாசாரத்துக்கு எதிரான இந்நிகழ்வு இனிமேல் நடவாது என்று காலத்துக்குக் காலம் சிங்கள அரசு வாக்குறுதியளிப்பதற்கு. உலக நாடுகள் இனப்படுகொலையைக்கண்டிக்கத் தொடங்கியதே காரணமாகும். இதனைத் தொடர்ந்து வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்குப் பேட்டியளித்தபோது சிறீலங்கா அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறிய வார்த்தைகள், தமிழர் பற்றிய சிங்கள அரசின் உள்ளக்கிடக்கையை உள்ளபடி வெளியிட்ட வார்த்தைகளாகும்.

“தமிழர்களின் பாதுகாப்புக்கு நான் பொறுப்பேற்க முடியாது. தமிழர்கள் பற்றிய உணர்வுகள் பற்றி எனக்கு எவ்வித அக்கறையுமில்லை.” என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இனவாதத்தை இவ்விதம் வெளிப்படையாகவே கக்கினார். தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்ற நைந்த ஆசையோடு கொழும்பிலே ஒட்டிக்கொண்டு இருந்த நடுத்தரவர்க்கத் தமிழர்கள் கூட இவ்வார்த்தைகளால் அதிர்ச்சியடைந்து, தம் அரச விசுவாசக் கொள்கையை மாற்றிக்கொள்ளத் தூண்டப்பட்டனர். ஆரம்பத்தில் இவ் இனப்படுகொலையை நியாயப்படுத்தவே அரசு முனைந்தது.

சிறீலங்கா என்னும் பெயரிலான அரச வெளியீடு (வெளிநாட்டுத் தகவல் 6) “பயங்கர வாதிகள் தமது (சிங்கள) இளைஞர்களைச் சுட்டுக் கொல்லுகின்ற காரணத்தினால், சிங்கள மக்கள் தமிழ்ப் பயங்கரவாதிகளின் உறவினர்களைப் பணயமாகப் பிடித்து வைத்துள்ளனர்” என்று செய்தியை வெளியிட்டது. அரச வெளியீட்டில் இன்னொரு பிரச்சாரம் “கொழும்பிலே தமது சொந்த மக்கள் தமிழர்கள்) வெட்டி எறியப்பட்டபோது. அவர்களுக்காகப் பயங்கரவாதிகள் கொழும்புக்கு வரவில்லை என்று எள்ளிநகையாடியது. இந்த இனப்படுகொலை தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது சகிப்புத்தன்மைக்கும் தாங்கும் சக்திக்கும் அப்பாற்பட்டதாய் அமைந்துவிட்டது. இதற்குப் பின்னரும் சிங்கள மக்களோடு ஒன்றுகலந்து, ஒன்றிணைந்து சிறீலங்காவுக்குள் தமிழர்கள் தமது நல்வாழ்வை உறுதி செய்துகொள்ள முடியுமென்று எவர்தான் நினைப்பர்?

வெலிக்கடை சிறைச்சாலையின் வாசற்பகுதி

இதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் இயக்கங்கள், குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள், தமது ஆயுதப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தத் தொடங்கினர். கிளர்ச்சியை அடக்குதல் என்ற போர்வைக்குள் அரசு செய்த பயங்கரவாத வெறியாட்டங்கள் கொஞ்சமல்ல. தமிழர் நிலங்களில் ஒவ் வொரு பிரதான இடத்திலும் முப்படை முகாங்கள் அமைக்கப் பட்டன. கொலை. சித்திரவதை, கேள்விமுறையற்ற கைது. காணாமற்போதல் உச்சநிலைக்கு வந்தன. முப்படைகளின் சுடுபடையாற்றல் தமிழ்ப்பொதுமக்களின் உயிர் உடைமை -களை அழிக்கத் தொடங்கியது.

அரசு கட்டவிழ்த்த பயங்கரவாதம்

லலித் அத்துலத் முதலி

விடுதலைப்புலிகள் இராணுவத்தின் மீது மேற்கொள்ளும் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பின்விளைவாக, தாக்குதல் நடந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் தாக் கப்பட்டனர் உடைமைகள் அழிக்கப்பட்டன. வெறிகொண்ட சிங்களப் படைகளின் இந்த வன்கொடுமைகள் அரசின் கட்டளையோடு நடந்தன. பொழுது போக்காகவும் நிகழ்ந்தன. 1984இல், அரச படைகளின் அட்டூழியத்தை நியாயப்படுத்தினார், அப் போதைய தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, தமிழ்ப் பொதுமக்கள் பயங்கரவாதிகளுக்கு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ உதவியளிக்கின்றனர் என. அவர் வாதிட்டார். மக்கள் நிறைந்திருந்த

சுன்னாகச் சந்தையிலே கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு, யாழ்ப்பாணத் திலுள்ள கோவில்கள், கடைகள் மீது கனரக ஆயுதத் தாக்குதல், வல்வெட்டித்துறையில் கடல் வான் பகுதிகளி லிருந்து பீரங்கித் தாக்குதல், மன்னார் நகரத்தின் எல்லாக் கடைகளையும் எரித்துத் தரைமட்டமாக்கல் என அரசபயங்கர வாதம் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது.

அத்துலத்முதலி உருட்டிய மனிதக்கழிவுப் பீப்பா

இத்தகைய வான் தாக்குதல்களின்போது வானூர்தியில் தானே ஏறிவந்த பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, தமிழர் தலைகளில் மனிதக் கழிவுகள் அடைக்கப்பட்ட பீப்பாக்களை வீசினார். தமிழர்களின் ஆன்மாவைக் காயப்படுத்தும் இவ்விதச் செயல்களால் தமிழர் அச்சம் கொள்வதற்குப் பதில் கிளர்ந்தெழுந்து தாயக மீட்பில் உறுதி பூண்டனர். திட்டமிட்ட வகையில் தமிழர் வீடுகளில் தேடுதல், ஆயிரக்காணக்கான இளைஞர்கைது நாள்தோறும் நிகழ்ந்தன. கைது செய்யப்பட்டவர்கள் தெற்கிலுள்ள சிறைகளிலே காரணகாரியமின்றி அடைத்து வைக்கப்பட்டனர். நீண்டகால ஊரடங்குகள். கடலோர மீன்பிடித்தடைகள், ஊர்திப்பயன்பாட்டுத்தடைகள் என அடுக்கடுக்காக விதிக்கப்பட்ட தடைகளால், தமிழரின் அன்றாட வாழ்வும் பொருண்மிய நடவடிக்கைகளும் திடீரெனச் செயலற்றுப் போயின.

உண்மையில் தமக்கெதிரான தமிழ் இயக்க நடவடிக்கைகளின் விலையை தமிழ்ப்பொதுமக்கள் செலுத்த வேண்டுமென்றே அரச இராணுவம் எதிர்பார்த்தது. இதனால், தமிழ் மக்களின் இழப்பும், இறப்பும் உயர்ந்து கொண்டே போயின. இத்தகைய நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள், தமிழ்ப் போராளிகளுக்கு மாறான போக்கைக் கைக்கொள்வர் என்றே சிங்கள அரசு எதிர்பார்த்தது. ஆனால். மக்களின் மனம். தமிழ்ப் போராளிகளை நோக்கியே சென்றது. கொடுமையின் அளவைத் தாங்கமுடியாத கரையோரத் தமிழ்மக்கள் இந்திய மண்ணுக்குத் தப்பியோடத் தொடங்கினா. 1984இன் இறுதியில், 90,000 மக்களுக்கு மேல் இந்திய மண்ணில் புகலிடம் தேடியிருந்தனர். இந்த அகதிகள் பிரச்சினைதான். இலங்கைப் பிரச்சனை மீதான தவிர்க்க முடியாத அக்கறையை இந்தியாவுக்குக் கொடுத்தது.

ஜே. ஆரின் மாயவலையில் மயங்கிய த. வி. கூட்டணி

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது ஆட்சிக்காலத்தில் நடத்திய அரசியல் நாடகங்கள் ஒவ்வொன்றும் தமிழர்களைப் பொறுத்த வரை, அவர்களின் ஏமாற்றத்தை அதிகரித்துக் கொண்டே சென்றன. 1980 இல், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மசோதாவை ஜே.ஆர். கொண்டு வந்தார். இதன் மூலமாக ஆட்சியுரிமை பரவலாக்கப்படும் என உறுதிசொன்னார். இந்தச் சபைகள் தமிழர்களின் எவ்வித எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றப்போவது இல்லை என்றே தமிழர்கள் கருதினர். ஆயுதந் தாங்கிய இளைஞர்கள் முற்றாகவே இந்தச் சபைகளை எதிர்த்தனர். ஆயினும், தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறாகத் தேர்தலிலே போட்டியிட்டது. தமிழ் மக்கள் விடுதலைக்கூட்டணியின் மீது சலிப்புக் கொண்டிருந்த போதிலும் சிங்கள அரசின் மீதேற்பட்ட வெறுப்பினால், தமிழ் மக்கள் அரசை எதிர்த்து, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்தனர். அம்பாறை தவிர்ந்த அனைத்துத் தமிழ் மாவட்டங்களிலும் த.வி.கூ பெரும் வெற்றி பெற்றுக்கொண்டது.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் உயிர்ப்போ, செயற்பாடோ சிங்கள மத்திய அரசினதும், ஜே.ஆர் ஜெயவர்த்தனாவினதும் கையிலே இருந்ததால், தமிழர் விடுதலைக்கூட்டணி எதிர்பார்த்ததுபோல மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இயங்குவதற்கான நிதியை அளிப்பதற்குக்கூட மத்திய அரசு தயாராக இருக்கவில்லை. இச்சபைகள் சட்டமியற்றும் எவ்வித வலுவையும் கொண்டு இருக்கவில்லை. அத்தோடு நாடாளுமன்றத்தினால், எந்த வேளையிலும் கலைக்கப்படக்கூடிய ஒரு பொம்மைச் சபையாகவே மாவட்ட அபிவிருத்திச் சபை இருந்தது. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபையிலும் நாடாளுமன்றத்திலும் உறுப்புரிமை வகிப்பதற்கு, சிறீலங்கா குடியரசு யாப்புக்கு உறுதியுரை செய்யும்படி வற்புறுத்தப்படும் தேசியக் கொள்கையை, அரசியல் அமைப்பில் 6 ஆவது திருத்தத்தினூடாகக் கொண்டு வந்து சிங்கள அரசு நடைமுறைப்படுத்த முயன்றபோது, இந்தக் கொள்கையின் பின்னால் உள்ள இனவெறியை இனங்கண்டு கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினரால், தமது இந்தக் கொள்கையில் விடாப்பிடியாகத் தொடர்ந்து நீடிக்க முடியவில்லை.

தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காகப் பிற்பாடு, அவர்கள் நாடாளுமன்றத்தில் சிறீலங்கா குடியரசு அரசியலமைப்புக்கு நம்பிக்கை தெரிவித்து உறுதியுரை செய்து கொண்டனர். 1983 இனவன்முறையின் பின்னர், தமிழ்ப் போராளிகள் தந்த நெருக்குதல்களினாலும், இந்திய அரசின் வற்புறுத்தலினாலும், பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டிய ஒரு நெருக்கடிக்கு ஜே. ஆர். ஆளாகினார். இந்திய அரசு தனது சிறப்புத் தூதர்களைக் கொழும்புக்கு அனுப்பியது. "இணைப்பு சி" என்னும் திட்டமும் உருவாகியது. இதன் மூலம் பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகளாக இந்தியா சில கோரிக்கைகளை முன்மொழிய, அவற்றை ஏற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. 1984 சனவரி மாதம் அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்ட நாட்குறித்தார். இந்தியாவினுடைய முன்மொழிவானது அதிகாரப் பரவலாக்கல், தமிழர்களின் பாதுகாப்புக்கான சில உறுதிமொழிகள் ஆகியவற்றைப் பெயரளவிலேயேனும் உள்ளடக்கி இருந்தமையால், சிங்கள இன வெறியும் பௌத்த மடங்களும் சீறத் தொடங்கின. வழமைபோல இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைத் திட்டங்களும் "அகாலச் சாவடைய". வடக்கு, கிழக்கிலே தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக ஜே.ஆர்ஜெயவர்த்தனா போரை மும்முரப் படுத்தத் தொடங்கினார்.

இந்தியத் தலையீட்டால் முகிழ்த்த

திம்புப் பேச்சுவார்த்தை

தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியின் பருமனை உள்ளபடி உணர்ந்த அன்றைய **இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி**, தனது ஆதரவுக் கரத்தினைத் தமிழர்களுக்கு நீட்டினார். இலங்கையில் நடப்பது தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையே என உறுதிபடக் கூறினார்.

தமிழகத்திலே வளர்ந்து கொண்டேபோன அகதிகள் பிரச்சினை

யும், தமிழக மக்களினது உணர்ச்சிபூர்வமான தமிழின ஆதரவு எழுச்சியும், தமிழ் மக்களுக்கு எதிராகச் சிறீலங்கா அரசு செய்து வந்த இன ஒடுக்கு முறையின் அப்பட்டமான வெளிப்பாடும் இலங்கை மீதான இந்தியத் தலையீட்டை ஊக்குவித்தது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவின் தலையீட்டை உள்ளூர விரும்பவில்லையெனினும், சூழ்நிலையின் அழுத்தத்தால் அதனை ஒப்புக் கொள்ள நேரிட்டது. எனினும், எதிர்பாராத வகையில் திருமதி இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டார். தமது நம்பிக்கை ஒளியாக அவரை நினைத்த ஈழத்தமிழ் மக்கள், அவரின் மறைவினால் பெரிதும் கலங்கிப் போயினர். திருமதி இந்திராகாந்தியைத் தொடர்ந்து பிரதமரான அவரது மகனான ராஜீவ்காந்தி தமக்குப்பரிவாக இருந்து தமது துன்பங்களை ஆற்ற உதவுவார் என்றே தமிழ் மக்கள் பெரிதும் எதிர்பார்த்தனர். இந்தியாவுடன் த.வி.கூ ஒருபுறமும் ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஒரு புறமுமாக நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, 1985.07.08இல் பூட்டான் தலைநகரான "திம்புவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. த.வி.கூட்டணி தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 05 தமிழ் இயக்கங்கள் ஒரு புறமாகவும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தம்பி எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனாவின் தலைமையில் அரச பிரதிநிதிகள் ஒருபுறமாகவும் இப் பேச்சுவார்த்தையிற் கலந்து கொண்டனர்.

தமிழர்கள் எல்லோரும் ஒருமித்து. தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆக்கப்பட்ட விடுதலைப் பட்டயத்தின்படி, பேச்சுவார்த்தையின் அடிப்படையாக நான்கு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

"(1).தமிழர்களைத் தனித்தேசிய இனமாக ஒப்புக்கொள்ளல்,
(2).தமிழரின் தாயகத்தை ஒப்புக்கொள்ளல்,
(3).தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ளல்,
(4).இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்கல், என்பனவே அவ் அடிப்படைக் கோரிக்கைகள். மிகக் குறைந்த அடிப்படைக் கோரிக்கைகளான இந்த நான்கில் ஒன்றைத்தானும் ஒப்புக் கொள்வதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா தயாராக இருக்கவில்லை. தமிழர் ஒரு தேசிய இனமாகவோ, பாரம்பரிய தாயகத்தைக் கொண்டவர்களாகவோ இருக்கக் கூடாது என்பதற்காகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில மைந்த ஒரே தொடர்பாயிருந்த நிலத்தைக் கூறுபடுத்தி வெட்டும் வகையில் மதுறுஓயா, வெலிஓயா, கல்லோயா போன்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முனைந்து செய்துவரும் சிங்கள இனவாதத்துக்கு இக் கோரிக்கைகளை ஒப்புக் கொள்ளும் மனப்பாங்கு இருக்கும் என எவரும் எதிர்பார்க்க முடியாது. ஆனமடுவவிலிருந்து ஆனையிறவு வரை சிங்களக் குடியேற்றம் செய்யப்படவேண்டும் என்று வெளிப்படையாகவே பேசியவர் சிறீலங்கா அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. வெலிக்கடைச் சிறையில் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்த பயங்கரவாதச் சிங்களக் குண்டர்களை அரசப்படைத் துணையோடு தமிழ் மண்ணான மணலாற்றில் குடியேற்றி, அவர்களுக்குத் தமிழர்களை எதிர்ப்பதற்கான போர்ப்பயிற்சியும்: ஆயுதங்களும் கொடுத்து அனுப்பியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மகனான ரவி ஜெயவர்த்தனா.

பௌத்த மடங்கள் எல்லாம் சேர்ந்து, சிங்களவர்களின் ஒவ்வொரு கிராமத்திலும் 1,000 பேருக்குப் போர்ப்பயிற்சியளித்து 500,000 சிங்களவரைத் தமிழ் நிலங்களுக்கு. குடியேற்ற அனுப்பவேண்டும்மென்று தீர்மானம் எடுத்தன. இத்தகைய இனவெறி கொண்ட அரசின் தலைமையை ஏற்றிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழர்கள் முன்வைத்த கோரிக்கைகளை அறவே புறந்தள்ளி மறுத்ததுடன், தனது இராணுவ வலிமையை தமிழ் மக்கள் மீது உச்சவிரைவில் பயன்படுத்தி, நூற்றுக்கணக்கான தமிழர்களின் உயிரை உறிஞ்சினார். இதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தையிலிருந்து தமிழ் இயக்கங்கள் வெளியேறின. பேச்சுவார்த்தையும் முறிவடைந்தது.

திம்பு முதற்கட்டப் பேச்சுவார்த்தை முறிந்ததும் எச்.டபிள்யூ ஜெயவர்த்தனா இன்னொரு திட்டத்தை முன்வைத்தார். வடக்கு மாகாணசபையும், கிழக்கு மாவட்ட சபைகளும் என்பதே இந்தத் திட்டம். தமிழர் தாயக நிலமான வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகத் துண்டாடும் இந்த வஞ்சகத் திட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் என்பது மருந்துக்கும் இல்லை. இதனைத் தமிழ் இயக்கங்கள் முற்றாக ஏற்கமறுத்தன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மொழிவாரியாக இணைந்த இணைப்பாட்சி வடிவிலான மாநிலமொன்றை அமைத்தல் வேண்டுமென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்மொழிவும் சிறீலங்கா அரசால் மறுக்கப்பட்டது.

உடன்படிக்கைகள், முறிவுகள் என்பன இன்னும் இன்னும் தொடரவே செய்தன. சிறீலங்கா அரசின் இனவாத அடிப்படை, உண்மைகளின் மீது அல்லாமல் கர்ணபரம்பரைக் கதைகளின் மீதே அமைக்கப்பட்டிருந்ததால், தமிழர்களின் கோரிக்கையிலுள்ள நியாயம் அவர்களின் கண்களுக்குப் படவில்லை. வட்ட மேசை மாநாடு, உடன்படிக்கைகள் என்னும் நாடகங்களை அவ்வப்போது ஆடினாலும் இராணுவ ரீதியில் தமிழர்களை வெற்றி கொள்வதிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் குறியாயிருந்தனர்.

1986 ஏப்பிரலில். இலங்கைக்கு வந்த இந்திய அமைச்சர் சிதம்பரம், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்குத் தெரிவித்த தீர்வு யோசனைகள், 1986 நவம்பரில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா-ராஜீவ் பேச்சுவார்த்தைகள், இவையெல்லாம் தமிழர்களின் நேரடிப் பங்களிப்பு எதுவும் இன்றிச் சாவடைந்தன.

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு தொடரும்....

www.sangathamil.ca

தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

திருகோணமலை படுகொலை 12.04.2006

திருகோணமலை மாவட்டம் 1980களிலிருந்து தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் கொதிப்பான ஒரு இடமாக இருந்து வந்திருக்கின்றது. இவ்வன்முறைகள் ஊடாக இம்மாவட்டத்தில் செறிவாக வாழ்ந்து வந்த தமிழர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டப்பட்டனர். சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தீவின் மக்கள் பரவல் சார்ந்த புள்ளிவிபரங்கள் இதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இதே போல் 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப்பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன.

1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை 4 மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னரே மூன்று லொறிகளில் சிங்களக்காடையர்கள் திருகோணமலை நகரக்குள் கொண்டு வரப்பட்டதை தமிழர்கள் கண்டனர். இச்சிங்கள காடையர்கள் தமிழருக்குச் சொந்தமான கடைகளை கொள்ளையடித்தபின் இக்கடைகளுக்கு தீயூட்டினர். இதனால் திருகோணமலை நகரிலிருந்து பெரிய புகைமூட்டம் எழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விரைவில் தமிழர் மேலான தாக்குதல்கள் ஆரம்பித்தது.

இத்தாக்குதல்களுக்கு துவக்குகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏப்பிரல் மாதப் புதுவருடக் கொண்டாட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நகருக்கு சென்றிருந்த பல தமிழர் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

வன்முறைகள் நடைபெறுவதை அங்கு நிலைகொண்டிருந்த பல இலங்கை இராணுவத்தினர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சுதுபண்டா, 39
02. அந்தோனிராஜ் கீதநடனி, 33
03. சந்திரா மத்துவஸ், 50
04. கசுன் சமந்தா, 23
05. கந்தசாமி திரவியன், 56
06. அசங்கா மிலான், 21
07. சுசந்தா, 20
08. ரில்வான், 36
09. செல்வராஜா, 44
10. மயூரா பெதிகே சிவமணி, 30
11. பளுக், 55
12. ராச்மி டிலராங்கி, 08

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

உயர் பாதுகாப்பு வலயத்தில் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 90 பேர் படுகொலை - 01-03.04.2009 வரை

இலங்கை இராணுவம் 03 (01 தொடக்கம் 03. ஏப்ரல் மாதம் 2009) நாட்களாக தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்தியதுடன், ஆர்பிஜி குண்டுகள் மற்றும் ஐம்பது கலிபர் ரவுண்டுகளை பயன்படுத்தி பாதுகாப்பு வலயத் திற்குள் சுட்டதில் 90 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 195 பேர் காயம் அடைந்தனர். மருத்துவ மற்றும் மனிதாபி மானப் பணியாளர்கள் “எதிர்ப்பு மண்டலத்திற்குள்“ வெள்ளிக் கிழமை தற்காலிக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தங்களுக்கு இன்னும் பல மருந்துகள் இல்லை என்றும் வியாழக்கிழமை ICRC கப்பலில் 7 வகையான மருத்துவ பொருட்கள் மட்டுமே கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

புதன்கிழமை 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 78 பேர் காயமடைந்தனர், வியாழன் அன்று 31 பேர் கொல்லப் பட்டனர் மற்றும் 70 பேர் காயமடைந்தனர் மற்றும் வெள்ளிக் கிழமை 26 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 47 பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டனர்.

சுமார் 450 நோயாளிகள் காயமடைந்த மற்றும் நோய்வாய்ப் பட்ட பொதுமக்கள் அவர்களது உதவியாளர்களுடன் புதுமாத்த ளனில் இருந்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்

மோட்டைக்கு மற்றொரு கப்பலில் மாற்றப்பட்டனர்.

பால் பவுடர், திரிபோஷா மற்றும் சோள சோயா உள்ளிட்ட 1000 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களும் ஐசிஆர்சியால் கொண்டு வரப்பட்டது.

இதற்கிடையில், குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு

அதிகமாக காணப்படுவதாக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்தனர்.

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.

அம்பாறையில் 13 தமிழ் இளைஞர்கள் படுகொலை 03.04.2009

03.04.2009 அன்று அம்பாறையில் 13 தமிழ் இளைஞர்களை சிறீலங்கா சிறப்பு அதிரடிப்படையால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாணம லாகுளவில் 13 தமிழ் இளைஞர்களை சிறப்பு அதிரடிப்படை (STF) கமாண்டோக்கள் வெள்ளிக்கிழமை சுட்டுக் கொன்றதாக அம்பாறை வட்டாரத்தில் இருந்து தெரிவித்தன. துப்பாக்கிச் சூடு சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், பலியானவர்கள் அப்பாவி தமிழ் இளைஞர்கள் என்றும், அவர்களில் அப்பகுதிக்கு வேலைக்குச் செல்லும் இளைஞர்கள் என்றும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், அவர்கள் தமிழ்ப் புலிப் போராளிகளைப் பயிற்றுவித்தவர்கள் என்று பாதுகாப்புத் துறை கூறியது, அவர்கள் பதுங்கியிருந்த இடத்தை சுற்றி வளைத்து தேடுதல் மற்றும் தேடலில் STF கமாண்டோக்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 71 பொதுமக்கள் படுகொலை – 05.04.2009

ஞாயிற்றுக்கிழமை, புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டி வந்த சிறீலங்கா இராணுவம் ஞாயிற்றுக்கிழமை, புலிகளின் முக்கிய சண்டை அமைப்புகள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள ஒரு பிரதேசத்திற்குள், சிறீலங்காப் படையால் முற்றுகையிடப்பட்டதாகக் கூறி, அதன் கூற்றுக்கு முரணானது. புலிகளுக்குப் பலத்த இழப்புகளை ஏற்படுத்திய பிரதேசம் அப்பிரதேசத்தை சிறீலங்கா இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக கூறினர். இதற்கிடையில், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை இரவு 8:30 மணி முதல் சிறீலங்கா இராணுவத்தினர் முடுக்கிவிட்டனர். பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தின் சமீபத்திய அறிக்கைகளின்படி சனிக்கிழமை. குறைந்தபட்சம் 71 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 143 பேர் காயங்களுக்கு உள்ளாகினர் மற்றும் சிறீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வலயத்திற்குள் எறிகணைத் தாக்குதல் நடத்தியதில் ஒரு மாதக் குழந்தைக்கு காயம் ஏற்பட்டது. தற்காலிக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த டாக்டர்கள் குழந்தையின் உயிரை காப்பாற்ற போராடினர்கள்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பொக்கனைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் சிறீலங்கா விமானப்படையின் ஹெலிகாப்டர் ஏவப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மாத்தளன், பொக்கனை, வலைஞர்மடம், இரட்டை-வாய்க்கால் மற்றும் பாதுகாப்பு வலயத்தின் ஏனைய பகுதிகளை குறிவைத்து சிறீலங்காப் படையின் கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தினர்.

புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட பொதுமக்களில் குறைந்தது 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

உள்ளூர் உதவிப் பணியாளர்கள், பாதுகாப்பான வலயத்திற்குள் இருக்கும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை பலவந்தமாக அடிபணியச் செய்யும் நோக்கத்துடன் சிறீலங்காப் படையினர் முடுக்கிவிடுவார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களின் சுவடுகள் - 05.04.2009

‘பாதுகாப்பு வலயத்தில்’ சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 129 பொதுமக்கள் படுகொலை – 08.04.2009

இலங்கை இராணுவம் நடத்திய பீரங்கி எறிகணைகள் புதன்கிழமையன்று நாள் முழுவதும் “பாதுகாப்பு வலயம்” என அழைக்கப்படும் பகுதிக்குள் 129 பொதுமக்களின் உயிர்களைக் கொன்றதாகவும், 282 பேர் காயமடைந்ததாகவும் சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புதன் கிழமை காலை பொக்கனையில் உள்ள சிறுவர் பராமரிப்பு / போஷாக்கு நிலையத்தை இலக்கு வைத்து மூன்று பீரங்கி குண் டுகள் வீசப்பட்டன, அங்கு பல பொதுமக்கள் குழந்தைகளுக் கான மனிதாபிமான பால் உணவுகளை பெறுவதற்காக காத்திருந்தனர். குழந்தை பராமரிப்பு நிலையத்தின் மீதான ஷெல் தாக்குதல், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட “மிகக் கொடூரமான படுகொலை” என்று புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையின் மீட்புப் பணியாளர் ஒருவர் கூறினார். படுகொலை, மாலை வரை தொடர்ந்த தாக்குதல்கள் காரணமாக.

சமீபத்திய அறிக்கைகளின்படி, பாதிக்கப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள், 40 முதல் 80 பேர் வரை உள்ளனர்.

முல்லைத்தீவு பச்சைப் புல்மோட்டைப் பகுதியில் 17 பொதுமக்கள் படுகொலை – 11.04.2009

இலங்கை இராணுவம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பச்சைப் புல்மோட்டை என்ற இடத்தை இலக்காகக் கொண்டு, “பாதுகாப்பு வலயத்தின்” வடக்குப் பகுதியைப் பிரித்து கைப்பற்றும் நோக்கில், “பாதுகாப்பு வலயம்” மீது தீவிரத் தாக்குதலை நடத்தியதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிகாலை 3:15 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினரின் கடுமையான ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடு தொடங்கியது, 45 நிமிடங்களுக்குள், பச்சைப்-புல்மோட்டைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயத்தின் பொதுமக்கள் பகுதிக்குள் 300 க்கும் மேற்பட்ட குண்டுகள் வெடித்தன. அதே நேரத்தில் மழை பெய்து வந்ததால், வெள்ளம் சூழ்ந்துள்ள பதுங்கு குழிகளில் மக்கள் ஒளிந்து கொள்ள கூட முடியாமல் தவிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனிக்கிழமையன்று சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 48 பேர் காயமடைந்தனர்.

‘பாதுகாப்பு வலயத்தில்’ சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 31 பொதுமக்கள் படுகொலை – 12.04.2009

பாதுகாப்பு வலயத்திற்குள் ஞாயிற்றுக்கிழமை நாள் முழுவதும் குறைந்தது 31 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்த பொதுமக்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை, ஆனால் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் சிறீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு வலயத்தின் மீது ஒருங்கிணைந்த தாக்குதல்களில் ஈடுபட்டதால், குறைந்தது 36 காயமடைந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பலியானவர்களில் 30 பேர் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகவும், 6 பேர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இவ் புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனையை அடையும் மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு வீச்சின் எல்லைக்குள் வருகிறார்கள்.
தற்காலிக மருத்துவமனை மற்றும் அதற்கான நுழைவுப் பாதை சிறீலங்கா இராணுவ நிலைகளுக்கு அருகில் அமைந்துள்ளது.

மாத்தளனின் சமீபத்திய அறிக்கைகளின்படி, ஆங்காங்கே துப்பாக்கிச் சூடு தொடர்ந்து காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது இடப்பெற்றதாக கூறிப்பிடப்பட்டுள்ளது.

‘பாதுகாப்பு வலயத்தில்’ சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 23 பொதுமக்கள் படுகொலை – 13.04.2009

இரவு 8:30 மணி முதல் கடந்த 12 மணி நேரத்தில் இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஞாயிறு முதல் திங்கட்கிழமை காலை 8:00 மணி வரை, 15 முதல் 20 வரையிலான எண்ணிக்கையிலான கொலைகளில் பெரும் பாலானவை, திங்கள்கிழமை அதிகாலையில் சிறீலங்கா இராணுவதினர் பாதுகாப்பு வலயத்திற்குள் முன்னேறு வதற்கான புதிய தளத்தை முடுக்கிவிட்டபோது நிகழ்ந்தன. பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் வடக்கு அல்லது தெற்குப் பகுதியை இரண்டாகப் பிரித்து கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டு சிறீலங்கா இராணுவம் இரவு நேரத்தில் முன்னேற முயன்றது, பெரும்பாலான பொதுமக்கள் உயிரிழப்புகள் வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகளில் பதிவாகியுள்ளன.

காலை 8:00 மணிக்குப் பிறகு சண்டை நிறுத்தப்பட்டபோது ஆங்காங்கே ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடந்ததாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பௌத்தம்: கி.மு 100 – கி.பி. 1200 பகுதி 1

பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

முன்னுரை

பௌத்த மரபுக் கதைகளின்படி புத்த பிரான் தனது வாழ்நாட்களில் வருகை தந்த இடங்களில் நாகதீபமும் (நாகதீவு - நாகநாடு) ஒன்றாகக் கூறப்படுகிறது. புத்த பிரானின் காலத்தில் இலங்கையில் நாகர்கள் ஆதிக்கம் செலுத்தி வாழ்ந்த இடங்களில் வட இலங்கையின் நாகதீபமும், மேற்குக் கரையிலிருந்த கல்யாணியும் முக்கியமான இடங்கள் என இலங்கையின் பௌத்த நூலான மகாவம்சம் கூறுகிறது. இந்த நூலில் கூறப்படும் ஒரு நிகழ்வில் நாகதீபத்தில் மகோதரன் என்ற நாக அரசன் ஆட்சிபுரிந்த காலத்தில், அங்கிருந்த கந்தவதமன்ன என்ற மலையகத்தில் அவனது மருமகன் சுலோதரன் ஆட்சி புரிந்ததாகவும், கல்யாணியில் அவனது மாமன் மணி அக்கிகன் ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது (Mahavamsa, Ch. 1: 46).

அக்காலத்தில் நாகதீபத்திலிருந்த விலையுயர்ந்த மணிகளால் இழைக்கப்பட்ட ஒரு சிம்மாசனத்தின் உரிமைக்காக மகோதரனுக்கும் சுலோதரனுக்கும் கடும் போர் ஏற்பட்டது. தமது பெரிய படைகளுடன் இந்த இருவரும் போரிட்டுக்கொண்டிருந்த சமயத்தில் புத்த பகவான் அங்கே தோன்றி, 'இந்த மணியாசனம் எனக்கும், எனது சங்கத்தாருக்கும் உரியது. இதற்காக நீங்கள் போரிட வேண்டியதில்லை' எனக் கூறி அந்த ஆசனத்தில் அமர்ந்து சமாதானமும் நல்லிணக்கமும் பற்றிய புத்தமதக் கொள்கைகளை எடுத்துரைத்தார். அவரது பிரசங்கத்தைக் கேட்ட எண்பது கோடி நாகர்கள் பௌத்த மதத்தை மேற்கொண்டார்கள் (Mahavamsa, Ch. 1: 46-62). அந்நாளிலிருந்து அந்த மணியாசனம் பௌத்தர்களின் வழிபாட்டுப் பொருளானது.

மேலே கூறப்பட்ட நாகநாட்டு மன்னர்களுக்கிடையே மணியாசனத்திற்காக ஏற்பட்ட போரும், அதைப் புத்தபகவான் வந்து தீர்த்து வைத்த சம்பவமும் மணிமேகலைக் காப்பியத்திலும் கூறப்படுகிறது. மணிமேகலையில் புத்தபிரான் வந்து மணியாசனத்தில் அமர்ந்து சமரசம் செய்த இடம் மணிபல்லவம் எனக் கூறப்படுகிறது (மணிமேகலை, அத். 8: 1-2).

கந்தரோடை ஸ்தூபிகள்

Image Source - Sri Lanka Guardian



வட இந்தியாவில் தாம்ரலிப்தி துறையினூடாகச் சென்ற கப்பல், தரைவழிப் பாதைகள்

மேற்குறிப்பிட்டுள்ள கதையிலுள்ள வரலாற்றுப் பெறுமதிகளைக் காட்டிலும் அது அமைக்கப்பட்ட பின்புலமும், அது நடைபெறும் நாகநாடு, மணிபல்லவம் ஆகிய இடப்பெயர்களும் முக்கியமானவை. இக்கதையைக் கூறும் மணிமேகலை கி.பி. நான்காம் நூற்றாண்டிலும், மகாவம்சம் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டவை. இவை கூறும் சம்பவங்கள் அவை எழுதப்பட ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் புத்தபிரான் மணிபல்லவத்திற்கு (நாகதீபத்திற்கு) வந்தார் என்பது கற்பனையே. ஆனால் அது கூறப்பட்ட பின்புலம் பரிசீலனை செய்யப்பட வேண்டியதாகும்.

1. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நாகநாட்டில் இருந்த குலொதரன், சுலோதரன் என்ற அரசர்களின் பெயர்கள் கற்பனையாக இருக்கலாம். ஆனால் அக்காலத்தில் நாகநாட்டில் ஓர் இராசதானி ஆரம்பமாகி இருக்குமா? என எண்ணச் செய்கிறது.

2. சுலோதரன் என்ற அரசன் 'கந்தவதமன்ன' என்ற மலையகத்தில் வாழ்ந்தவன் என மகாவம்சம் கூறுகிறது. இது 'கதிரமலை' என்ற கந்தரோடையைக் குறிப்பிடும் பெயராக இருக்குமோ?

3. நாகதீபத்தில் 80 கோடி நாகர்களை புத்தபிரான் தனது பிரசங் கச் செய்திகளை ஏற்கச் செய்தார் என்கிறது மகாவம்சம். இது அதீத மிகைப்படுத்துதலாக இருக்கலாம். ஆனால் நாகதீபத்தில் பௌத்த மதத்தைக் கடைப்பிடித்த நாகர்கள் இருந்தார்கள் என்பதை அறிந்து கூறப்பட்ட மிகையாக இருக்கலாம். நாகநாட்டில் வளைவாணன் என்ற பெயர் கொண்ட பௌத்த மதத்தைப் பேணிய ஒரு நாக அரசன் ஆட்சி புரிந்தது பற்றி மணிமேகலை கூறுகிறது.

4. மணிமேகலையில் புத்தபிரான் தோன்றி அந்த இரு நாக அரசர்களுக்குமிடையே இருந்த பிணக்கைத் தீர்த்த இடம் 'மணி பல்லவம்' எனக் கூறப்படுகிறது. மகாவம்சத்தில் இப்பிரச்சினை நடந்த இடம் 'நாகதீப' எனப்படுகிறது.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக பல அறிஞர்கள் 'மணி பல்லவம்' என்ற தீவகம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற் கேயுள்ள தீவுகளில் ஒன்றான 'நயினாதீவை'க் குறிப்பதாகப் பேசியும், எழுதியும் வருவதை அறிவேன். இது மீளாய்வு செய்யப்பட வேண்டிய ஒரு கருத்து.

அன்றைய தமிழகத்திற்குத் தென்கிழக்கிலிருந்த இலங்கையை இரண்டு தீவகங்களின் பெயரைக் கூறி மணிமேகலை விவரிக்கிறது. ஒன்று 'மணிபல்லவம்' என்னும் தீவகம், மற்றது அதற்குத் தெற்கேயுள்ள சமனொளி மலையைக் கொண்ட 'இரத்தின துவீபம்'.
நாகநாட்டை மணிபல்லவத் தீவின் ஒரு பகுதி என்றே மணிமேகலை கூறுகிறது. மணிபல்லவத்தின் "கீழ்நில மருங்கின் நாகநாடாளும்" (மணிமேகலை, அத். 8: 54) என்ற அடிகள் கவனிக்கப்பட வேண்டியவை.

மணிபல்லவத்தின் கிழக்கே கடலுக்கு அப்பாலுள்ள நாகநாடு எனக்கூறாமல், மணிபல்லவத்தின் கிழக்கேயுள்ள நிலப்பகுதியிலுள்ள நாகநாடு எனக் கூறப்படுவதால் நாகநாடு அரசு மணிபல்லவத் தீவிலுள்ள ஓர் அரசு என்று பொருள் கொள்ள வேண்டியுள்ளது. மணிபல்லவத்திற்கும் நாகநாட்டிற்கும் உள்ள தொடர்பு இந்த ஓர் இடத்தைத் தவிர வேறு எங்கும் மணிமேகலையில் கூறப்படவில்லை.

மணிமேகலை குறிப்பிடும் மணிபல்லவம், மகாவம்சம் கூறும் நாகதீபமான இன்றைய யாழ்ப்பாணம் என்றே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. மேலும், பண்டைய வல்லிபுரத்திலிருந்த துறைமுகத்தை மகாவம்சம் 'பல்லவத்துறை' (Bhallathitta) எனக் குறிப்பிடுவது கவனிக்க வேண்டியது



பொட்டணிந்த புத்தபிரான் - கந்தரோடை



பொட்டணிந்த புத்தபிரான் - அமராவதி

ஆரம்ப நாட்களில் புத்தரின் பாதபீடிகைகளை மட்டுமே வணங்கிவந்த மக்கள், கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து புத்த பகவானின் உருவச் சிலைகளை வணங்க ஆரம்பித்தது புத்தமத வழிபாட்டில் மகாயான பௌத்தம் கொண்டு வந்த மதப் புரட்சி என்றே கூறவேண்டும்

Image Source - C.E. Godakumbura

(Mahavamsa, Ch. XXXVI: 42-44). இன்றைக்கும் இந்த வட யாழ்ப்பாணக் கடற்கரை 'பல்லப்பை' என்ற பெயரால் அழைக்கப் படுகிறது.

பண்டைய யாழ்ப்பாணத்தின் வடகரையிலிருந்த 'யம்புகோளம்' நாகதீபத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க ஒரு துறைமுகமாக இருந்தமை ஏற்கனவே இங்கு கூறப்பட்டுள்ளது. வட இந்தியா வில் மகதநாட்டை ஆண்ட அசோகச் சக்கரவர்த்தியின் (கி.மு. 304-232) மகளான சங்கமித்தை தாம்ரலிப்தியிலிருந்து (மேற்கு வங்காளக் கரையிலிருந்த துறைமுகம்) புத்தபிரான் ஞானம் பெற்ற வெள்ளரச மரத்தின் கிளையோடு இக்காலத்தில் சம்புத்துறை என அழைக்கப்படும் சம்புகோவளத் துறையில் வந்து இறங்கினாள்.

சம்புகோவளத்தில் அவளை வரவேற்க அநுராதபுர அரசன் தேவநம்பிய தீசன் தனது பரிவாரங்களோடு வந்து 'சமுத்திரபன் னசாலை' என்னும் மண்டபம் அமைத்துக் காத்திருந்தான். அவர்கள் வந்திறங்கியபின், வெள்ளரச மரக்கிளையைப் பெற் றுக்கொண்ட அரசன், விழாக் கொண்டாடி, சில நாட்கள் அங்கே தங்கியிருந்தான். பின்னர் அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு தேரில் கோலாகலமாக சம்புகோவளத்திலிருந்து புறப்பட்டு பதி னான்காம் நாள் அநுராதபுரத்தை அடைந்தார்கள் (Mahavamsa, Ch. XIX: 130-131).

அரசன் தேவநம்பிய தீசனால் அநுராதபுரத்தில் நாட்டப்பட்ட வெள்ளரசின் வித்துகளிலிருந்து எட்டு மரக்கன்றுகள் தோன்றிய தாகவும், அவற்றுள் ஒரு கன்று சங்கமித்தை வந்திறங்கிய யம்பு கோவளத் துறையில் நடப்பட்டதாகவும் மகாவம்சம் குறிப்பிடு கிறது (Mahavamsa, Ch. XIX: 133).

தேவநம்பிய தீசன் யாழ்ப்பாணத்தில் யம்புகோவளத் துறையில் தங்கியிருந்த காலத்தில் கடற்கரையில் ஒரு தாதுகற்பத்தையும், திஸ்ஸ மழுவை என்ற இடத்தில் 'திஸ்ஸமகாவிகாரை' என்னும் புத்த பள்ளியையும், கந்தரோடையில் 'பாசீனவிகாரை' என்னும் கோயிலையுங் கட்டுவித்தான் என 1993 இல் அவர் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் (பக். 14) முதலியார் இராசநாயகம் குறிப்பிடுகிறார். இச்செய்தி மகாவம்சத்தில் குறிப் பிடப்படவில்லை. இவ்விடங்களில், கட்டடங்கள் இருந்ததற்கான அடித்தளங்கள் தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட வில்லை. அதுபோல கந்தரோடையில் 'பாசீனவிகாரை' என்ற விகாரை இருந்ததற்கான அடித்தளம் அகழ்வுகளில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

தொல்லியல் பின்னணி

யாழ்ப்பாண இராச்சியம் எனப்பட்ட சிங்கை ஆரிய மன்னர் களின் ஆட்சிக்காலத்திற்கு முன்னர், யாழ்ப்பாணம் பற்றி எழுதப் பட்ட வரலாற்று நூல்கள் எதுவும் கிடையாது. தொலமியின் தப்ரபேன், மணிமேகலை கூறும் நாகநாடு, மகாவம்சம் கூறும் நாகதீப என்பன அங்கே இடம்பெற்ற சில இடங்களின் பெயர் களையோ அல்லது சில சம்பவங்களையோ மட்டுமே கூறு கின்றன. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தின் தொல்கால நிலமையை அறிவதற்கு அங்கு இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகளே நமக்கு உதவுகின்றன. இந்த வகையில் முக்கிய மாக கலாநிதி இரகுபதியின் 'Archaeological Survey of Early Settlements in Jaffna' என்ற அகழ்வாய்வு நூலும், கந்தரோடை யில் கலாநிதி விமலா பேக்லி போன்ற பல தொல்லியல் ஆய் வாளர்கள் மேற்கொண்ட அகழாய்வுகளின் கண்டுபிடிப் புகளைப் பற்றிக் கூறும் இந்த ஆசிரியரின் 'Kantarodai Civilization of Ancient Jaffna' என்ற நூலும், யாழ்ப்பாணம் கோட்டையில் கலாநிதி பரமு புஷ்பரட்ணம், பேராசிரியர் றொபின் கொனிங்ஹாம் ஆகியோர் மேற்கொண்ட அகழ்வாய் வுகளின் பெறுபேறுகளைப் பற்றி உரைக்கும் 'Archaeological Excavations at the Jaffna Fort' என்ற நூலும் நமக்குக் கை கொடுக்கின்றன.

கந்தரோடையில் அமெரிக்க பென்சில்வேனிய பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பெற்றுக்கொண்ட கருவூலப் பொருட்களில் இரு கறுப்பு - சிவப்பு மட்பாண்டப் பொருட்களின் ஆரம்பகாலம் கி.மு. 1350 ஆண்டையும், பெரும்பாலான பொருட்கள் கி.மு. 600 ஆம் ஆண்டையும் காட்டி நின்றன (Deraniyagala> S.U. in Ragupathy, P. 1987: 205). யாழ்பாணக் கோட்டையில் கண்டெடுத்த கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் ஆரம்ப காலத்தை கி.மு. 1000 ஆம் ஆண்டாக பேராசிரியர் றொபின் கனிங்ஹாம் கணித்திருக்கிறார் (Thiagarajah, S. 2022: 26). இவற்றைக் கொண்டு யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் குடியேற்ற ஆரம்பகாலத்தை பொதுவாக கி.மு. 1200 ஆம் ஆண்டுக் கால மாகக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தின் ஆரம்பகாலப் பெருங் கற் பண்பாட்டுக் குடியேற்ற இடங்களாக கந்தரோடை, ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணக் கோட்டை, காரைநகர், வேலணை, மண்ணித்தலை ஆகிய மையங்கள் இனம் காணப்பட்டிருக் கின்றன. இவ்விடங்களில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கறுப்பு - சிவப்புநிற மட்பாண்டங்கள் இங்கே கி.மு. 1200 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 200 ஆம் ஆண்டு வரை பாவனையில் இருந்திருக்கின்றன. ஆனைக்கோட்டையிலும், காரைநகரிலும் இம்மட்பாண்டங்கள் பெருங்கற்பண்பாட்டு ஈமப்புதையல்களில் கிடைத்திருக்கின்றன. கந்தரோடையிலும், யாழ்ப்பாணக் கோட் டையிலும் அதிகமான அளவிலும், வேலணை, மண்ணித் - தலை ஆகிய மையங்களில் குறைந்த அளவிலும் இம்மட்பாண் டங்கள் கிடைத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் இரண்டாவது அலை மக்கள் குடியேற்றம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற் றாண்டுவரை நீடித்திருக்கிறது. இக்காலத்தில் இந்த மையங் களில் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களோடு உரோமானிய ரௌ லெற்றெட் மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. உரோ மானிய மட்பாண்டங்கள் கந்தரோடைக்கு வெளியே உள்ள மையங்களில் கி.மு முதலாம் நூற்றாண்டு முதல் கிறிஸ்தாப்தம் ஈறாக, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை காணப்படுகின்றன. இம்மட்பாண்டங்களும், அங்கே கண்ட உரோம நாணயங் களும் இந்த இரண்டாம் அலைக் குடியேற்றங்களை இனம் காண உதவுகின்றன.

பௌத்த மதத்தின் பரவல்

பௌத்த மதம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப் பாணத்தை அடைந்துவிட்டதாக இலங்கையின் பாளி நூல்கள் கூறிய போதிலும், யாழ்ப்பாணத்தில் அம்மதத்தின் பரவல் கி.மு. முதலாம் நூற்றாண்டிலேயே, ஏற்கனவே வலுவாக நிறுவப்பட்ட உரோம வர்த்தக வலைப்பின்னல் வழியாக நிகழ்ந்திருக்கிறது. யாழ்ப்பாணத் தொல்லியல் மையங்களில் காணப்பட்ட பௌத்த சின்னங்கள் இதை எடுத்துக் காட்டுகின்றன. கந்தரோடை யிலும், யாழ்ப்பாணத் துறையின் சூழலிலும் கி.மு. ஆயிரமாம் ஆண்டுக் காலத்திலிருந்தே பெருங்கற்பண்பாட்டுக் குடியேற் றங்கள் இடம்பெற்று அதற்கு வெளியே இருந்த மற்றைய முதலாம் கட்ட 16 மையங்களிலும் அப்பண்பாடு விரைவாகப் பரவியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 41 தொல்லியல் மையங்களை ஆய்வு செய்த தொல்லியலாளர் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 - 16 ஆம் திகதிகளில் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'யாழ்ப் பாண வரலாற்றில் மதங்கள்' என்ற பட்டறையில் 'யாழ்ப்பாணத் தில் வணிகம்சார் பௌத்தம்' (Mercantile Buddhism in Jaffna) என்ற தலைப்பில் ஓர் ஆய்வுரையை நிகழ்த்தியிருந்தார். அதில் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் இவை:

யாழ்ப்பாணத்தில் புத்த மதத்தின் பரவல் இரண்டு கட்டங்களாக நிகழ்ந்திருக்கிறது.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி ஐந்தாம் நூற்றாண் டில் முடிவிற்கு வந்த ஆரம்ப கட்டம்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஆரம்பமாகி கி.பி. பன்னிரண்டாம் ஆண்டுவரை நீடித்த இரண்டாம் கட்டம்.

யாழ்ப்பாண பௌத்தப் பரவலின் ஆரம்ப கட்டம் [கி.மு. 100 – கி.பி. 500]

யாழ்ப்பாணத்தில் கண்ட ஆதிகாலப் பெருங்கற்பண்பாட்டு மையங்களில் 'ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு சிவப்பு - சிவப்பு மட்பாண்டங்கள்' (Early Carinated Black and Red Ware) காணப்படுகின்றன. இந்தக் கீழ் மட்டத்தில் யாழ்ப்பாணத் தில் பௌத்தமதச் சின்னங்கள் ஏதும் காணப்படவில்லை. இதற் குப் பின்னர் காணப்படும் மேல் மட்டத்தில்தான் வரலாற்றுக் கால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், ரோம ரௌலெற்றெட் மட் பாண்டங்கள் அல்லது அதைத் தழுவிப் பிரதி செய்த மட் பாண்டங்களுடன் பௌத்த சின்னங்கள் முதன்முறையாக இடம் பெறுகின்றன. இப்பௌத்த சின்னங்களின் ஆரம்பகாலம் கி.மு. முதலாம் நூற்றாண்டாகும். ரௌலெற்றெட் மட்பாண் டங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற் றாண்டுவரை கந்தரோடையிலும், கி.மு. முதலாம் நூற் றாண்டிலிருந்து மற்றைய யாழ்ப்பாண மையங்களிலும் காணப் படுகின்றன. பௌத்த மத ஆரம்பகாலத்தில் பௌத்த சின் னங்கள் பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்களோடு மேற்கவிந்து காணப்படுகின்றன (Schalk, P. 1990: 205). கந்தரோடையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட விமலா பேக்கிலியும் ரௌ லெற்றெட் மட்பாண்டங்கள் இடம்பெற முன்னரே பெருங்கற் பண்பாட்டு கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் நீண்ட காலமாக இடம்பெறுவதாகக் கூறியுள்ளார் (Begley, V. 1973).

பொட்டணிந்த புத்தபிரான் - காட்சி

ஆரம்பகட்ட யாழ்ப்பாண பௌத் தத்தின் எச்சங்கள் யாழ்ப்பாணத் தில் பின்வரும் எட்டு மையங் களில் காணப்படுகின்றன:

1. கந்தரோடை,
2. திசைமழுவை திருவடிநிலை,
3. நெடுந்தீவு,
4. காரைநகர் – வேரப்பிட்டி,
5. வேலணை – கும்புருப்பிட்டி,
6. புங்குடுதீவு – திகழி,
7. அரியாலை கிழக்கு,
8. வல்லிபுரம். கந்தரோடையைச்

சூழ இருக்கும் சுன்னாகம், மல்லாகம், மகியப்பிட்டி, உடுவில் ஆகிய கிராமங்களில் கண்ட பௌத்த மதச் சின்னங்களை கந்தரோடை மையத்திலிருந்து பரவிய சின்னங்களாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் பௌத்தமதம் பரவிய இடங்கள் - கந்தரோடை ஒன்றைத் தவிர - கடற்கரையிலிருந்த துறைமுக மையங்களும் வர்த்தக வழிக் குடியேற்ற இடங்களுமாகும் (Coastal Entrepots and Trade Route Settlements). சில ஆய்வாளர்கள் கருதுவது போல அக்காலத்தில் கந்தரோடை வழியாகச் சென்ற வழுக்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை
தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

போல் பீரிஸ் சுன்னாகத்தில் தலை வேறாகக் கண்ட புத்த சிற்பமும் கந்தரோடையில் கண்ட சிற்பப் பகுதியும். தலை பொருத்தப்பட்டு உடைவு ஒட்டப்பட்ட சுன்னாகம் சிற்பம் (நடுவில் உள்ள படம்) அநுராதபுர அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இச் சிற்பம் சுன்னாகத்தில் கண்டெடுக்கப்பட்டது என்பதற்கான எதுவிதமான தகவலுமில்லை

கையாறு வழியாக கடலுடன் படகுத் தொடர்பு கொண்டிருந் தமை யால், கந்தரோடையையும் ஒரு கடல் வர்த்தகவழி மையமாகக் கொள்ளலாம். பெருமளவிலான பௌத்த மத உருவங்களும், சின்னங்களும், கருவூலப் பொருட்களும் கந்தரோடையிலேயே கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பகட்ட பௌத்த மதத்தின் பரவலை பகுப்பாய்வு செய்யு மிடத்து அது வர்த்தக வழிகளில் காணப்படுவதும், வர்த்தக உயரடுக்கின் ஆதரவைப் பெற்றதும் புலனாகிறது (Patronised by the Trading Elite). யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால பெருங்கற் பண்பாட்டுக் குடியேற்றங்கள் இடம் பெற்ற இடங்களாக 18 மையங்கள் இனம் காணப்பட்டிருக்கின்றன. அவற்றில் எட்டு மையங்களில் பௌத்தமதச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கந்தரோடையும், வல்லிபுரமும் முக்கியமான பௌத்த மத தலங்களாகும்.

யாழ்ப்பாண பௌத்தப் பரவலின் இரண்டாம் கட்டம் (கி.பி 600 – கி.பி. 1200)

ஆரம்பகட்ட யாழ்ப்பாண மையங்களில் காணப்பட்ட வளமான பௌத்த தொல்லியல் கண்டுபிடிப்புகளுக்கும், பிற்கால மையங் களில் காணப்பட்ட குறைவான கண்டுபிடிப்புகளுக்கும் கணிச மான வேறுபாடு காணப்படுகிறது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்த பௌத்த மையங்களில் மட்டு மல்ல, மக்களின் குடியேற்றங்களிலும், வாழ்வாதார முறை களிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகிறது. இப்பொருளா தாரச் சரிவிற்கான முக்கிய காரணம் கி.பி. ஐந்தாம் நூற் றாண்டின் இறுதியில் சடுதியாக நின்றுவிட்ட உரோம வர்த் தகமே ஆகும்.

யாழ்ப்பாணத்தில், பிந்திய கட்ட பௌத்தமதச் சின்னங்கள் காணப்பட்ட இடங்களாக: (கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிந்திய காலத்தைய மேல்மட்டத் தொல்பொருட்களைக் கொண்ட) முதலில் கூறப்பட்ட எட்டு மையங்களுடன்:

9. இளவாலை – ஆனைவிழுந்தான்,
10. கரவெட்டி – துளுக்கன் கோட்டை,
11. மந்துவில்லுக்குச் சமீபத்திலுள்ள வேரத்திடல்,
12. பச்சிலைப்பள்ளி மையங்கள் ஆகியவையும் காணப் படுகின்றன.

பச்சிலைப்பள்ளியில் மட்டும் ஆறு பௌத்த மையங்கள் இனம் காணப்பட்டன. பச்சிலைப்பள்ளி என்ற பதம் சமஸ்கிருத பர்ணசாலா என்பதற்கு நிகரானது. பாளி மொழியில் இது பன்ன சாலா எனப்படும். இலைகளால் செய்யப்பட்ட ஒரு மண்டபம் என்பது இதன் பொருள்.

யாழ்ப்பாணத்தின் பிற்காலப் பௌத்த மையங்களில் கருவூலப் பொருட்கள் குறைவாகவே உள்ளன் வேறுபட்ட வகைமை களைக் கொண்ட மட்பாண்டங்களும் காணப்படவில்லை. உள் ளூரில் செய்யப்பட்ட ஒரே வகையான 'தடித்த விளிம்பு கொண்ட செந்நிற மட்பாண்டங்கள்' மட்டுமே எல்லாப் பிற்காலப் பௌத்த மையங்களிலும் காணப்படும் முக்கியமான மட்கலன்களாகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கந்த ரோடையிலும், மற்றும் சில மையங்களிலும், புதிதாக ஆரம்பிக் கப்பட்ட சில குடியிருப்புகளிலும் தென் இலங்கையின் தேரவாத பௌத்தத்தின் செல்வாக்கைக் காண முடிகிறது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இலங்கையில் சோழர் ஆட்சியின் போது யாழ்ப்பாணத்தில் சைவமதம் பிரபலமடைய ஆரம் பித்தது. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னர், யாழ்ப் பாண இராச்சியம் ஆரம்பித்த காலத்திலிருந்து யாழ்ப்பாண மக்களிடையே சைவமதம் மட்டுமே நடைமுறையிலிருந்தது. அக்காலத்தில் பௌத்தமத நடவடிக்கைகள் முற்றாக மறைந்து போயின.

யாழ்ப்பாணப் பௌத்தம்

யாழ்ப்பாணத்தில் கி.மு. 100 முதல் கி.பி. 800 வரையில் நடை முறையில் இருந்த பௌத்த மதத்தின் பண்புகள் இலங்கையின் பெருநிலப்பரப்பில் பரவியிருந்த தேரவாத பௌத்தத்தின் பண்பு களிலிருந்து வேறுபட்டு நின்றமையால், அது யாழ்ப்பாணப் பௌத்தம் என்ற தனிப்பெயரைக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்துருவை 1988 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 – 16 ஆம் திகதி களில் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'யாழ்ப்பாண வரலாற்றில் மதங்கள்' என்ற பட்டறையில் பேசிய கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி முதன்முதலாக முன்வைத் திருந்தார். இந்த யாழ்ப்பாணப் பௌத்தம் கீழ்காணும் முக்கிய மான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருந்தது.

1. வணிகம்சார் பௌத்தம்.
2. மகாயான பௌத்தம்.
3. பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த சமரசப் பண்பு.
4. முருகைக்கல் – சுண்ணாம்புக்கல் கட்டடத் தொழில்நுட்பம்.
5. ஆந்திர எழுத்து வடிவங்களைக் கொண்ட வல்லிபுரப் பொற் சாசனம்.
6. பலவள இயல்புடைய யாழ்ப்பாணப் பௌத்தம் – உலகப் பொது நோக்கு.

(1) வணிகம்சார் பௌத்தம் (Mercantile Buddhism)

யாழ்ப்பாண மையங்களில் பரவிய பௌத்தத்தை, அவ்விடங் களில் தக்கவைத்துக் கொண்டிருந்தது கடல்வழி வர்த்தக நட வடிக்கைகளாகும். யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால பௌத்தமதம் பரவிய இடங்களான திருவழிநிலை, அரியாலை கிழக்கு, வல்லி புரம், காரைநகர், வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு என்பன ஏற்கனவே குறிப்பிட்டது போல கடற்கரை மையங்களாகும். அங்கிருந்த முக்கியமான ஒரேயொரு உள்ளூர் மையம் கந்த ரோடை. கந்தரோடை யாழ்ப்பாண வர்த்தக வலைப்பின்னலின் நடுவமாக விளங்கிய மையம் என்பது குறிப்பிடத்தக்கது.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பௌத்தமதக் கருவூலப் பொருட்களின் அமைப்பு, கலைப்பொருள் வரிசை, கலாசாரப் பரிணாம வளர்ச்சி (The Setting, Sequence of Artefacts Unearthed and their Cultural Evolution) என்பன ஆந்திராவின் நாகர்ஜுனாகொண்ட, அமராவதி ஆகிய மையங்களில் காணப் பட்ட கலாசார பரிமாண வளர்ச்சியை நிகர்த்துக் காணப்படு கின்றன. மற்றும், கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட புத்தபக வானின் உருவச்சிலைகள் அவற்றின் அமைப்பிலும், சிற்பச் செதுக்குக் கலையிலும் அமராவதி கலைக்கல்லூரிப் பாணி யைக் கொண்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட பௌத்த மையங்கள் அனைத்தும் ஒன்றில் துறைமுக அங்காடிகளாகவோ அல்லது வணிகப்பாதை மையங்களாகவோ இருந்தன. இவ்விடங்களின் குடியிருப்பு அமைப்புகள் யாழ்ப்பாண பௌத்தம் வர்த்தக உயரடுக்கின் ஆத ரவைப் பெற்று வளர்ச்சியடைந்ததை எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையின் பெருநிலப்பரப்பில் பௌத்த மதத்தின் பரவல் குளங்களிலிருந்து நீர்ப்பாசனம் செய்த விவசாயச் சமூகத்தின ரோடு இணைந்து பரவிய பொழுதில், யாழ்ப்பாணப் பௌத்தத் தின் வருகையும் பரவலும் வணிகப்பாதைகள் வழியாக வணிகத்துடன் இடம்பெற்றன. இந்த வித்தியாசமான பண்பே யாழ்ப்பாணப் பௌத்தத்தை இலங்கையின் பெருநிலத்தில் நடைமுறையிலிருந்த சிங்கள மக்களின் பௌத்தத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டிய ஒரு முக்கிய அம்சமாகும்.
கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து பௌத்த மதத்தின் பரவல் சிறப்பாக நிறுவனப்படுத்தப்பட்ட உரோம கடல்வழிகளால் நடைபெற்றபடியினால், யாழ்ப்பாணத்தில் உருவான புதிய குடியிருப்புகளின் எழுச்சியோடு பௌத்த மதமும் பரவலாயிற்று. இளவாலை, கரவெட்டி, வேரத்திடல், பச்சிலைப்பள்ளி ஆகிய இரண்டாம் கட்ட பெருங்கற் பண்பாட்டுக் குடியிருப்புகளில் பௌத்த மதச் சின்னங்களே அவ்விடங்களின் ஆரம்பகால மதச் சின்னங்களாகக் காணப்படுகின்றன.

பௌத்த மதத்தின் உள்ளார்ந்த அம்சம் நாடாண்கலை யுடனான அதன் இணைப்பு ஆகும் (Link with Statecraft). அந்த மதம் தென்னாசியாவிலும், தென்கிழக்காசியாவிலும் மாநிலங் களையும், அரசுகளையும் உருவாக்கிய ஊக்கியாகவும் அல் லது காரணமாகவும் இருந்திருக்கிறது. மாமன்னன் அசோகன் பௌத்தமதம் சார்ந்து தன்னைத் தேவநம்பிரிய பியதாஸி ஆக்கி யதும், இலங்கை அரசன் தீசன் தன்னைத் தேவநம்பிய தீசன் என அழைத்ததும் உதாரணங்கள். யாழ்ப்பாணத்திலும் ஆரம் பகால நூற்றாண்டுகளில் பௌத்தமும், அதன் வர்த்தகப் பின் னணியும் அங்கே உருவான நகரக் குடியரசின் அடித்தளமாக இருந்திருக்கின்றன.

தமிழ்க் காப்பியமான மணிமேகலை நாகநாட்டின் (யாழ்ப் பாணம்) அரச மையம் பௌத்த மதம் சார்ந்தது எனவும், அதை ஆட்சி செய்த வளைவாணன் என்ற நாக மன்னன் பௌத்த மதத்தினன் எனவும், நாகநாடு சோழ நாட்டுடன் கொண்டிருந்த கடல்வழித் தொடர்புகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது. மற்றொரு தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம் நாகநாட்டையும், அது சோழ நாட்டின் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினத்துடன் கொண்டிருந்த இணைப்பையும் பற்றிக் கூறுகிறது. வல்லிபுரப் பொற்சாசனம் நாகதீவின் வடகரையில் ஒரு பிராந்திய ஆட்சி யாளன் ஒரு பௌத்த விகாரையைக் கட்டியதை எடுத்துரைக் கிறது.

தொல்லியல் சான்றுகள் இலங்கையில் பாரம்பரியமாகப் பேசப் படும் பௌத்த மதத்தின் தோற்றத்தை மறுபரிசீலனை செய்ய வைக்கின்றன. இலங்கையின் பௌத்தமதப் பாளிமொழி இலக் கியங்கள் இரு முக்கியமான சம்பவங்களை எடுத்துரைக் கின்றன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவிலிருந்து இலங்கை வந்த ஆரியர்களின் இடப்பெயர்வு.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து யாழ்ப் பாணம் வழியாக வந்த பௌத்த மதம்.

இச்சம்பவங்கள் உண்மையான நிகழ்வுகளாக இருந்திருப்பின் அவற்றை நிரூபிக்கக்கூடிய கருவூலப் பொருட்களோ, மற்றும் சான்றுகளோ அகழ்வாய்வுகளில் காணப்பட வேண்டும். அப்படி யான சான்றுகள் இதுவரை காணப்படவில்லை.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் மிகப் பரவலாகப் புழக்கத்திலிருந்த மட்பாண்டம் வடக்கத்திய மெருகூட்டப்பெற்ற கறுப்புநிறப் பாண்டம் (Northern Black Polished Ware: NBPW) ஆகும். பாளி இலக்கியங்கள் கூறும் வட இந்திய மக்களின் ஒரு பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டிருக்குமானால் இலங்கையின் பல பகுதிகளில் பரவலாக இந்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை அப்படி அமையவில்லை. யாழ்ப் பாணக் கோட்டை அகழ்வுகளில் வட இந்திய மெருகூட்டப்பெற்ற கறுப்புநிற மட்பாண்டங்கள் (கி.மு. 500 – 100) சில கிடைத் திருக்கின்றன. இவை வட இந்திய வர்த்தகம் வழியாக வந்த மட் பாண்டங்கள். யாழ்ப்பாணத்தில் வேறு எந்த மையங்களிலும் இந்த மட்பாண்டம் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணக் கோட்டை அகழ்வுகளில் பௌத்த மதம் சம்பந்தமான கலைப் பொருட்கள் எதுவுமே காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (Thiagarajah, S. 2022: 26). இலங்கையின் பெருநிலப் பகுதி களின் அகழ்வுகளில் வட இந்திய மெருகூட்டப்பெற்ற கறுப்புநிற மட்பாண்டங்கள் அநுராதபுரத்தில் சில ஓடுகளும் (Deraniyagala, S. 1992) திஸ்ஸமகாராமவில் சிலவும் (Weisshaar et al. 2001) மாந்தையில் ஒரே ஒரு கலவோடும் (Carswell, J. 2013: 216) காணப்பட்டமை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவற்றைத் தவிர இலங்கையின் வேறு பாகங்களில் இந்த வட இந்திய மட் பாண்டம் காணப்பட்டதாக அறிவிப்புகள் ஏதும் வரவில்லை.

இதனோடு ஒப்பிடும் போது தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட் டுடன் இணைந்த கறுப்பு – சிவப்பு மட்பாண்டங்கள் இலங்கைத் தீவு முழுவதும் செறிவாகப் பரவியிருப்பது ஏற்கனவே இங்கு (இயல் 10) எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

தொல்லியல் ரீதியாக யாழ்ப்பாணப் பௌத்தம் தென்னிந்தியப் பௌத்தத்தின் ஒரு பிரிவாகவே காணப்படுகிறது. முக்கியமாக ஆந்திர நாட்டிலிருந்தே இவ்வகையான பௌத்தம் யாழ்ப் பாணத்தைக் கடல்வர்த்தக வழியாக வந்தடைந்திருப்பதை இனிக் கூறப்படும் பல்வேறு வகையான சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்

www.sangathamil.ca

தாய்வானை சூளும் சீனாவின் படை வியூகம்: ஈரானை காப்பாற்றும் தந்திரோபாயத் திட்டமா?

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

22.03.2026

மத்திய கிழக்கில் ஈரான் மீதான அமெரிக்காவின் போர் தொடரும் நிலையில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவும் வட கொரியாவும் தமது இராணுவ நகர்வுகளைத் தொடங்கியுள்ளன. அமெரிக்காவின் கூட்டாளி நாடுகளான தாய்வான், ஜப்பான் மற்றும் தென் கொரியாவை அச்சுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்த நகர்வுகள், அமெரிக்காவிற்கு இரட்டை முனைகளில் (Two-front war) நெருக்குதலை ஏற்படுத்தும் வியூகமாகப் பார்க்கப்படுகிறது.

சீனா, தாய்வானை தனது பிரிக்க முடியாத பகுதியாகக் கருதி, அதை மீண்டும் தன்னுடன் இணைக்க (Reunification) இராணுவ அழுத்தங்களை அதிகரித்துள்ளது. 1949 முதல் தன்னாட்சி பெற்ற நாடாக தாய்வான் செயல்பட்டாலும், சீனா அவ்வப்போது போர் ஒத்திகைகள் மூலம் அச்சுறுத்தி வருகிறது. தாய்வான் மீதான அச்சுறுத்தல் உலகளாவிய கணினி மென்பொருள் (Chip) விநியோகத்தைப் பாதிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது என கூறப்படுகிறது. ஏனெனில் தாய்வானே கணினி மென்பொருட்களை பாரியளவில் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட நாடாகும்.

இதேவேளை ஈரான் போருக்காகத் தென்கொரியாவில் நிறுத்தப்பட்டிருந்த “பேட்ரியாட்” (Patriot) ஏவுகணைத் தடுப்பு அமைப்புகளை அமெரிக்கா மத்திய கிழக்குக்கு நகர்த்தியுள்ளது. இந்த இடைவெளியைப் பயன்படுத்தியே சீனாவும் வடகொரியாவும் ஆசியாவில் தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஹார்முஸ் நீரிணையில் ஈரானுக்கு எதிராகக் கப்பல்களை அனுப்புமாறு கூட்டாளி நாடுகளிடம் கோரும் நிலையில், தமது சொந்தப் பாதுகாப்பைக் கருதி ஜப்பானும் தென்கொரியாவும் பின்வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இது ஈரானுக்கு விடுக்கப்பட்ட நெருக்கடியைச் சீனா தந்திரமாகக் குறைக்கும் திட்டமாகும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்

தனிநாடு பிரிவினை – அரை நூற்றாண்டு பகை:

சீனா-தாய்வான் இடையே அரை நூற்றாண்டுக்கும் மேலான மோதல் போக்கு நீடிக்கிறது. பெரும்பாலான உலக நாடுகளின் அங்கீகாரம் இல்லாத போதிலும், தாய்வான் தன்னை தன்னாட்சி பெற்ற தனிநாடு என்கிறது. ஆனால் சீனாவோ தாய்வானில் அமைந்திருக்கும் அரசு, சட்டவிரோதமானது, தாய்வான் சீனாவிலிருந்து பிரிந்த ஒரு மாகாணப்பகுதி என்கிறது.

அவசியம் ஏற்பட்டால் தாய்வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என தொடர்ந்து சீனா மிரட்டி வருகிறது. இந்த சூழலில் கடந்த சில ஆண்டுகளாக சீனா-தாய்வான் இடையிலான இராணுவ பதற்றம் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

சீனாவில், 1911 இல் மன்னராட்சி ஒழிக்கப்பட்டதோடு சீன தேசியக் கட்சி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது. 1927 இல் ஆளுங்கட்சிக்கு எதிராகச் சீன கம்யூனிஸ்ட் கட்சி போர்க்கொடி தூக்க, 1930-களில் உள்நாட்டுப் போர் வெடித்தது. 1949 வரை நடந்த இப்போரில் தோல்வியுற்ற சீன தேசியக் கட்சியினர், தென் சீனக் கடலில் அமைந்திருக்கும் தீவான தாய்வானில் தஞ்சமடைந்தனர். இதையடுத்து சீனாவிலிருந்து பிரிந்து தனித்தீவு நாடாகச் செயல்படத் தொடங்கியது தாய்வான்.

1975 வரை சீன தேசியக் கட்சியின் தலைவரான சியாங்கின் ஆட்சியிலிருந்த தாய்வான், அதன் பிறகு மெல்ல மெல்ல ஜனநாயகத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. நீண்டகாலமாகவே தாய்வானைச் சொந்தம் கொண்டாடிய சீனா, 1981 இல் ‘ஒரு நாடு-இரண்டு அமைப்புகள்’ என்ற ஆட்சிமுறைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தின்படி, ‘எங்களுடன் தாய்வான் இணைந்து கொணடால், ஹொங்கொங்கில் இருப்பது போன்று உங்களுக்கும் தன்னாட்சி அதிகாரம் வழங்குகிறோம்’ என்று சீனா ஆசைகாட்ட, அதை மறுத்துவிட்டது தாய்வான்.

தாய்வானில் சீன ஆக்கிரமிப்பு:

தற்போது தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தினுள் (ADIZ) தொடர்ச்சியான ஊடுருவல்களை சீன அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த சூழலில் மார்ச் 15-ஆம் திகதி மாத்திரம் முழுமையான ஆயுதங்கள் பொருத்தப்பட்ட 26 போர் விமானங்கள் மற்றும் 7 போர்க் கப்பல்களைத் தாய்வான் எல்லைக்குள் சீனா அனுப்பியுள்ளது. இதற்குப் பதிலடியாகத் தாய்வான் தனது F-16 போர் விமானங்களையும் ஏவுகணை அமைப்புகளையும் தயார் நிலையில் வைத்துள்ளது.

இந்த தந்திரோபாய வியூகம் ஈரானைக் காப்பாற்ற ஆசியாவில் போர் பதற்றத்தை உருவாக்குவதாக சீனாவை மறைமுகமாக அமெரிக்க அரசு எச்சரித்துள்ளது. தாய்வானைச் சுற்றிவளைக்கும் சீன படைகள் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன என்றும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. மேலும் வட கொரியாவின் ஏவுகணை சோதனையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வடகொரிய ஏவுகணை சோதனை:

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் “வாரியர் ஷீல்ட்” (Warrior Shield) இராணுவப் பயிற்சிக்குப் பதிலடி கொடுப்பதாகக் கூறி, மார்ச் 14-ஆம் திகதி வடகொரியா ஒரே நேரத்தில் 10 பலிஸ்டிக் (Ballistic) ஏவுகணைகளை ஜப்பான் கடற்பரப்பில் (Sea of Japan) வீசியுள்ளது. இந்த ஏவுகணைகள் ஜப்பானின் பிரத்தியேகப் பொருளாதார வலயத்திற்கு (EEZ) மிக அருகில் வீழ்ந்துள்ளன என்று கூறப்படுகிறது.

மேலும் தென்கொரியாவைத் தாக்கக்கூடிய 600mm அதிதூர ராக்கெட் செலுத்திகளையும் வடகொரியா சோதித்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஹார்முஸ் நீரிணையில் ஈரானுக்கு எதிராகக் கப்பல்களை அனுப்புமாறு கூட்டாளி நாடுகளிடம் கோரும் நிலையில், தமது சொந்தப் பாதுகாப்பைக் கருதி ஜப்பானும் தென்கொரியாவும் பின்வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஈரான் மீதான அமெரிக்காவின் போர் தொடரும் நிலையில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவும் வடகொரியாவும் இராணுவ நகர்வுகளை வெளிக்காட்டியுள்ளன. தாய்வானின் அரை நூற்றாண்டு பகையும் தனிநாடு கோரிக்கையும் இன்னமும் தொடரும் நிலையில் சீனா தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முயல்கிறது

ஈரான் போருக்காகத் தென்கொரியாவில் நிறுத்தப்பட்டிருந்த “பேட்ரியாட்” (Patriot) ஏவுகணைத் தடுப்பு அமைப்புகளை அமெரிக்கா மத்திய கிழக்குக்கு நகர்த்தியுள்ளமை பயன்படுத்தி சீனா சுயலாபம் அடைந்து வருகிறது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது ஈரானுக்கு விடுக்கப்பட்ட நெருக்கடியைச் சீனா தந்திரமாகக் குறைக்கும் திட்டத்திற்காக, சீனாவும் வடகொரியாவும் ஆசியாவில் பதற்றத்தை உருவாக்கியுள்ளன என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பூகோள அரசியல் பின்னணி :

1949 சீன உள்நாட்டுப் போரில் தோற்ற தேசியவாத அரசு (Kuomintang) தாய்வானுக்குத் தப்பிச் சென்றது, அன்றிலிருந்து சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே மோதல் நீடிக்கிறது. தாய்வான் சீனாவின் ஒரு பகுதி, அதை வலுக்கட்டாயமாகவோ அல்லது அமைதியான முறையிலோ திரும்பப் பெறுவோம் என நீண்டகாலமாக சீனா உறுதிபடக் கூறுகிறது.

தற்போதைய பதற்றமாக சீனா தனது இராணுவப் படகுகள் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாய்வானைச் சுற்றி வளைத்து, போர் ஒத்திகைகளை நடத்தி, பதற்றத்தை அதிகரித்துள்ளது. உலகின் மிகப்பெரிய கணினி மென்பொருள் (சிப்ஷ்) உற்பத்தியாளர் என்பதால், இந்த மோதல் உலகளாவிய பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என பொருளாதார வல்லுநர்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்கா தாய்வானுக்கு நீண்டகாலமாக ஆயுதங்களை விற்று, சீனாவின் தாக்குதலுக்கு எதிராக உதவ உறுதியளித்துள்ளது. இருப்பினும், சீனா தற்போது உடனடியாகத் தாய்வானை ஆக்கிரமிக்கத் திட்டமிடவில்லை என்றாலும், எதிர்காலத்தில் “வலுக்கட்டாயமாக” கைப்பற்றத் தயாராகி வருகிறது, என்று அமெரிக்க உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனிநாடாக பிரிந்த தாய்வான்:

சீனாவிலிருந்து தனிநாடாகப் பிரிந்து சென்ற தங்கள் நாட்டின் மீது படையெடுக்க, எல்லையில் படைகளை குவித்து போர் பயிற்சியில் ஈடுபட சீனா தயாராகி வருவதாக தாய்வான் இராணுவம் பல தடவைகள் குற்றம் சாட்டியுள்ளது. தாய்வானை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா திட்டமிடுகிறது. இதற்காக தாய்வான் அருகே அடிக்கடி போர்ப்பயிற்சி மற்றும் தாய்வான் எல்லைக்குள் போர் விமானங்களை அனுப்பியும் சீனா பதற்றத்தை தூண்டியும் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்வானை அச்சுறுத்தும் வகையிலும், தாய்வானைச் சுற்றி பாதுகாப்பு பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் சீனா தனது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையை பயன்படுத்தியுள்ளது. இப்பயிற்சிகளில் சீன கடற்படைக்கு சொந்தமான போர் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சீனா படையெடுக்க சாத்தியமா?

கைத்தொழில்துறை, தொழில் நுட்பத்துறைகளில் அசுர வளர்ச்சி பெற்று தாய்வான் பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறி வருகிறது. இதைக் கண்டு அஞ்சிய சீனா, தாய்வானில் இருப்பது சட்டவிரோதமான ஆட்சி. அது தனிநாடு அல்ல, எங்களிடமிருந்து பிரிந்த மாகாணம் மட்டுமே என்று சொல்லி வருகிறது.

2005இல் தாய்வானைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பிரிவினைவாத தடுப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தது சீனா. அதன் பிறகு, இரண்டு நாடுகளுக்கும் இடையேயான மோதல் உச்சம் தொட்டது. 2013இல் சீன அதிபரான ஜி ஜின்பிங், தாய்வானைச் சீனாவின் கட்டுக்குள் கொண்டுவருவதில் தீவிரம் காட்டினார். அதைத் தொடர்ந்து, 2016 இல் தாய்வான் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த சட்டங்களைக் கொண்டுவந்து, பாதுகாப்புத் துறையையும் மேம்படுத்தியது. வெளிநாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தத் தொடங்கியது. குறிப்பாக அமெரிக்கவுடன் நீண்டகால நட்புறவை ஏற்படுத்திக்கொண்டதால், தாய்வானுக்குப் பல நவீன ஆயுதங்கள் கிடைத்தன. சர்வதேச ரீதியில் வத்திக்கானும், வேறு 13 நாடுகளும் தாய்வானை இறையாண்மை கொண்ட நாடாக அங்கீகரித்திருக்கின்றன.

சீனா, மீண்டும் தாய்வானை தன்னில் இணைத்துக்கொண்டுவிட்டால், அது பசுபிக் பிராந்தியத்தில் தனது அதிகாரத்தைச் சுதந்திரமாகக் காட்ட வழிவகுப்பதுடன், குவாம் மற்றும் ஹவாய் வரையிலான அமெரிக்க இராணுவ தளங்களுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமையும். ஆனால் தாய்வானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவுக்கரம் நீட்டி வருவதும், சீனாவின் எதிர்ப்பைப் புறந்தள்ளி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவலத்தைத் தந்தவருக்கு — அதைத் திருப்பிக்கொடு

அது, 1987 ஒக்ரோபர் 10 ஆம் நாள். ஈழத் தமிழரின் போராட்ட வரலாற்றில் அந்தநாள் மறக்கப்படவே முடியாது. அன்றுதான் “கோலியாத்” (இந்தியா) என்ற அரக்கன், சிறுவனான “டேவிற்”றை (புலிகள்) சண்டைக்கு இழுத்த நாள்.

அதாவது, கிள்ளுக்கீரைகள் என நினைத்து தமிழீழ விடுதலைப் புலிகளைக் கிள்ளி எறிய, இந்திய அரசு முடிவெடுத்த நாள்.

ஆயினும், அந்தக் “கிள்ளுக்கீரைகள்” “காஞ்சோண்டி”களாக மாறி இந்திய ஆக்கிரமிப்பை அரிக்கத் தொடங்கிய நாளும் அதுதான்.

அந்த நாட்களில், யாழ். பல்கலைக் கழகத்திற்கு மேற்குப்புறமாக உள்ள பிரம்படி என்ற என்ற சிற்றூரில், தலைவர் பிரபாகரனின் பாசறை இருந்தது. அதேவேளை பல்கலைக்கழகத்திற்குத் தெற்குப் புறமாக - அதனை அண்டித் தலைவரின் பிரதான முகாம் இருந்தது. அன்று காலையே அந்த முகாமுக்குச் சென்ற தலைவர் அவர்கள் தளபதிகளை அழைத்து, போருக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிருந்தார்.

இதேவேளை, யாழ். கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரை வெளியேற விடாது புலிகள் எதிர்த்தாக்குதல் தொடுத்தனர்.

யாழ் கோட்டைப்பகுதியில் சண்டை தொடங்கியது.

அப்போது, பலாலி இந்தியப் படைத் தலைமையகத்திலிருந்து மேஜர் பெரியசாமி என்ற பெயருடைய இராணுவ அதிகாரி, புலிகளின் தலைமைப்பீடத்துடன் “வோக்கி” மூலம் தொடர்பு கொள்ள முயன்றார். (இந்தியப் படையுடனான சமாதான காலத்தில் இந்த இராணுவ அதிகாரி, புலிகளுக்கும் - இந்திய உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையேயான தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி இருந்தார்).

மேஜர் பெரியசாமியின் அழைப்புச் சத்தத்தைக் கேட்ட தலைவர் அவர்கள், தானே “வோக்கி”யை எடுத்து பெரியசாமியுடன் தொடர்புகொண்டார்.

“பெரியசாமி ...... பெரியசாமி இங்கே நான் பிரபாகரன் பேசுகின்றேன்” என்று பதில் கொடுத்தார்.

எதிர்முனையில் இருந்து கிடைத்த இந்த எதிர்பாராத பதில் அழைப்பால் திடுக்குற்ற மேஜர் பெரியசாமி, “யார் பிரபாகரனா? வணக்கம்சார்” என்று தனது ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி விட்டு ஏதோ கதைக்க முயன்றவரைக் குறுக்கிட்ட தலைவர் அவர்கள்,

“நீங்கள் (இந்தியப் படை) தேவையற்ற முறையிற் போரை ஆரம்பித்துள்ளீர்கள் நாங்களும் போருக்குத் தயார் என உங்களது தளபதிகளிடம் சொல்லுங்கள். இனி போர்க்களத்தில் சந்திப்போம்” என்று கூறிவிட்டு, “வோக்கி”யின் இயக் கத்தை நிறுத்தினார்.

மாரிமழையும் தீவிரமடைந்தது. போரும் தீவிரமடைந்தது....

போரில் இந்தியப் படைகளை வெல்ல முடியாது என்ற கருத்தை எமது மக்களில் பலர் மிகவும் உறுதியாக வைத்திருந்தார்கள். அதுபோலவே தமிழ் மக்களை இந்தியப் படை கொலைசெய்ய மாட்டாது என்ற கருத்தையும், எமது மக்கள் நம்பிக்கையுடன் வைத்திருந்தார்கள். இதனால், எறிகணை வீச்சில்லாத, வான் வழித் தாக்குதல்கள் இல்லாத, ஒரு சண்டைபற்றி மக்களிற் பலர் கற்பனை செய்துகொண்டிருந்தனர்.

ஆனால், போர் தொடங்கிய அன்றே பிரம்படியில் இந்தியப் படைகள் புரிந்த கொடூரமான படுகொலைகள், மக்களை அதிர்ச்சிக்கும், அச்சத்திற்கும் உள்ளாக்கின. அதைத் தொடர்ந்து யாழ் கோட்டை மற்றும் பலாலிப் படைத் தளங்களில் இருந்து ஏவப்பட்ட ஆட்டிலறி எறிகணைகள் அகதி முகாம்களிலும், கோயில்களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் விழுந்து மக்களைப் பலிகொள்ளத் தொடங்கின.

இந்தியாவின் அகிம்சை முகமூடியை, அதன் ஆட்டிலறிகளும், எஸ். எல். ஆர். துப்பாக்கிகளும் கிழித்துக்கொண்டிருந்தன.

இந்த இடத்தில், வேதனை நிறைந்த ஒரு சுவாரசிய சம்பவத்தைக் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. இந்திய - புலிகள் போர் கடுமையடைந்து கொண்டிருந்த போது, இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே கிரிக்கெட் போட்டி ஒன்று நடந்து கொண்டிருந்தது அந்தப் போட்டியில் இந்தியா தோற்று விட்டது. இந்தத் தோல்விச் செய்தியை வானொலி வர்ணனையாளர் அறிவித்ததும், அதைப் பலாலியில் இருந்தபடி செவிமடுத்துக் கொண்டிருந்த பிரிகேடியர் பெர்னாண்டஸ் என்ற இந்தியப் படை அதிகாரி, தனது ஆட்டிலறிப் படைக்கு தொலைத் தொடர்பு கருவி ஊடாக இவ்வாறு உத்தரவிட்டார்.

“இந்தியாவின் கிரிக்கெட் தோல்வியை புலிகள் கொண்டாடப் போகின்றார்கள். எனவே, உடனடியாக ஆட்டிலறித் தாக்குதல்களை மேற்கொள்ளவும்.”

இந்த உத்தரவைத் தொடர்ந்து கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர், மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளை நோக்கிச் சில நிமிட நேரங்கள் பலத்த ஆட்டிலறித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இந்தியக் கிரிக்கெட் குழு ஒரு போட்டியில் தோற்றதால், ஒரு இராணுவ உயர் அதிகாரிக்கு ஏற்பட்ட பைத்தியக்காரத் தனமான கற்பனை காரணமாகப் பிறந்த கட்டளையால், எமது மக்களில் எத்தனை பேர் பலியானார்கள்!

இந்திய - புலிகள் போர் தொடங்கி

ஒன்று, இரண்டு மாதங்களில் குடாநாடு இந்தியப் படைகள் வசமாகிவிட்டது. அதே வேளை புலிகளின் படையணிகள் சிதைந் தும், சேதப்பட்டுச் சிதறுண்டும் காணப்பட்ட ஒரு இக்கட்டான காலப்பகுதி அது. சுருக்கமாகச் சொன்னால், இராணுவ ரீதி யாகப் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டுப் போய் நின்ற நெருக் கடியான வேளை அது. அதேவேளை தலைவரின் பாசறை அமைந்திருந்த மணலாற்றுக் காட்டுக்குள் ஒரு பாரிய படை யெடுப்பைச் செய்ய, இந்தியப் படைகள் ஆயத்தம் செய்து கொண் டிருந்தன. உணவு, மருத்துவம், படையணிகளுக்கிடையே யான தொடர்பு கொள்ளல் என்பவை பெரிதும் பாதிக்கப்பட்டு, போராளிகள் ஒரு விரக்திச் சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்த காலகட்டம் அது. இதனால் புலிகள் இயக்கமே முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுவிடுமோ என்ற ஒரு அபாயம் நிலவிய வேளை அது, அந்தளவுக்கு இந்தியப் படைகள் ஒரு பாரிய இராணுவ - உளவியல் நெருக்கடியை எமது இயக்கத்திற்கும், எமது மக்களுக்கும் கொடுத்துக்கொண்டிருந்தன.

இந்தநிலையில் இந்தப் பாரிய நெருக்கடியைத் தீர்த்து இயக்கத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசுடன் சமாதானப் பேச்சுக்குப் போவதே புத்திசாதுரியமான வழி என, எமது மூத்த உறுப்பினர்கள் சிலர் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தலைவருக்குச் செய்தி அனுப்பினார்கள்.

இந்தச் செய்திக்குத் தலைவர் எந்தப் பதிலையும் அனுப்பவில்லை.

சமாதானப் பேச்சிற்கு எப்போது நாம் செல்லவேண்டும் என் பதில் தலைவர் ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார். அதாவது, இராணுவ ரீதியில் பலமான நிலையில் இருந்தபடிதான் நாம் சமாதான பேச்சிற்குச் செல்லவேண்டும் அப்போது தான் எமது உரிமைகளை நாம் வலியுறுத்திப் பெறமுடியும். பலவீனமான நிலையில் இருந்தபடி சமாதானப் பேச்சிற்குச் சென்றால் - அதுவும் வலியச் சென்றால் சமாதான உடன்பாடு என்ற போர்வையில் எமது இனத்தின் அடிமைச் சாசனத்தையே எதிரி எம்மிடமிருந்து பெற முனைவான் என்பதில், தலைவர் கவனமாக இருக்கின்றார்.

சமாதானப் பேச்சிற்குச் செல்வதே சிறந்தது என்று எமது மூத்த உறுப்பினர்கள் கோரிய அந்தக் காலத்தில், புலிகள் இயக்கம் உண்மையில் பலவீனமாகவே இருந்தது; எனவேதான், இந்தச் சமாதான ஆலோசனைக்குத் தலைவர் பதில் அனுப்பாது விட்டார்.

ஆனால், மீண்டும் மீண்டும் பதில் வேண்டி அந்தச் செய்தி வந்த போது, தொலைத் தொடர்பு சாதனம் ஊடாகத் தலைவர் இவ்வாறு பதிலளித்தார்.

“அமெரிக்கப் படையுடன் போரிடத் தொடங்கும்போது தாம் 30 வருடங்களிற்கு மேல் போர் புரியவேண்டி வரும் என வியட்நாம் தலைமை நினைத்திருக்கமாட்டாது. ஆனால் அவர்களிடம் இருந்த தன்னம்பிக்கையும் துணிவும்தான் அவர்களை உறுதியுடன் வைத்திருந்தது வெற்றியையும் பெற்றுக் கொடுத்தது. அந்த தன்னம்பிக்கையும் துணிவும் என்னிடம் இருக்கின்றது.”

உட்பொருளை இந்தச் செய்தியின் அந்த மூத்த உறுப்பினர்களும் புரிந்து கொண்டு தொடர்ந்தும் போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டார்கள்.

அவலத்தையும் அபாயத்தையும் கண்டு விட்டு மனம் இடிந்து போவது மனித சுபாவம். இந்த மனித குணத்தை ஆக்கிரமிப்பாளர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவதை, உலக வரலாற்றில் அன்றிலிருந்து இன்றுவரை காணலாம்.

போராடும் மக்கள் மீது அவலங்களை விதைத்து, தேசத்தின் உறுதிப்பாட்டை உடைத்துப் போரை வென்று மக்களை அடிமை கொள்வது, ஒரு ஆக்கிரமிப்புச் சித்தாந்தம். அமெரிக்கச் சிவப்பிந்தியர்கள் மீதும், ஆப்பிரிக்க நீக்ரோக்கள் மீதும் வெள்ளை இன அரசுகள் இதை வெற்றிகரமாகச் செய்துள்ளன. இரண்டாம் உலகப் போரின்போது பிரித்தானியாவை வெல்வதற்காக ஜேர்மனிய விமானப் படை, இந்த அவலத்தை பிரித்தானிய நகரங்கள் மீது விதைத்தது. பின்னர் அதே நோக்கத்திற்காக பிரித்தானிய விமானப்படை, ஜேர்மனிய நகரங்கள் மீது அந்த அவலத்தை வட்டியுடன் சேர்த்து விதைத்தது.

ஒப்பரேசன் முன்னோக்கிப் பாய்தலின் போதும் இந்த உத்தியைத்தான் சிங்களப் படைகள் கையாண்டன. தென் தமிழீழ மக்களது போராட்ட உறுதியை உடைப்பதற்கு நீண்ட நாட்களாகவே இதே வகைப் பயங்கரத்தையே சிங்களப் படைகள் அங்கே செய்து வருகின்றன.

ஆனால், புலிகள் இயக்கத்திடம் இந்த ஆக்கிரமிப்புச் சித்தாந்தம் எடுபடுவதில்லை.

அவலத்தை அபாயத்தைக் கண்டு பதறி அவநம்பிக்கை அடைவதைவிட, அதற்கு எதிராக ஆவேசங்கொண்டு, அவற்றை எமது மக்கள் மீது ஏவிவிட்டோரே அவற்றை அனுபவிக்கும்படி செய்வதுதான், ஈழத் தமிழினத்திற்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள புதிய சித்தாந்தம் ஆகும்.

-விடு இதழ் 16-31 வைகாசி 1996.

ரஷ்யா – அமெரிக்கா இடையே நெருக்கடி: ஈரானுக்கு பிறகு கியூபா என ட்ரம்ப் மிரட்டல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

23.03.2026

இந்த ஆண்டு ஜனவரி முதல் கியூபாவிற்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படவில்லை. இதனால் 9.6 மில்லியன் மக்கள் தொகை கொண்ட கியூபா, அமெரிக்கா விதித்துள்ள எண்ணெய்த் தடையில் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால் கியூபாவின் எரிசக்திக் கட்டமைப்பு பெரும்பாலும் செயலிழந்துவிட்டது. மக்கள் தினமும் சுமார் இருபது மணி நேரம் வரை மின் தடையில் அவதிப்படுகின்றனர்.

நட்பாக கையகப்படுத்துதல்:

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கியூபா தற்போது கடும் பொருளாதார நெருக்கடியில் இருப்பதாகவும், அந்நாட்டை அமெரிக்கா ஒரு "நட்பு ரீதியிலான கையகப்படுத்துதல்" (Friendly Takeover) மூலம் தன்வசப்படுத்த வாய்ப்புள்ளதாகவும் சமீபத்தில் கருத்து தெரிவித்திருந்தார்.

கியூபா ஒரு பலவீனமான நாடாக மாறிவிட்டதாகவும், அந்நாட்டை விடுவிப்பது அல்லது கையகப்படுத்துவது குறித்து தம்மால் எதையும் செய்ய முடியும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால் கியூபாவை மையப்படுத்தி வலுக்கும் பதற்றத்திற்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கியூபாவுடன் முரண்பட வேண்டாம்

கியூபாவை கைப்பற்ற நினைத்து கூட பார்க்க வேண்டாம் என்று ட்ரம்பை புட்டின் எச்சரித்துள்ளார். ஒரு நாட்டை மிரட்டுவது சட்டவிரோதம் என்றும், கியூபாவுடன் அசைக்க முடியாத ஒற்றுமையுடன் இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கியூபாவுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க தயார் என்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கூறியுள்ளமை, கியூபாவை சொந்தமாக நினைக்கும் அமெரிக்க அதிபர் ட்ரம்பிற்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எப்போதும் அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய நாடு கியூபா. பிடல் காஸ்ட்ரோ மறைவுக்கு பின் தற்போது அந்நாட்டை மிகேல் டையஸ் கெனல் கியூபாவை ஆண்டு வருகிறார். இந்நிலையில்தான் கியூபாவை கைப்பற்றும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியிருக்கிறது.

கியூபா ஒரு இறையாண்மை கொண்ட நாடு என்றும், அதன் சுதந்திரத்திற்கு ரஷ்யா எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். மேலும், அமெரிக்காவின் இத்தகைய அழுத்தங்களுக்கு எதிராக கியூபாவிற்கு தேவையான அனைத்து அரசியல் மற்றும் ராஜதந்திர ஆதரவையும் வழங்க ரஷ்யா தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா, ஜனாதிபதி ட்ரம்பின் இந்த பேச்சுக்களை கடுமையாக விமர்சித்து மிரட்டல் என்று விமர்சித்துள்ளார்.

கியூபாவில் எரிபொருள் தட்டுப்பாடு

கரீபியன் நாடான கியூபா வெனிசுலா நாட்டிடமிருந்து எரிபொருளை வாங்கி வந்தது. ஆனால், வெனிசுலா அதிபரை சமீபத்தில் அமெரிக்கா கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும், கியூபா தங்களிடம் மட்டுமே வர்த்தகம் செய்ய வேண்டும் என அமெரிக்கா கூறியது.

ஆனால், கியூபா அதை கேட்கவில்லை. எனவே, கியூபாவுக்கு எரிபொருள் வழங்கும் நாடுகளுக்கு அதிக அளவு வரிகள் விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்ததால் கியூபாவிற்கு எரிபொருள் செல்வது தடுக்கப்பட்டது.

கியூபாவின் மின் உற்பத்தியில் 70 சதவீதம் எரிபொருள் சார்ந்தது என்பதால் மின் உற்பத்தி தடைபட்டது. இதையடுத்து, அந்நாடு இருளில் மூழ்கி இருக்கிறது. தற்போது கியூபாவில் நிலவும் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் தடைக்கு அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளே காரணம் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. அதே நேரத்தில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ கியூபா விவகாரத்தை கவனித்து வருவதாகவும், அந்த அரசு விரைவில் வீழும் என்றும் ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் நம்பிக்கை தெரிவித்து வருகிறது.

இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே சர்வதேச அளவில் பெரும் பதற்றம் உருவாகியுள்ளது.

கியூபா மீதான பொருளாதாரத் தடை:

பனிப்போர் காலத்தில் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சிக்குப் பிறகு அமெரிக்காவுடனான உறவு துண்டிக்கப்பட்டது. ஆனாலும் பராக் ஒபாமா காலத்தில் உறவைச் சீராக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், ட்ரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் கியூபா மீது மீண்டும் கடுமையான தடைகளை மீண்டும் விதித்தார்.

2020 முதல் கியூபா கடும் பொருளாதார வீழ்ச்சியில் உள்ளது. வரலாற்று ரீதியாகவே அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையே சுமுகமான உறவு ஒருபோதும் இருந்ததில்லை. இன்று கியூபா தனது பொருளாதார எண்ணெய் தேவைக்காக வெனிசுலாவைச் சார்ந்துள்ளது. மேலும் சீனா மற்றும் ரஷ்யாவிலிருந்து முதலீடுகளைப் பெற்று வருகிறது. இன்றைய நிலையில் வெனிசுலாவின் பொருளாதாரம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், கியூபா ரஷ்யாவுடம் மீண்டும் உதவியை நாடியுள்ளது.

இரண்டாவது பதவிக்காலத்திலும் ட்ரம்ப் கியூபா மீது கடும் பொருளாதாரத் தடைகளைத் தொடர்ந்து வருகிறார். மேலும் குறிப்பாக கியூபாவின் பொருளாதாரத் தூணான சுற்றுலாத் துறையை அவர் குறிவைத்துள்ளார்.

வெனிசுலாவில் மதுரோவின் கைதால் கியூபா பொருளாதாரம் மேலும் சிதையும் என்றும், அது வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கியூபாவை அமெரிக்கா கைப்பற்றுமா ?

இதேவேளை டொனால்ட் ட்ரம்ப் கியூபாவை விடுவித்தாலும் சரி அல்லது கைப்பற்றினாலும் சரி இரண்டுமே ஒரே மாதிரியான விளைவு தான் என்று அவர் தெரிவித்துள்ளார். என்னால் அந்த தீவை எதுவும் செய்ய முடியும். கியூபாவை கைப்பற்றும் கௌரவம் எனக்கு வேண்டும் என மிகப் பெருமிதமாக அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே கிரீன்லாந்தை நாங்கள் கைப்பற்றுவோம் என கூறியிருந்த அமெரிக்காவின் அடுத்த இலக்கு கியூபா என்பது தெரிய வந்திருக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் ஒரு நாட்டை மிரட்டுவது சட்டவிரோதம் என்று தெரிவித்துள்ளார். கியூபாவுடன் அசைக்க முடியாத ஒற்றுமையுடன் இருக்கிறோம். கியூபாவுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்குப் பிறகு கியூபா?

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விரைவில் கியூபாவைக் கைப்பற்றும் பெருமை தமக்குக் கிடைக்கும் என்று கூறியிருக்கிறார். ஈரானுக்குப் பிறகு கியூபா மீதான நடவடிக்கையை எடுப்போம் என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

கியூபாவை மையப்படுத்தி ரஷ்யா – அமெரிக்கா இடையே மேலுமொரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஈரானுக்கு பிறகு கியூபா என ட்ரம்ப் மிரட்டல் விடுத்ததுள்ளார். கரீபியன் நாட்டை அமெரிக்க கையகப்படுத்துமா என கேள்வி எழுந்துள்ளது

கியூபாவை நட்பார்ந்த முறையில் கைப்பற்றுவது பற்றி அந்நாட்டு அதிகாரிகளுடன் தமது நிர்வாகம் பேசுவதாகவும் அவர் கூறியுள்ளார். ஈரானுடனான போர் தணிந்ததும் கியூபா பக்கம் திரும்பவிருப்பதாக அமெரிக்க அதிபர் கூறியமை குறித்து ரஷ்ய அதிபர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனாலும் எவ்வாறு கியூபாவை கைப்பற்றவிருக்கிறார் என்பது பற்றிய விவரங்களை ட்ரம்ப் வெளியிட மறுத்துவிட்டார். கியூபா தற்போது மிகவும் நலிவடைந்த நிலையில் இருக்கிறது. அதை எப்படி வேண்டுமென்றாலும் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற ட்ரம்ப் பேச்சை பல சர்வதேச நாடுகள் கடுமையாக விமர்சித்து உள்ளன.

அமெரிக்கா – கியூபா உறவு:

2025இல் டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் பதவிக்கு வந்த பின் கியூபாவுடன் பதற்றங்கள் மேலும் வலுப்பெற்றது. கடந்த சில பத்தாண்டுகளில், இரு நாடுகளும் பதற்றமான, பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்ட உறவையே கொண்டிருந்தன. இதில் சில நல்ல காலகட்டங்களும் சில மோசமான கால கட்டங்களும் இருந்தன. ஆனால் தற்போது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பு பிடல் காஸ்ட்ரோவின் சோசலிச புரட்சி ஆட்சிக்கு வந்ததில் இருந்து, அமெரிக்கா, கியூபா இடையிலான உறவு மோசமாக இருந்து வருகிறது. இந்த ஆண்டுகளில், சிஐஏ ஆதரவுடனான படையெடுப்பு, அணு ஆயுதப் போர் அபாயம் மற்றும் பல புலம்பெயர்வு நெருக்கடிகள் ஏற்பட்டன. பல தலைமுறை கியூபர்களும் அமெரிக்கர்களும் இந்த அரசியல் விரோதத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இந்த மோதல் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதே உண்மையாகும்.

ட்ரம்ப் அரசு 1960களில் இருந்து நிலவி வரும் பொருளாதாரத் தடையை இன்னும் கடுமையாக்கியது. கியூபாவின் பல பிரச்சனைகளுக்கு இந்தத் தடையே காரணம் என்று அந்நாடு கூறுகிறது. பிற நாடுகளில் இருந்து கியூபா எரிபொருள் பெறுவதைக் கடினமாக்கும் நடவடிக்கைகளையும் ட்ரம்பின் அரசாங்கம் மேலும் கடுமையாக எடுத்தது.

இது கியூபாவின் எரிசக்தி, பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியை மேலும் மோசமாக்கியது. அந்தத் தீவு ஏற்கெனவே துன்பத்தில் இருந்தது. மேலும் ஜனவரி தொடக்கத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கையில் நிக்கோலஸ் மதுரோ சிறை பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வெனிசுவேலாவின் ஆதரவு முழுமையாக குறைந்தது. இதுவும் கியூபாவின் நிலையை மேலும் மோசமாக்கியது என்பதை மறுக்க முடியாது.

ஈழ மண்ணின் ஆறாத வடுக்கள்

ஒரு இனத்தின் கண்ணீர் வரலாறு

சு. லோகிதன்

27.03.2026

ஈழம் - இந்தப் பெயர் இன்று உலக வரைபடத்தில் வெறும் நிலப் பரப்பாக மட்டும் பார்க்கப்படுவதில்லை. அது ஒரு இனத்தின் இருப்புக்கான போராட்டம், ஈடு இணையற்ற தியாகம் மற்றும் ஆறாத வடுக்களின் சின்னமாகவும் பார்க்கப்படுகிறது. முப்பது ஆண்டு காலப் போர் ஒரு செழிப்பான பூமியை சுடுகாடாக மாற்றியதுடன், அந்த மக்களின் மனங்களில் என்றும் மாறாத வடுக்களைப் பதித்துச் சென்றுள்ளது.

1. வேரோடிப் போன வரலாற்றுப் பின்னணி

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகக் கொண்ட ஈழத் தமிழர்கள், தங்களின் மொழி மற்றும் கலாச்சார உரிமைகளுக்காக தொடங்கிய அகிம்சைப் போராட்டம் காலப்போக்கில் ஆயுதப் போராட்டமாக மாறியது. 1983ஆம் ஆண்டு நடந்த **"கறுப்பு ஜூலை"** இனக்கலவரம் ஈழத் தமிழர்களின் வாழ்வில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது. சொந்த நாட்டிலேயே அகதிகளாகவும், அனாதைகளாகவும் ஆக்கப்பட்ட அந்தத் தருணம்தான் ஈழ மண்ணின் முதல் பெரும் வடுவாகக் கருதப்படுகிறது.



அன்று கொளுத்தப்பட்ட வீடுகளின் புகை மூட்டம், இன்றும் ஈழத்து முதியவர்களின் கண்களில் மறைந்திருக்கவில்லை. ஒரு காலத்திலிருந்த செழுமையான வாழ்வு, ஒரே இரவில் சாம்பலானது. தமிழ் இனத்தின் முதுகெலும்பில் விழுந்த முதல் அடி.

2. முள்ளிவாய்க்கால்: நூற்றாண்டின் மாபெரும் துயரம்

ஈழ வரலாற்றின் மிகக் கொடுமையான வடு **முள்ளிவாய்க்கால்**. 2009ஆம் ஆண்டு மே மாதம் நடந்த அந்த இறுதி போர், மனிதநேயம் மரணித்த இடமாகும்.

- **பாதுகாப்பு வலயம் எனும் பொறி:** மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவிக்கப்பட்ட 'Safe Zones' எனப்படும் இடங்கள் மீதே கொத்துக் குண்டுகள் வீசப்பட்டன. பதுங்கு குழிகளுக்குள் பதுங்கியிருந்த பிஞ்சுக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பாரபட்சமின்றி கொல்லப்பட்டனர்.
- **மருத்துவ வசதி இன்மை:** காயமடைந்தவர்களுக்கு ஒரு கட்டுப்போடக்கூட மருந்துகள் இல்லாத நிலை. மயக்க மருந்து இன்றி அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்ட கொடுமை அங்கு அரங்கேறியது. உணவின்றி, நீரின்றி மக்கள் கஞ்சித் தொட்டிகளுக்காகக் காத்திருந்த காட்சிகள் இன்றும் உலகத் தமிழர்களின் மனதை இரணமாக்குகின்றன.
- **இறுதி நாட்கள்:** ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் இலட்சக் கணக்கான மக்கள் முடக்கப்பட்டபோது, அங்கு நடந்தவை போர்க்குற்றங்களின் உச்சம். அந்த மண்ணின் மணல் இன்றும் இரத்த வாடை வீசுவதாகவே அம்மக்கள் உணர்கிறார்கள். நந்திக்கடலின் அலைகள் இன்றும் அந்த மரண ஓலங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றன.

3. காணாமல் ஆக்கப்பட்டோரின் கதறல்: ஒரு தீராத போராட்டம்

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த பின்பும், ஈழ மண்ணில் ஒரு போராட்டம் ஓய்ந்தபாடில்லை. அது தான் **"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்"** தொடர்பான போராட்டம்.

- **தாய்மார்களின் கண்ணீர்:** தங்களின் பிள்ளைகள் எங்கே என்று கேட்டு, வெயிலிலும் மழையிலும் வீதிகளில் அமர்ந்து போராடும் முதிய தாய்மார்களின் உருவம் ஈழத்தின் வலி மிகுந்த அடையாளம்.
- **மறைந்த சாட்சியங்கள்:** "பிணம் என்றால் தாருங்கள் அடக்கம் செய்கிறோம், உயிருடன் இருந்தால் ஒரு முறை காட்டுங்கள் கட்டித் தழுவுகிறோம்" என்ற அவர்களின் கதறல், உலக நாடுகளின் மனச்சாட்சியை இன்னும் உலுக்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் நீதி கிடைக்காமலேயே பல நூறு தாய்மார்கள் மரணித்துப் போனது அந்த வடுக்களின் ஆழத்தைக் கூட்டுகிறது. ஆனாலும் உலக நாடுகள் இதனை ஒரு செய்தியாகவே இற்றை வரை பார்த்து வருகின்றது போலும்...

4. சிதைக்கப்பட்ட பொருளாதாரமும் வாழ்வாதாரமும்

போருக்கு முன்னால் கல்வியிலும் விவசாயத்திலும் செழித்து விளங்கிய யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகள், போருக்குப் பின் சின்னாபின்னமாகின.

- **நில அபகரிப்பு:** மக்களின் பூர்வீக நிலங்கள் "உயர் பாதுகாப்பு வலயங்கள்" என்ற பெயரில் இராணுவக் கட்டுப்பாட்டில் இன்றும் உள்ளன. பனை மரங்கள் நிறைந்த தோப்புகளும், நெல் வயல்களும் இன்று கம்பி வேலிகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றன.
- **மீன்பிடித் தடை:** கடலையே நம்பி வாழ்ந்த மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டது. அத்துமீறிய மீன்பிடியும், உள்ளூர் மீனவர்களுக்கான கட்டுப்பாடுகளும் அவர்களை ஏழைகளாக்கியுள்ளன.
- **இராணுவ மயமாக்கல்:** சிவில் பகுதிகளில் இராணுவத்தின் பிரசன்னம் மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கியுள்ளது. ஒரு இனத்தை பொருளாதார ரீதியாக நசுக்குவது என்பது அந்த இனத்தின் எதிர்காலத்தையே சிதைப்பதற்குச் சமம்.

5. உளவியல் பாதிப்புகள்: மனதின் இருண்ட அறைகள்

கட்டிடங்களை மீண்டும் கட்டிவிடலாம், வீதிகளைச் சீரமைத்துவிடலாம். ஆனால், சிதைந்த மனங்களை எப்படிச் சீரமைப்பது?

ஈழத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒரு உயிரிழப்பாவது நேர்ந்திருக்கும். கண்முன்னே தந்தை கொல்லப்பட்டதைப் பார்த்த குழந்தைகள், குண்டு வீச்சில் கை கால்களை இழந்த இளைஞர்கள் எனப் பெரும் திரளான மக்கள் PTSD (Post-Traumatic Stress Disorder) எனப்படும் போருக்குப் பிந்தைய உளவியல் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இரவில் ஒரு சிறு சத்தம் கேட்டால் கூட அது குண்டுச் சத்தமோ என்று அஞ்சி நடுங்கும் ஒரு தலைமுறை அங்கு வளர்ந்து வருகிறது. தற்கொலை முயற்சிகளும், திட்டமிட்டு அங்கே ஊடுருவ விடப்படும் போதைப் பொருள் கலாச்சாரமும் மற்றொரு நுணுக்கமான வடுவாகும்.

6. பண்பாட்டுச் சிதைவும் அடையாள அழிப்பும்

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமென்றால் அதன் வரலாற்றையும், பண்பாட்டையும் அழிக்க வேண்டும்.

- **யாழ் நூலக எரிப்பு:** ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது தமிழர்களின் அறிவுக்கண் பிடுங்கப்பட்டதற்குச்சமம்.
- **துயிலுமில்லங்கள் சிதைப்பு:** மாவீரர் துயிலுமில்லங்கள் (கல்லறைகள்) புல்டோசர்கள் கொண்டு இடிக்கப்பட்டது, மக்களின் உணர்வுப்பூர்வமான நினைவுகளைச் சிதைக்கும் செயலாகும். தங்கள் உறவுகளுக்கு ஒரு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தக்கூட முடியாத சூழல் அம்மக்களுக்கு ஏற்படுத்தப்படுவது, ஆறாத வடுவின் மீது மீண்டும் மீண்டும் ஈட்டி கொண்டு குத்துவதைப் போன்றதாகும்.

7. புலம்பெயர் வாழ்வும் – பிரிவின் துயரும்

ஈழ மண்ணின் வடுக்கள் ஈழத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கடல்களையும் காடுகளையும் கடந்து உலகெங்கும் சிதறி ஓடிய இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் இன்று புலம்பெயர் நாடுகளில் வாழ்கிறார்கள்.

அவர்கள் எவ்வளவு பெரிய மாளிகைகளில் வாழ்ந்தாலும், "சொந்த மண்ணில் ஒரு பிடி சோறு உண்ணக் கொடுத்து வைக்கவில்லையே" என்ற ஏக்கம் அவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் ஒரு வடுவாகவே உள்ளது. தாயகத்தில் இருக்கும் உறவுகளுக்கும், வெளிநாட்டில் இருக்கும் உறவுகளுக்கும் இடையிலான அந்த இடைவெளி ஒரு தீராத வலி. திருவிழாக்களும், கொண்டாட்டங்களும் இல்லாத பாழடைந்த வீடுகள் ஈழத்துக் கிராமங்களில் அந்தப் பிரிவை மௌனமாகப் பறைசாற்றுகின்றன.

8. நீதிக்கான நீண்ட பயணம்

இவ்வளவு துயரங்களுக்குப் பிறகும், ஈழத் தமிழர் எதிர்பார்ப்பது பழிவாங்கலை அல்ல; உண்மையான நீதியை.

- **சர்வதேசத்தின் மௌனம்:** ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள் காகித அளவில் மட்டுமே இருக்கும் வரை இந்த வடுக்கள் ஆறப்போவதில்லை.
- **அரசியல் கைதிகள்:** பல ஆண்டுகளாக விசாரணையின்றி சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது அந்த மக்களின் நீண்ட கால கோரிக்கை.

முடிவுரை: விடியலை நோக்கிய நம்பிக்கை

ஈழ மண்ணின் வடுக்கள் என்பது வெறும் வரலாற்றுத் தரவுகள் அல்ல; அவை துடிக்கின்ற மனித உயிர்களின் அனுபவங்கள். அந்த மண் இழந்தது ஏராளம் – உறவுகள், நிலம், அடையாளம், கனவுகள் என எல்லாம் பறிக்கப்பட்டன.

ஆனாலும், சிதைந்த வடுக்களில் இருந்து மீண்டும் உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைகளாக ஈழத் தமிழர்கள் இன்றும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றும் கல்வியிலும், கலையிலும், உலகளாவிய ரீதியில் தங்களின் திறமையால் சாதித்து வருவது அந்த வடுக்களுக்கு அவர்கள் தரும் பதிலடியாகும்.

காலம் காயங்களை ஆற்றும் என்பார்கள். ஆனால், ஈழத்தைப் பொறுத்தவரை காலம் என்பது நீதிக்காகக் காத்திருக்கும் ஒரு நீண்ட கறுப்புப் பாதை. அந்த மண்ணில் சமத்துவமும், சுயமரியாதையும், உண்மையான நீதியும் நிலைநாட்டப்படும் போது மட்டுமே, அந்த "ஆறாத வடுக்கள்" வடுக்களாக மாறும்; இல்லையெனில் அவை இரத்தம் கசியும் காயங்களாகவே நீடிக்கும்.

1956: சூயஸ் கால்வாயில் பிரிட்டனின் தோல்வி! 2026: ஹார்முஸ் நீரிணையில் அமெரிக்காவிற்கு தோல்வியா?

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

25.03.2026

ஹார்முஸ் நீரிணை (Strait of Hormuz) மீதான கட்டுப்பாட்டை இழப்பது, அமெரிக்காவைப் பொறுத்தவரை, 1956இல் பிரிட்டன் சூயஸ் கால்வாயின் மீதான கட்டுப்பாட்டை இழந்ததைப் போல இருக்கும். இதுவே ஹார்முஸ் நீரிணை வரலாற்றில் அமெரிக்காவின் ஆதிக்க ஆக்கிரமிப்பின் முடிவாக கூட இருக்கலாம்.

ஹார்முஸ் நீரிணையின் முக்கியம் ?

உலகளாவிய மசகு எண்ணெய் விநியோகத்தில் இருபது வீதம் இந்த நீரிணை வழியாகவே செல்கிறது. சவுதி எண்ணெய் இதன் வழியாக வருகிறது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் எண்ணெய் இதன் வழியாக வருகிறது. குவைத் எண்ணெய் இதன் வழியாக வருகிறது. ஈராக் எண்ணெயும் இதன் வழியாகவே வருகிறது.

இந்த நீரிணை மூடப்பட்டால் என்ன நடக்கும் என ஊகித்தும் பார்க்க முடியாது. உலகில் எண்ணெய் விலைகள் உயரும். உலகப் பொருளாதாரம் பாரியளவில் ஸ்தம்பிக்கும். வளைகுடா நாடுகளின் மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய இயலாமல் போகும். ஐரோப்பா மாத்திரமன்றி உலகமே எரிசக்தி நெருக்கடியை பாரியளவில எதிர்கொள்ளும். ஆசிய நாடுகளில் பாரிய எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும்.

ஆயினும் பணமும் அதிகாரமும் எப்போதும் வெற்றியாளரை நோக்கியே செல்லும். அதுவே தோற்றவரிடமிருந்து விலகிச் செல்லும். ஆனால் தற்போது ஹோர்முஸ் நீரிணையில் இருந்து வரும் செய்திகள் அனைத்தும் அமெரிக்காவின் இறுதிச் சோதனையாகவே பார்க்கப்படுகிறது. ஈரானுடன் முட்டி மோதும் அமெரிக்கா இந்த போரில் வென்றால், அமெரிக்காவின் ஆதிக்கம் உலகம் முழுவதும் தொடரும். அதிபர் டிரம்பின் அதிகாரம் அதிகரிக்கும். டாலரின் மதிப்பு மேலும் உயரும்.

இதேவேளை அமெரிக்கா இந்த போரில் தோற்றால், சூயஸ் கால்வாயில் 1956இல் பிரிட்டனுக்கு ஏற்பட்ட நிலைமையே ஏற்படும். அமெரிக்க டாலர் மதிப்பு மேலும் சரிவடையும். தங்கத்தின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு பொருளாதார வீழ்ச்சி ஏற்படும். மேற்குலக - ஐரோப்பிய கூட்டணிகள் சிதறும் அபாயம் உள்ளது. அதுவே அமெரிக்க சகாப்தம் முடிவடையும் நிலை வரும்.

வரலாற்று ரீதியாக பார்த்தால் உலகின் முக்கியமான கடல் வழி வர்த்தகப் பாதைகளை இழக்கும்போது பேரரசுகளின் ஆதிக்கம் முடிவடைகின்றன. கடந்த ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேலான பேரரசுகளின் வரலாற்றை பார்த்தால், தெளிவான பதில் கிடைக்கும்.

போர்த்துகல் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. நெதர்லாந்து காலனித்துவம் முடிவுக்கு வந்தது. பின்னர் பிரிட்டன் சாம்ராஜ்ஜிய கனவும் முடிவுக்கு வந்தது. இப்போது அமெரிக்காவின் முறையா என்பதற்கான விடை ஹார்முஸ் நீரிணை போரில் தங்கியுள்ளது.

1956- சூயஸ் கால்வாயில் பிரிட்டன் பின்வாங்கல்:

1956இல் எகிப்து சூயஸ்(Suez Canal) கால்வாயைத் தேசியமயமாக்கியது. எகிப்து அரசு இந்த கால்வாய் இப்போது எங்களுடையது என்றார்கள். ஆனால் பிரிட்டன் அரசு கால்வாயைத் திறவுங்கள், இல்லையென்றால் நாங்கள் வருவோம் என்று மிரட்டியது. எகிப்து இறுதிவரை கால்வாயைத் திறக்கவில்லை. இருநூறு ஆண்டுகளாக, பிரிட்டன் உலகின் வல்லரசாக இருந்தது. பிரிட்டிஷ் பவுண்ட் உலகின் முக்கிய நாணயமாக இருந்தது. அதன் கடற்படை பல கடல்களைக் கட்டுப்படுத்தியது. அதன் அதிகாரத்தின் மிக முக்கியமான புள்ளி சூயஸ் கால்வாய் ஆகும்.

பிரிட்டனின் கடல் வழி மட்டுமன்றி, உலக வர்த்தகத்தின் பெரும் பகுதி இந்தக் கால்வாய் வழியாகவே செல்கிறது. கால்வாயைக் கட்டுப்படுத்துபவர்களே உலக வர்த்தகத்தையும் கட்டுப்படுத்துவார்கள். பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இஸ்ரேலுடன் சேர்ந்து ஒரு தாக்குதலைத் தொடுத்தது. ஆனால் தோல்வியாகவே இறுதி முடிவு அமைந்தது. நடக்க வேண்டியது நடந்து விட்டதாக கருதி அமெரிக்கா போரை நிறுத்த கோரியது. ஐக்கிய நாடுகள் சபையும் போதும், போரை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.

இதனால் பிரிட்டன் பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது உலகம் ஒரு உண்மையை உணர்ந்து கொண்டது. பிரிட்டன் இனி ஒரு வல்லரசாக இல்லை. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம். பிரிட்டிஷ் நாணயம் பவுண்ட் சரிந்தது. ஐரோப்பிய கூட்டாளிகள் தங்களைத் தூரப்படுத்திக் கொண்டனர். ஆபிரிக்க, ஆசிய காலனிகள் சுதந்திரம் அறிவிக்கத் தொடங்கின. அத்துடன் மூலதனம் பிரிட்டனிலிருந்து வெளியேறியது. இருபது ஆண்டுகளுக்குள், பிரிட்டன் ஒரு சாதாரண நாடாக மாறியது.

இருநூறு ஆண்டுகள் நீடித்த ஒரு பேரரசு, ஒரே ஒரு கால்வாயால் முடிவுக்கு வந்தது. சூயஸ் கால்வாய் அது வெறும் ஒரு கால்வாய் மட்டுமல்ல. அது ஒரு சாம்ராஜ்ஜியத்தின் முடிவுக்கு வழி வகுத்தது என்றால் மிகையாகாது.

பிரிட்டன் நாடு இனி வலிமையானதல்ல. இந்தக் கருத்து வேரூன்றிய தருணத்தில், பணம் மற்றும் பொருளியல் சார்ந்த மூலதனம் அங்கிருந்து வெளியேறியது. சூரியன் உதிக்காத சாம்ராஜ்ஜியம் சரிந்தது. இதே விஷயம் அமெரிக்காவிற்கும் ஹார்முஸ் நீரிணையின் நடக்க சாத்தியங்கள் உள்ளன.

ஹார்முஸ் நீரிணை சமர்:

அமெரிக்காவால் இந்த நீரிணையை கட்டுப்படுத்தி திறக்க முடியாவிட்டால், எல்லாம் மாறிவிடும். அமெரிக்க ஆதிக்கம் வளைகுடாவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலும் சரியத் தொடங்கும். கடந்த ஐந்நூறு ஆண்டுகால வரலாற்றை ஆய்வு செய்தால் ஒவ்வொரு மாபெரும் பேரரசின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கடல் போக்குவரத்தே நிரணயிக்கிறது என்ற உண்மை தெரிய வரும்.

தற்போது அமெரிக்க வல்லரசு உலகப் பொருளாதாரத்தையும், கடல் வழிகளையும் கட்டுப்படுத்துகிறது. அனைவரும் அதை நம்பியே உள்ளனர். ஆனால் பின்னர் ஒரு சிறிய சக்தி ஒரு முக்கிய வர்த்தகப் பாதையில் அதற்குச் சவால் விடுகிறது. அந்த அமெரிக்க வல்லரசு மிரட்டுகிறது. கடல் வழிகளைத் திறவுங்கள், இல்லையென்றால் நான் படையெடுப்பேன். உலகம் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த வல்லரசு கடல் வழியைத் திறந்தால் அதன் சக்தி வலுப்பெறும்.

ஆனால் அமெரிக்க தோல்வியுற்றால் எல்லாம் தலைகீழாக மாறும் நிலை உருவாகும். நம்பிக்கை சிதையும், சர்வதேச கூட்டாளிகள் பின்வாங்குவார்கள், மூலதன பணம் வெளியேறும் சாத்தியம் ஏற்படும். பெரும் கடன் நெருக்கடி ஏற்படும்.

பேரரசுகள் சிதைந்து, பெரும் வல்லரசுகள் கடனில் மூழ்கி, இராணுவ மற்றும் நிதிக் கட்டுப்பாட்டை இழக்கும்போது, அவை தங்கள் கூட்டாளிகள் மற்றும் கடன் வழங்குநர்களின் நம்பிக்கையை இழக்கும் அபாயம் உள்ளது. மூலதன இருப்பு நாணய

உலகில் முக்கியமான கடல் வழி வர்த்தகப் பாதைகளை இழக்கும் போது பேரரசுகள் தங்கள் ஆதிக்க சக்தியை இழக்கின்றன. அதுவே அந்த பேரரசுகளின் சர்வ வல்லமைக்கும் முடிவு செய்யப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துகல் அரசின் ஆதிக்க ஆளுமை முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் நெதர்லாந்து நாட்டின் காலனித்துவ ஆதிக்கமும் முடிவுக்கு வந்தது. பின்னர் சூயஷ் கால்வாய் பிணக்குடன் பிரிட்டனின் காலனித்துவ ஆதிக்கமும் முடிவுக்கு வந்தது. இப்போது அமெரிக்காவின் முறையா என கேள்வி எழுந்துள்ளது. அதற்கான விடை ஹார்முஸ் நீரிணையில் விரைவில் தெரிய வரும் நிலை ஏற்பட்டுள்ளது

அந்தஸ்தை இழக்கும். மேலும் அவற்றின் நாணயம் குறிப்பாக தங்கத்திற்கு எதிராக பெரும் பலவீனமடையும்.

அமெரிக்க நிதி நிலைமை:

அமெரிக்க அரசு போர்க்காலத்தில் பெருமளவு கடன்களை பெறுகிறது. இன்னமும் முன்னைய போர்களுக்காக $38 டிரில்லியன் வட்டியுடன் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய நிலை உள்ளது. ஆண்டுக்கு $1 டிரில்லியனுக்கும் மேல் வட்டி கட்ட வேண்டியுள்ளது. இதுவே நாட்டின் வரி வருவாயில் கால் பகுதி வட்டிக்குச் செல்கிறது. வியட்நாமில் பாரியளவில் தோற்ற அமெரிக்க, ஆப்கானிஸ்தானிலிருந்து மூக்கு உடைபட்ட நிலையில் தோல்வியைடன் விலகியது. ஈராக்கில் 20 ஆண்டுகள் செலவழித்து, உள்நாட்டு குழப்பத்தை ஏற்படுத்திய பின் பல்லாயிரம் இறப்புக்களுடன் விலகி விட்டுச் சென்றது. அமெரிக்கா இனி வலிமையானது அல்ல என்றே உலகம் இப்போது நம்ப வைக்கிறது. இப்போது அது ஈரானை தேவையற்ற போரில் எதிர்கொள்கிறது. ஈரான் போரின் இராணுவ விளைவுகள் முன்னெப்போதும் இல்லாதவையாக இருக்கும்.

ஈரானியர்கள் திட்டம் :

ஈரான் அரசும் அதன் இராணுவமும் இந்த போரில் என்ன செய்கிறது? அவர்கள் போரை நீட்டிக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் அதை படிப்படியாக தீவிரப்படுத்துகிறார்கள். ஏனென்றால், நீடித்த வலியையும் போரையும் சகித்துக்கொள்ளும் திறன் அமெரிக்க மக்களுக்கும் தலைமைக்கும் குறைவாகவே உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். ஆதலால் ஈரானின் திட்டம் மிக எளிமையானது. போரை நீண்டதாகவும், போதுமான அளவு வேதனையாகவும் இருக்க மையமாகக் கருதி செயல்பட்டு வருகிறது. இறுதியில் அமெரிக்கா பின்வாங்கிவிடும். இதுதான் வியட்நாமில் நடந்தது. இதுதான் ஆப்கானிஸ்தானில் நடந்தது. ஈரானைப் பொறுத்தவரை, இந்தப் போர் வாழ்வா சாவா போராட்டம். அது மாத்திரமன்றி ஈரானுக்கு இது பழிவாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் அமெரிக்கர்களுக்கு இதில் பெரிய அளவில் பாதிப்பு உள்ளது. உயரும் எரிபொருள் விலைகள், இடைக்காலத் தேர்தல்களில் அதிக அளவில் வாக்கு வங்கி சரிவு, பணவீக்கம் போன்ற காரணங்களால் விலைவாசி உயர்வு தொடர்ந்து அதிகரிக்கும். இதனால் இந்த போரில் ஒரு உடன்பாட்டை எட்டா விட்டால், வளைகுடாவில் ஒருபோதும் அமைதி இருக்காது என அனைவருக்கும் தெரியும்.

அடுத்து என்ன நடக்கும்?

ஹார்முஸ் ஈரானின் கட்டுப்பாட்டில் நீடித்தாலும் சரி, அல்லது அதனிடமிருந்து கைப்பற்றப்பட்டாலும் சரி, வரவிருக்கும் காலகட்டம் இந்த மோதலின் மிக மோசமான கட்டமாக இருக்கும். அமெரிக்காவிற்குச் சொந்தமான அல்லது அதனுடன் ஒத்துழைக்கும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து எண்ணெய், பொருளாதார மற்றும் எரிசக்தி வசதிகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும்.

இந்த இறுதிப் போர் நீடித்தால், பொருளாதார விளைவுகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது. உலக வர்த்தகப் பரிமாற்றங்கள் மாறுவதுடன், மூலதனப் பரிமாற்றங்கள் சரியும். இதன் விளைவாக சீனா, ரஷ்யா, வட கொரியா, ஐரோப்பா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய அனைத்து நாடுகளும் பாதிக்கப்படும்.

ஹார்மூஸில் அதேவேளை அமெரிக்கா வென்றால், டாலரின் மதிப்பு அதிகரிக்கும். டிரம்பின் அதிகாரம் வலுப்பெறும். அமெரிக்காவின் ஆதிக்கம் தொடரும். சில வேளை அமெரிக்கா தோற்றால் டாலர் வீழ்ச்சியடையும். தங்கத்தின் விலை பாரிய அளவில் உயரும். எதிரணியான பிரிக்ஸ் (BRICS) மேலும் வலுப்பெறும். அதேவேளை சீனாவின் பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிக்கும்.

காலனித்துவ ஐந்நூறு ஆண்டுகால வரலாற்றிலிருந்து பல பாடங்களை அமெரிக்கா இன்னும் கற்கவில்லை போல தெரிகிறது. பணமும் அதிகாரமும் எப்போதும் வெற்றியாளரை நோக்கியே செல்லும். தோற்றவரிடமிருந்து விலகிச் செல்லும் என்பதே வரலாற்று உண்மையாகும்.



வியட்நாம், ஆப்கான், ஈராக்கில் கற்றுக் கொள்ளாத பாடம்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

27.04.2026

வளைகுடாவில் அமெரிக்கா மீண்டும் ஒரு பாரிய போரைத் தொடங்கியுள்ளது. இந்தப் பிராந்தியம், நீண்டகாலமாக அமெரிக்காவின் இராணுவ தலையீடுகளை எதிர்கொண்டுள்ளது. ஆனால், அமெரிக்காவின் தலையீடு எதிர்பார்த்த முடிவைக் கொடுத்ததா அல்லது எதிர்காலத்தில் கொடுக்குமா என்ற கேள்விக்கு பதில் இல்லை என்றே கூறலாம்.

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் தற்போதைய நடவடிக்கைகளால் ஈரானில் நிலையான அமைதி ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு. மாறாக, அங்கு குழப்பமான சூழலும், கூடுதல் துயரங்களுமே மிஞ்சப்போகின்றன என்பதே அனைவரினதும் எதிர்வு கூறலாகும்.

வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் அமெரிக்கா மேற்கொண்ட நீண்டகால இராணுவத் தலையீடுகளால் பெரும் உயிரிழப்பு, நிதி இழப்பு மற்றும் அரசியல் தோல்விகளையே சந்தித்தன. இந்த அனுபவங்களிலிருந்து அமெரிக்கா கற்றுக் கொண்ட பாடங்களின் பின்னரும் தற்போது ஈரானில் காலடி வைக்க தயாராகி வருகிறது.

அமெரிக்கா பாடம் கற்றதா?

வியட்நாம் முதல் ஈராக் வரை, அதிநவீன ஆயுதங்கள் மற்றும் இராணுவ பலத்தை வைத்து ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, மக்களின் மனதையோ அல்லது அரசியல் சூழலையோ வென்றுவிட முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது. ஏனெனில் இராணுவ பலம் மட்டுமே தீர்வல்ல என்பதை உணர்ந்து கொள்ள அமெரிக்கா இந்த நாடுகளில் தவறிவிட்டது.

வியட்நாமில் மக்களின் ஆதரவு இல்லாமல் போரில் அமெரிக்க படைகள் படுதோல்வியை சந்தித்தன. இதன் பின்னரும் பல ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வாசிங்டன் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன.

முக்கியமாக அந்நாட்டு மக்களின் ஆதரவு இல்லாத எந்த ஒரு அரசாங்கத்தையும் அமெரிக்காவால் நிலைநிறுத்த முடியாது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் ஆதரவுடன் செயல்பட்ட அரசு, அமெரிக்கப் படைகள் வெளியேறியவுடன் தலிபானிடம் வீழ்ந்தது இதற்குச் சான்றாகும்.

பனிப்போர் காலத்தின் பின்னர், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை ஒழிக்கச் சென்ற அமெரிக்கா, அங்கு நீண்டகால அரசியல் ஸ்திரமற்ற சூழலையும், வன்முறையையும் மட்டுமே எஞ்சியதாக விட்டுச்சென்றது. அது மாத்திரமன்றி பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரை அமெரிக்க பறித்தது என்பதை மறுக்க முடியாது.

அமெரிக்க அரசு, மற்றொரு நாட்டின் கலாச்சாரம், அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பை வலுக்கட்டாயமாக மாற்ற முயற்சிப்பது தோல்வியில் முடிந்து, அதிகப்படியான நிதி மற்றும் இராணுவ இழப்புகளை சந்தித்துள்ளது. அது மாத்திரமன்றி, வெளியேறும் உத்தி (Exit Strategy) இல்லாமல் பல நாடுகளில் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளது. உண்மையில் போரைத் தொடங்குவது எளிது, ஆனால் முடிப்பது கடினம். தெளிவான வெளியேற்ற உத்தி இல்லாமல் போர் புரிவது நீண்டகால சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்பது ஈராக் மற்றும் வியட்நாம் போர்களில் இருந்து இதுவரை அமெரிக்க கற்றுக் கொண்டதாக தெரியவில்லை.

ஈரானில் ஆட்சி மாற்றம் ?

இந்த வருடம் பெப்ரவரி 28 முதல் ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் ஆரம்பத்திலேயே அந்நாட்டின் அதிஉயர் தலைவர் அலி கொமனெயி கொல்லப்பட்டார். ஈரானின் அணுசக்தி திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், அங்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகவும் கூறும் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முக்கிய இலக்குகளில் ஒருவராக அவரும் இருந்தார்.





ஈரான் தரைவழிப் போரில் அமெரிக்கா!

வளைகுடா பிராந்தியத்தில் இதற்கு முன்னரும் பல அமெரிக்க அதிபர்கள் இராணுவ ரீதியாக தலையிட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் ட்ரம்புக்கு முன்னோடியாக இருப்பவர்கள், அமெரிக்காவின் அதிபராக இருந்த சீனியர் புஷ் மற்றும் ஜூனியர் புஷ், ஒபாமா ஆகியோர். ஈராக்கில் சதாம் ஹூசேன், லிபியாவில் முகம்மர் அல் கடாபி ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்கள் ஆட்சியை வீழ்த்தி கவிழ்த்தனர். ஆனால் அந்த நாடுகளுக்கு ஜனநாயகத்தையோ அல்லது சுதந்திரத்தையோ மீட்டுத் தரவில்லை. அதுமட்டுமின்றி, இன்று வரை நீடிக்கும் உள்நாட்டுப் போர் மற்றும் அமைதி நிலையற்றத் தன்மையையே இந்த நாடுகளுல் இன்னமும் தொடர்கிறது.

வடக்கு ஈராக்கிலும், சிரியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ் எனும் அமைப்பை ஒழிக்க அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விவாதங்கள் எழுந்தன. ஆனால் 2024இல் சிரியாவில் அசாத் வீழ்ச்சிக்குப் பிறகு, பிற இஸ்லாமிய குழுக்கள்

அங்கு அதிகாரத்தை கைப்பற்றின. இதற்கு முன்பாக ஆப்கானிஸ்தானில் சுமார் இரண்டு தசாப்த அமெரிக்க தலையீட்டிற்குப் பிறகு, 2021இல் தாலிபன் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியமை அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் தோல்வியாகவே கருதப்படுகிறது.

ஈராக் ஆக்கிரமிப்பு தோல்வி:

2003ஆம் ஆண்டில், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தலைமையிலான கூட்டணி ஈராக் மீது படையெடுத்தது. சதாம் உசேன் அரசிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகவும், பயங்கரவாதத்துடன் அவருக்குத் தொடர்பு இருப்பதாகவும் கூறி இந்தப் படையெடுப்பு நடத்தப்பட்டது.

ஒரு சில வாரங்களிலேயே அமெரிக்க படைகள் பாக்தாத் நகரைச் சென்றடைந்தது. சதாம் உசேன் கைது செய்யப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டார். ஆனால், தேடப்பட்ட அந்த பேரழிவு ஆயுதங்கள் ஒருபோதும் கண்டறியப்படவில்லை.

இதன் பின்னர் சுனி, ஷியா மற்றும் குர்துகளுக்கு இடையிலான இன மோதல்கள், கிளர்ச்சிகள், தீவிரவாதக் குழுக்களின் எழுச்சி என ஈராக் நாடே நெருக்கடியில் மூழ்கியது. இதன் உச்சகட்டமாக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உருவானது. இந்த அமைப்பு 2014 மற்றும் 2015க்கு இடைப்பட்ட காலத்தில் ஈராக்கின் மூன்றில் ஒரு பங்கு நிலப் பரப்பையும், சிரியாவின் பாதி நிலப் பரப்பையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

2003 முதல் ஈராக்கில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் நேரடி விளைவாக பொதுமக்கள் மற்றும் போராளிகள் எனக் குறைந்தது 300,000 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என பிற அமைப்புகள் கருதுகின்றன.

வியட்நாம் முதல் ஈராக் வரை, அதிநவீன ஆயுதங்கள் மற்றும் இராணுவ பலத்தை வைத்து ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, மக்களின் மனதையோ அல்லது அரசியல் சூழலையோ வென்றுவிட முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது

ஆப்கானில் அமெரிக்க தலையீடு:

2021ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் தலைநகர் தாலிபன்களால் கைப்பற்றப்பட்டபோது, ஆயிரக்கணக்கான மக்கள்

காபூலை விட்டு வெளியேற முயன்றனர். இந்த அவலநிலையை சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்தின.

2001ஆம் ஆண்டு, அமெரிக்கா மற்ற நேட்டோ உறுப்பு நாடுக ளுடன் இணைந்து, ஆப்கானிஸ்தானில் தாலிபன் ஆட்சிக்கு எதிராக "ஆபரேஷன் என்டியூரிங் ஃப்ரீடம்" என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.

1996இல் ஆப்கான் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய அடிப் படைவாத இஸ்லாமிய இயக்கம், 2001 செப்டம்பர் 11 அன்று நியூயார்க் இரட்டைக் கோபுரங்கள் மற்றும் பென்டகன் மீது தாக்குதல் நடத்திய அல்-கொய்தா குழுவின் தலைவர் ஒசாமா பின் லேடனை ஒப்படைக்க மறுத்துவிட்டது. இதன் காரண மாகவே ஆப்கானிஸ்தான் மீது படையெடுக்க அமெரிக்கா முடிவு செய்தது.

இந்தத் தலையீடு சில வாரங்களிலேயே தலிபன் ஆட்சியை வீழ்த்துவதிலும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஒரு புதிய அரசாங்கத்தை நிறுவ அமெரிக்க முயன்றது. ஆனால் இது போரை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. அமெரிக்காவின் தலையீட்டால் தலிபன்கள் பின்னடைவைச் சந்தித்தாலும், அவர்கள் மீண்டும் ஒன்றிணைந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போரிட்டதால், இந்த மோதல் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.

2020ஆம் ஆண்டு, ஆப்கானிஸ்தானின் பெரும்பான்மையான பகுதிகளை தலிபன்களிடம் இழந்த அமெரிக்கா அந்நாட்டில் இருந்து தனது படைகளைத் திரும்பப் பெறுவது குறித்து அவர் களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அடுத்த ஆண்டு மே மாதம் தொடங்கிய அமெரிக்கப் படைகள் வெளியேற்றம், 2021 ஆகஸ்ட் மாதத்தில் தலிபன்கள் காபூலை கைப்பற்றிய பிறகு துரிதப்படுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் நடந்த 20 ஆண்டுக்கால அமெரிக்க தலையீடு மற்றும் அந்த மோதலுடன் தொடர்புடைய வன்முறை களின் நேரடி விளைவாக, பொதுமக்கள், ஆப்கானிய வீரர்கள், தாலிபன்கள், மேற்கத்தியப் படைகள் என 1,76,000-க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

வியட்நாம் போர் படிப்பனைகள்:

வியட்நாமில் 1965 இலிருந்து ஏப்ரல் 30, 1975இல் சைகோ னின் வீழ்ச்சி வரை நடைபெற்ற போரில் பல நூற்றுக்கணக் கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். வட வியட்நாம் படை சோவியத் ஒன்றியம், சீனா மற்றும் பிற கம்யூனிச நாடுகளால் ஆதரிக்கப் பட்டது. தெற்கு வியட்நாமியப் படை அமெரிக்கா, தென்கொரியா, அவுஸ்திரேலியா, தாய்லாந்து மற்றும் பிற கம்யூனிச எதிர்ப்பு அணியால் ஆதரிக்கப்பட்டது.

1973, ஆகஸ்ட் 15 அமெரிக்கப் படைகள் முழுமையாகப் பின் வாங்கின. 1975 வடக்கு வியட்நாம் படை சைகோனைக் கைப் பற்றயதுடன் போர் முடிவுக்கு வந்தது. அதை அடுத்த ஆண்டில் வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் ஒன்றிணைந்தது. இப்போர் பெருமளவும் மனித உயிர்களைப் பலிவாங்கியது. இப்போரின் போது இறந்த வியட்நாமிய வீரர்கள் மற்றும் மக்களின் எண் ணிக்கை 3.8 மில்லியன்கள் வரை இருக்கும் என்று கணிக் கப்பட்டுள்ளது. அத்துடன் 300,000 கம்போடியர்களும், 62,000 லாவோசு மக்கள், 58,220 அமெரிக்க வீரர்களும் இப் போரில் கொல்லப்பட்டனர். வியட்நாம் முதல் ஈராக் வரை, அதிநவீன ஆயுதங்கள் மற்றும் இராணுவ பலத்தை வைத்து ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, மக்களின் மன தையோ அல்லது அரசியல் சூழலையோ வென்றுவிட முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது

ஈகைச்சுடர் அன்னை பூபதி

மனித நேயம்

கணபதி ஐயர் வீட்டு விறாந்தையில் படுத்திருந்தார். நேரம் இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும். பிள்ளையார் கோயிலை ஒட்டினாற் போலவே அவருடைய வீடும் இருந்தது.

கோயிலில் மாலைக் காலப் பூசை முடிந்து, இரவு ஏழு மணிக்கே கதவுகளும் பூட்டியாயிற்று. வைகாசி மாதம். மெல்லிய இளங் காற்று, பக்கத்தில் நின்ற பெரிய வேப்பமரத்தின் இலைகளுக்கூடாக வீசியது சுகமாக இருந்தது. விறாந்தையில் படுத்தால் தான் அந்தக் காற்றின் சுகத்தை அனுபவிக்க முடியுமென்பது ஐயருக்குத் தெரியும்.

எங்கேயோ நாலைந்து துவக்குச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. மிகத் தூரத்தில் ஷெல் அடிக்கும் சத்தங்களும் இடைக்கிடை கேட்டன.

இப்போதெல்லாம் இந்தச் சத்தங்கள் சர்வ சாதாரணம் இவற்றைப் பொருட் படுத்தாமல் ஐயர் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். ஐயருக்கு இன்னமும் நித்திரை வரவில்லை. அன்று பின்னேரம் மூர்த்தி மாஸ்ரர் வீட்டுக்கு அவர் போயிருந்த சமயம் இளங்கோவும், அவன் மனைவி வடிவழகியும் அங்கே வந்திருந்தார்கள்.

அங்கே கதைத்த பல வித விஷயங்களையும் ஐயர் மீட்டெடுத்துச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவற்றுக்கிடையில் “ஆமி” க்காரர் சில நாட்களாகச் செய்து வரும் அட்டூழியங்களும் ஐயரின் சிந்தனையில் வந்து போயின. “பிள்ளையாரே, இதுகளுக்கெல்லாம் நீதான் ஒரு முடிவு செய்ய வேணும்” என்று நினைத்துக் கொண்ட ஐயரின் கண்களை மயக்கிக் கொண்டு, நித்திரை வந்தது.

ஐயர் சற்றே கண்ணயரவும், “தடதட” என்று யாரோ ஓடி வரும் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது. திடுக்கிட்டவராய் ஐயர் எழுந்து படுக்கையிலேயே உட்கார்ந்தார். நெஞ்சு படபடத்தது.

நல்ல இருட்டு பக்கத்திலிருந்த “ரோச் லயிற்றை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டார் ஆனால் அதை அடிக்கவில்லை. நெஞ்சின் படபடப்பு சறறே அமைதியானதும், “ஆரது?” என்று குரல் கொடுத்தார் ஐயர்.

இருட்டினூடாக இரண்டு உருவங்கள் சமீபத்தில் நிழலாடின. ஐயருக்கு நெஞ்சில் பயம் நிறைந்து விட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு “ஆரது?” என்று மீண்டும் கேட்டுக் கொண்டே லயிற்றை அடித்தார்.

இரண்டு உருவங்கள் பக்கத்தில் வந்து நின்றன. நீளக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார்கள். “ஐயா லயிற் அடிக்க வேண்டாம். அது நாங்கள்தான். பயப்பட வேண்டாம்” என்றான் ஒரு இளைஞன்.

ஐயர் உடனே லயிற்றை நிறுத்தி விட்டு, “ஆர் தம்பியவை? தெரியேல்லை என்றார்.

“ஐயா நாங்கள் இயக்கம். என்னை உங்களுக்கும் தெரியும். நான் முத்தையா செல்லையாவின்ரை மகன். இவன் சுந்தரம். இவனும் இயக்கந்தான் .... ஐயா. ஆமிக்காரர் எங்களைத் துரத்திக் கொண்டு வாறாங்கள். நாங்கள் வளவுகளுக்குள்ளாலை இறங்கி ஓடி வாறம்... இங்கையும் இக்கணம் வந்து விடுவார்கள். கோயிலைத் திறந்து விட்டால் நாங்கள் உள் வீதியிலே வாகன சாலைக்குள்ளை போய் ஒளிஞ்சு கொள்ளலாம்...”

ஐயர் ஒரு கணம் ஒன்றும் பேசாமல் இருந்தார். பிறகு, தலைமாட்டிலிருந்த திறப்புக் கோர்வையைக் கையிலெடுத்துக் கொண்டு வாருங்கோ என்று சொல்லிக் கொண்டே கோயில் வாயிலை நோக்கி நடந்தார். முன் கதவைத் திறந்து கொண்டு மூவரும் உள்ளே போனார்கள். முத்தையாவும் சுந்தரமும் தெற்கு வீதியிலிருந்து வாகன சாலையை நோக்கி நடக்க...... “இஞ்சை வாருங்கோ தம்பியவை! அவங்கள் வந்து தேடினா உது வழியை நீங்கள் அகப்பட்டு போவியள்.... இஞ்சை வாருங்கோ” என்று சொல்லியபடி ஐயர் கோயிலுக்குள் நடந்தார். இளைஞர்களும் திரும்பி ஐயரின் பின்னால் போனார்கள்.

ஐயர் மூலத்தானக் கதவைக் திறந்து, “தம்பியவை, நீங்கள் இதுக்குள்ளே போயிருங்கோ. தற்செயலாய் வாசல் கதவு திறக்கிற சத்தம் கேட்டால் சாமிக்குப் பக்கத்திலை போய் இரண்டு பக்கத்திலையும் மறைவாய் நிண்டு கொள்ளுங்கோ... பிள்ளையார் இருக்கிறார். பயமில்லை” என்றார்.

முத்தையா உள்ளே போகக் காலை எடுத்துவைத்தான். சுந்தரம் அவன் கையைப் பிடித்து நிறுத்தி, அவன் காதுக்குள் ஏதோ குசுகுசுத் தான். முத்தையா “சீ வாடா” என்று இழுத்துக் கொண்டு உள்ளே போனான்.

“சரியான இருட்டு. இந்தா தம்பி, இந்த லயிற்றையும் வைச்சுக் கொள்ளுங்கோ. இருட்டிலை எதையும் தட்டிக்கிட்டிச் சத்தம் போட வேண்டாம்... நான் வாறன்” என்று கூறிய ஐயர் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு வெளியே வந்து முன்பு படுத்திருந்த விறாந்தைக்குப் போய் திரும்பவும் படுத்துக்கொண்டார். நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது இனி நித்திரை வராது. நித்திரையாய்க் கிடப்பது போலக் கிடக்க முயற்சித்தார் ஐயர்.

கோயிலுக்குள் பூட்டப்பட்ட முத்தையாவுக்கும் சுந்தரத்துக்கும் “முதலில் ஒன்றுமே தெரியவில்லை. ரோச் லயிற்றை ஒரு தரம் அடித்து இடத்தை நிதானித்துக் கொண்டார்கள். சுந்தரம் மெதுவான குரலில் சொன்னான்; “எனக்கென்னவோ யோசினையாய்க் கிடக்கு “

“எதுக்கு? “

“கொஞ்ச நாளைக்கு முந்தி இந்த ஐயரோட வாக்குவாதப் பட்டனாங்களெல்லே?....”

கொஞ்ச நாட்களுக்கு முன்பு.

அப்போது அந்தப் பிள்ளையார் கோயிலில் திருவிழாக் காலம்.

“ஐயர், திருவிழாவுக்கு ஒவ்வொரு நாளும் பிரசங்கம் நடக்கப் போகுது போலை.....” என்றான் முத்தையா.

“ஓமொம். இராமாயணக்கதை. தொடர்ச்சியாகப் பேசப் போறார் சிவகுமாரன். நல்லாய்ப் பேசுவார்” என்றார் ஐயர். “ஆர் பேசினா

என்ன, ராமாயணக்கதைதானே?” “மனிசன் எப்படி வாழ வேண்டுமென்பதை கம்பர் வடிவாய்ச் சொல்லியிருக்கிறாரெல்லோ?”

“நல்ல கதை. இல்லையெண்டு நான் சொல்ல வரவில்லை ஐயா. ஆனால் அது வடஇந்தியாவிலிருந்து வந்த ஆரியன், இலங்கையிலிருந்த திராவிட அரசன் இராவணனை அழித்ததைப் பற்றி சொல்கிற கதையெல்லோ?”

ஐயா சிரித்தார். பிறகு நான் பிராமணன் எண்டதால் ஆரியன் வெண்ட கதையை ....” என்று சொல்லத் தொடங்க, முத்தையா குறுக்கிட்டான்.

“இல்லை ஐயா? உங்களை நான் இதுக்குள்ளே இழுக்கேல்ல ... எங்கடை ஊரிலே இருக்கிற பிராமணரெல்லாம் ஆயிரக்கணக்கான வரியமாய் திராவிடராய்த்தான் இருக்கினம். அதிலையும் நீங்கள் ......”

மீண்டும் முத்தையா ஏதோ சொல்ல முனைய, சுந்தரம் இடைமறித்து “முத்தையா, உந்தக் கதையெல்லாம் இப்ப கோயிலடியிலை என்னத்துக்கு?...... உதுகளை வேறை எங்கையாலும் மேடையளிலே பேசலாம். வாடா!” என்று முத்தையாவை இழுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

வெளியே வந்ததும் “என்னடா ஐயரோட போய் உந்தக் கதையெல்லாம் கதைக்கிறாய்? அவர் ஏதும் பிழையாய் நினைக்கப் போறார் ” என்றான் சுந்தரம்.

“போடா, உனக்கு ஐயரைப் பற்றி ஒண்டும் தெரியாது. அவர் ஒண்டும் பிழையாய் நினைக்க மாட்டார்” என்றான் முத்தையா.

பூட்டப்பட்ட மூலத்தான அறைக்குள்ளிருந்த முத்தையாவுக்கு ஐயரோடு அன்று ஏற்பட்ட வாக்கு வாதம் நினைவுக்கு வர “சுந்தரம், நீ சும்மா தேவையில்லாமல் யோசிக்காதை. இதுகளொண்டையும் ஐயர் பெரிசா எடுக்க மாட்டார்” என்றான்.

“நீ என்ன சொன்னாலும் ஐயருக்கு அடிமனசுக்குள்ளை எங்களோடை கறள் இருக்கும். அது மட்டுமில்லை. என்னையும் அவருக்கு இன்னா ரெண்டு தெரிஞ்சிருக்கு மெண்டு நினைக்கிறன். கோயிலுக்குள்ளை நுழையக் கூடாத சாதியில் பிறந்தவன், இப்ப மூலத்தானத் துக்குள்ளை போய் நிக்கிறானே, எண்ட காய்வும் இருக்கும். இதுதான் சமய மெண்டு ஐயர் காட்டிக் குடுத்தா....”

“சீ விசரா, உனக்கு எப்பவும் தாழ்வு மனப்பான்மை …… விசர்க் கதை கதைக்காதை. ஐயர் அப்படியான ஆளில்லையெண்டு உனக்கு எத்தினை தரம் சொல்கிறது.?”

“அது மட்டுமில்லையடா, அவங்கள் வந்து ஐயருக்கு இரண்டு தட்டுத் தட்டினா… ஐயர் அவிட்டு விட்டுவிடுவார்…… நாங்களும் பூட்டின அறைக்குள்ளே ஆப்பிட்டுக் கொண்டம் .”

“சுந்தரம் நான் கரண்டி. சும்மா யோசிக் காதை. ஐயராலை ஒரு ஆபத்தும் வராது. ஐயரை அவங்கள் அடிச்சுக் கொண்டாலும் ஐயர் எங்களைக் காட்டிக் குடுக்க மாட்டார்…… எனக்கு ஐயரை நல்லாய்த் தெரியும் ” என்றான் முத்தையா.

●●●

தமது பாயில் நீட்டி நிமிர்ந்து நித்திரையாய்க் கிடந்த கணபதி ஐயர் எதையோ நினைத்தவராய் திடுக்கிட்டு எழுந்தார். கோயில் வாசலை நோக்கிப் போய் எதையோ காலால் தடவிப் பார்த்தார். பிறகு மோட்டுப் பொடியள்” என்று மனதுக் குள் சொல்லிக் கொண்டு அங்கே கிடந்த இரண்டு சோடிச் சப்பாத்துக்களையும் எடுத்துக் கொண்டு போய்த் தேருக்கும், தேர் முட்டிக்குமிடையில் மறைவாய்ப் போட்டு விட்டு வந்தார். மீண்டும் ஐயர் படுக்கை யில் படுத்துக் கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் தூரத்தே வாகனம் வரும் சத்தம் கேட்டது. ஐயருக்கு உடம்பு லேசாகப் பதறத் தொடங்கியது. பிள்ளையாரே” என்று வாய்விட்டுச் சொல் லிக்கொண்டார். ஏதோ வாறது வரட்டும்“ என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டார்.

வாகனத்தின் இரைச்சல் கிட்டக்கேட்டது. சிறிது நேரத்துக் கெல்லாம் வாகனத்தின் பிரகாசமான வெளிச்சம் பிள்ளையார் கோயிலின் முன் பக்கத்தில் விழுந்தது. வாகனததை நிறுத்தி விட்டு நாலைந்து பேர் இறங்கி வந்தார்கள். அவர்களில் ஒரு வன் துப்பாக்கியை உயர்த்தி கோயிலை நோக்கிக் குறி வைத்த படி வந்தான். வாகன வெளிச்சத்தில் எல்லாவற்றையும் பார்த் துக் கொண்டிருந்த ஐயர் அவர்கள் கிட்ட வருவதைக் கண்டதும், கண்களை மூடிக்கொண்டு “நித்திரை”யாய்க்கிடந்தார்.

ஐயர் “நித்திரை.”

“ ஓய் !”

ஐயர் நல்ல நித்திரை.

ஒருவன் துப்பாக்கி முனையினால் ஐயரின் தோளில் லேசாகத் தட்டி “ஓய் ஓய், எழும்பு ஓய்” என்று மீண்டும் எழுப்பினான்.

ஐயர் “நல்ல நித்திரை” யிலிருந்து எழும்பி மிரள, மிரள விழித் தார்.

“இந்தப்பக்கம் இரண்டு பேர் வந்தாங்களே, அவங்கள் எங்கே ஓய்?”

ஐயர் அப்பாவித்தனமான முகபாவத்தோடு “நான் ஒருத்தரையும் பாக்கெல்லை. நித்திரையாய்க் கிடந்தன்” என்றார்.

ஒருவன் ரோச் லயிற்றை அடித்துக் கோயிலின் அந்தப் பக்கத் தையும இந்தப்பக்கத்தையும் பார்த்தான் கோயிலின் முன் வாசற் கதவு பூட்டி பெரிய ஆமைப்பூட்டும் போடப் பட்டிருந்தது.

“வீட்டுக்குள்ளே ஆர் இருக்கிறது?”

“என்ரை மனைவி மட்டுந்தான்”

“நாங்கள் வீட்டுக்குள்ளை பார்க்க வேணும். எழும்பும் ஓய்!”

ஐயர் எழும்பி வீட்டுக் கதவைத் திறந்தார். வெளியில் சத்தம் கேட்டு சற்று முன்னர் எழுந்திருந்த ஐயரின் மனைவி லாம்பை ஏற்றிக் கொண்டு கதவுக்குப் பின்னால் நின்றார் மனைவியிடம் லாம்பை வாங்கிக்கொண்டு ஐயர் முன்னே போக, ஒரு இரா ணுவத்தானும் பின்னே போனான். அறையைக் திறக்கச் சொல்லி லயிற்றை அடித்துப்பார்த்தான். குசினிக்குள்ளும் போனான். அவனுடைய சப்பாத்துக் கால் படாத இடமே வீட்டில் இல்லை.

‘அடுத்தநாள் வீடு முழுக்கக் கழுவித் துடைக்க வேண்டுமே’ என்று நினைத்து ஐயரின் மனைவி கவலைப்பட்டார்.

சோதனையை முடித்துக் கொண்டு இராணுவத்தானும் ஐயரும் வெளியே வந்தனர்.

தாங்கள் தேடும் ஆட்கள் அங்கே இல்லையென்பதில் இராணு வத்தினருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. “சரி, சரி நீ போய் படும் ஓய்!” என்று ஐயருக்குச் சொல்லிவிட்டு இராணுவத்தினர் தமது வாக னத்தை நோக்கிச் சென்றனர். சிறிது நேரத்துக் கெல்லாம் வாகனம் இரையும் சத்தம் கேட்டது. கோயிலை நோக்கியிருந்த லயிற் வெளிச்சம் மறுபுறம் திரும்பிற்று. வாகனம் வடக்குப் பக்கமாக வேகமாக சென்று மறைந்தது.

ஐயர் ஒரு சில நிமிடங்கள் படுக்கையில் உட்கார்ந்திருந்தார்.

வாகனத்தின் சத்தம் முற்றாக மறைந்து விட்டது.

ஒரு வேளை வாகனத்தை அனுப்பி விட்டு யாராவது ஒருவன் இங்கே நிற்கிறானா? என்று ஒரு சந்தேகம் ஐயர் மனதில் எழுந்தது. மேலும் சில நிமிடம் படுக்கையில் உட்கார்ந்து இருந்து வாகனம் நின்ற இடத்தை இருட்டில் கண்களால் துளாவினார்.

ஒன்றும் தெரியவில்லை ‘சே அப்படி நிற்கமாட்டாங்கள். அவங் களுக்கும் பயம் இருக்கும்’ என்று தெளிந்தவராய் கோயிலின் திறப்புக்களை எடுத்துக் கொண்டு போய் வெளிக் கதவைத் திறந்தார்.

– வரதர் –

உள்ளே போய் மூலத்தானக் கதவையும் திறந்து “தம்பியவை ” என்று கூப்பிட்டார்.
ஒரு சத்தமும் இல்லை.

“அவங்கள் போய் விட்டாங்கள், இனி நீங்கள் வாருங்கோ.” என்றார் ஐயர்.

முதலில் ரோச் லயிற் வெளிச்சம் வந்தது. தமது கண்களைக் கையினால் மறைத்துக் கொண்டே “சரி சரி வாருங்கோ” என்றார்.

முத்தையாவும் சுந்தரமும் ஐயருக்குக் கிட்ட வந்தார்கள்.

“பிள்ளையார் இண்டைக்கு உங்களைக் காப்பாத்திப் போட்டார்” என்றார் ஐயர்.

“ஐயா! நீங்கதான் எங்களைக் காப்பாத்தினீங்கள்” என்று சொல் லிக் கொண்டே இருவரும் ஐயரை வணங்கினார்கள். சீ இதென்ன இது! வாருங்கோ போவம்” என்று அவர்களைக் கூட்டிக்கொண்டு ஐயர் வெளியில் வந்தார்.

நடந்த நிகழ்வுகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்லி விட்டு “உங்கடை சப்பாத்துக்களை கோயில் வாசலில் கழட்டி விட்டுப் போயிட்டியள். அவங்கடை கண்ணிலை பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?… நல்ல வேளை நான் கண்டெடுத்துக் கொண்டு போய் தேர் முட்டிக்குப் பக்கத்திலை போட்டிருக்கிறன். போய் எடுத்துக் கொண்டு வாருங்கோ”, என்று ஐயர் சொல்லவும், இருவரும் திடுக்கிட்டவர்களாய் “அய்யய்யோ… நல்ல வேளை ஐயா. அவசரத்திலை எங்களுக்குப் புத்தி கெட்டுப் போச்சு” என்றார்கள். பிறகு இரண்டு பேரும் ரோச் லயிற் வெளிச்சத்தில் போய் சப்பாத்துக்களை எடுத்து வந்தார்கள்.

“நல்லாய் களைச்சுப் போனியள் இளனி கிடக்கு. ஆளுக்கொரு இளனி குடிச்சிட்டுப் போகலாம். வாருங்கோ” என்ற ஐயர் அவர்களை விறாந்தையில் இருத்திவிட்டு வீட்டுக்குள் போய் இரண்டு நல்ல செவ்விளநீர்க் குரும்பைகளையும் கத்தியையும் எடுத்து வந்தார்.

இளநீரைக் குடித்துக் கொண்டே முத்தையா சொன்னான்; “ஐயா இவன் இஞ்சை வர முதலிலை பயப்பிட்டவன். எனக்கு ஐயா கைவிட மாட்டாரென்ற நம்பிக்கை இருந்தது. என்ரை நம்பிக் கையைக் காப்பாத்திப் போட்டியள், ஐயா. உங்களுக்கு எப்படி நன்றி சொல்கிறதென்றே தெரியேல்லை” என்றான். சுந்தரம்.

“ஐயா என்னை மன்னிக்கவேணும். உண்மையா நான் உங்க ளைப் பிழையாய் விளங்கிப் போட்டன். இருந்தாலும் என்னை நீங்கள் சரியாத் தெரிஞ்சிருந்தால்… நான் ஆர், என்ன சாதி எண்டு தெரிஞ்சிருந்தா “

“தெரிஞ்சிருந்தா என்ன தம்பி… எனக்கு உம்மைத் தெரியும். நீர் ஆரெண்டும் தெரியும், சின்னவியின்ரை பேரனெல்லே நீர்?”

“அய்யய்யா., - நல்லாத் தெரிஞ்சுமா… மூலத்தானத்துக்குள் என்னை போக விட்டனீங்கள்?”

“ஓமொம். எல்லா ஆசாரத்துக்கும் மேலானது மனித நேயம். நானும் கடவுளின்ரை பிள்ளை, நீரும் கடவுளின்ரை பிள்ளை. ஆபத்து வேளையில் ஆசாரத்தை விட மனித நேயம்தான் முக் கியம். பிள்ளையாரும் இதுக்கு மாறாயிருக்க மாட்டார். என்ன முத்தையா?” என்று ஐயர் முத்தையாவின் பக்கம் பார்த்தார்.

வெளிச்சம் ஆடி. ஆவணி 995.

வணிக முகநூலில்
2026 இலவச
விளம்பர வாய்ப்பு!
உங்கள் வணிகத்தை இன்னும் பலரிடம்
கொண்டு செல்ல விரும்புகிறீர்களா?
இப்போதே உங்கள் விளம்பரத்தை இலவசமாக வணிகச்
சமூக வலைத்தளங்களில் பகிர உதவுகின்றோம்!
வணிகம் Vanikam
அதிகமான மக்களை எட்டுங்கள்...!
உங்கள் விற்பனையை உயர்த்துங்கள்
எளிதாகவும் - விரைவாகவும்
BUSINESS PAGE
இப்போதே
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்:
437-345-4203
குறிப்பு: விளம்பர வடிவமைப்பின்
அளவு: 4.4''x 7.2''
உங்கள் வணிக வளர்ச்சிக்கான சிறந்த வாய்ப்பு
இதுவம் ஒன்று!!!

அரபு நாடுகளுடன் முரண்படும் ஈரான்! மத்திய கிழக்கின் வரலாற்று பகை:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

19.03.2026

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் மேகங்கள் இப்போது இடிமுழக்கங்களாக மாறியுள்ளன. "ஆபரேஷன் எபிக் ஃபியூரி" (Operation Epic Fury) என்ற பெயரில் அமெரிக்காவும், "ரோரிங் லயன்" (Roaring Lion) என்ற பெயரில் இஸ்ரேலும் இணைந்து ஈரானின் அணுசக்தி மையங்கள் மற்றும் இராணுவ நிலைகளைத் தாக்கி அழித்து வருகின்றன. முதல் நாள் தாக்குதலிலேயே ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

வளைகுடாவும் ஹர்மூஸ் நீரிணையும்:

உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் விநியோகம் நடைபெறும் ஹார்முஸ் நீரிணையின் போக்குவரத்தை ஈரான் தொடர்ந்து கட்டுப்படுத்தி கண்காணித்து வருகிறது. ஈரானின் அச்சுறுத்தல் நீடித்தால் வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் முற்றாகச் சிதைந்துவிடும் என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது.

ஹர்மூஸ் நீரிணை ஈரானின் ஆளுகையில் உள்ளவரை வளைகுடாவில் உள்ள அமெரிக்க ஆதரவு அரபு நாடுகளால் ஈரானுக்கு எதிராக தாக்குப் பிடிக்கவே முடியாது. ஹர்மூஸ் நீரிணை (Strait of Hormuz) என்பது ஈரானுக்கு ஆயிரம் அணுகுண்டுகளின் பலத்தை விட பலமடங்கு ஆபத்தான ஆயதமாகும்.

இன்று அரேபிய வளைகுடாவில் உள்ள எந்த ஒரு நாட்டுக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை. அமெரிக்க பாதுகாப்பை நம்பி இருந்த நாடுகள் அனைத்தும் பாரிய தாக்குதல்களை எதிர்கொண்டு நிற்கும் நாடுகளாகவே உள்ளது. எவ்வளவு தான் இந்த வளைகுடா நாடுகளில் எல்லாம் கச்சா எண்ணெய் பெற்றோலியம் எரிவாயு என நிரம்பி இருந்த போதிலும் அது உலக சந்தைக்கு செல்ல வேண்டுமானால் ஈரானை கடந்துதான் போக வேண்டும். இல்லையேல் அவர்கள் உற்பத்தியை நிறுத்தியே ஆக வேண்டும் என்ற நிலை உள்ளது.

அரபு நாடுகள் ஏன் இலக்காகின?

கத்தாரில் அல் உதைட் விமான தளம் (Al Udeid Air Base) அமெரிக்காவின் மத்திய கிழக்கிற்கான பிரதான தளமாக அமைந்துள்ளது. மேலும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் (துபாய்-அபுதாபி) அல் தஃப்ரா தளம் உள்ளது. பஹ்ரைன் நாட்டில் அமெரிக்காவின் 5ஆவது கடற்படைத் தலைமையகம் அமைந்துள்ளது.

துபாய், அபுதாபி, கத்தார் போன்ற நாடுகள் ஈரானுடன் நேரடியாகப் போரிடவில்லை. இருப்பினும் இந்த நாடுகளின் மீது ஈரான் தாக்குதல் நடத்தி உள்ளது. இந்த நாடுகளில் அமெரிக்காவின் மிகப்பெரிய இராணுவத் தளங்கள் உள்ளன என்பதே முக்கிய காரணமாகும்.

தங்கள் மீதான தாக்குதலுக்கு இந்தத் தளங்களே காரணம் என ஈரான் குற்றம் சாட்டி வருகிறது. ஈரான் மீது தாக்குதல் நடத்த உங்கள் மண்ணைப் பயன்படுத்த அனுமதித்தால், நீங்களும் எதிரிகளே என்ற ஈரானின் எச்சரிக்கை விடுத்துள்ளது. இப்போது ஈரான் ஏவுகணைகள் பலவும் துபாயின் பாம் ஜுமேரா மற்றும் அபுதாபி துறைமுகங்கள் அருகே விழுந்து வெடித்துள்ளன.

போரை அவசரமாக முடிக்க வேண்டாம்:

அதேவேளை ஈரான் மீதான போரை அவசரமாக முடிக்க வேண்டாம் என அமெரிக்காவிற்கு வளைகுடா நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஹார்முஸ் நீரிணை மற்றும் வளைகுடா நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பில் அமெரிக்காவிற்கும் அரபு நாடுகளுக்கும் இடையே சிக்கலான இராஜதந்திரப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

வளைகுடா நாடுகளின் எண்ணெய் விநியோகக் கட்டமைப்புகள் மற்றும் பொருளாதார உயிர்நாடிகள் மீது ஈரான் தொடர்ந்து அச்சுறுத்தல் தாக்குதல் தொடுத்து வருவதால், இந்தப் பிரச்சினையை அரைகுறையாக விட்டுவிடக் கூடாது என அரபு நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

அமெரிக்காவை ஈரானுடன் போருக்குச் செல்லுமாறு வளைகுடா நாடுகள் நேரடியாகக் கோரவில்லை. இருப்பினும், ஈரானின் அச்சுறுத்தல் முழுமையாக நீக்கப்படாமல் போரை அவசரமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டாம் என அவை வலியுறுத்துகின்றன.

மேலும் ஈரானுக்கு எதிரான போரில் வளைகுடா நாடுகளும் நேரடியாக இணைய வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாக அரேபிய இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். ஆறு வளைகுடா நாடுகளின் விமான நிலையங்கள், துறைமுகங்கள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் வர்த்தக மையங்களை ஈரான் ஏற்கனவே ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்கியுள்ளது.

ஈரானின் அச்சுறுத்தல் நீடித்தால் வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் முற்றாகச் சிதைந்துவிடும் என்ற அச்சம் காரணமாகவே, ஈரானின் இராணுவ பலத்தை முழுமையாகக் குறைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த அரபு நாடுகள் விரும்புகின்றன. உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் விநியோகம் நடைபெறும் ஹார்முஸ் நீரிணையின் போக்குவரத்தை ஈரான் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

நீடிக்கும் இந்த யுத்தத்தில் அமெரிக்காவின் கைகள் ஓங்கி இருந்திருந்தால் இந்த நேரம் இந்த அரபு நாடுகளான அத்தனை நாடுகளும் ஈரானை தாக்கி அழிக்க அமெரிக்காவை விட முன்னே நின்று இருப்பார்கள் என்பதே உண்மையாகும்.

வளைகுடாவில் எரிசக்திப் போர்:

இரு தினங்களுக்கு முன்னர் கத்தார் எரிசக்தித் தளங்கள் மீது ஈரான் பாரிய தாக்குதல் நடத்தியுள்ளது. மத்திய கிழக்கின் போர் தற்போது ஒரு முழுமையான எரிசக்திப் போராக உருவெடுத்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் மிக முக்கியமான எரிவாயுத் தளங்களை இலக்கு வைத்து ஈரான் நடத்தும் தாக்குதல்களை ஒரு அபாயகரமான விரிவாக்கம் என ஐக்கிய அரபு இராச்சியம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இதேவேளை சவுதி, ஓமான் உள்ளிட்ட நாடுகளில் எண்ணெய் சேமிப்பு நிலையங்கள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் ஏவுகணை தாக்குதலில் ஐக்கிய அரபு இராச்சிய எரிவாயு உற்பத்தி முடக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஹப்ஷான் எரிவாயு நிலையம் மற்றும் பாப் எரிவாயு வயல் ஆகியவற்றின் மீது ஈரானிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் இடைமறிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத் தளங்களில் எரிவாயு உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அபுதாபி அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

அத்துடன் கத்தார் மற்றும் சவுதி மீதான தாக்குதல்களால் பாரிய சேதங்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. கத்தாருக்கும் ஈரானுக்கும் பொதுவான பாரசீக வளைகுடாவில் அமைந்துள்ள ஈரானின் "சவுத் பார்ஸ்" கடலோர இயற்கை எரிவாயு வயல் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து பாரிய தாக்குதலை முன்னெடுத்திருந்தன. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே, கத்தாரில் உள்ள எரிவாயுத் தளங்கள் மீதும் ஈரான் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

அதேவேளை, தமது நாட்டின் இயற்கை எரிவாயுத் தளங்களைக் குறிவைத்து இரவு முழுவதும் ஈரான் ஏவிய ட்ரோன்களைத் தமது வான்பாதுகாப்பு அமைப்புகள் சுட்டு வீழ்த்தியுள்ளதாக சவுதி அரேபியாவும் தெரிவித்துள்ளது. அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நடவடிக்கைகளுக்கு அரபு நாடுகள் துணைபோவதாகக் கருதியே ஈரான் இந்த அதிரடித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளமை சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயுச்

சந்தையில் பாரிய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிழல் யுத்த அதிகாரப் போட்டி

இன்றைய நிலையில் வளைகுடா நாடுகளின் தர்மசங்கடமான நிலை தொடர்கிறது. வளைகுடா நாடுகள் இப்போது இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றன. ஒருபுறம் பாதுகாப்புக்காக அமெரிக்காவை நம்பியிருக்க வேண்டிய சூழல், மறுபுறம் அமெரிக்காவுக்கு இடம் கொடுத்தால் பக்கத்து நாடான ஈரானின் ஏவுகணைகளுக்குப் பலியாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

துபாயில் நடந்த தாக்குதல்கள் உலகப் பொருளாதாரத்தையே உலுக்கியுள்ளன. மசகு எண்ணெய் விலை உயர்வு முதல் சர்வதேச விமானப் போக்குவரத்து இரத்து வரை போர் இப்போது ஒவ்வொரு நாட்டின் கதவையும் தட்டத் தொடங்கிவிட்டது.

1400 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய ஒரு தலைமைப் போட்டி, இன்று நவீன ஏவுகணைகளாக உருவெடுத்து மத்திய கிழக்கின் அமைதியைப் புதைத்து வருகிறது. இது வெறும் மதம் சார்ந்தது மட்டுமல்ல. யார் இந்தப் பிராந்தியத்தின் தலைவர் என்பதில் சுனி தலைமையிலான சவுதி அரேபியாவுக்கும், ஷியா தலைமையிலான ஈரானுக்கும் இடையே நடக்கும் நிழல் யுத்தம் இன்னும் தொடர்கிறது.

ஈரான் தனது செல்வாக்கை அதிகரிக்க லெபனானில் ஹிஸ்புல்லா ஏமனில் ஹூதிகள் போன்ற ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவு அளிக்கிறது. இது சவுதி போன்ற நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. முன்பெல்லாம் அனைத்து அரபு நாடுகளும் இஸ்ரேலை எதிரியாகப் பார்த்தன. ஆனால், ஈரானின் அச்சுறுத்தல் அதிகரித்ததால், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் பஹ்ரைன் போன்ற நாடுகள் ஆபிரகாம் உடன்படிக்கை மூலம் இஸ்ரேலுடன் கைகோர்த்தன. இது ஈரானுக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரேபிய வளைகுடாவில் உள்ள எந்த ஒரு நாட்டுக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை. அமெரிக்க பாதுகாப்பை நம்பி இருந்த நாடுகள் அனைத்தும் பாரிய தாக்குதல்களை எதிர் கொண்டு நிற்கும் நாடுகளாகவே உள்ளது. எவ்வளவு தான் இந்த வளைகுடா நாடுகளில் எல்லாம் கச்சா எண்ணெய் பெற்றோலியம் எரிவாயு என நிரம்பி இருந்த போதிலும் அது உலக சந்தைக்கு செல்ல வேண்டுமானால் ஈரானை கடந்துதான் போக வேண்டும்

இஸ்ரேல் உடனான உறவு

சமீப காலமாக அரபு நாடுகளின் அரசுகள் இஸ்ரேலுடன் நெருங்கி வருகிறது. ஆகவே, அது ஈரானுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்குமா என்பது ஐயமே. ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலில் அதன் உச்ச தலைவர் மட்டுமல்ல, இராணுவத் தளபதியும், அதன் இஸ்லாமிய புரட்சிப் படைப் பிரிவின் தளபதியும் கொல்லப்பட்டனர்.

கொமேனி மீதான தாக்குதல் துல்லியமாக நடந்திருக்கிறது. பல்லாண்டு காலப் பொருளாதரத் தடைகளால் சூழப்பட்டிருக்கும் ஈரானுக்கு இப்போது ரஷ்யா, சீனா உட்பட யாரிடமிருந்தும் உதவி எந்தளவில் கிடைக்கும் என்பது தெரியவில்லை. இப்படி தொடரும் அரபு நாடுகளுடனான முரண்பாடு ஈரானின் பொருளாதாரத்தை மேலும் கடுமையாக பாதிக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போராரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

மொசாட்டின் நுண்ணிய உளவு வலையமைப்பு: தொடர்ந்து வீழ்த்தப்படும் ஈரானியத் தலைமை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

18.03.2026

இஸ்ரேல் உளவு அமைப்பு எப்படி சிந்திக்கின்றது? எப்படி எல்லாம் ஈரானில் செயல்படுகின்றது? என்பதற்கு இந்த ஒரு அதிரடி தாக்குதலே சான்றாகும். இஸ்ரேல் பிரதமர் அலுவலகத்தின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் டேவிட் கீஸ் ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி கொல்லப்படுவார் என்பதை சில நாட்களுக்கு முன்பே சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் நாள் போரின் போது, நிகழ்ந்த ஆயத்துல்லா அலி கொமனேயின் உயிரிழப்புக்கு பின்னர், இந்த போரில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட ஈரானிய உயர்மட்ட அதிகாரி அலி லரிஜானி ஆவார்.

இலக்கு தவறாத உளவுத்துறை

கடந்த மார்ச் 13ஆம் தேதியன்று டேவிட் கீஸ் தனது எக்ஸ் தளத்தில் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்து, லாரிஜானி தான் அடுத்த இலக்கு. இது எப்படி அவருக்கு தெரியும்? அந்தப் புகைப்படத்தில் சிவப்பு நிறத்தில் குறிக்கப்பட்டுள்ள ஹபா பேட்டர் மிகச்சிறந்த உளவாளிகளில் ஒருவர், அதோடு அவர் தனது நெருங்கிய நண்பர். ஹபா இன்று காலைதான் ஈரானிலிருந்து திரும்பினார் என்றும் குறிப்பிட்டார்.

மார்ச் 17 திகதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் லாரிஜானி கொல்லப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே, டேவிட் கீஸ் இதனைப் பகிரங்கமாக அறிவித்துள்ளது இஸ்ரேலிய உளவுத்துறையின் ஊடுருவலை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இஸ்ரேலை சுற்றிலும் பல இஸ்லாம் நாடுகள் எதிர்த்து நிற்கின்றன. அவர்களால் ஒரு இஸ்ரேலியன் கொல்லப்படால் அடுத்த நிமிடம் 10 எதிராளியை கொன்று உடனுக்குடன் பதிலடி இஸ்ரேல் கொடுக்கிறது.

இவ்வாறு எப்படி ஒரு சின்னஞ் சிறு நாட்டால் அரபு நாடுகளை கையாள முடிகிறது. இதற்கு எல்லாம் அவர்களின் உளவு அமைப்பான மொசாட்டே அடிப்படைக் காரணம் ஆகும்.

இஸ்ரேல் எந்த வளமும் இல்லாத பாலைவன நாடு. சுமார் 800 சதுர மைல் பரப்பளவே கொண்ட மிக சிறிய நாடு. மக்கள் தொகை சுமார் 90 இலட்சம் தான். இஸ்ரேலைச் சுற்றிலும் முஸ்லீம் நாடுகள் தான் இருக்கின்றன. எகிப்து, பாலஸ்தீனம், ஜோர்டான், சிரியா, லெபனான், அரேபியா, ஈராக்.

கடந்த காலங்களில் மேற்சொன்ன முஸ்லீம் நாடுகள் தனித் தனியாகவோ அல்லது சேர்ந்தோ இஸ்ரேலை அழிக்க பல முறை முயன்று விட்டன. இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி தான்.

இஸ்ரேல் பிரதமர் அலுவலகத்தின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் டேவிட் கீஸ் ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி கொல்லப்படுவார் என்பதை சில நாட்களுக்கு முன்பே சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது

ஈரானில் மொசாட்டின் ஊடுருவல்:

2025 ஆம் ஆண்டில், பன்னிரண்டு நாள் போருக்கு பிறகு மிகவும் துணிச்சலான ஊடுருவல் என்று உளவுத்துறை நிபுணர்கள் அழைக்கும் செயலை மொசாட் செயல்படுத்தியது. ஈரானில் மொசாட்டின் ஊடுருவலை ஒருபோதும் நிறுத்த முடியவில்லை.

வளைகுடாவின் பரம எதிரிகள் :

ஒரு பக்கம் அமெரிக்காவும் இஸ்ரேலும் இருக்கிறார்கள். அவர்களின் திட்டம், ஈரானை துண்டு துண்டாக உடைத்தல், அவர்களின் ஆயுத வளத்தை அழிப்பது, ஈரான் மக்களை ஒருவருக்கொருவர் எதிராகத் திருப்புதல் எனத் திட்டமிட்டுள்ளார்கள். மறு புறம் ஈரான் இருக்கிறது. அவர்களின் திட்டம், அமெரிக்காவின் பொருளாதாரத்தை அழிக்க மலிவான ட்ரோன்களைப் பயன்படுத்தி இஸ்ரேலை தாக்கி வருகிறது. மேலும் முஸ்லிம் உலகத்தை ஒன்றிணைக்கவும், மேற்குலக பங்குச் சந்தையை நொறுக்கவும், அமெரிக்க ஆதிக்கத்திற்கு அவலங்களை ஏற்படுத்தவும் ஈரான் முயற்சிக்கிறது. அத்துடன் வளைகுடாவில் அமெரிக்காவை மண்டியிடச் செய்யவும் ஈரான் விரும்புகிறது.

இரண்டு திட்டங்கள், இரண்டு கோணங்கள், முற்றிலும் எதிர் மாறானவை. மேலும் இந்த இரண்டு திட்டங்களும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன. இதன் விளைவு ஈரான் அல்லது அமெரிக்காவை மட்டும் பாதிக்காது. இது இந்த உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் பாதிக்கும்.

ஈரானிய பாதுகாப்பு வழக்கமான பராமரிப்பு பிரச்சினைகள் என்று நிராகரித்த சிறிய தொழில் நுட்பக் குறைபாடுகள் போலத் தோன்றியவற்றுடன் இந்த நடவடிக்கை தொடங்கியது. ஆனால் பிப்ரவரி 2024இல் புரட்சிகர காவல்படை தலைமையகத்தில் உள்ள மென்பொருள் வழக்கமான விளக்கத்தை மீறும் முரண்பாடுகளைக் காட்டத் தொடங்கியது.

அப்போது தொழில்நுட்ப தற்செயல் நிகழ்வுகளாகத் தோன்றியவை உண்மையில் (ஆபரேஷன் ஷேடோ டான்ஸ்) கவனமாக திட்டமிடப்பட்ட நடவடிக்கை ஆகும். மொசாட்டின் பல அடுக்கு ஊடுருவல் தற்போது ஈரானின் முழு பாதுகாப்பு இயந்திரத்தையும் துவம்சம் செய்தது. மேற்கத்திய உளவுத்துறை அமைப்புகள் சைபர் போர் மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பில் கவனம் செலுத்தியிருந்தாலும், மொசாட் மனித உளவியலை மையமாகக் கொண்ட மிக நீண்ட உளவு- தொழில் நுட்ப போரை கச்சிதமாக பயன்படுத்தி வருகிறது.

நுண்ணிய உளவுத் திறன்:

1967ஆம் ஆண்டு முஸ்லீம் நாடுகள் அனைத்தும் இஸ்ரேலை எதிர்த்து போராடினார்கள். ஆனால் அதன் விளைவு என்ன? இந்த நாடுகள் தங்கள் நாட்டின் சில பகுதிகளை இஸ்ரேலிடம் இழந்ததே மிச்சமாகும். அதன் பின்னர் பாலஸ்தீன போராளிகளின் தாக்குதலை திறம்பட எதிர் கொண்டது இஸ்ரேல். இன்று உலகிலேயே சிறந்த உளவு படை எதுவென்றால் அது இஸ்ரேல் நாட்டின் மொசாட் தான்.

1970களில் மொசாட்டின் கையோங்கிய நிலையில், உள்நாட்டில் ஒன்றும் செய்ய முடியாத காரணத்தால் வெளிநாடுகளில் இருக்கும் யூதர்கள் மீது தாக்குதல் நடத்தியது பாலஸ்தீன தீவிரவாத அமைப்புகள். 1972ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் நடை பெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை கறுப்பு செப்டெம்பர் (Black September) என்ற பாலஸ்தீன இயக்கத்தினர் தாக்கினர். அவர்களை சுமார் 20 ஆண்டுகள் உலகம் முழுவதும் தேடி வேட்டை யாடி இறுதியில் அனைவரையும் கொன்றது இஸ்ரேலின் உளவு அமைப்பு.

இதையடுத்து 1976ஆம் ஆண்டு ஜீன் 27ஆம் தேதி இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்விலிருந்து பாரிஸ் நகருக்கு சென்ற விமா னத்தை பாப்புலர் ஃப்ரான்ட் என்ற பாலஸ்தீன தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பும் சேர்ந்து விமானத்தை கடத்தினார்கள். கடத்தப்பட்ட விமானம் உகாண்ட நாட்டிற்கு கடத்தி செல்லப்பட்டது. அப்பொழுது உகாண்டாவை ஆட்சி செய்து கொண்டு இருந்தவர் இடி அமீன். இவர் பாலஸ்தீன அமைப்புக்கு ஆதரவு கொடுத்து வந்தவர்.

அந்த விமானத்தில் மொத்தம் 316 பேர் இருந்தனர். தீவிரவாதிகளின் கோரிக்கை, இஸ்ரேல் சிறையில் உள்ள 40 தீவிரவாதிகளையும், கென்யா நாட்டில் உள்ள 13 தீவிரவாதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் இல்லை என்றால் அனைவரையும் கொன்று விடுவோம் என கோரிக்கை விடுத்தனர்.

இஸ்ரேலில் இருந்து 4000 கி.மீ.தொலைவில் உகாண்டா உள்ளது. தீவிரவாதிகளிடம் பேசிக் கொண்டே, நான்கு கனரக விமானங்களில் 100 இராணுவ வீரர்களும், இராணுவ தளவாடங்களும் ஆயுதங்களும் ஏற்றப்பட்டு, எந்த நாட்டு ரேடர்களிலும் படாமல், இரவு 11 மணிக்கும் மேல் கடல் மார்க்கமாகவே சென்று உகாண்டா நாட்டிற்கே தெரியாமல் தீவிரவாதிகளையும் கொன்று, அனைவரையும் காப்பாற்றி, விடிவதற்குள் தன் நாட்டிற்கே வந்துவிட்டனர் இஸ்ரேலிய ராணுவத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானின் உளவு பலவீனம்:

தற்போது நடக்கும் ஈரான் போரில் மொசாட் உளவுத்துறையின் மிகவும் நவீனமான கண்காணிப்பு அமைப்பை ஈரான் அரசால் தடுக்க இயலவில்லை. நேரடியாக உளவாளிகள் அளித்த தகவலாக இருக்கலாம். ஈரானிய தனிநபர்கள் குறித்து தொழில்நுட்ப முறையில் கண்காணித்ததன் மூலம் கிடைத்திருக்கவே அதிக வாய்ப்புள்ளது.

கடந்தாண்டு ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரில் ஈரானின்

அணுசக்தி திட்டத்துடன் தொடர்புடைய விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகளை இஸ்ரேல் குறிவைத்தது. அப்போது, தனிநபர்களின் நகர்வுகளை அறிய அவர்களின் தொலைத்தொடர்பு மற்றும் மொபைல்போன் சாதனங்களை ஊடுருவியதாக கூறப்படுகிறது.

சில சமயங்களில் முக்கிய அதிகாரிகளுடைய மெய்க்காப்பாளர்களின் நகர்வுகளை கண்காணிப்பதும் அடங்கும். நீண்ட காலமாக இவ்வாறு தகவல்களைச் சேகரிக்கும் போது, வழக்கமான நடத்தை மற்றும் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியும். இதன் மூலம், அவர்களின் நடவடிக்கைகளை முன்கூட்டியே கணிக்கவும், பலவீனமான தருணங்களை கண்டறியவும் முடியும்.

ஈரான் தனது எதிரிகள் அதிஉயர் தலைவரைப் பின்தொடர்வதை அறிந்திருந்தது. அடுத்தடுத்த மாதங்களில் இந்த பலவீனங்களை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்ய ஈரான் தவறியது பாதுகாப்பு மற்றும் உளவுத் தகவலை தடுப்பதில் ஈரானின் தோல்வியையோ அல்லது புதிய கண்காணிப்பு வழிகளைக் கண்டறிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தொடர்ந்து தங்கள் உத்திகளை மாற்றிக் கொள்ளும் திறனையோ குறிக்கிறது.

இதன் விளைவாக தற்போது ஈரானின் முக்கிய தலைவரான அலி லரிஜானி இலக்கு தவறாத தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். ஈரானின் உச்சத் தலைவர் ஆயத்துல்லா அலி கொமனி கொல்லப்பட்ட பிறகு, மிக முக்கியமான பிரமுகர்களில் ஒருவராகக் கருதப்பட்ட அலி லரிஜானி (Ali Larijani), நாட்டின் மிகப் பெரிய அதிகார மையமாக உருவெடுத்தார்.

மார்ச் 18 இரவு, அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்து ஈரானுக்கு எதிராக நிகழ்த்திய தாக்குதலின் போது, 67 வயதான அலி லரிஜானி உயிரிழந்துள்ளதாக, இஸ்ரேல் அறிவித்தது. இப்போது அவரும் இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்து விட்டார் என்பதை ஈரான் அரசு ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அலி லரிஜானி ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளராக இருந்தவர். இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை தெஹ்ரானில் அல்-குத்ஸ் தின பேரணியில் பொதுமக்கள் முன் அவர் தோன்றினார்.

ஈரான் போரில் நேட்டோவின் முரண் நிலை:
மேற்குலக நாடுகளுடன் பகைக்கும் டிரம்ப!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

18.03.2026

ஈரான் மீதான போர் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ள நிலையில், தமக்கு உதவாத நேட்டோ (NATO) கூட்டமைப்பு நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார். குறிப்பாக பிரித்தானியாவையும், ஐரோப்பிய நாடுகளையும் கடுமையாகச் சாடிய டிரம்ப், அமெரிக்க அரசு இந்த நாடுகளின் எதிர்கால பாதுகாப்பு குறித்து கவலைப்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் ஒரு திட்டம் இல்லாத ஈரான் போருக்கு வரமுடியாது எனப் பிரித்தானியப் பிரதமர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்த நிலையில், தற்போது ஜெர்மனி மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளும் இந்தப் போரில் இணையப்போவதில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளன.

தற்போதைய ஈரான் மீதான போர் நடவடிக்கைகளில் இருந்து நேட்டோ (NATO) கூட்டமைப்பின் முக்கிய நாடுகள் அடுத்தடுத்து விலகி வருவது, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்குப் பாரிய இராஜதந்திரப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாடு:

டிரம்பின் அழுத்தங்களை நிராகரித்து நெத்தியடி கொடுத்த பிரித்தானியப் பிரதமர், மத்திய கிழக்கில் ஈரான் மீதான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், அந்த யுத்தத்தில் பிரித்தானியா இணையப் போவதில்லை எனப் பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்டார்மர் (Keir Starmer) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஒரு திட்டம் இல்லாத போருக்கு வரமுடியாது என பிரித்தானியா அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளதுடன், போரில் இணையுமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விடுத்த அழுத்தங்களை முற்றாக நிராகரித்துள்ளது.

பிரித்தானிய இராணுவத் தளங்களை அமெரிக்கப் போர் விமானங்கள் பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடுகளை விதித்ததுடன், மத்திய கிழக்கு நோக்கிப் பிரித்தானியாவின் விமானம் தாங்கிக் கப்பலை அனுப்பவும் மறுப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து டிரம்ப் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்த நிலையில், நான் எனது கொள்கைகளில் உறுதியாக நிற்கின்றேன் என இங்கிலாந்து பிரதமர் தெரிவித்துள்ளார். டிரம்பின் அழுத்தங்களுக்குப் பணிய மாட்டேன் எனப் பிரித்தானியப் பிரதமர் தெரிவித்துள்ளமை அவரது கொள்கைகளில் உறுதியாக இருப்பதனை உணர்த்துகிறது.

அதே வேளை சட்டபூர்வமான மற்றும் முறையான திட்டம் இருந்தால் மட்டுமே பிரித்தானியப் படைகள் களமிறக்கப்படும் என அவர் வலியுறுத்தியுள்ளார். முழுமையான கள நிலவரம் தெரியாமலும், போரிலிருந்து வெளியேறும் (Exit Plan) திட்டமும் இல்லாமலும் எமது படைகளை ஆபத்தில் தள்ள முடியாது. அவ்வாறு திட்டமில்லாமல் பிறரைப் பின்பற்றிச் செல்வது தலைமைத்துவம் அல்ல, அது வெறும் பின்தொடர்தல் என டிரம்பிற்கும், தன்னை விமர்சிக்கும் பிரித்தானிய எதிர்க்கட்சிகளுக்கும் அவர் பகிரங்கப் பதிலடி கொடுத்துள்ளார்.

ஜெர்மனி அரசாங்கமும் ஈரானில் நடைபெறும் இந்த யுத்தத்திற்கும் நேட்டோ கூட்டமைப்பிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று தெரிவித்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியைத் (Strait of Hormuz) திறந்து வைப்பதற்கான எந்தவொரு இராணுவ நடவடிக்கையிலும் ஜெர்மனி பங்கேற்காது எனத் தெரிவித்துள்ளது. இதே நிலைப்பாட்டை எதிரொலித்துள்ள கிரீஸ் அரசாங்கப் பேச்சாளர் பாவ்லோஸ் மரினாகிஸ் (Pavlos Marinakis), ஹார்முஸ் ஜலசந்தியில் நடைபெறும் எவ்வித இராணுவ நடவடிக்கைகளிலும் தமது நாடு ஈடுபடப் போவதில்லை என உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இதனால் இந்த போரில் தனித்து விடப்படுகிறாரா டிரம்ப் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. வான்வழித் தாக்குதல்கள் மூலம் மாத்திரம் ஒரு யுத்தத்தை வெல்ல முடியாது எனவும், ஹார்முஸ் ஜலசந்தி போன்ற ஒரு பாரிய கடற்பரப்பைப் பாதுகாக்கப் பல நாடுகளை உள்ளடக்கிய சர்வதேசக் கடற்படைக் கூட்டமைப்பு

(Naval Coalition) அவசியம் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் டிரம்பின் படைபலம் தோற்றுப்போனதா என்பது குறித்தும் பல ஆய்வாளர்கள் ஆய்வு அவர் உலகின் மிகப்பெரிய மற்றும் அதிநவீன இராணுவப் பலத்தினைக் கொண்டுள்ள அமெரிக்காவால், ஈரானைத் தனித்து நின்று வெல்ல முடியாதா என்ற பாரிய கேள்வி தற்போது சர்வதேச அரசியல் அரங்கில் எழுந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, அமெரிக்கா தனித்துப் போரிட்டால் அது அத்துமீறிய ஆக்கிரமிப்பாக யகருதப்படும் என்பதால், நேட்–டோ நாடுகளை இணைத்து இதனை ஒரு சர்வதேசப் போர் ஆகக் காண்பிப்பதற்கே டிரம்ப் முயற்சிப்பதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

நேட்டோ உறவில் முறுகல் :

தற்போதைய ஈரான் போரில் நேட்டோ உறுப்பு நாடுகள் பங்கேற்காது என்பது உறுதியாகியுள்ளது. ஆனால் கடந்த ஆண்டு 2025 ஆரம்பத்தில் நேட்டோ நாடுகள் தங்கள் பாதுகாப்பு செலவினங்களை அதிகரிக்க வேண்டும் என்று டிரம்ப் கோரிக்கை விடுத்திருந்தார். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் உட்பட 32 நாடுகளை உள்ளடக்கிய வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) டிரம்பின் பொருளாதர வெறுப்புக்குரிய விஷயங்களில் ஒன்றாகியது.

டிரம்ப் அதிபராக இருந்த முதல் பதவிக் காலத்தின் போது, மற்றய நேட்டோ உறுப்பு நாடுகள் "தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 2 சதவீதத்தை பாதுகாப்புக்காக செலவிட வேண்டும்" என்ற ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்கை அடையத் தவறி

னால், நேட்டோவிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்வதாக அவர் அப்போது அச்சுறுத்தினார்.

மேலும் தனது பங்கை செலுத்தாத ஒரு உறுப்பு நாடு தாக்கப்பட்டால், அமெரிக்கா அதை பாதுகாக்காது என்றும் டிரம்ப் கூறியது பலத்த சர்ச்சையை ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்தியதும் அறிந்ததே.

டிரம்பை எதிர்த்த துணை அதிபர்

ஈரான் போர் வேண்டாம் என டிரம்பின் முடிவை ஆரம்பத்திலேயே எதிர்த்த துணை அதிபர் ஜேடி வான்ஸ் (JD Vance) டிரம்புடன் கருத்து வேறுபாடுகள் தற்போது அம்பலமாகி உள்ளன. அமெரிக்காவின் இராணுவம் ஈரான் மீது "Operation Epic Fury" என்ற பெயரில் முன்னெடுத்துள்ள பாரிய போர் நடவடிக்கைகளுக்கு, துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் ஆரம்பத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அமெரிக்கக் கடற்படையின் முன்னாள் வீரரான ஜே.டி. வான்ஸ், அமெரிக்கா முதலில் (America First) என்ற கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றுபவர். ஈரானுடனான இந்தப் போரினால் அமெரிக்கப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும், தேவையற்ற போர்களில் அமெரிக்க வீரர்களை ஈடுபடுத்தக் கூடாது எனவும் அவர் அதிபர் டிரம்பிடம் நேரடியாகவே வாதிட்டுள்ளார்.

மேலும் போரில் ஈடுபடுவதில் ஜேடி வான்ஸிற்கு ஆரம்பத்தில் விருப்பம் இருக்கவில்லை என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். போர் தொடங்கியதன் பின்னர் அரசாங்கத்திற்குள் பிளவு இருப்பதை வெளிக்காட்டக் கூடாது என்பதற்காகவே துணை அதிபர் தற்போது அமைதி காத்து வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேட்டோவிற்கு இருண்ட எதிர்காலம் ?

வளைகுடாவில் ஈரான் மீதான போர் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ள நிலையில், தமக்கு உதவாத நேட்டோ (NATO) கூட்டமைப்பு நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

தற்போது அமெரிக்கவிற்கு உதவாத நேட்டோவிற்கு இருண்ட எதிர்காலம் எனவும் அவர் கூறியுள்ளார். பிரித்தானியா மற்றும் ஐரோப்பாவைக் கடுமையாகச் சாடிய டிரம்ப் இந்த இராஜதந்திர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போரில் எவ்வித கட்டாயமுமின்றி நாம் அவர்களுக்கு உதவினோம். ஆனால், தற்போது ஹார்முஸ் ஜலசந்தியைத் திறக்கும் எமது நடவடிக்கைகளுக்கு அவர்கள் உதவாவிட்டால், நேட்டோ பாரியதொரு இருண்ட எதிர்காலத்தைச் சந்திக்க நேரிடும். நான் நீண்டகாலமாகக் கூறிவருவதைப் போல நேட்டோ என்பது ஒரு வழிப்பாதையில் மட்டுமே பயணிக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. இவ்வாறு டிரம்ப் நேட்டோ மீதான கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

அமெரிக்காவின் நீண்டகால நண்பன் எனக் கருதப்படும் பிரித்தானியா, போர் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் உதவ மறுத்துவிட்டு, அமெரிக்கா ஈரானின் அபாயங்களை முற்றாக அழித்த பின்னரே இரண்டு கப்பல்களை அனுப்ப முன்வந்ததாகக் குற்றம் சாட்டியுள்ளார். வெற்றி பெற்ற பின்னர் அல்ல, வெற்றி பெறுவதற்கு முன்னரே எமக்குக் கப்பல்கள் தேவை என அவர் பிரித்தானியாவைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஈரான் மீதான போர் நடவடிக்கைகளில் இருந்து நேட்டோ (NATO) கூட்டமைப்பின் முக்கிய நாடுகள் அடுத்தடுத்து விலகி வருவது, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்குப் பாரிய இராஜதந்திரப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவைத் தொடர்ந்து அமெரிக்காவைக் கைவிட்ட ஜெர்மனி, கிரீஸ் நாடுகளை டிரம்ப் கடுமையாக சாடியுள்ளார். அமெரிக்காவிற்கு உதவாத நேட்டோ-விற்கு இருண்ட எதிர்காலம் என டிரம்ப் தெரிவித்துள்ளார்

அதேவேளை வளைகுடாப் பிராந்தியத்தின் ஹார்முஸ் ஜலசந்தி ஊடான எண்ணெய் விநியோகத்தினால் அமெரிக்காவை விட சீனாவும் ஐரோப்பாவுமே அதிக பயன்பெறுகின்றன. ஆனால் இந்த நாடுகள் அனைத்தும் தங்கள் சுயநலத்திற்காக உள்ளன என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

எனவே, அவர்கள் தான் இப்பகுதியைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள டிரம்ப், இது தொடர்பில் சீன அதிபர் ஜி ஜின்பிங் (Xi Jinping) உடனான தனது சந்திப்பில் கலந்து உரையாட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் போரில் மேற்குலக நாடுகள் இணைந்து செயல்பட வாய்ப்பு இல்லாத நிலையில், நேட்டோவின் நோக்கம் மற்றும் பணியை "அடிப்படையில் இருந்தே மறு மதிப்பீடு செய்வது" அவசியம் என டிரம்ப் தெரிவித்து உள்ளார். ஆயினும் நேட்டோ கூட்டணியில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து கருத்து வேறுபாடுகள் அவரது கட்சிக்கு உள்ளயே நிலவுகிறது.

ஆனால் நேட்டோவில் இருந்து வெளியேறாமல் கூட இந்தக் கூட்டணியை பலவீனப்படுத்த அவருக்கு இன்னும் வழிகள் உள்ளன என்று இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் அதனை அவரால் சாதிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

என்றாலும் தற்போதய சூழ்நிலையில் அமெரிக்க எதிரபார்த்த நேட்டோ நாடுகளின் பங்களிப்பு ஈரான் போரில் கிடைக்காதது டிரம்பின் இராஜதந்திர தோல்வியாகவே கருதப்படுகிறது.

சிங்கள ஊடக ஆளுமைகள்: மனச்சாட்சியின் குரலாக ஒலிக்கும் நீதிக்கான தேடலையும் தரும் நூல்!

– கிறிஸ்டி நல்லரெத்தினம் –

21.03.2026

உண்மைக்குக் குரல் கொடுப்பது என்பது காலத்தை வென்ற செயல். ஆனால், சில சமயங்களில், அது ஒரு பெரும் சவாலாகவும், உயிருக்கு ஆபத்தான பாதையாகவும் மாறிவிடுகிறது. "சிங்கள ஊடக ஆளுமைகள்" எனும் நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 530 வெளியீடாக வெளிவந்துள்ளது. இத்தகைய சவால்களுக்கு மத்தியில், மனச்சாட்சியின் குரலாக ஒலித்த ஆளுமைகளைப் பற்றிய ஆய்வுகளை உள்ளடக்கிய நூல் ஒன்றை நாம் வரவேற்பது காலத்தின் கட்டாயமாகிறது. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்களின் "சிங்கள ஊடக ஆளுமைகள்" என்ற இந்த நூல், அத்தகைய துணிச்சலான ஆளமைகளின் வாழ்வையும், பணியையும், அவர்களின் தியாகங்களையும் அப்பட்டமாகப் பதிவுசெய்து, சமூகத்தின் கண் முன் ஒரு கண்ணாடியைப் பிடித்து கடந்தகால கொடூரங்களையும், மௌனிக்கப்பட்ட மானுடர்களையும் படம் போட்டு காட்டுகிறது.

இந்நூல் வெறும் ஆளுமைகளின் வாழ்க்கைச் சித்திரமல்ல, மாறாக, இலங்கைத் தீவின் கடந்த கால மற்றும் நிகழ்கால ஊடக, சமூக, அரசியல் களங்களில் உண்மைக்காகவும், நீதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்த பலதரப்பட்ட ஆளுமைகளின் பங்களிப்பை ஆழமாக ஆராயும் ஒரு வரலாற்றுப் பெட்டகம்! சிங்கள, தமிழ், ஆங்கில ஊடகத் துறைகளில் இயங்கிய, தங்கள் வாழ்வையே அர்ப்பணித்த, அல்லது பெரும் சவால்களைச் சந்தித்த பலரின் வாழ்வையும், பணியையும் இந்நூல் தொட்டுக்காட்டுகிறது. ஊடக சுதந்திரம், அரசியல் விமர்சனம், மனித உரிமைப் போராட்டம், கலை இலக்கியப் பங்களிப்பு எனப் பல்வேறு தளங்களில் இந்த ஆளுமைகள் எவ்வாறு சமூக மாற்றத்திற்கு வித்திட்டனர் என்பதை இந்நூல் விரிவாகப் பேசுகிறது.

தமிழின் தொன்மையும் செழுமையும் அதன் இலக்கிய மரபுகளிலேயே ஆழமாக வேரூன்றியுள்ளன. சங்க இலக்கியம் தொடங்கி, காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், உரைநடை வளர்ச்சி, நவீனத்துவம் எனப் பல காலகட்டங்களைக் கடந்து தமிழ் இலக்கியம் பரிணமித்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தேசிய உணர்வு, சமூக சீர்திருத்தக் கருத்துகள், திராவிட இயக்கக் கொள்கைகள் ஆகியவை இலக்கியத்தில் செல்வாக்கு செலுத்தின. ஈழத்தமிழ் இலக்கியமானது, புலப்பெயர்வு, போர், இழப்பு, நீதி குறித்த தேடல்களைப் பதிவு செய்து, உலக அரங்கில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. விமர்சன நோக்குடன் சமகாலப் பிரச்சினைகளை அணுகும் போக்கு, குறிப்பாக ஈழத்தமிழ் இலக்கியத்திலும், சமூக ஆய்வுகளிலும் வலுப்பெற்றுள்ளது. இந்த நூல், தமிழ் இலக்கிய மரபின் தொடர்ச்சியாக, வரலாற்று ஆய்வுகளையும், சமூக விழிப்புணர்வையும் ஒருமித்த தளத்திற்குக் கொண்டு வருகிறது.

இலங்கையின் ஊடக வரலாறு என்பது விடுதலைக்குப் பின்னரான காலப்பகுதியில் பெரும் ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்திருக்கிறது. ஆரம்பகால ஊடக சுதந்திரம், பின்னர் இன மோதல்கள், அரசியல் நெருக்கடிகள், கிளர்ச்சிகள் ஆகியவற்றால் பெரும் சவால்களை எதிர்கொண்டது. அரசாங்கத்தின் அடக்குமுறைகள், சுய தணிக்கைகள், ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள், கடத்தல்கள் ஆகியவை ஒரு இருண்ட அத்தியாயத்தைப் பதிவு செய்துள்ளன. ரிச்சர்ட் டி சொய்சா, லசந்த விக்ரமதுங்க, நிமலராஜன், ஜயந்த பத்திரன போன்றவர்களின் கதைகள் இந்த இருண்ட பக்கங்களுக்குச் சான்றாக அமைகின்றன. அதேவேளையில், மார்ட்டின் விக்ரமசிங்க, எதிரிவீர சரச்சந்திர போன்ற ஆளுமைகள் இலக்கியம் மற்றும் கலையின் மூலம் சமூக மாற்றத்திற்கு வித்திட்டதையும், இவர்களின் தாக்கம் பிற்கால ஊடக மற்றும் கலைப்படைப்புகளுக்கு எவ்வாறு உந்துசக்தியாக அமைந்தது என்பதையும் இந்நூல் சுட்டுகிறது. ஷெஹான் கருணாதிலக்க போன்ற சமகால எழுத்தாளர்களின் உலகளாவிய அங்கீகாரமும், நந்தன வீரரத்ன போன்ற சிங்கள எழுத்தாளர்களின் யாழ்ப்பாண நூலக எரிப்பு போன்ற வரலாற்றுப் பதிவுகளும் ஊடகத்தின் பல்வகைத் தன்மையையும், உண்மையை வெளிப்படுத்தும் தேடலையும் காட்டுகின்றன.

இந்நூலின் ஆசிரியர், ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள், இந்த ஆய்வுக்களத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளார். ஒரு தமிழ் ஊடகவியலாளராக, சிங்கள மற்றும் தமிழ் ஊடக ஆளுமைகளின் போராட்டங்களையும் பங்களிப்புகளையும் ஒரே தளத்தில் வைத்துப் பார்ப்பது, இனங்களுக்கு இடையேயான புரிந்துணர்வையும், பொதுவான மனித விழுமியங்களுக்கான தேடலையும் வெளிப்படுத்துகிறது. ஐங்கரனின் எழுத்து, வெறும் தகவல்களைத் திரட்டுவதோடு நின்றுவிடாமல், ஆளுமைகளின் மனவுலகத்தையும், அவர்கள் சந்தித்த நெருக்குதல்களையும், அவர்களின் தியாகங்களையும் உணர்வுபூர்வமாகப் பதிவு செய்கிறது. இந்த சமநிலையான, விருப்பு வெறுப்பற்ற, நேர்மையான பார்வை, வாசகர்களுக்கு ஆழமான சிந்தனையைத் தூண்டி, இலங்கை சமூகத்தின் சிக்கலான யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள உதவுகிறது. டாக்டர். பிரின்ஸ் சரவணமுத்து மற்றும் விக்டர் ஐவன் போன்றோரின் தனித்துவமான பங்களிப்புகளைப் பற்றிய அவரது பகுப்பாய்வு, பரந்த அரசியல் சூழலில் தனிப்பட்ட துணிவின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இறுதியாக இந்நூல் சமகாலத்தில் ஏன் முக்கியமானது என்பதை நோக்குவோம்.

இன்றைய காலப்பகுதியில், உண்மைக்குக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களும், எழுத்தாளர்களும் உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தல்களைச் சந்திக்கும் நிலையில், இந்நூல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

போலிச் செய்திகள் (Fake News) மற்றும் தவறான தகவல்கள் (Misinformation) கோலோச்சும் இந்த டிஜிட்டல் உலகில், உண்மையை வெளிப்படுத்தும் தியாகங்களின் வரலாற்றை அறிவது அவசியமாகும் - அது எம் தார்மீக கடமை கூட. இலங்கை, இன்றும் அரசியல் ஸ்திரத்தன்மை, நீதி மற்றும் நல்லிணக்கம் போன்ற சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இத்தகைய சூழலில், கடந்தகாலத் தியாகங்களைப் பற்றிய ஒரு மீள் பார்வை, எதிர்காலத்திற்கான பாடங்களை உணர்த்தும். ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு, அதன் ஆளுமைகளின் தியாகங்களைப் போற்றுவதும், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதும் அத்தியாவசியம். இந்நூல் இன நல்லிணக்கத்திற்கான ஒரு பாலமாகச் செயல்படவும், சமூகத்தில் ஒரு ஆரோக்கியமான உரையாடலைத் தூண்டவும் உதவும்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்களின் இந்த அரிய முயற்சி, ஊடகத் துறைக்கும், சமூக ஆய்வுக்கும், குறிப்பாக இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றிற்கும் ஒரு முக்கியமான பங்களிப்பாகும். இது வெறும் ஆவணப்படுத்தல் மட்டுமல்ல, மாறாக, நீதிக்காகவும், மனித மாண்புகளுக்காகவும் போராடியவர்களின் ஆன்மாவை உயிர்ப்பிக்கும் ஒரு படைப்பு. இதனை ஆழ்ந்து வாசித்து, சிந்தனைக்கு எடுத்துக்கொள்வதன் மூலம், சத்தியத்தை நோக்கிய நமது பயணத்தை நாம் செழுமைப்படுத்த முடியும். இந்நூலை வாசிக்கும் ஒவ் வொருவரும், மனச்சாட்சியின் குரலாக ஒலிக்கும் துணிவையும், நீதிக்கான தேடலையும் தங்களுக்குள் வளர்த்துக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

இன்நூல் ஒளியை தேடும் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் ஒரு வழிகாட்டியாக அமை யும் என்பதில் ஐயமில்லை!

- கிறிஸ்டி நல்லரெத்தினம், மெல்பேர்ண்.

மேற்காசியப் போர்: தமிழ் மக்களின் நிலைப்பாடு?

22.03.2026

1991ஆம் ஆண்டு, “ஒபரேஷன் டிசேர்ட் ஸ்ட்ரோம்” - “பாலை நிலப் புயல்” என்ற பெயரில் ஒரு படை நடவடிக்கையை, அமெரிக்கா தலைமையிலான நாடுகள் ஈராக்குக்கு எதிராக முன்னெடுத்தன. 42 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அந்தப் படை நடவடிக்கையின் இராணுவ இலக்கு குவைத் நாட்டுக்குள் புகுந்த ஈராக்கியப் படைகளை அங்கிருந்து அகற்றுவது.

இதுதொடர்பாக அப்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தில், புவியியல் துறையில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கருத்தரங்கில் ஆய்வுரை நிகழ்த்திய புவியியல் துறையைச் சேர்ந்த புலமையாளர் தனது ஆய்வுரையில் “மத்திய கிழக்கு” என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அப்பொழுது அங்கே பார்வையாளராக வந்திருந்த பௌதீகவியல் துறையைச் சேர்ந்த ஒரு புலமையாளர் உரை நிகழ்த்தியவரிடம் கேட்டார், “ஏன் மத்திய கிழக்கு என்று அழைக்கிறீர்கள்? அது எங்களுக்கு மத்தியகிழக்கு இல்லைத்தானே? அப்படியென்றால் நீங்கள் எங்க நின்று கதைக்கிறீர்கள்? இங்க இருந்தா? அல்லது ஐரொப்பாவிலிருந்தா ? என்று.

அந்தக் கேள்வி ஆழமானது. மத்தியகிழக்கு என்பது பிரித்தானிய குடியேற்றவாத காலத்தில் குடியேற்றவாத நோக்கு நிலையில் இருந்து பிரித்தானிய குடியேற்றவாத அதிகாரி ஒருவரால் 1850 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தை. பிரித்தானியாவின் நோக்கு நிலையில் இருந்து கிழக்கை அவர்கள் தூர கிழக்கு (Far East) அண்மை கிழக்கு (Near East) மத்திய கிழக்கு (Middle East) என்று பிரித்தார்கள். பின்னர் அந்த வார்த்தை அமெரிக்கரும் கடல்சார் மூலோபாய ஆராய்ச்சியாளருமாகிய அல்பிரட் தாயர் மாகன் என்பவரால் ஆய்வு நோக்கு நிலையில் இருந்து (1902இல்) அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. அதிலிருந்து இந்த வார்த்தை பரவலாக உபயோகிக்கப்படுகிறது.

ஆனால் அது பிரித்தானிய “கொலோனியல் நோக்கு நிலையில்” - குடியேற்றவாத நோக்கு நிலையில் இருந்து பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தை என்பதனால் அதை நிராகரித்து இந்தியாவின் முதலாவது பிரதமர் ஆகிய ஜவஹர்லால் நேரு மேற்காசியா என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ஆசிய நோக்கு நிலையிலிருந்து அது ஆசியாவின் மேற்கே காணப்படுவதனால் அவ்வாறு அவர் அழைத்தார்.

எனவே அதை மத்திய கிழக்கு என்று அழைப்பதா அல்லது மேற்காசியா என்று அழைப்பதா என்பது அரசறிவியல் ஒழுக்கத்தின்படி எந்த மையத்திலிருந்து அந்தப் பிராந்தியத்தை நாங்கள் நோக்குகிறோம் என்பதைக் குறிக்கும். ஆனால் அதற்காக இப்பொழுது மேற்கு ஆசியாவை மத்திய கிழக்கு என்று அழைக்கும் ஆசியர்கள் இப்பொழுதும் “கொலோனியல் நீக்கம்” செய்யப்படவில்லை என்று மிகைப்படுத்திக் கூறத்தேவையில்லை. இப்பொழுது ஈரானை ஆதரிப்பவர்களும் மத்திய கிழக்கு என்கிறார்கள். அமெரிக்காவை ஆதரிப்பவர்களும் மத்திய கிழக்கு என்கிறார்கள். இங்கே வார்த்தைகள் அவற்றின் பெறுமதியுணர்ந்து பயன்படுத்தப்படுவது குறைவு.

அமெரிக்க எழுத்தாளர் ஏர்ணஸ்ற் ஹெமிங்வே கூறியதுபோல புனிதமிழந்த வார்த்தைகள். ஹெமிங்வே எழுதிய உலகப் புகழ் பெற்ற நாவலாகிய போரே நீ போ(“A Farewell to Arms” (1929) என்ற நாவலின் இறுதிப் பகுதியில் கதாநாயகன் சலிப்போடு பின்வரும் பொருள்படக் கூறுவான்… “போர் நிறுத்தம், சமாதானம், பேச்சுவார்த்தை போன்ற வார்த்தைகளுக்கு இப்பொழுது பொருள் இல்லை. புனிதமும் இல்லை. புனிதம் கெடாமல் இருக்கும் வார்த்தைகள் எவையென்றால், படைப் பிரிவின் பெயர்கள், படை அணிகளின் பெயர்கள், வீதிகளின் பெயர்கள், நகரங்களின் பெயர்கள் மட்டும்தான்”… என்று.

எனவே கடந்த மூன்று கிழமைகளுக்கு மேலாக நடந்து வரும் போர்க் களத்தை மத்திய கிழக்கு என்று அழைப்பவர்கள் அநேகமானவர்கள் அதன் சரியான பொருள் உணர்ந்து அழைக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அது நூற்றாண்டு காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும், நன்கு பழகிய வார்த்தை என்பதனால் பழக்கதோஷத்தில் அவர்கள் அதை அவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். அதை அவர்களுடைய அரசியல் சாய்வாக எடுத்துக்கொள்ள வேண்டுமா?

ஆனால் நிகழும் போரில் ஈழத்தமிழர்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் இதில் எடுக்கக்கூடிய நிலைப்பாடு யுத்தத்தின் போக்கை மாற்றப் போவதில்லை என்பதனால் தமிழர்கள் நிலைப்பாடு ஒன்றை எடுக்கவேண்டிய தேவை என்ன? என்று ஒரு பகுதியினர் கேட்கின்றார்கள். ஆனால், அரசு இல்லாத, நீதிக்காகப் போராடுகின்ற ஒரு மக்கள் கூட்டம் உலகில் நடக்கும் மோதல்கள் தொடர்பில் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அந்த நிலைப்பாட்டை அறத்தின் அடிப்படையில் எடுப்பதா? அல்லது ஒர் அரசுபோல சிந்தித்து முடிவெடுப்பதா?

மேற்காசிய யுத்தம் அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரிவடையுமாக இருந்தால் அது இப்போதுள்ள உலக அரசியலில் துருவ நிலைப் போக்குகளை மாற்றக்கூடும். எனவே கேந்திர முக்கியத்துவம் மிக்க ஓர் அமைவிடத்தைக் கொண்ட மக்களாகிய ஈழத் தமிழர்கள் இந்த விடயத்தில் தெளிவாக ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

போர் நிகழ்வது ஆசியக் களம். நேரடியாக மோதுவது இரண்டு ஆசிய நாடுகளும் அமெரிக்காவும். தவிர ஈரானைச் சுற்றியிருக்கும் நாடுகளில் அமெரிக்காவின் தளங்கள் உண்டு. எனவே போர்க்களம் அங்கேயும் விரிவடைந்திருக்கிறது. இதுவரையிலுமான உயிர்ச் சேதத்தைக் கணக்கிட்டால் அதிகமாகக் கொல்லப்பட்டிருப்பது ஆசியர்கள்தான். மிகச்சொற்பமான தொகை அமெரிக்கர்கள்தான் இறந்திருக்கிறார்கள். ஆசியாவுக்கே சேதம் அதிகம். ஆசியாவுக்கே உயிரிழப்புகள் அதிகம். ஆசியர்கள் ஒருவர் மற்றவரோடு மோதிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டதோர் பிராந்திய அரசியல் பின்னணிக்குள் ஆசியர்களாகிய ஈழத் தமிழர்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்?

ஆசிய சகோதரத்துவம் என்ற நிலைப்பாட்டை எடுக்கலாமா? ஈழத் தமிழர்களின் விவகாரத்தில், இறுதிக்கட்டப் போரில் ஆசிய நாடுகள் ஈழத் தமிழர்களோடு நிற்கவில்லை. ஈரானும் உட்பட பெரும்பாலான ஆசிய நாடுகள் அரசாங்கத்தோடுதான் நின்றன. அங்கே ஆசியர்கள் என்பதற்காக அவர்கள் ஈழத் தமிழர்களோடு தமது சகோதரத்துவத்தை நிரூபிக்கவில்லை.

மேலும் பொறுப்புக்கூறலுக்கான ஐநா நடவடிக்கைகளிலும் ஆசிய நாடுகள் பெருமளவுக்கு ஈழத் தமிழர்களோடு நிற்கவில்லை. அமெரிக்காவின் மேலாண்மையை அனுசரித்துப் போகும் மேற்கத்திய நாடுகள்தான் பெருமளவுக்கு ஐநா தீர்மானங்களைக் கொண்டு வருகின்றன. அப்படிப் பார்த்தால் கடந்த 16 ஆண்டுகால ஐநாமைய அரசியலின் அடிப்படையில் ஈழத் தமிழர்கள் மேற்கு நாடுகளின் பக்கம் நிற்கவேண்டுமா?

ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் இப்பொழுதும் பலஸ்தீனத்தை ஆதரிக்கிறார்கள். ஆனால் பலஸ்தீன தன்னாட்சி அதிகார அமைப்பானது இலங்கை அரசாங்கத்தோடுதான் நிற்கின்றது. போராடி வென்ற நாடுகளான வியட்நாம், கியூபா, எரித்திரியா போன்ற நாடுகளும் ஈழத்தமிழர்களோடு இல்லை. அந்த நாடுகள் அறநெறி, நீதிநெறி என்பவற்றின் அடிப்படையிலோ அல்லது நீதிக்கான போராட்டம் என்ற அடிப்படையிலோ ஈழத்தமிழர்களோடு தமது சகோதரத்துவத்தை வெளிப்படுத்தவில்லை.

அதேசமயம் ஐநாவில் தீர்மானங்களைக் கொண்டுவரும் மேற்கு நாடுகள் தமிழர்கள் மீது கொண்ட காதலால், அன்பினால் அல்லது அறத்தின் அடிப்படையில் அந்த முடிவை எடுக்கின்றன என்பதல்ல. பிராந்தியத்தில் சீனாவின் விரிவாக்கத்தை தடுப்பதற்கான ஒரு கருவியாக இலங்கை அரசாங்கத்தின் மீது எப்பொழுதும் ஒரு பிடியைப் பேணுவதற்கு அவர்கள் ஈழத் தமிழர் விவகாரத்தைக் கையாண்டு வருகிறார்கள் என்பதுதான் இராஜதந்திர யதார்த்தம்.

இதுதான் அரசுகளின் உலகம். எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டுடன் அல்லது அரசு இல்லாத சிறிய மக்கள் கூட்டத்துடன் வைத்துக்கொள்ளும் உறவு என்பது அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார்ந்த நலன்களின் அடிப்படையில் தான் பேணப்படும். அங்கே அறநெறி, நீதிநெறி, பிராந்திய சகோதரத்துவம் போன்றவை கிடையாது. அவையெல்லாம் “அம்புலிமாமா” கதைகளில் வருபவை.

ஈழப்போரின் போதும் போருக்கு முன்னரும் பின்னரும் இலங்கை இனப் பிரச்சினையில் பெரும்பாலான நாடுகள் இலங்கை அரசாங்கத்தைத்தான் கையாள முயற்சித்தன. அரசாங்கத்தைக் கையாள முடியாத நிலை வரும்பொழுது அரசாங்கத்தைப் பணிய வைப்பதற்காக தமிழ்மக்களை, தமிழ் மக்களின் போராட்டத்தை, தமிழ் மக்களின் அரசியலை ஓர் அழுத்தப் பிரயோக கருவியாக அவை கையாண்டன. இப்பொழுதும் கையாண்டு வருகின்றன. இதுதான் கடந்த சுமார் அரை நூற்றாண்டு கால அனுபவம்.

இப்படிப்பட்டதோர் குரூர உலகில், அரசு இல்லாத சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்கள் எப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுக்கலாம்? எனது கட்டுரைகளில் நான் திரும்பத்திரும்பக் கூறும் ஓர் ஆபிரிக்கப் பழமொழி உண்டு. “நீ நீதியாக இருக்கிறாய் என்பதற்காக உலகம் உன்னிடம் நீதியாக நடந்து

கொள்ளும் என்று எதிர்பார்க்காதே. அவ்வாறு எதிர்பார்ப்பது, நீ சிங்கத்தைச் சாப்பிட மாட்டாய் என்பதற்காக சிங்கம் உன்னைச் சாப்பிடாது என்று நம்புவதற்கு நிகரானது.”

இதுதான் உலக அரசியல். ஈழத் தமிழர்கள் ஒரு தேசமாகத் திரளும்போது ஜோன் லொகே கூறுவது போல “ஒரு சமூகத்தின் பலமானது அந்தச் சமூகத்தின் தார்மீக ஒருமைப்பாட்டில் தங்கியிருக்கிறது” என்ற அடிப்படையில் திரளவும் வேண்டும். அதே சமயம் அரசுகளின் அரங்கில் ஓர் அரசைப்போலவும் சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். “புலிகள் சண்டையிடும்போது மலை உச்சியில் அமர்ந்திருந்து அதைப் பார்க்கவேண்டும்” என்ற சீனப் பழமொழி இங்கே பொருத்தமாக இருக்குமா?

நன்றி: நிலாந்தன்

நாம்

ஒன்றுபட்ட மக்களாக – ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

கணித மேதை அலி லரிஜானியின் இழப்பு: ஈரானின் சமாதான தூதரை பலியெடுத்த அமெரிக்கா!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

24.03.2026

ஈரானின் உச்சத் தலைவர் ஆயத்துல்லா அலி கொமனி கொல்லப்பட்ட பிறகு, மிக முக்கியமான பிரமுகர்களில் ஒருவராகக் கருதப்பட்ட அலி லரிஜானி (Ali Larijani), நாட்டின் மிகப்பெரிய அதிகார மையமாக உருவெடுத்தார்.

ஆனால், மார்ச் 18 இரவு, அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்து ஈரானுக்கு எதிராக நிகழ்த்திய தாக்குதலின் போது, 67 வயதான அலி லரிஜானி உயிரிழந்துள்ளதாக, இஸ்ரேல் அறிவித்தது. இதனை ஈரான் அரசு ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஈரான் பாதுகாப்பை வழிநடத்தியவர்:

1958 ஜூன் 3 ஆம் திகதி, ஈராக்கின் நஜாஃபில் பிறந்த லரிஜானி, ஈரானின் அமோல் (Amol) நகரத்தைச் சேர்ந்த பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர். 2009 இல் டைம் சஞ்சிகை (Time Magazine) லரிஜானியின் குடும்பத்தை "ஈரானின் கென்னடிகள்" என்று குறிப்பிட்டிருந்தது.

அவரது தந்தை மிர்ஸா ஹாஷிம் அமோலி புகழ்பெற்ற மத அறிஞர். அவரது சகோதரர்களும் நீதித்துறை, நிபுணர்கள் சபை போன்ற உயர் பதவிகளில் இருந்தனர். 1979 புரட்சிக்குப் பிறகு, தனது 20 வயதில் லரிஜானி இஸ்லாமிய குடியரசின் நிறுவனர் கொமெய்னியின் நெருங்கிய நண்பர் மொர்தேஜா மொதஹறியின் மகள் ஃபரிதா மொதஹறியைத் திருமணம் செய்து கொண்டார்.

அவரது குடும்பம் பழமைவாத மதப் பின்னணியைக் கொண்டிருந்த போதிலும், அவரது பிள்ளைகளின் வாழ்க்கைப் பாதை பன்முகத்தன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது. மகள் ஃபாத்திமா, தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படித்து, அமெரிக்காவின் ஒஹையோவில் உள்ள கிளீவ்லேண்ட் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பயிற்சி முடித்துள்ளார்.

கணிதவியலாளர் – தத்துவஞானி:

1979 புரட்சிக்குப் பிறகு, 1980-களின் முற்பகுதியில் அவர் ஈரானிய புரட்சிகரப் பாதுகாப்புப் படையில் (IRGC) சேர்ந்தார். பின்னர் அரசாங்கத்திற்கு மாறி, 1994 முதல் 1997 வரை ஜனாதிபதி அக்பர் ஹஷேமி ரஃப்ஸஞ்சானியின் கீழ், கலாச்சார அமைச்சராகவும், அதன் பிறகு 1994 முதல் 2004 வரை அரசு ஒளிபரப்பு நிறுவனமான IRIB-ன் தலைவராகவும் பணியாற்றினார். IRIBல் அவர் பணியாற்றிய காலத்தில், அவரது கட்டுப்பாடான கொள்கைகள் காரணமாக சீர்திருத்தவாதிகளிடம் இருந்து கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டார்.

2008-2020 வரை மூன்று முறை பாராளுமன்ற சபாநாயகராக இருந்து உள்நாட்டு-வெளியுறவுக் கொள்கைகளை வடிவமைத்தார். எல்லோரையும் போல் லரிஜானி மதப் பள்ளிகளில் மட்டும் படிக்கவில்லை. 1979 இல் அவர் ஷெரீஃப் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் கணிதம் மற்றும் கணினி அறிவியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

பின்னர், தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் மேற்கத்திய தத்துவத்தில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களை முடித்த அவர், ஜேர்மன் நாட்டு தத்துவஞானியான இம்மானுவேல் காண்ட்டைப் (Immanuel Kant) பற்றி தனது ஆய்வுக் கட்டுரையை எழுதினார்.

ஈரானை வழிநடத்திய லரிஜானி

ஈரானின் உச்சத் தலைவர் ஆயத்துல்லா அலி கொமனி கொல்லப்பட்ட பிறகு, மிக முக்கியமான பிரமுகர்களில் ஒருவராகக் கருதப்பட்ட அலி லரிஜானி (Ali Larijani), நாட்டின் மிகப்பெரிய அதிகார மையமாக உருவெடுத்தார்.

அலி லரிஜானி ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளராக இருந்தவர். இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை தெஹ்ரானில் அல்-குத்ஸ் தின பேரணியில் பொதுமக்கள் முன் அவர் தோன்றினார். கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் நாள்

ஈரானை வழிநடத்திய தேசிய பாதுகாப்பு சபை செயலாளரான அலி லரிஜானி அமெரிக்கா உடன் அணுசக்தி பேச்சுவார்த்தை நடத்திய குழுவில் இருந்தார். அவரின் இழப்பு ஈரானுக்கு மட்டுமன்றி, சர்வதேச அளவில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கணித விஞ்ஞானி லரிஜானியின் இழப்பானது ஈரானின் சமாதான தூதரை சர்வதேசம் பறிகொடுத்துள்ளது

போரின் போது, நிகழ்ந்த ஆயத்துல்லா அலி கமனேயின் உயிரிழப்புக்கு பின்னர், இந்த போரில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட ஈரானிய உயர்மட்ட அதிகாரி அலி லரிஜானி ஆவார்.

இவர் பல ஆண்டுகளாக ஈரான் சர்வதேச வர்த்தக அமைப்பின் அமைதியான, நடைமுறைவாத முகமாக இருந்தவர். மேற்கத்திய நாடுகளுடன் அணு ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளார்.

தற்போதய போர் அமெரிக்காவும், இஸ்ரேலிய சியோனிஸ்ட் ஆட்சியும் ஈரான் மக்களின் இதயத்தை தீக்கிரையாக்கியுள்ளன. நாங்கள் அவர்களின் இதயத்தை எரிப்போம். சியோனிஸ்ட் குற்றவாளிகளையும் அமெரிக்கர்களையும் தாங்கள் இழைத்த அநீதிகளை நினைத்து வருந்தச் செய்வோம் என அவர் கூறியுள்ளார். ஈரானின் வீரர்களும் மக்களும் சர்வதேச அடக்குமுறையாளர்களுக்கு மறக்க முடியாத பாடம் புகட்டுவார்கள் என்று அலி லரிஜானி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இஸ்ரேல் சூழ்ச்சியில் விழுந்துவிட்டார் என்றும் லரிஜானி குற்றம் சாட்டியிருந்தார். 1979 புரட்சிக்குப் பிறகு, ஈரானுக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் ஆட்சி அமைப்பின் முக்கிய இடத்தில் இருந்துள்ளார் லரிஜானி. உச்சத் தலைவர் ஆயத்துல்லா அலி கொமனேயியின் மரணத்தின் பின்னர், நாட்டை வழிநடத்திய மூன்று பேர் கொண்ட இடைக்கால கவுன்சிலுடன் அவர் முக்கிய பங்காற்றினார்.

உயர் தலைமையில் அலி லரிஜானி:

அரசியல் பயணத்தில் அலி லரிஜானி 2005 இல் வேட்பாளராக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டார். ஆனால் வெற்றி பெற வில்லை. அதே வருடம் அவர் உச்ச தேசியப் பாதுகாப்புக் குழு வின் செயலாளராகவும், நாட்டின் தலைமை அணுசக்திப் பேச்சுவார்த்தையாளராகவும் நியமிக்கப்பட்டார். அப்போதைய ஜனாதி பதி மஹ்மூத் அஹ்மதி நெஜாத்தின் அணுசக்திக் கொள்கைகளி லிருந்து விலகிய அலி லரிஜானி, 2007 இல் அந்தப் பதவிகளி லிருந்தும் விலகினார்.

மீண்டும் லரிஜானி 2008 இல் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி சபாநாயகரானார். இது அவரது செல்வாக்கை அதிகரிக்க உதவியது. மேலும் அவர் அணுசக்தி விவகாரத்துடனான தனது தொடர்பைத் தக்கவைத்துக் கொண்டு, ஈரான் மற்றும் உலக வல்லரசுகளுக்கு இடையேயான 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்திற்கு நாடாளுமன்ற ஒப்புதலைப் பெற்றார்.

இந்த ஒப்பந்தம் கூட்டு விரிவான செயல் திட்டம் (JCPOA) என்று அழைக்கப்படுகிறது.

2020 இல் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகிய பிறகு, லரிஜானி 2021 தேர்தலில் இரண்டாவது முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முயன்றார். ஆனால் இந்த முறை, வேட்பாளர்களைத் தகுதி ஆய்வு செய்யும் கார்டியன் கவுன்சிலால் (Guardian Council) அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முயன்றபோதும் அவர் மீண்டும் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்தத் தகுதி நீக்கங்களுக்கான காரணத்தை கார்டியன் கவுன்சில் தெரிவிக்கவில்லை. ஆனால் 2021 இல் நடந்த இந்த நடவடிக்கையை, தேர்தலில் வெற்றி பெற்ற கடும்போக்காளர் இப்ராஹிம் ரைசிக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கான ஒரு வழியாகவே ஆளும் வர்க்கம் கருதியதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

2024 இல் நடந்த இந்தத் தகுதி நீக்கத்தை, லாரிஜானி வெளிப்படையற்றது என்று விமர்சித்தார். ஆனால், 2025 ஆகஸ்டில் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியனால் உச்ச தேசியப் பாதுகாப்புக் குழுவின் செயலாளர் என்ற செல்வாக்குமிக்க பதவிக்கு லரிஜானி மீண்டும் நியமிக்கப்பட்ட பின்னர், 2025 ஒக்டோபரில் IAEA உடனான ஒப்பந்தத்தை ரத்து செய்தார்.

ஈரானின் யதார்த்தவாதி:

கடுமையான நிலைப்பாடு இருந்தபோதிலும், 2015 அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரிப்பதில் அவர் ஆற்றிய கடந்தகாலப் பங்கின் காரணமாக, லரிஜானி பெரும்பாலும் யதார்த்தவாதியாகவும், ஈரானிய அமைப்புக்குள் சமரசம் செய்துகொள்ளத் தயாராக இருக்கக்கூடிய ஒருவராகவும் கருதப்பட்டார்.

தற்போதைய போர் பதற்றம் அதிகரிப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பு, லரிஜானி அமெரிக்காவுடன் மறைமுகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. கடந்த பெப்ரவரியில், ஓமானின் மத்தியஸ்தத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது, வொஷிங்டனிடமிருந்து தெஹ்ரான் ஒரு குறிப்பிட்ட முன்மொழிவைப் பெறவில்லை என்றும், ஒரு போரைத் தூண்டுவதற்காக இராஜதந்திரப் பாதையைச் சீர்குலைக்க இஸ்ரேல் முயற்சிப்பதாகவும், அவர் குற்றம் சாட்டினார்.

ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு முன்பு, அல் ஜசீராவுக்கு அளித்த நேர்காணலில் லரிஜானி பேச்சுவார்த்தைகள் குறித்த தனது நாட்டின் நிலைப்பாட்டை நேர்மறையானது என்று விவரித்தார். இராணுவ நடவடிக்கை சாத்தியமில்லை என்பதை அமெரிக்கா உணர்ந்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் பேச்சுவார்த்தையை நாடுவதே ஒரு பகுத்தறிவுமிக்க வழி என்றும் அவர் அப்போது கூறினார்.

இருப்பினும், அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதல்கள், இராஜதந்திரப் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பை தகர்த்துவிட்டன. அரசியலமைப்பின்படி தலைமைப் பதவி மாற்றத்தை ஏற்பாடு செய்வதற்கான திட்டங்கள் தயாராக இருப்பதாக லரிஜானி நாட்டு மக்களுக்கு உறுதியளித்தார். மேலும் தலைவர்களைக் கொல்வது ஈரானை நிலைகுலையச் செய்யும் என்று நினைப்பது ஒரு மாயை என அவர் அமெரிக்காவை எச்சரித்தார்.

நாங்கள் பிராந்திய நாடுகளைத் தாக்க எண்ணவில்லை, ஆனால் அமெரிக்கா பயன்படுத்தும் எந்தத் தளங்களையும் நாங்கள் கண்காணிப்போம் என்று அவர் கூறினார். அவருடைய யதார்த்தமான தொனி பின்வாங்குவதாக தோற்றமளித்தது. இதனைத்தொடர்ந்து அமெரிக்காவுடன் புதிய பேச்சுவார்த்தைகளை அவர் விரும்புவதாக வந்த ஊடகச் செய்திகளை லரிஜானி நிராகரித்தார், ஈரான் வொஷிங்டனுடன் பேச்சுவார்த்தை நடத்தாது, என்றும் தெரிவித்தார்.

இஸ்ரேலை அச்சுறுத்தி அதிர வைக்கும் ஈரானின் ட்ரோன் தொழில் நுட்ப வளர்ச்சி:

-ஐங்கரன் விக்கினேஸ்வரா -

17.03.2026

வளைகுடாவில் ஈரானின் ஏவுகணை தாக்குதல்கள் பாரிய அதிர்வலைகளை உண்டாக்கி இருக்கின்றன. இந்த ஏவு கணை போர் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து விட்டதை அமெரிக்கா அரசு அச்சமடையும் வண்ணம், கலிபோர்னியாவில் ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை அமெரிக்கா அரசு உடனடியாக உறுதி செய்யாவிடினும், இந்த ஏவுகணை ஆபத்தை உணர்ந்து உள்ளதாக தெரிகிறது.

கலிபோர்னியாவில் ஈரானிய ட்ரோன்?

கலிபோர்னியாவில் ஈரான் ட்ரோன் தாக்குதல் எச்சரிக்கையை வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துள்ளனர். வளை குடாவில் ஈரானுடனான போரில் அமெரிக்கா மிகவும் மூர்க்க மாக தாக்குதலை நடத்தி வரும் நிலையில், கலிபோர்னியாவை குறிவைத்து ஈரானிய ட்ரோன் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை முதலில் அமெரிக்க உளவு நிறுவன FBI செய்தி வெளி யிட்டில் எச்சரிக்கையை வெளியிட்டது. இதனை தொடர்ந்து அமெரிக்க உளவு அமைப்பு இதனை போலியான தகவல் என அறிவித்துள்ளது. தற்போது வளைகுடாவில் ஈரானின் ஏவு கணைப்பலம் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து விட்டதை அமெரிக்கா உறுதி செய்துள்ளது. இந்த போர் தொடங்கியதி லிருந்து முதல் முறையாக செஜ்ஜில் (Sejjil missile) ஏவு கணையை ஈரான் ஏவியுள்ளது, இதை கண்டறிவதும் இடை மறிப்பதும் மிகவும் கடினமானது என்றும் கூறப்படுகிறது.

இப்பொழுது ஏவப்படும் ஏவுகணைகளையே சமாளிக்க முடி யாமல் இருக்கும் பொழுது இதை எப்படி இஸ்ரேல் சமாளிக்க போகின்றது? அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தப்பு கணக்கு மிகப்பெரிய அழிவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்று இரா ணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஈரானின் செஜ்ஜில் ஏவுகணை முழுக்க முழுக்க உள்நாட் டிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகும். நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய செஜ்ஜில் திட எரிபொருள் நிரப்பப்பட்ட ஏவுகணை ஆகும். திட எரிபொருள் நிரப்பப்பட்ட செஜ்ஜில் ஏவுகணைகளை நடமாடும் ஏவுதளத்தில் இருந்தே ஏவ முடியும். ஈரானின் செஜ் ஜில் ஏவுகணை 23 டன் எடையும் 60 அடி உயரமும் கொண்ட தாகும்.

செஜ்ஜில் என்பது இரண்டு கட்ட நடுத்தர தூர பாலிஸ்டிக் ஏவு கணையாகும், இது சுமார் 2,000 முதல் 2,500 கிலோமீட்டர் வரை மதிப்பிடப்பட்ட வரம்பைக் கொண்டுள்ளது, இது ஈரானிய பிரதேசத்திலிருந்து மத்திய கிழக்கின் பெரும்பகுதி முழுவதும் உள்ள இலக்குகளை அடைய அனுமதிக்கிறது.

வளைகுடாவில் உள்ள அமெரிக்க படைத் தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது செஜ்ஜில் ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. நடனமாடும் ஏவுகணை என வர்ணிக்கப்படும் செஜ்ஜில், எதிரியின் ஏவுகணை தடுப்பு கேடயங்களையும் தாண்டி தாக்க கூடியது. ஏவுகணை எதிர்ப்பு குண்டுகள் வந்தால் அதனை எதிர்கொண்டு பாதையை மாற்றிச் சென்று செஜ்ஜில் தாக்கக் கூடியது. செஜ்ஜில் ஏவுகணை தனது பாதையை விரும் பியபடி மாற்றிக் கொண்டே செல்வதால் அவற்றை தடுத்து அழிப்பது எளிதல்ல என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவசியமற்ற போரில் அமெரிக்கா

இந்த ஆண்டின் அவசியம் அற்ற ஓர் இராணுவ நடவடிக்கை ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், அது அமெரிக்கா ஈரான் மீதான ஆதிக்க - ஆக்கிரமிப்பு செலுத்தும் தாக்குதலாகும். அது மாத்திரமன்றி ஈரானுக்கு அருகில் பல போர்க் கப்பல்களை கொண்டு வந்து நிறுத்தி வளைகுடா பிராந்தியத்தையே பயப் பீதியில் அமெரிக்கா வைத்திருந்தது.

ஆழம் அறியாமல் காலை விட்டது போல அமெரிக்க அரசு இஸ் ரேலை நம்பி இந்த அநாவசிய போருக்கு ஒப்புக் கொண்டது. தற் போது உலக எண்ணெய் சந்தையில் பாரிய தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளமைக்கு இந்த போரே காரணம் என்பது தெளிவாகிறது. இந்த அமெரிக்காவின் போர் தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என்று சொன்னால் அது மிகையாகாது.

இதற்கு மிக முக்கியமான காரணம் தான். ஈரானின் அசுரத்தன மான ட்ரோன் (Drone) தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக தற் போதய போரில் ஈரானின் பலம் அதிகரித்துள்ளது. ஈரானிய ட்ரோன் தொழில்நுட்பத்தின் ஆழம் தெரியாமல் அமெரிக்கா காலை விட்டு படுகுழியை பார்க்க முற்பட்டுள்ளது என்றுங்கூட கூறலாம்.

2011 சம்பவமே ஈரானின் இன்றைய ட்ரோன் பலத்திற்கு அடித்தளமிட்டது. அமெரிக்காவின் அவமானம் மிக்க ஒரு மிகப் பெரிய சறுக்கல் தான் இந்த சம்பவம். அமெரிக்காவின் அதி நவீன உளவு ட்ரோனான Lockheed Martin RQ-170 Sentinel, ஈரானிய எல்லைக்குள் நுழைந்தபோது, ஈரானிய தொழில்நுட்ப வல்லுநர்கள் அதன் கட்டுப்பாட்டு அமைப்பிற்குள் ஊடுருவி (Electronic hijacking), அதை எவ்வித சேதமுமின்றி பத்திரமாக தரையிறக்கினர்.

அதிநவீன ட்ரோன் ஆய்வு

உலகமே வியக்கும் வண்ணம், அந்த அதிநவீன ட்ரோனை முழுமையாக ஆய்வு செய்து (Reverse-engineering), அதன் நகலாக Shahed 171 Simorgh என்ற புதிய வகை ட்ரோனை ஈரான் உருவாக்கியது. அமெரிக்காவின் இரகசிய தொழில் நுட் பத்தையே அமெரிக்காவிற்கு எதிராகத் திருப்பும் வித்தையை அன்று ஈரான் உலகிற்கு நிரூபித்தது.

ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் ஒரு தேனீக் கூட்டம் போல பாய்ந்து வரும்போது, உலகின் எவ்வளவு பெரிய பாதுகாப்பு அமைப்பாக இருந்தாலும் நிலைகுலைந்து போகும். அமெரிக்காவின் ஏவுகணை தடுப்பு அமைப்புகள் (Missile Defense Systems) மிக வலிமையானவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், ஈரானின் மலிவான மற்றும் அதிவேக ட்ரோன்கள் ஆயிரக்கணக்கில் ஒரே நேரத்தில் தாக்கும்போது, அமெரிக்காவின் ரேடார் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளால் அவை அனைத்தையும் இடைமறிக்க முடியாது என்ற நிலையே ஏற்பட வாய்ப்புள்ளது.

ஈரானின் ட்ரோன்கள் வெறும் உளவு பார்ப்பதோடு நின்று விடாமல், வெடிமருந்துகளைச் சுமந்து கொண்டு தற்கொலைப் படைத் தாக்குதல் (Kamikaze Drones) நடத்துவதில் வல்லமை பெற்றவை. அமெரிக்கா ஒரு ட்ரோனைச் சுட்டு வீழ்த்த பயன் படுத்தும் ஏவுகணையின் விலை பல மில்லியன் டாலர்கள். ஆனால், ஈரானின் ஒரு ட்ரோனின் விலை மிகக் குறைவு. $20,000 டாலர்கள் மட்டுமே செலவாகும் என்று கூறப் படுகிறது.

மேலும் ரேடார்களில் சிக்காமல் பறக்கும் (Stealth) தொழில் நுட்பத்தில் ஈரான் இன்று உக்ரைனுடன் போரிட ரஷ்யாவிற்கே ட்ரோன்களை வழங்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. உக் ரேனிய நாட்டில் பல்லாயிரம் ஈரான் ட்ரோன்கள் போரில் பயன் படுத்தப்படுகின்றன.

ஈரானின் ஏவுகணை போர் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து விட்டதை அமெரிக்கா அரசு அச்சமடையும் வண்ணம், கலிபோர்னியாவில் ட்ரோன் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் கசிந்தன. இதனை அமெரிக்கா அரசு உடனடி-யாக உறுதி செய்யாவிடினும், இந்த ஏவுகணை ஆபத்தை உணர்ந்து உள்ள தாக தெரிகிறது

எதிரியை பலவீனப்படுத்தும் உத்தி

இஸ்ரேலிய இலக்குகள் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது தொடர்ந்து ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஈரான் ஏவுகிறது. இந்தத் தாக்குதல்களில் பல இராணுவ, பொருளாதார இலக்குகள் தொடர்ந்து குறிவைக் கப்படுகின்றன.

முதலாவதாக, அவை அமெரிக்காவையும் இஸ்ரேலையும் தங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகளைப் பயன்படுத்தி உள்ளே நுழையும் ஏவுகணைகளைத் தடுக்க கட்டாயப்படுத்துகின்றன. எம்.ஐ.எம்-104 பேட்ரியாட், தாட் போன்ற அமைப்புகள் மிகவும் மேம்பட்டவை. ஆனால், அவை மிகவும் விலை உயர்ந்தவை மற்றும் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன.

பெரும்பாலும், தாக்குதலை நிறுத்தப் பயன்படுத்தப்படும் ஏவு கணைகள், அவை அழிக்கும் ட்ரோன்கள் அல்லது ஏவுகணை களை விட அதிக விலை கொண்டவை. இரண்டாவதாக, தொடர்ச்சியான தாக்குதல்கள் எதிரியின் ஆயுத விநியோகம், போக்குவரத்து அமைப்புகள், இராணுவ தயார்நிலையில் அழுத் தத்தை ஏற்படுத்தக்கூடும். மோதலின் முதல் வாரத்துக்குள் அமெரிக்க படைகள் ஏற்கெனவே அதிக எண்ணிக்கையிலான துல்லியமான ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு ஏவுகணை

களைப் பயன்படுத்தி வருவதாக தி வாஷிங்டன் போஸ்டின் செய்தி கூறுகிறது.

ட்ரோன் தொழில்நுட்ப அசுர வளர்ச்சி

பாரசீக வளைகுடா (Persian Gulf) என்பது புவியியல் ரீதியாக மிகவும் குறுகலான ஒரு பகுதி. அமெரிக்கா தனது பலத்தைக் காட்ட விரும்பி, தனது படைகளை ஈரானின் ஏவுகணைகளுக்கும் ட்ரோன்களுக்கும் மிக எளிய இலக்காக மாற்றிவிட்டது. ஈரானின் வீட்டு வாசலுக்கே வந்து, அவர்களின் பலமான ட்ரோன் தாக்குதல் எல்லைக்குள் படைகளை நிறுத்தியது அமெரிக்காவின் இந்த நூற்றாண்டின் இராஜதந்திர மற்ற செயலாகும் என்று கூறப்படுகிறது.

ட்ரோன் தொழில்நுட்பத்தில் ஈரான் அடைந்திருக்கும் அசுர வளர்ச்சியை உணராமல் எடுக்கப்பட்ட இந்த முடிவு, எதிர் காலத்தில் அமெரிக்காவிற்கு ஒரு கசப்பான பாடத்தை புகட்டப் போவது உறுதி.

ஈரான் போர் வியூகம்

ஆக்கிரமிப்புக்கு ஈரானின் பதிலடி, ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவால் கட்டுப்படுத்தப்படவில்லை எனவும், மோதல் பல மாதங்கள் அல்லது அதற்கு மேலும் தொடரக்கூடும் என்றும் ஈரான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவை போலன்றி, ஈரான் ஒரு நீண்ட போருக்குத்



தன்னைத் தயார் படுத்திக்கொண்டுள்ளமை தெரிகிறது.

அத்துடன் யுத்த நிறுத்த பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்பையும் ஈரான் நிராகரித்துள்ளது.

இது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் வழக்கமான இராணுவ மேலாதிக்கத்தை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட ஈரானின் நீண்ட கால போர் கோட்பாட்டைப் பிரதிபலிப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஈரானுக்குள்ளும் உலகளவிலும் இந்த மோதலின் விளைவாக ஏற்படும் பொருளாதார விளைவுகள், போர் எவ்வளவு காலம் நீடிக்க முடியும் என்பதைத் தீர்மானிப்பதில் ஒரு தீர்க்கமான முடிவை எவராலும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஈரான் அதிகாரிகள் நீண்டகால மோதலுக்குத் தயாராக இருப்பதாகத் தொடர்ந்து கூறி வருகின்றனர். ஈரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை பயன்படுத்தி அமெரிக்க, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைப்புகளைப் பலவீனப்படுத்துவதாகவும் பிராந்தியத்தில் அவர்களின் நிதி மற்றும் தளவாடச் செலவுகளை அதிகரிப்பதாகவும் தெரிகிறது.

நீண்ட காலம் ஆயுத விநியோகம்

ஈரான் அதிகாரிகள் தங்கள் ஆயுத விநியோகம் நீண்ட காலம் நீடிக்கும் என்கிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் குறைந்தது ஆறு மாதங்களுக்குத் தங்கள் இராணுவம் அதிக தீவிரம் கொண்ட போரைத் தொடர முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஈரான் தளபதிகள் தங்கள் ஏவுகணைகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுப் பல உற்பத்தித் தளங்களில் அதிக எண்ணிக்கையில் சேமித்து வைக்கப்பட்டு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

இதன் காரணமாக, ஈரான் காலப்போக்கில் அதன் தாக்குதல்களைப் பரவலாக்கி வருவதாகத் தெரிகிறது. இது அதன் எதிரிகளை ஒரேயொரு பெரிய தாக்குதலை எதிர்கொள்வதற்குப் பதிலாகத் தொடர்ந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு கட்டாயப்படுத்துகிறது.

இந்த உத்தி, ஈரான் பல ஆண்டுகளாக உருவாக்கி வரும் இராணுவ அணுகுமுறையின் ஒரு பகுதியாகும். ஈரான் – ஈராக் இடையிலான போருக்குப் பிறகு, ஈரான் சமச்சீரற்ற போருக்கு தயாராகும் வகையில் அதிகளவில் முதலீடு செய்தது. இந்த வகையான போர், பாரம்பரிய வழியில் போராடாமல் வலுவான

இராணுவங்களுக்கு சவால் விடக்கூடிய முறைகளில் கவனம் செலுத்துகிறது.

ஒரு வலுவான எதிரியை நேரடியாகத் தோற்கடிப்பது அவர்களின் இலக்கு அல்ல. மாறாக, போரை நீண்டதாகவும், செலவு மிக்கதாகவும், கடினமானதாகவும் அவர்களுக்கு மாற்றுவதே ஆகும் என்று ஈரான் இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போராரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

உலக அரசியலை நிர்ணயிக்கும் இராணுவ மூலதனப் பொருளாதாரம்:

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

26.04.2026

உலக அரசியல் என்பது நாம் செய்தித்தாள்களில் வாசிப்பது போல அவ்வளவு எளிதானது அல்ல. தேசபக்தி, பாதுகாப்பு மற்றும் ஜனநாயகம் என்ற திரைக்குப் பின்னால், உலகையே ஒரு திரைமறைவின் பின்னால் இருந்து இயக்கும் ஒரு நிழல் சாம்ராஜ்யம் உள்ளது. அதுதான் இராணுவ தொழில் துறை வர்த்தகமாகும் (Military-Industrial Complex).

ஒரு நாட்டின் இராணுவம் மற்றும் ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையே ஏற்படும் நெருக்கமான உறவு, ஜனநாயகத்தையே சிதைத்துவிடும் என்று கூறப்படுகிறது. இதனையே அரசியல் இராணுவ வர்த்தக இரும்பு முக்கூட்டு என அழைக்கப்படுகிறது. இந்த “Iron Triangle” என்ற பெயரில் ஒரு பெரும் அதிகார மையம் உலகில் உருவெடுத்துள்ளது.

ஆயுத நிறுவனத்தில் அரசியல்வாதி

உலக அதிகாரம் மூன்று புள்ளிகளில் தான் சுழல்கிறது. இந்த இரும்பு முக்கூட்டு ஆயுத நிறுவனங்களான Lockheed Martin, Boeing, RTXஇன் போர் வியாபாரத்தில் தங்கியுள்ளது. அமெரிக்க இராணுவம் தங்களுக்குப் பில்லியன் கணக்கான டாலர் பட்ஜெட் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே உலகின் பல நாடுகளிலும் போர் பயத்தை உருவாக்குகிறார்கள்.

இதற்கு உடந்தையாக அரசியல்வாதிகள் இராணுவ விற்பனை நிறுவனங்களிடம் தேர்தல் நிதி பெற்றுக்கொண்டு, போர் ஒப்பந்தங்களுக்குக் கையெழுத்திடுகிறார்கள். இந்தச் சங்கிலித் தொடரைத்தான் “இராணுவக் கீனீசியவாதம்” (Military Keynesianism) என்கிறார்கள். அதாவது, ஆயுதம் தயாரிப்பதன் மூலம் நாட்டின் GDP உயர்வதாகக் காட்டி, மக்களை ஏமாற்றும் ஒரு பொருளாதார மாயை ஒன்றை உருவாக்குகின்றனர்.

உண்மையில் ஒரு நாட்டின் அதிபர் நினைத்தால் மட்டுமே போர் நடக்கும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், அந்த அதிபரைத் தீர்மானிப்பதே இந்த ஆயுத நிறுவனங்கள் தான்.

அமெரிக்காவின் ஒவ்வொரு அரசியல் முடிவுக்குப் பின்னாலும் Lockheed Martin, Boeing, Northrop Grumman, Raytheon, General Dynamics, போன்ற ஆயுத விற்பனை நிறுவனங்களின் கோடிக்கணக்கான டாலர்கள் பாய்கின்றன.

இந்த நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமான சட்டங்களை இயற்றவும், இராணுவ பட்ஜெட்டை அதிகரிக்கவும் கோடிக் கணக்கான டாலர்களைச் செலவழித்து அரசியல்வாதிகளைத் தங்கள் வசப்படுத்துகின்றன. இன்று ஒரு நாட்டின் பாதுகாப்புத் துறையில் கொள்கைகளை வகுக்கும் அதிகாரி, நாளை அதே ஆயுத நிறுவனத்தில் பல கோடி ரூபாய் சம்பளத்தில் ஆலொசகராகப் பதவியேற்பார் என்பது அனைவரும் அறிந்ததே.

இந்தச் சங்கிலித் தொடரால், மக்களின் வரிப்பணம் கல்விக்கோ அல்லது மருத்துவத்திற்கோ செல்லாமல், தேவையற்ற ஆயுதத் தயாரிப்பிற்குத் திருப்பி விடப்படுகிறது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் ஆயுத நிறுவனங்களில் உயர் பதவிகளிலும், அதே நிறுவனங்களின் முன்னாள் அதிகாரிகள் அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறையிலும் பதவிக்கு அமர்த்தப்படுகிறார்கள். இதன் மூலம் இராணுவ கொள்கை முடிவுகளை நேரடியாகப் தமக்கு சாதகமாக்கி கொள்கின்றனர்.

இராணுவ விற்பனை நிறுவனங்களின் அடிப்படை விதியே “அமைதி என்பது நஷ்டம், போர் என்பது லாபம்” என்பது தான். இந்த நிறுவனங்களின் வருமானம் பெருக வேண்டு மானால், உலகில் எங்காவது ஒரு மூலையில் போர் அல்லது பதற்றமான சூழல் நிலவிக் கொண்டே இருக்க வேண்டும்.

இதற்காக இவர்கள் கையாளும் உத்திகள் அதிர்ச்சியூட்டுபவை. செயற்கையான அச்சுறுத்தல்கள் (Manufactured Threats)களை உருவாக்கி பனிப்போர் (Cold War) காலம் முதல் இன்றைய பிராந்திய மோதல்கள் வரை, பல நிகழ்வுகள் உண்மையான ஆபத்தை விட பல மடங்கு பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றன.

முடிவுக்கு வராத ஆயுதப் போட்டி

ஊடகங்கள் மற்றும் அரசியல் லாபிகள் மூலம் அச்சுறுத்தல் என்ற பிம்பத்தை உருவாக்கி, அதன் மூலம் அரசாங்கங்களை அதிக விலையுள்ள ஆயுதங்களை வாங்க நிர்ப்பந்திக்கிறார்கள். இவர்களின் வியாபார உத்தி மிகவும் தந்திரமானது. முதலில் ஒரு நாட்டுக்கு அதிநவீன ஆயுதங்களை விற்பார்கள். பின்னர் அதன் அண்டை நாட்டுக்குச் சென்று, உங்கள் எதிரி நாட்டிடம் ஆபத்தான ஆயுதங்கள் உள்ளன, உங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று கூறி, அவர்களுக்கும் அதைவிட நவீனமான ஆயுதங்களை விற்பார்கள்.

இந்த ஆயுதப் போட்டி ஒருபோதும் முடிவுக்கு வராது. ஒரு நாடு வாங்கினால் மற்றொரு நாடு வாங்கும், இந்தச் சுழற்சியில் பொதுமக்களின் வரிப்பணம் ஆயுத நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளுக்குள் சென்று குவிந்து விடுகிறது. இதில் அதிர்ச்சிகரமான விடயம் என்னவெனில் மறைமுகமாக பயங்கரவாத அமைப்புகளை உருவாக்குவதும், அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதும் இவர்களின் தலையாய நோக்கம் ஆகும்.

ஒரு நாட்டின் நிலையான அரசாங்கத்தைக் கவிழ்க்க அல்லது அந்தப் பிராந்தியத்தில் பதற்றத்தை நீட்டிக்க, கிளர்ச்சிக் குழுக்களுக்கும் பயங்கரவாத அமைப்புகளுக்கும் மறைமுகமாக ஆயுதங்களும் நிதியும் வழங்குகின்றனர். ஒரு பகுதியில் பயங்கரவாதம் தலை தூக்கும்போது, அந்த நாட்டு அரசாங்கம் தற்காப்புக்காக கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை வாங்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறது.

அதாவது, ஒரு பக்கம் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை விற்றுவிட்டு, மறுபக்கம் அவர்களை ஒடுக்க அரசாங்கங்களுக்கும் ஆயுதங்களை விற்பது இவர்களின் இரட்டை லாபத் தந்திரம். இதை தேவையை உருவாக்கி விற்றல் என்பார்கள். தாங்கள் நேரடியாகப் போரிடாமல், பிற நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கி மோத விடுவதன் நிழல் யுத்தம் (Proxy War) மூலம் ஆயுத வியாபாரம் தடையின்றி நடப்பதை உறுதி செய்கிறார்கள்.

உலகம் பூராக அமெரிக்க தளங்கள்

இந்த விவகாரத்தில் உலகம் பூராக இருக்கும் அமெரிக்காவின் 750க்கும் மேற்பட்ட இராணுவத் தளங்கள் இதற்குச் சாட்சி. 750க்கும் மேற்பட்ட இராணுவத் தளங்களை உலகம் முழுவதும் வைத்திருக்கும் அமெரிக்கா, சீனாவின் வாசலிலேயே தென் சீனக் கடலில் தனது படைகளை நிறுத்தியுள்ளது.

இது சீனாவைத் தூண்டிவிட்டு, அவர்களை ஆயுதங்களைத் தயாரிக்க வைக்கிறது. இப்போது 2027இல் சீனா தாய்வானைத் தாக்கும் என்ற முழக்கம் உலகெங்கும் பரப்பப்படுகிறது. உண்மையில் இது ஒரு விளம்பர உத்தி ஆகும். சீனா ஒரு அச்சுறுத்தல் என்று காட்டினால் தான், அமெரிக்க மக்களிடம் இருந்து பில்லியன் கணக்கான வரிப்பணத்தை ஆயுதத் தயாரிப்பிற்குத் திருப்ப முடியும். சீனர்கள் நம்மைத் தாக்க வருகிறார்கள் என்று கூறி மீண்டும் அமெரிக்காவில் புதிய ஆயுத ஒப்பந்தங்கள் போட முடியும்.



ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனுக்கு எதிராக “முஜாஹிதீன்” குழுக்களுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கியது முதல், மத்திய கிழக்கில் உருவான பல ஆயுதக் குழுக்கள் வரை, பல பயங்கரவாத அமைப்புகளின் தொடக்கம் அமெரிக்காவின் இராணுவத் தேவைக்காகவே இருந்தது. பின்னர் அந்த அமைப்புகளே அந்த நாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறும் போது, அதை ஒழிக்க மீண்டும் புதிய வகை ஏவுகணைகளும், ட்ரோன்களும் (Drones) தயாரிக்கப்பட்டன.

உக்ரைன் போராக இருக்கட்டும் அல்லது மத்திய கிழக்கில் நடக்கும் மோதல்களாக இருக்கட்டும், இவை திடீரென நடப்பவை அல்ல. இவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் (War on Terror) என்ற முழக்கம், பொதுமக்களின் வரிப்பணத்தை எந்தக் கேள்வியும் இன்றி இராணுவ பட்ஜெட்டிற்குத் திருப்புவதற்கான ஒரு சிறந்த வழியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பொது மக்கள் பயத்தில் இருக்கும்போது, அரசாங்கம் ஆயுதங்களுக்காகச் செலவிடும் பில்லியன் கணக்கான டாலர்களை

இராணுவ விற்பனை நிறுவனங்களின் அடிப்படை விதியே "அமைதி என்பது நஷ்டம், போர் என்பது லாபம்" என்பது தான். மக்களின் வரிப்பணம் கல்விக்கோ அல்லது மருத்துவத்திற்கோ செல்லாமல், தேவையற்ற ஆயுதத் தயாரிப்பிற்குத் திருப்பி விடப்படுகிறது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் ஆயுத நிறுவனங்களில் உயர் பதவிகளிலும், அதே நிறுவனங்களின் முன்னாள் அதிகாரிகள் அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறையிலும் பதவிக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

யாரும் எதிர்ப்பதில்லை. அமைதி நிலவினால் இராணுவ பொருளாதாரதிற்கு நஷ்டம் ஏற்படும், எனவே, எப்போதும் உலகை ஒரு போர்க்களமாக வைத்திருக்க விரும்புகிறார்கள்.

இந்த விவகாரத்தில் இலாபகரமான இந்த நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமான சட்டங்களை இயற்றவும், இராணுவ பட்ஜெட்டை அதிகரிக்கவும் கோடிக்கணக்கான டாலர்களைச் செலவழித்து அரசியல் வாதிகளைத் தங்கள் வசப்படுத்துகின்றன. இராணுவ நிறுவனங்களே இவ்வளவு சக்தி வாய்ந்தவை என்றால், அந்த நிறுவனங்களையே தனது கைக்குள் வைத்திருக்கும் ஒரு “மகா சக்தி” இருக்கிறது. அதுதான் பிளாக்ராக் (Black Rock) என்பார்கள்.

ஆயுத நிறுவனங்களின் மூளை

இந்த ஆயுத நிறுவனங்களுக்குப் பின்னால் இருக்கும் உண்மையான மூளை தான் பிளாக்ரெக் (Black Rock) என்ற நிறுவனம் ஆகும். போருக்கு பணத்தை அதிகளவு முதலீடு செய்வது Black Rock போன்ற சொத்து மேலாண்மை நிறுவனங்கள் மட்டுமே. பத்து டிரில்லியன் டாலர்களுக்கும் அதிகமான சொத்துக்களை நிர்வகிக்கும் Black Rock உலகின் மிகப்பெரிய நிழல் வங்கி என்றும் அழைக்கப்படுகிறது.

உலகின் முன்னணி ஆயுத நிறுவனங்களான Lockheed Martin, Raytheon(RTX), Boeing மற்றும் Northrop Grumman ஆகியவற்றில் பிளாக்ராக் மிகப்பெரிய பங்குதாரராக உள்ளது. Lockheed Martin போன்ற ஒரே ஒரு நிறுவனம் மட்டும் ஆண்டுக்கு $50 பில்லியன் வரை இலாபம் ஈட்டுகிறது. இது பல நாடுகளின் மொத்த பட்ஜெட்டை விட அதிகம்.

இந்த வரிசையில் இந்த நிறுவனங்கள் போர் நடக்கும்போது ஆயுதங்களை விற்று லாபம் பார்ப்பார்கள். போர் முடிந்து அந்த நாடு சுடுகாடான பிறகு, அதை மறுசீரமைப்பு (Reconstruction) செய்யப் போகிறோம் என்று மீண்டும் அந்த நாட்டுக்கே கடன் கொடுத்து வட்டி வசூலிப்பார்கள். அரசாங்கம் மாறினாலும், Black Rock போன்ற நிறுவனங்களின் கொள்கைகள் மாறுவதில்லை.

போர் நடந்தாலும் லாபம், போர் முடிந்த பின் அந்த நாட்டை மறுகட்டமைப்பு செய்தாலும் இவர்களுக்கு லாபமே. இந்த black Rock நிறைவனத்தின் உரிமையாளர் Larry Fink என்பவர் ஒரு இஸ்ரேலிய பின்புலத்தை கொண்டவர். Black Rock போன்ற நிறுவனங்கள் ஆயுதத் தயாரிப்பாளர்களுக்கு முதலீடு வழங்குகின்றன.

அதிநவீன ஆயுதங்கள், ஏவுகணைகள் மற்றும் AI போர் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. லாபிகள் மூலம் அரசாங்கங்கள் போர் அல்லது பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்ய வைக்கப்படுகின்றன. போர் அல்லது உள்நாட்டுப் போர் தூண்டப்படுகிறது. ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. போர் முடிந்த பின் கடன்கள் மற்றும் கட்டுமானப் பணிகள் மூலம் மீண்டும் லாபம் ஈட்டப்படுகிறது.

வெளியுறவு கொள்கையை தீர்மானிக்கும் சக்தி:

இறுதியாக, இந்த நிறுவனங்கள் என்பது வெறும் ஆயுத விற்பனை மட்டுமல்ல, அது ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையையே தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்துள்ளது. இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளுக்குப் பதிலாக இராணுவத் தீர்வுகளே முன்னிறுத்தப்படுகின்றன. இது உலகை அமைதியின்மையை நோக்கியும், பெரும் கடன் சுமையை நோக்கியும் தள்ளுகிறது.

செய்தித் தாள்களில் வாசிக்கும் போர்ச் செய்திகளுக்குப் பின்னால், பல்லாயிரம் கோடி லாபம் ஈட்டும் இந்த நிழல் மனிதர்களின் சிரிப்பு ஒளிந்திருக்கிறது. சுருக்கமாக சொன்னால் உலகின் அமைதி என்பது இவர்களின் முதல் எதிரி. தற்சமயம் அமெரிக்காவை ஈரானுக்கெதிரான போரில் அமெரிக்காவை இழுத்துவிட்டதில் இந்த நிறுவனங்கள் பெரும் பங்காற்றி உள்ளன. இதற்கு முன்னர் உக்ரைன் அரசுக்கும் இந்த நிறுவனங்கள் ஆதரவு தெரிவித்தன என்பது கவனிக்கத்தக்கது.

எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

வெளிவந்துவிட்டது

வணிகம்
VANIKAM
2026

விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.vanikam.ca

437-345-4203

செங்கடல் வழியும் மூடப்படும் அபாயம்? ஏமனின் ஹவுதிகள் இஸ்ரேல் மீது தாக்குதல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

29.03.2026

வளைகுடாவில் போர் தீவிரம் அடைந்த நிலையில் கச்சாய் எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல்கள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. மேலும் உலக பொருளாதாரத்தினை சீர் குலைக்கும் வகையில் முக்கிய கடல் வழிப்பாதையான சூயஸ் கால்வாய் செல்லும் செங்கடல் பகுதியிலும் தாக்குதல்கள் அதி கரித்துள்ளன. ஏற்கனவே இப்போரால் ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியிருப்பதால் உலக அளவில் கச்சாய் எண்ணெய் விலை உயர்ந்து கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் போர் பதற்றம் உச்சமடைந்துள்ள நிலையில், ஹவுதிகளின் (Houthi) இந்த நேரடித் தாக்குதல் பிராந்தியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சூழலில் செங்கடல் பகுதியில் ஹவுதி படை, வர்த்தக கப்பல்கள் மீது தாக்குதல் நடத் தினாலோ சூயஸ் கால்வாயை மூடுவதற்கான முயற்சிகளை எடுத்தாலோ அது உலக பொருளாதாரத்தின் நிலைமையை இன்னும் கவலைக்கிடமாக்கி விடும் என்பது தெளிவாகிறது. இது உலகளாவிய கப்பல் போக்குவரத்தில் மேலும் பாதிப்பை உண்டாக்கும்.

ஈரானுக்கு ஆதரவாக, ஏமனின் (Yemen) ஹவுதி கிளர்ச்சி யாளர்கள் தற்போதைய பிராந்திய போரில் இணைந்து, இஸ் ரேல் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். 2026 மார்ச் பிற்பகுதியில், ஏமனில் இருந்து இஸ்ரேல் நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேலிய பாதுகாப்புப் படை (IDF) இடைமறித்தது. இந்தத் தாக் குதல்களுக்குப் பதிலடியாக, இஸ்ரேல் ஏமனின் ஹவுதி கட்டுப் பாட்டுப் பகுதிகள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதனால் செங்கடல் வழியாக செல்லும் சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கும் இந்த தாக்குதல் களால் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது

ஈரான் ஆதரவு ஹவுதிகள்:

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதிகள் ஏமனின் சனா நகரை 2014 முதல் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ஹவுதி கிளர்ச்சி யாளர்கள் (Houthi Rebels), காசா போரில் பாலஸ்தீன மக்க ளுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லாவுடன் இணைந்து சமீபத்திய மத்திய கிழக்கு மோதல்களில் இஸ்ரேல் மீது ஏவு கணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஹவுதி படைகள் சவுதி அரேபியாவிற்கு எதிரான போரில் ஈடு பட்டு, தற்போது செங்கடல் பகுதியில் வர்த்தக கப்பல்களை இலக்கு வைத்து செயல்படுகிறார்கள்.

தொடர்ந்தும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். சமீபத்தில் இஸ்ரேல் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி, போரில் நேரடியாக இணைந்துள்ளனர்.

ஹவுதிகள் ஈரானால் ஆதரிக்கப்படும் ஷியா முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஏமனின் சனா மற்றும் பிற முக்கியப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

செங்கடல் மற்றும் பாப் எல்-மண்டேப் கடல்வழிப் பாதையில் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த அமைப்பு, "அன்சார் அல்லா" (Ansar Allah) என்றும் அறியப் படுகிறது, இது தற்போது பிராந்தியத்தில் ஒரு முக்கிய இராணுவ சக்தியாக வளர்ந்துள்ளது.

அண்மையில் ஹவுதிகளின் தாக்குதலால் பல இஸ்ரேலிய நகரங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏமன் தலைநகர் சனா மற்றும் பிற பகுதிகளிலிருந்து இஸ்ரேலின் தெற்குப் பகுதிகளை இலக்காகக் கொண்டு ஹவுதிகள் ஏவுகணை வீச்சு நடத்தி வருகின்றனர். ஹமாசுக்கு ஆதரவாகவும், ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதல்களுக்கு பதிலடியாகவும் ஹவுதிகள் இந்த போரில் நேரடியாக இணைந்துள்ளனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேலிய போர் விமானங்கள் ஏமனின் ஹொடைடா (Hodeidah) துறைமுகம் மற்றும் மின் நிலை யங்கள், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்குகளை தாக்கி தகர்த் தன. இந்த பரஸ்பர தாக்குதல்களில் ஹவுதி குழுவின் தலை-வர்கள் மற்றும் பல பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏமனின் பிரிவுக்கும் – போருக்கும் காரணம்?

ஏமன் (Yemen)அதன் வடக்கு மற்றும் தெற்கிற்கும் ஐரோப்பிய காலனித்துவத்தின் பாரம்பரியத்திற்கும் இடையிலான மத மற் றும் கலாச்சார வேறுபாடுகளுடன் நீண்ட காலமாக போராடி வரு கிறது. வடக்கில் அமெரிக்கா மற்றும் சவூதி ஆதரவு பெற்ற ஏமன் அரபுக் குடியரசும், தெற்கில் சோவியத் ஆதரவு பெற்ற ஏமன் மக்கள் ஜனநாயகக் குடியரசும் ஒன்றிணைந்து 1990 ஆம் ஆண்டில் நவீன ஏமன் அரசு உருவாக்கப்பட்டது.

1978 முதல் வடக்கு ஏமனை ஆட்சி செய்த இராணுவ அதிகாரி அலி அப்துல்லா சலே புதிய நாட்டின் தலைமையை ஏற்றார். ஆனால் நாட்டின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில், ஒருவருக் கொருவர் தொடர்பு கொள்வது கடினம், ஏனெனில் இரண்டு இடங்களுக்கு இடையிலான உறவுகள் கடினமாக உள்ளது. ஏமன் அரசாங்கத்தை கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச் சியாளர்கள், சவுதி அரேபியா தலைமையிலான பன்னாட்டு கூட்டணிக்கு எதிராக போரிட்டு வந்தனர்.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAI) ஆதரவு பெற்ற தீவிர வாத இஸ்லாமிய குழுக்கள் மற்றும் பிரிவினைவாதிகள் உள் ளிட்ட பிற போராளிகளின் தலையீடு, முழு நாட்டையும் சிக்க லாக்கியது.

2018 ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம் :

இந்த நெருக்கடிக்கு தீர்வாக, ஐ.நா. ஆதரவுடன் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற் றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. 2018 ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம் உதவிக்கான முக்கிய மையமான துறைமுக நகரமான ஹொடெய்டாவில் ஒரு போர் நிறுத்தத்தை உருவாக்கியது. ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள் ளிட்ட பிராந்திய நாடுகளுக்கு இடையிலான உரசல் போரை நீட்டியதாக கூறப்படுகிறது.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சவூதி எண்ணெய் நிலை யங்கள் மீதான ஏவுகணை தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சி யாளர்கள் பொறுப்பேற்றபோது நிலைமைகள் மேலும் மோச மடைந்தன. ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலை நடத் தவில்லை என்று ஐ.நா கண்காணிப்பாளர்கள் முடிவு செய் தனர், அதே நேரத்தில் சவூதி தலைமையிலான கூட்டணி ஈரான் மீது குற்றம் சாட்டியது.

ஏப்ரல் 2022 இல் ஏமனின் புதிய நிர்வாகக் குழு ஹவுதி எதிர்ப்பு படைகளை ஒருங்கிணைக்க உதவியபோது அமைதி முயற் சிகள் வேகமடைந்தன. இது அனைவரையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தைகளுக்கு களம் அமைத்தது. பிற்பகுதியில், ஹவுதி கிளர்ச்சியாளர்களும் கூட்டணிப் படைகளும் பல ஆண்டுகளில் தங்கள் முதல் நாடு தழுவிய போர்நிறுத்தத்தை ஒருங்கிணைத்தனர்.

இதன் பின் தலைநகர் சனாவில் இருந்து வணிக விமானங் களை மீண்டும் தொடங்க அனுமதித்தது மற்றும் சில எரி பொருள் கப்பல்கள் ஹொடெய்டாவில் நிறுத்த அனுமதிக்கப் பட்டன. போரிடும் கட்சிகள் பல முறை போர்நிறுத்தத்தை நீட்டித் தன, ஆனால் ஆறு மாத ஒப்பீட்டு அமைதிக்குப் பிறகு, அதை மீண்டும் புதுப்பிக்கத் தவறிவிட்டன. இந்த ஒப்பந்தம் முறிந் ததற்கு ஏமன் அரசும், ஹவுதி கிளர்ச்சியாளர்களும் ஒருவருக் கொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். இது மீண்டும் கடுமை யான சண்டைக்கு வழிவகுத்து, ஏமனை ஒரு முழு அளவிலான நெருக்கடிக்குள் தள்ளியது.

செங்கடல் பகுதி வர்த்தக கப்பல்கள்

ஹவுதி படையினர் கடந்த 2014 முதல் ஏமன் தலைநகர் சனாவை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். சவுதி அரே பியாவுடன் மேற்கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து மேற்கு ஆசியா போரில் இருந்து இதுவரை விலகி இருந்த ஹவுதி படையும் தற்போது இணைந்திருப்பது போரை விரிவுபடுத்தி உள்ளது.

காசாவில் இஸ்ரேல்-ஹமாஸ் போரின் போது செங்கடல் பகு தியில் வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி படையினர் தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு கப்பல் போக்குவரத்து சீர் குலைந்தது. இவ்வழியாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருட்கள் விநி யோகம் நடந்து வருகிறது.

நவம்பர் 2023 முதல் ஜனவரி 2025 வரை, ஹவுதிகள் செங் கடல் பகுதியில் 100க்கும் மேற்பட்ட வர்த்தக கப்பல்களை ஏவு கணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் தாக்கி, 2 கப்பல்களை மூழ்கடித்து, 4 மாலுமிகளைக் கொன்றனர். தற்போது ஈரா னுக்கு ஆதரவாக ஏமனின் ஹவுதி படையும் களமிறங்கியதால் செங்கடல் வழித்தடம் தற்போது மூடப்படும் அபாயம் ஏற்பட் டுள்ளது.

உலக பொருளாதாரத்தினை மேலும் சீர்குலைக்கும் வகையில் முக்கிய கடல் வழிப்பாதையான சூயஸ் கால்வாய் செல்லும் செங்கடல் பகுதியில் ஏமனின் ஹவுதிக்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. ஏற்கனவே இப்போரால் ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியிருப்பதால் உலக அளவில் கச்சாய் எண்ணெய் விலை உயர்ந்து கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

லெபனானில் ஹிஸ்புல்லா:

லெபனானில் ஈரானுக்கு ஆதரவாக உள்ள லெபனானின் ஹிஸ் புல்லா அமைப்பை குறிவைத்தும் இஸ்ரேல் சண்டையிட்டு வருகிறது. இந்நிலையில், ஈரானின் ஆதரவு பெற்ற மற்றொரு கிளர்ச்சிப் படையான ஏமனின் ஹவுதி அமைப்பும் போரில் களமிறங்கி உள்ளது.

ஈரானும் ஹிஸ்புல்லாவும் இஸ்ரேல் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திய நிலையில், ஏமனில் இருந்து ஹவுதி படை இஸ்ரேல் இராணுவ நிலைகளை குறிவைத்து ஏவுகணைகளை ஏவியது. இவை இடைமறித்து அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஹவுதிகளின் இராணுவ செய்தித் தொடர்பாளர், தெற்கு இஸ்ரேலில் உள்ள முக்கிய இஸ்ரேலிய இராணுவ தளங்களை குறிவைத்து பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசிய தாக உறுதிபடுத்தினார்.

இதுதவிர, இஸ்ரேல் மீது தற்போது ஈரானும், ஹிஸ்புல்லாவும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இனி ஹவுதி யும் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தும். ஏற்கனவே இஸ்ரேலின் வலுவான வான் பாதுகாப்பு அமைப்புகளையும் தாண்டி, ஈரான் ஏவுகணைகள் இலக்குகளை தாக்கி வரு கின்றன.



இந்த நிலையில் ஹவுதியும் சேரும் பட்சத்தில் இஸ்ரேலுக்கு அது மிகப்பெரிய சிக்கலையும் ஏற்படுத்தும். ஆகவே இந்த போரில் ஹவுதி படை இணைந்திருப்பது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது

மகிழடித்தீவு படுகொலை 12 ஆனி 1991

1991, ஆனித் திங்கள், 12ஆம் நாள் மகிழடித்தீவுக் கிராமம் நினைவழியாத இரண்டாவது துயரத்தை சந்தித்தது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் அடுத்த பெரும்படுகொலை நடந்து முடிந்தது. 132 பேரை கொன்றழித்து, 400 வீடுகளை எரித்து நாசமாக்கி சொத்துக்களைச் சூறையாடிச்சென்ற சிறீலங்கா இராணுவத்தினரை யாரும் தட்டிக் கேட்கவில்லை. விரும்பிய நேரம் வரலாம், விரும்பிய தொகையை சுட்டுக்கொல்லலாம், விரும்பிய தமிழ் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தலாம். விரும்பிய வீடுகளை கொழுத்தி எக்காளமிடலாம். என்ற சுதந்திரத்தை சிங்கள இராணுவத்துக்கு சிங்கள அரசு வழங்கியிருந்தது.

சிங்கள இராணுவத்தினரது இன அழிப்பு சுதந்திரத்தின் இரண்டாவது அரங்கேற்றம் மகிழடித்தீவில் நடந்து முடிந்துபோனதை அறிய விரும்பினேன். கொலைகார கும்பலுக்குள் அகப்பட்டு தப்பிக்கொண்ட கணபதிப்பிள்ளை மோட்சமலர், முத்துலிங்கம் விமலாதேவி, வல்லிபுரம் காரிகாதேவி. கறுவல்தம்பி ஆயில்ப்போடி ஆகியோர் இக்கொடூரக் கொலை பற்றி மாறி மாறி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

எல்லா இடமும் வெடி சுட்டுக் கேட்குது. அப்ப நான் என்னுடைய இரண்டு மகனையும் சொன்னன், வெடிசுட்டுக் கொண்டு வாறான், வாருங்கோ சனங்கள் எல்லாரும் போறபக்கம் போய் சேந்திருப்பமெண்டு. சொல்லிக்கொண்டு வெளிக்கிட்டேக்க பாத்தா குளக்கட்டால சுட்டுச் சுட்டு வந்திட்டான். பிடிச்சுக் கொண்டுவாற ஆம்பிளையள், பொம்பிளையள் எல்லாருக்கும் அடியெண்டால் கண்ணால பாக்கேலாது. அடிச்சுக் கொண்டு வாற பொழுதே வீடுகளைக் கொழுத்திப்போட்டு உயிரோடு அதுக்க ரெண்டொருபேராய் தள்ளிவிடுறான். அப்பிடியே வந்தவங்கள் என்னையும் என்னோடு தம்பி குலசேகரத்தையும் பிடிச்சு இழுத்திட்டுப் போனான். எரிஞ்சு கொண்டிருந்த வீடொண்டுக்க ரெண்டுபேரையும் தள்ளிவிட்டான். கையெடுத்துக் கும்பிட்டும் அவனுக்கு இரக்கமே வரல்ல. படுபாவி வீட்டுக்க தள்ளின உடன அதுக்க நிறைய நெல்லு மூடைகள் அடுக்கியிருந்தது. அதில் ஏறி. தம்பி குலசேகரம் சுவருக்கு மேலா பின்பக்கமாய் குதிச்சான். இனி நான் என்ன செய்யிறது, எரிஞ்சு சாகிறதைவிட கால் முறிஞ்சாலும் பறவாயில்லையெண்டு ஏறி குதிச்சன். குதிச்சவுடன் ரெண்டு பேருமா அடுத்த வீட்டுப் பக்கமாய் ஓடி பின்பக்கம் கிடந்த தகரங்களால முடிக்கொண்டு பேசாமல் கிடந்ததும் தம்பி சொன்னான் “இனி எங்கேயும் ஓடேலாது. சாகிறதெண்டால் இதுக்குள்ளேயே கிடந்து சாகுவம். வெளியில சுடறசத்தமும் அழுற சத்தமும் கேட்க, கண்ண இறுக்கி மூடிக்கொண்டே கிடந்தம்” என கறுவல்த்தம்பி ஆயில்ப்போடி என்ற முதியவர் சொல்லும்போது நாக்குத் தடுமாறியது. எண்பத்தியொரு வயது நிரம்பிய அந்த முதியவரைக்கூட எரியும் நெருப்பில் தள்ளிவிட்ட கொடுமை மறக்கமுடியாது.

வெடிச்சத்தம் சுத்திக் கேட்டுக் கொண்டிருந்தது. நம்மட அக்காவுக்கு குழந்தை பிறந்து பன்ரெண்டாம் நாள். மற்றவளுக்கும் சின்னக் குழந்தை. அக்கா சொன்னா, “தங்கச்சி நாங்களெல்லாரும் கதவைப் பூட்டிட்டு உள்ள இருப்பம். இல்லக்கா குழந்தையையும் தூக்கிட்டு மில்லுக்கு போவம். எல்லாரும் அங்கேதான் போறாங்கள். எண்டு சொல்லீட்டு பிள்ளையையும் தூக்கீட்டு போனம். மில்லுக்கு முன்துண்டு, நடுத்துண்டு, உள்துண்டு எல்லாம் நிறையப்பேர் இருந்தாங்கள். குழந்தப் பிள்ளையல் எல்லாம் அழுதாப்போல பிள்ளயளின்ர அழுகையை நிப்பாட்ட எல்லாரும் பால்கொடுத் திட்டிருந்தாங்க. வெடிச்சத்தம் பக்கத்தில கேட்குது. உடன எல்லாரும் அரோகரா அரோகரா என கடவுள கும்பிடத் தொடங்கினாங்க. உள்ளுக்க வந்தவன் படபடெண்டு சுடத்துவங்கினான். வகித்தால் தலையால களுத்தாலயெல்லாம் வெடிப்பறியுது. நானும் வெடிப்பட்ட மாதிரி குப்பறவிழுந்து கிடந்து இரத்தமெல்லாம் அள்ளி மேல்ல பூசிக்கொண்டு அசையாமல்க் கிடந்தன். மில்லுக்க இருந்த எல்லாரையும் சுட்டிட்டான். என்னோட அக்காவும் சேர்ந்து அஞ்சுபேர் மட்டும் தப்பினனாங்க. எல்லாரும் செத்தாப்போல் இரத்தத்தை அப்பீட்டுக் கிடந்ததால தப்பீட்டம். சூட்டுச் சத்தம் நிண்டு கொஞ்ச நேரத்தில பிள்ள.... பிள்ள.... என அம்மா கூப்பிடுற சத்தம் கேட்குது. எழும்பிப் பார்த்திட்டு அக்காட குழந்தையையும் தூக்கிட்டு பக்கத்து வீட்டு குந்தில வந்திருந்தன். அங்க பாத்தா கையில்லாமலும் கண் தோண்டினாப் போலும் தலை வெட்டினால் போலும் கிடந்தாங்க. பிள்ளைக்கு பால்கொடுத்தாப்போல அப்படியே சவமாய் கிடந்தாங்க. கைக்குழந்தை ஒன்று சிதறி சுவரில ஒட்டினாப்போல கிடந்தது. மில் வச்சிருந்த குமாரநாயகமும் அவரோட பொஞ்சாதி புவனேஸ்வரி, அவங்கட நாலுபிள்ளையள் எல்லாரையுமே சுட்டிட்டாங்க” என முத்துலிங்கம் விமலாதேவி என்ற இளம்பெண் அக்கொலையின் கொடூரம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலொரு பாட்டிவந்து சுட்டிட்டு போக மறுகா அடுத்த பாட்டி வந்து சுட்டிட்டாங்கள். “அவங்கள் சுட்டிட்டுப்போக மூண்டவது பாட்டியொண்டு திரும்ப வந்து சுட்டாங்கள். மூண்டாவதா வந்த பாட்டி மில்லுக்க கிடந்த எல்லாச் சவத்தையும் ஒண்டா இழுத்துப் போட்டிட்டு ஓலையள், ரயர்கள் எல்லாம் மேல போட்டு கருக்கினாங்கள். அக்கம் பக்கம் பிடிச்சிட்டு வந்த ஆம்பிளைங்க எல்லாரையும் கிடங்குக்குள்ள சுட்டுச்சுட்டு போட்டான். கிடங்க ஒரு தரம் சுத்தி வரச்சொல்வாங்கள். சுத்தி வந்த உடன ஒரு சூடு சுட்டு கிடங்கில போட்டவுடன் அடுத்தாளச் சுத்தச் சொல்வாங்கள். சுத்திவந்த உடன சூடு விழும். இப்பிடியா முப்பத்தியேழு பேர குழிக்குள்ள சுட்டுச் சுட்டுப்போட்டன்.

அரோகரா அரோகரா எண்டு கண்ணீர் விட்டு கதறி அழுதழுது எல்லாரும் கிடங்க சுத்தி வருவாங்கள். அந்த கொடிய காட்சிய பாத்திட்டு இருக்கவே உயிர் போனாப்போல இருந்தது. வெட்டினதும் சுட்டதும் ஒரு பாட்டி. இன்னொருபாட்டி வடிவான பிள்ளையளாப் பாத்துப் பிடிச்சு மாறிமாறிக் கெடுத்திட்டாங்கள். அதை எப்படிச் சொல்லுறதெண்டே தெரியல்ல” வல்லிபுரம் காரிகாதேவியென்ற பெண் சொல்ல வந்ததை நிறுத்திக் கொண்டாள். அவளது கண்கள் குளமாகியிருந்தது. வாய் திறந்து சொல்ல முடியாத துயரக்கதைகள் அவளது நெஞ்சை முட்டிக் கொண்டது. நெஞ்சை மெதுவாக அமத்திப் பிடித்துக் கொண்டு மறு கையால் கண்களை துடைத்துக் கொண்டாள். அவளது நிலையை உணர்ந்த கணபதிப்பிள்ளை மோட்சமலர் (முன்பள்ளி ஆசிரியர்) அந்தக் கொடுமையை மளமளவென சொல்லத் தொடங்கினார்.

“நான் மாவடி முன்மாரி பிள்ளையளுக்கு (முன்பள்ளி) பாடம் சொல்லிக் கொடுத்திட்டு சைக்கிளில வீட்ட வந்து கொண்டிருந்தனான். வரேக்க பாத்தன் கண்ணிவெடியில ரைக்கரர் மேலே போய் கீழவந்து விழுந்தது. நேர்றோட்டில அப்படியே வடிவா தெரிஞ்சுது. பார்த்தவுடன சைக்கிளோட விழுந்திட்டன். விழுந்தெழும்பிப் பாத்தன் ஆமி சுட்டிட்டு வாறான். எழும்பி ஓடினன். என்ன கலைச்சு வாறான். குளத்துக்கால ஓடினன். பின்புறமா பெரியம்மா வீட்ட போயிடலாமெண்டு ஓடினன். றோட்டு சைற்றெல்லாம் ஆமி படுத்துக்கிடந்து சுடுறான். சிவப்பு சட்டையோட ஓடினதால் என்ன வடிவா கண்டிட்டான். அதால பின்னாலேயே வந்து எனக்கு சுட்டிட்டான். எனக்கு ரெண்டுவெடி. ஒண்டு முழுங்கால் சில்ல உடச்சிட்டு. மற்றவெடியும் அடுத்த கால் எலும்ப உடச்சிட்டுது. அப்படியே குப்பற விழுந்து கிடந்தன். நான் செத்திட்டதா ஆமியும் நினச்சான். சுத்தியிருந்த சனங்களும் நினைச்சாங்க.இரவு வரையும் ஒருத்தரும் தூக்கவரல்ல. நான் தண்ணி.... தண்ணி என அணுங்கின சத்தம் என்ன தேடிவந்த பெரியப்பாவுக்கு கேட்டிட்டுது. அவங்கதான் வண்டில்ல என்ன ஏத்திட்டுப் போனாங்க. பொழுதுபடும் வரையும் ஒருத்தரும் வரேல்ல. எல்லாரும் பயத்தில அங்கங்கு ஓடிட்டாங்கள். ஓடேக்க பட்டவங்கள் பிடிச்சு சுட்டான். உயிரோட வீட்டுகளுக்க புகுத்தீட்டு நெருப்பு வச்சான். நாநூறு வீடுகள் கொழுத்துப்பட்டுட்டுது. எல்லா வீட்டிலேயும் நிறைய நெல்லு மூடைகள் கிடந்தது. நெல்லுமூடைகள் மட்டுமில்ல, ஆக்களும் சேத்து எரிஞ்சிட்டாங்கள். கனகுமர்பிள்ளைகளும் பள்ளி ரீச்சர்மாரும் புண்ணியமூர்த்தி

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

G.S வீட்ட (கிராமசேவகர்) ஓடிப்போய் ஒண்டாய் இருந்தாங்கள். அங்கேயையும் வந்து சேந்திட்டான். வந்தவன் அங்க நிண்ட பிள்ளையள அடிச்சு மிரிச்சு சட்டையெல்லாம் கிழிச்சு செய்யக் கூடாத வேலையெல்லாம் செய்தான். புண்ணிய மூர்த்தி சேரிண்ட ஒரு மகளை (விஜிதா ரேணுகா) சட்டையெல்லாம் பிச்சு கெடுத்திட்டான். பிள்ள தனிய அம்பிட்டிட்டு. கொடுமை தாங் கேலாமல் பிள்ள மகிழடித்தீவ விட்டே ஓடீட்டுது. ரீச்சர்மார் பலர் இழுபறிப்பட்டு சட்டை சாறியெல்லாம் பிச்சிட்டான். ரேணுகா ரீச்சர் பாவம். எங்கேயோ தனிய மாட்டீட்டுது. அவங்கள படாத பாடு படுத்திப் போட்டாங்கள். இண்டைக்கும் அந்தப்பிள்ளையள் வாழா வெட்டியா இருக்கிறாங்கள். அவங்களக்கேட்டா எதுவும் சொல்லமாட்டாங்கள். மயங்கி விழுந்திடுவாங்கள். இவங்கள மாதிரித்தான் பேரின்பநாயகி எண்டொருபிள்ள. நல்ல வடிவான பிள்ள. அந்தப் பிள்ள போல அழகான பிள்ளையை இஞ்ச காணேலாது. அந்தப் பிள்ளைளையைப் பிடிச்சு மாறிமாறி கெடுத்தாங்கள். பெத்ததாயின்ர கண்ணுக்கு முன்னால வச்சு படுபாவியள் செய்த கொடுமையை கடவுள் தான் என்னண்டு பொறுத்ததோ தெரியாது.

தாய் சங்கிலியக் கழட்டி கொடுத்து என்ர பிள்ளைய ஒண்டும் செய்யாதிங்கோ விட்டிடுங்கோ" என கும்பிட்டுக் கேட்டா. கையில கிடந்த காப்பைக் கழட்டிக் கொடுத்து தாலி, மோதிரம் எல்லாமே கழட்டிக் கொடுத்து என்ர பிள்ளைய ஒன்றும் செய் யாதீங்கோ என அழுது கெஞ்சி மண்டாடிக் கேட்டும் அவங்கள் விடல்ல. மறைப்பில் கொண்டு போய் மாறிமாறிக் கெடுத் தாங்கள். கடைசியா நெஞ்சு, கன்னம் எல்லாம் கடிச்சாங்கள். பிள்ளேன்ர உடம்பில கடிகாயம் இல்லாத இடமே இல்ல. இரத் தத் துவாலயோட பிள்ள மயங்கினாப் போலதான் விட்டிட்டுப் போனாங்கள் பாவியள். அந்தப் பிள்ள இப்பவும் இருக்கு.

ஆனால் கலியாணம் கட்டி குழந்தைகள் பெத்து புருசனோட சந் தோசமாய் இருக்கிறாள். ஆனா மகிழடித்தீவ விட்டு அண் டைக்கு ஓடிப்போனதுதான். இண்டைக்கும் இந்தப்பக்கம் வரல்ல. ஆமிவாறானெண்டு சும்மா சொன்னாப்போதும். அறிவு மயங்கி விழுந்திடும். இந்தப் பக்கத்தால ஒரு பாட்டி இப்பிடி செய்ய, இன்னொரு பாட்டி முதலைக்குடாப்பக்கம் போய் பள்ளிக் கூடத்துக்குள்ள சேந்திருந்த ஆக்களில் ஒருமட்டான ஆம்பிளப் பிள்ளயளப்பிடிச்சு வந்து மில்லுக்கவச்சு சுட்டான். பொஞ்சாதிக்கு முன்னால புருசனையும், தாய்க்கு முன்னால பிள்ளைகளை யும் எரியிற வீட்டுக்குள்ள உயிரோட புகுத்தினான். மில்லுக்க கிடந்த 132 பேரை ஓலைகளைப்போட்டு அங்கு கிடந்த டீசலை ஊத்தி எரிச்சி கருக்கிப்போட்டு பொழுதுபட ஆறுமணிக்குத்தான் ஊரைவிட்டு கிளம்பினான். குண்டு வெடிச்ச கிடங்கில சுட்டுச் சுட்டுப் போட்டதில கிடங்கு நிரம்பிவிட்டது. இல்லையெண்டால் இன்னும் சுட்டிருப்பான்" என மோட்சமலரும், காரிகாதேவியும் மாறிமாறி இந்தக் கொலையின் கொடூரத்தை சொல்லிமுடித் தனர். "காயப்பட்டு கிடந்தவர்களை சிகிச்சை செய்யிற வசதியோ வைத்தியசாலையோ இஞ்ச இல்ல மகன். நம்மட மகள் பொல நறுவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக. தமிழனெண்டு சொல்லி வைத்தியம் செய்ய மறுத்திட்டான். பிள்ள ஆபத்தான நிலைக்கு வந்திட்டாள். திரும்ப அங்க இருந்து கொழும்புக்கு கொண்டுபோனன். ஆறு மாதத்திற்கு பின்னர்தான் சுகப்பட்டு கூட்டிட்டு வந்தன். நாசமாய் போவானுகள் அண்டைக்கு செய்த கொடுமைகளை சொல்லேலாது மகன். மில்லுக்குள்ள அவங்கள் கருக்கிட்டுப்போன சவங்கள பாக்க ஏலாது, தாயில பால் குடிச்சபடி நாலஞ்சு குழந்தையள் கருக்கிக்கிடந்தார்கள். என்ர பிள்ள எங்க... என்ரபுருசன் எங்க... எண்டு இனங்கண்டு கொள்ளமுடியாமல் புரட்டிப் பார்த்து அழுதிட்டு நிண்டதை யாருட்ட சொல்லுறது" என மோட்ச மலரின் அம்மா திருமதி. கணபதிப்பிள்ளை சொல்லிக் கண் கலங்கினாள்.

அருட்தந்தை யோசப் மேரியினதும், யோசப் பரராசிங்க எம்.பி யினதும் முயற்சியில் குமார் பொன்னம்பலம், ஏ.எம்.எம். சகாப் தீன் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு இப்படுகொலை பற்றி விசாரணை செய்து வெளி உலகுக்கு கொண்டுவர முற் பட்டபோதும் சிங்கள பேரினவாதம் அதை விழுங்கி மறைத் துவிட்டது. கேட்பாரற்று அநாதைகள்போல் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் துயரக்கதை மட்டுநகர் மண்ணில் தொடர்ந்தது. மகிழடித்தீவிலும் இறால்பண்ணையிலும், மில்கட்டிடத் தினுள்ளும் முடிந்துபோன தமிழர் வாழ்வு கொக்கட்டிச் சோலைப் படுகொலை என்ற பெயரோடு பத்திரிகைகளில் அவ்வப்போது பெட்டிச் செய்தியாகவந்து மறைந்து போயின.

-மௌனப் புதைகுழிக்குள்.1--மணலாறு விஜயன்

காலச்சக்கரம்

சு.லோஜிதன்

இன்று மூன்றாம் உலகப்போர் மூண்டாலும் மூலுமாம்
அமெரிக்கா ஈரான் சண்டையால்
நினைத்தால் புன்னகை தான்....
அன்று,
ஒரு துண்டு நிலத்தைச் சுற்றியிருந்த
முள்வேலிகளை இன்னும் இறுக்கச் சொன்னீர்கள்...
பிஞ்சுயிர்கள் கருகியபோது
அமைதியாய் வேடிக்கை பார்த்தீர்கள்.
ஆயுதங்கள் கொடுத்து
அழிவுக்குத் துணை நின்றீர்கள்,
அதிகாரப் பசியில் – ஓர் இனத்தின்
முகவரியையே சிதைக்கத் துணிந்தீர்கள்.
அன்று உங்கள் கரங்கள் கோர்த்திருந்தன,
ஒரு குரதிப் பலியை நடத்தி முடிக்க!
ஆனால்...
காலம் ஒரு கணக்குப் பிள்ளை!
அன்று நீங்கள் விதைத்த அதே நெருப்பு,
இன்று உங்கள் வீட்டு முற்றத்தில்.
யார் யாருக்குத் தோள் கொடுத்தார்களோ,
அவர்கபை இன்று வாள் எடுக்கிறார்கள்!
பங்காளிகள் இன்று பகையாளிகள்,
கூடி நின்றவர்கள் இன்று கோடிட்டுப் பிரிகிறார்கள்.
இது வெறும் போரல்ல,
எங்கள் மழலைகளின் கண்ணீர்த் துளிகள்
உங்கள் தேசங்களில் எரிமலையாய் வெடிக்கிறது.
அன்று நீங்கள் ஆடிய ஆட்டத்திற்கு,
இன்று தர்மம் தீர்ப்பு எழுதுகிறது.
இதுவே கருமா!

சுழலும் சக்கரம் யாரையும் விடுவதில்லை
நீதி உறங்கலாம்... ஆனால் சாவதில்லை!

ஈழப்போராட்டத்தின் போது மௌனம் காத்த அல்லது நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒடுக்குமுறைக்கு உதவிய நாடுகள், இன்று புவிசார் அரசியல் சூழலில் தங்களுக்குள் மோதிக் கொள்வதை ஒரு வரலாற்று நீதியாகவே பலரும் பார்க்கின்றனர்

அமெரிக்க இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு சாவல் தரும் ஈரான் போர் வியூகம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.03.2026

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஈரானின் பதிலடி, ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவால் கட்டுப்படுத்தப் படவில்லை எனவும், மோதல் பல மாதங்கள் அல்லது அதற்கு மேலும் தொடரக்கூடும் என்றும் அரசியல் வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவை போலன்றி, ஈரான் ஒரு நீண்ட போருக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் ஈரான் யுத்த நிறுத்த பேச்சு வார்த்தைகளுக்கான வாய்ப்பையும் நிராகரித்துள்ளது.

இது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் வழக்கமான இராணுவ மேலாதிக்கத்தை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட ஈரானின் நீண்ட கால சமச்சீரற்ற போர் கோட்பாட்டைப் பிரதிபலிப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஈரானுக்குள்ளும் உலகளவிலும் இந்த மோதலின் விளைவாக ஏற்படும் பொருளாதார விளைவுகள், போர் எவ்வளவு காலம் நீடிக்க முடியும் என்பதைத் தீர்மானிப்பதில் ஒரு தீர்க்கமான முடிவை எவரும் எதிர்பார்க்க முடியாது.

ஈரான் இராணுவ அதிகாரிகள் நீண்டகால மோதலுக்குத் தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் ஈரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை பயன்படுத்தி அமெரிக்க, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைப்புகளைப் பலவீனப் படுத்துவதாகவும் ஈரான் அரசு தெரிவித்துள்ளது. வளைகுடா பிராந்தியத்தில் அமெரிக்க நிதி மற்றும் தளவாடச் செலவுகளை அதிகரிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மெதுவாக எதிரியை பலவீனப்படுத்தல்:

ஈரான் பயன்படுத்தும் போரியல் உத்தியை அட்ரிஷன் என்றும் சில நிபுணர்கள் கூறுகிறார்கள். இதன் பொருள் விரைவாக வெற்றி பெறுவதற்குப் பதிலாகக் காலப்போக்கில் எதிரியை மெதுவாகப் பலவீனப்படுத்த முயல்வதாகும்.

இஸ்ரேலிய இலக்குகள் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது தொடர்ந்து ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஈரான் ஏவுகிறது. இந்தத் தாக்குதல்களில் பல இலக்குகள் வளைகுடாவில் குறிவைக்கப்படுகின்றன.

ஈரானின் போர் உத்தியாக, முதலாவதாக, அவை அமெரிக்காவையும் இஸ்ரேலையும் தங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகளைப் பயன்படுத்தி உள்ளே நுழையும் ஏவுகணைகளைத் தடுக்க கட்டாயப்படுத்துகின்றன. எம்.ஐ.எம்-104 பேட்ரியாட், தாட் போன்ற அமைப்புகள் மிகவும் மேம்பட்டவை. ஆனால், அவை மிகவும் விலை உயர்ந்தவை மற்றும் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன.

பெரும்பாலும் ஈரானிய தாக்குதலை நிறுத்தப் பயன்படுத்தப்படும் ஏவுகணைகள், அவை அழிக்கும் ட்ரோன்கள் அல்லது ஏவுகணைகளை விட அதிக விலை கொண்டவை. இரண்டாவதாக, தொடர்ச்சியான தாக்குதல்கள் எதிரியின் ஆயுத விநியோகம், போக்குவரத்து அமைப்புகள், இராணுவ தயார் நிலையில் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். மோதலின் முதல் வாரத்துக்குள் அமெரிக்க படைகள் ஏற்கெனவே அதிக எண்ணிக்கையிலான துல்லியமான ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருவதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

மேலும் ஈரான் அதிகாரிகள் தங்கள் ஆயுத விநியோகம் நீண்ட காலம் நீடிக்கும் என்கிறார்கள். தற்போதைய விகிதத்தில் குறைந்தது ஆறு மாதங்களுக்குத் தங்கள் இராணுவம் அதிக தீவிரம் கொண்ட போரைத் தொடர முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஈரான் தளபதிகள் தங்கள் ஏவுகணைகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுப் பல உற்பத்தித் தளங்களில் அதிக எண்ணிக்கையில் சேமித்து வைக்கப்பட்டு இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இந்த தகவல்கள் அனைத்தும் உறுதிப்படுத்தப்படவில்லை.

வளைகுடாவில் இதன் காரணமாக, ஈரான் காலப்போக்கில் அதன் தாக்குதல்களைப் பரவலாக்கி வருவதாகத் தெரிகிறது. இது அதன் எதிரிகளை ஒரேயொரு பெரிய தாக்குதலை எதிர்கொள்வதற்குப் பதிலாகத் தொடர்ந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு கட்டாயப்படுத்துகிறது.

ஈரான் - ஈராக் இடையிலான போருக்குப் பிறகு, ஈரான் போருக்கு தயாராகும் வகையில் அதிகளவில் முதலீடு செய்தது. இந்த வகையான போர், பாரம்பரிய வழியில் போராடாமல் வலுவான இராணுவங்களுக்கு சவால் விடக்கூடிய முறைகளில் கவனம் செலுத்துகிறது. இந்த யுத்த உத்தியை ஈரான் பல ஆண்டுகளாக உருவாக்கி வரும் இராணுவ அணுகுமுறையின் ஒரு பகுதியாகும்.

ஒரு வலுவான எதிரியை நேரடியாகத் தோற்கடிப்பது அவர்களின் இலக்கு அல்ல. மாறாக, போரை நீண்டதாகவும், செலவு மிக்கதாகவும், கடினமானதாகவும் அவர்களுக்கு மாற்றுவதே ஆகும் என்று ஈரான் கூறுகிறது.

1980களில் நிகழ்ந்த ஈரான் – ஈராக் இடையிலான போருக்குப் பிறகு, ஈரான் போருக்கு தயாராகும் வகையில் அதிகளவில் முதலீடு செய்தது. இந்த வகையான போர், பாரம்பரிய வழியில் போராடாமல் வலுவான இராணுவங்களுக்கு சவால் விடக்கூடிய முறைகளில் கவனம் செலுத்துகிறது. இந்த யுத்த உத்தியை ஈரான் பல ஆண்டுகளாக உருவாக்கி வரும் இராணுவ அணுகுமுறையின் ஒரு பகுதியாகும்

ஈரான் இராணுவ தளபதிகள் கருத்து:

ஈரான் அதிகாரிகள் தங்கள் நாடு ஒரு நீண்ட மோதலுக்குத் தயாராக இருப்பதாகத் தொடர்ந்து கூறிவருகின்றனர். இது நீண்ட போருக்கு ஏற்ற வகையில் தயார்நிலையில் ஈரான் இருக்கிறது என்ற செய்தியை வெளிப்படுத்துகிறது. ஈரான் உச்ச தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் செயலாளர் அலி லாரிஜானி நீண்ட கால மோதலுக்கான தயார் நிலையை அறிவித்தார்.

மேலும் ஈரான் நிச்சயமாக போர் நிறுத்தத்தை விரும்பவில்லை. ஆக்கிரமிப்பாளரை தண்டிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாக்கர் கபிபாஃப் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் ஈரான் படைவலு இன்னமும் சிதையவில்லை என கூறப்படுகிறது. இஸ்ரேலுடன் தீர்க்கமான முடிவை வைப்பதற்கான போரில் ஈடுபட்டுள்ளது என்றும் ஈரான் கூறியுள்ளது.

அதேபோல் ஈரான் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் ரெசா தலாய்-நிக், எதிரி எதிர்பார்ப்பதை விட பல மடங்கு நீண்ட காலம் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பை ஈரான் தக்க வைத்துக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

ஈரான் தனது ஆயுதங்களைப் பயன்படுத்தும் விதத்தை மிகக் கவனமாகக் கட்டுப்படுத்தி வருவதாகவும், தனது மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களை உடனடியாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாகத் தனது மேம்பட்ட ஆயுதங்களில் சிலவற்றைப் போரின் பிந்தைய கட்டங்களுக்காகச் சேமித்து வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போரால் பொருளாதார விளைவு ?

ஒரு நீண்ட போர் ஈரானில் மட்டுமல்ல, வளைகுடாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் கடுமையான பொருளாதார சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும். அதில் முக்கியக் கவலை எரிசக்தி விநியோகம் என்பது தான். உலகின் எண்ணெயில் பெரும்பகுதி பொதுவாக ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்கிறது. இது உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் ஐந்தில் ஒரு பங்கை வழங்குகிறது.

இந்த போர் தொடங்கியதில் இருந்து, இந்தக் குறுகிய பாதை வழியாகக் கப்பல் போக்குவரத்து கிட்டத்தட்ட நின்றுவிட்டது. இது உலகளவில் மக்கள் மற்றும் தொழில்களுக்கான எண்ணெய் மற்றும் எரிபொருள் விலைகளை உயர்த்தக்கூடும். பாதுகாப்பு அச்சங்கள் மற்றும் மூடப்பட்ட வான்வெளியும் இந்தப் பகுதியில் வர்த்தகப் பாதைகளைப் பாதிக்கத் தொடங்கியுள்ளன.

ஈரானுக்குள்ளும் பொருளாதார அழுத்தம் உள்ளது. பல ஆண்டுகளாக சர்வதேச தடைகளால் அந்த நாடு ஏற்கெனவே பலவீனமடைந்துள்ளது. அரசாங்கம் இராணுவத்துக்கு அதிக பணம் செலவிட வேண்டியிருப்பதாலும், தேசிய நாணயம் நிலையற்றதாக இருப்பதாலும், வர்த்தகம் மற்றும் சேவைகள் சீர்குலைவதாலும் போர் ஏற்கெனவே நிலவும் நிலைமையை மேலும் கடினமாக்குகிறது.

மேலும் போர் நீண்டகாலம் தொடர்ந்தால், பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் எனவும், நாட்டுக்குள் பொதுமக்களின் கோபம் அதிகரிக்கக்கூடும் எனவும் கூறும் நிபுணர்கள், இது நாட்டின் ஸ்திரத்தன்மையை அச்சுறுத்தக்கூடும் என எச்சரிக்கின்றனர்.

மேலும் ஈரான் அரசாங்கம், குடிமக்களை போர் முயற்சிகளை ஆதரிக்க ஊக்குவித்துள்ளது. பாதுகாப்பு மற்றும் போர்க்கால நடவடிக்கைகளுக்கு உதவுவது ஒரு தேசிய கடமை எனக் கூறி, அரசுக்கு பொதுமக்களின் ஆதரவைத் தக்க வைத்துக்கொள்ள முயல்கிறது.

போரால் அரசியல் நெருக்கடி:

போர் நீண்டகாலம் தொடர்வது, அனைத்து தரப்பினருக்கும் அரசியல் அபாயங்களைப் பெரிதாக அதிகரிக்கும். குறிப்பாக, வளைகுடா பிராந்தியத்தில் உள்ள நாடுகள் கவலை கொண்டுள்ளன. ஈரான் இந்தப் பகுதியில் ஆக்கிரமிப்பாளர்களின் சொத்துகள் மற்றும் தளங்கள் என்று தான் அழைப்பதைக் குறிவைத்து வருகிறது. இதன் காரணமாகப் பல வளைகுடா நாடுகள், இந்த மோதல் ஒரு பெரிய பிராந்திய போராக மாறி கடுமையான பொருளாதார சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என அஞ்சுகின்றன. இந்த நாடுகளில் சில ஈரான் அரசுடன் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடங்க அழைப்பு விடுத்துள்ளன.

அதே நேரத்தில், போர் பிராந்தியத்தில் அரசியல் உறவுகளை மாற்றக்கூடும். சில அண்டை நாடுகள் ஈரானின் நிரந்தர எதிரிகளாக மாறக்கூடும்.

ஈரானை பொறுத்தவரை, போரைத் தொடர்வது என்பது அதன் இராணுவ திட்டங்களை அதன் பொருளாதாரத்தை நிலையானதாக வைத்திருப்பது மற்றும் உள்நாட்டில் ஆதரவைப் பேணுவது ஆகியவற்றுடன் சமநிலைப்படுத்த முயல்வதாகும்.

ஆனால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை பொறுத்தவரை, சவால்கள் வேறுபட்டவை. அவர்கள் தங்கள் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர வேண்டும், அதே நேரத்தில் ஒரு நீண்ட போரின் நிதிச் சுமை, உள்நாட்டு அரசியல் அழுத்தம், உலகளாவிய விளைவுகள் ஆகியவற்றையும் கையாள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ஒரு கொலையும் யாழ்ப்பாணத்தவரின் பயங்களும்

28.03.2026

சித்த மருத்துவத்துறை விரிவுரையாளரின் கொலைச் சம்பவம் ஒரு தனிப்பட்ட குற்றச்செயலா? அல்லது பொதுவான சமூகப் பிறழ்வின் குறிகாட்டியா ?

கொல்லப்பட்டவர் ஒரு மருத்துவர், விரிவுரையாளர் என்பதும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அந்தச் சம்பவம் அதிகம் கவனிப்பைப் பெறக் காரணம். அவர் ஒரு படித்த தாய். பிள்ளையும் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலையில் படித்திருக்கிறார். ஒரு படித்த தாய், பதின்ம வயதிலும் அதன் பின்னரும் பிள்ளையை வெற்றிகரமாகக் கையாள முடியாமல் போனது அவருடைய தனிப்பட்ட தோல்வியா? அல்லது நடப்பில் உள்ள கல்வி முறையின் தோல்வியா?

இக்கேள்விகளுக்கான விடைகளைத் தேடுவதாக இருந்தால் ஒரு குற்றச் செயல் மட்டும் போதாது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் நிகழ்ந்த குற்றச் செயல்களைத் தொகுத்து ஆராய வேண்டும். பொருத்தமான புள்ளி விபரங்களைத் தொகுத்தும் பகுத்தும் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் அது ஒரு சமூகப் பொதுத் தோறப்பாடா? இல்லையா? என்ற முடிவுக்கு வர வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் படித்த கல் வீட்டுக்காரர்கள் அதிகமாக சிசிடிவி கமராவை வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பொருத்தி வைத்திருக்கிறார்கள். குற்றச்செயல்களையும் திருடர்களையும் கண்காணிப்பதற்கு கமராவை பொருத்தும் ஒரு சமூகம், தங்கள் வீட்டுக்குள் தங்கள் கண் முன்னே வளரும் பிள்ளைகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கின்றதா? பிள்ளைகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் பெற்றோரும் மூத்தவர்களும் பிள்ளைகளிடம் ஏற்படும் மாற்றங்களை உடனடியாகக் கண்டு கொள்வார்கள். பிள்ளைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கத் தவறும் பெற்றோரே பிள்ளைகளைத் தவறவிடுகிறார்கள். பெரும்பாலான படித்த வசதியானவர்கள் வீடுகளில் கமராவைப் பொருத்தும் ஒரு சமூகத்தில் பிள்ளைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க முடியாமல் போவது ஏன்? பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கு கமராவைப் பொருத்தும் பெற்றோரும் உண்டு. ஆனால் கமராவால் மட்டும் பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாது. அன்பினால்தான், பாசத்தால்தான், அறிவினால்தான் பிள்ளைகளைப் பின்தொடரலாம்; கண்காணிக்கலாம். ஒரு பகுதி படித்த பெற்றோராலேயே ஏன் பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாமல் போகிறது ?

இக்கட்டுரையாளர் யாழ்ப்பாணத்தில் கிராம மட்டங்களில் நடக்கும் சந்திப்புகளின்போது ஒரு கேள்வி கேட்பார். உங்களில் எத்தனை பேரிடம் கைபேசிகள் உண்டு? எல்லாருமே உண்டு என்று கூறுவார்கள். அதில் எத்தனை ஸ்மார்ட் கைபேசிகள்? என்று கேட்டால், அநேகமானவர்கள் தங்களிடம் இருப்பது அது தான் என்று கூறுவார்கள். பின்னர் ஒரு கேள்வி “கைபேசியில் நீங்கள் சராசரியாக ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவழிப்பீர்கள்?” அதற்குக் கிடைக்கும் பதில் பெரும்பாலும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கும். ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலமும் ஆகக்கூடியது 5 மணித்தியாளங்களும் என்று பதில் கிடைக்கும். அதை வைத்து மீண்டும் ஒரு கேள்வி. “அப்படியென்றால் கடந்த வாரம் முழுவதும் நீங்கள் கைபேசியில் இருந்து கற்றுக்கொண்ட ஒரு விடயத்தைச் சொல்லுங்கள்? அல்லது கைபேசியில் நீங்கள் பார்த்த, கேட்டவற்றுள் உங்களை மிகவும் பாதித்த, உங்களுடைய உணர்வில், சிந்தனையயில் மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு விடயத்தைச் சொல்லுங்கள்? என்று கேட்டால், அநேகமானவர்கள் பொருத்தமான பதிலைச் சொல்ல மாட்டார்கள். அரிதாகத்தான் நல்ல பதில் வரும்.

இது கிராமப்புறச் சந்திப்புகளின் போதும் அவதானிக்கப்பட்டது; நகர்ப்புறச் சந்திப்புகளின் போதும் அவதானிக்கப்பட்டது. படிப்பறிவு மட்டம் குறைந்தவர்கள் மத்தியிலும் அவதானிக்கப்பட்டது; அரசு அலுவலகங்களிலும் அவதானிக்கப்பட்டது. எனவே தொகுத்துப் பார்த்தால் படித்தவர், படிக்காதவர், வேலை செய்பவர், வேலை செய்யாதவர், வசதியானவர், வசதி குறைந்தவர், என்ற வேறுபாடு இன்றி சமூகத்தில் அதிக தொகையினர் கைபேசிகளின் கைதிகளாகவே காணப்படுகிறார்கள்.

அவ்வாறு கைபேசிகளின் கைதிகளாகக் காணப்படுவோரிடம் மேலும் ஒரு கூர்மையான கேள்வி கேட்கப்படும். “நீங்கள் சராசரியாக ஒரு மணித்தியாலத்தில் இருந்து ஐந்து மணித்தியாலங்கள் வரை கைபேசியோடு மினக்கெடுக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய வளரும் பிள்ளைகளின் கண்களைப் பார்த்து எத்தனை நிமிடங்கள் கதைக்கிறீர்கள்? உங்கள் வளரும் பிள்ளைகளைத் தொட்டு அரவணைத்து எவ்வளவு நேரம் உரையாடுகிறீர்கள்? உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் எத்தனை மணித்தியாளங்களைச் செலவழிக்கிறீர்கள்? இந்த கேள்விக்கு அவர்கள் கூறும் பதில் பெரும்பாலும் கைபேசியோடு அவர்கள் செலவழிக்கும் நேரத்தைவிட குறைவான நேரந்தான் தங்கள் பிள்ளைகளோடு அவர்கள் செலவழிக்கிறார்கள் என்பதாக இருக்கும்.

கைபேசி மட்டுமல்ல, தொலைக்காட்சியும் ஒரு நேரம் தின்னி தான். வீட்டில் இருப்பவர்கள், வயோதிபர்கள், குடும்பப் பெண்கள் தொலைக்காட்சியோடு கண்ணை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் கற்றுக் கொள்வது பெரும்பாலும் முற்போக்கானது அல்ல. பெரும்பாலான தொலைக்காட்சி சீரியல்கள் அவர்களுக்கு எதைக் கற்றுக்கொடுக்கின்றன? தொகுத்துப் பார்த்தால் பெரும்பாலான திரைத் தொடர்களில் பெண்கள் தான் சூழ்ச்சிகள், சதிகள் நிறைந்த தந்திரசாலிகள். மேலும், ஒரு ஆணுக்கு இரண்டு பெண்கள் ஆசைப்படுவார்கள். அந்த ஆண் ஒரு நாகமாக இருந்தால் இரண்டு பெண் நாகங்கள் ஆசைப்படும். இப்படிப்பட்ட திரைத் தொடர்களில் இருந்து முற்போக்கான விடையங்களை, பெண் விடுதலையை, சமூக விடுதலையை, கற்றுக்கொள்ள முடியாது. பெண்கள் பெண்களுக்கு எதிராக எப்படிச் சூழ்ச்சிகள் செய்வது என்று வேண்டுமானால் கற்றுக் கொள்ளலாம்.



இவ்வாறு கைபேசிகளோடும் தொலைக்காட்சிகளோடும் தம் பொழுதைப் போக்கும் பெற்றோரும் முதியோரும் அதே அளவு நேரத்தை பிள்ளைகளோடு செலவழிக்கிறார்களா? கிராம மட்ட சந்திப்புகளில் உங்கள் வளர்ந்த பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்கும் போது பிள்ளைகளோடு கதைத்துக் கதைத்து உணவு பரிமாறுவீர்களா? பிள்ளையின் கண்களைப் பார்த்து உரையாடுவீர்களா ? என்று கேட்டால், கணிசமான தாய்மார் கூறுவார்கள், இல்லை பிள்ளைகளோடு ஒன்றாக இருந்து சாப்பிடும் சந்தர்ப்பங்கள் குறைவு என்று. பிள்ளைக்கு சோலி அதிகம். பிள்ளையும் கைபேசியில் கண்ணை ஒட்டிக்கொண்டிருக்கும்.

மனிதர்கள் முன்னெப்பொழுதையும் விட பாரதூரமான விதத்தில் பொழுது போக்கிகளாக மாறிவிட்டார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே முதியோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே பொழுதுபோக்குச் சாதனங்கள் பெருகிவிட்டன. கைபேசியின் கைதிகளும் தொலைக்காட்சியின் கைதிகளும் மெய்யான பொருளில் பிள்ளைகளை முழுமையாகக் கண்காணிப்பதில்லை .

போதைப்பொருள் பாவனை தொடர்பான கருத்தரங்குகளில், துறைசார்ந்த மருத்துவர்களும் நிபுணர்களும் கூறுவார்கள், பிள்ளைகளின் கண்களை உற்றுக் கவனியுங்கள். அவை அசாதாரணமாகச் சிவந்திருக்கின்றனவா? பிள்ளையின் நடத்தைகளைப் பாருங்கள். அது எங்கே போகிறது? எப்பொழுது வருகிறது? யாரோடு சேர்க்கிறது? யாரோடும் சேர்வதில்லை? என்பவற்றைக் கவனியுங்கள். அது நித்திரை கொள்கிறதா? இல்லையா? ஒழுங்காகச் சாப்பிடுகிறதா? ஒழுங்காக மலம் கழிக்கிறதா? ஒழுங்காகக் குளிக்கிறதா? ஒழுங்காக ஆடை உடுத்துகிறதா? என்று கவனியுங்கள். பிள்ளைகளின் கண்களில், நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கவனியுங்கள். பிள்ளைகளின் கைபேசிகளில் யார் யார் இருக்கிறார்கள்? யாரோடு கதைக்கும்போது பிள்ளை தனியே போகிறது? பிள்ளை அதிகம் தனிமையில் இருக்கிறதா? இல்லையா? என்று உற்றுக் கவனியுங்கள். தனிமையில் இருக்கும்பொழுது பிள்ளை என்ன செய்கிறது? என்று பாருங்கள். அதாவது ஒரு சிசிடிவி கமராவானது நடக்கும் சம்பவங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதுபோல பெற்றோரும் பிள்ளைகளை இடையறாது கவனிப்பார்களாக இருந்தால் ஒரு பிள்ளையும் பெற்றோரிடம் இருந்து தவறிப்போகாது. பிள்ளைகளைக் கையாள்வது பெற்றோருக்குப் பெரிய சவாலாகவும் இராது.

எனவே கைப்பேசிகளின் காலத்தில், பொழுதுபோக்குகளின் யுகத்தில், பெற்றோருடைய குடும்ப முகாமைத்துவத் திறன்களை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. பிள்ளை வளர்ப்புக்கான அறிவு சார்ந்த திறன்களை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. ஒரு குடும்பத்தின் கொள்ளளவை அறிவுபூர்வமாக, விஞ்ஞான பூர்வமாக, அதேசமயம் உணர்வுபூர்வமாகவும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது.

அரசுசார்பற்ற நிறுவனங்கள் கிராம மட்டத்திலும் அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் திறன்களைக் கட்டியெழுப்பும் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்துவதுண்டு. ஆனால் அரசுசார்பற்ற நிறுவனங்களால் அழைத்து வரப்படுகின்ற வளவாளர்களில் அநேகமானவர்கள் யாந்திரீகமானவர்கள். சமூகத்தை அதன் பண்பாட்டு அம்சங்களின் ஊடாக அணுக முடியாதவர்கள். பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரே மாதிரியானவை. அங்கேயே ஒரு யாந்திரீகப் பண்பு வந்து விடுகிறது. படைப்புத்திறன் இருக்காது. எனவே சமூகத்தின், குடும்பங்களின், தனிநபர்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் விடயத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் கையாள முடியாது.

அது ஓர் அரசியல், பண்பாட்டுச் செயல்திட்டம். குடும்பங்களின் கொள்ளளவைக் கட்டி எழுப்புவது, பிள்ளை வளர்ப்புத் திறனைக் கட்டியெழுப்புவது, சமூக முகமைத்துவத்தைக் கட்டியெழுப்புவது, முரண்பாடுகள் மோதல்களாக வராமல் தடுப்பதற்குரிய திறன்களைக் கட்டியெழுப்புவது, உள்முரண்பாடுகள் குற்றச் செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுப்பதற்குரிய அறிவு சார் திறன்களைக் கட்டியெழுப்புவது… போன்ற எல்லாமே அரசியல் செயற் திட்டங்கள்தான். அது முழுக்கமுழுக்க அரசியல் பண்பாட்டு மறுமலர்ச்சி. அதற்கு ஒரு அரசியல் தரிசனமும் அதன் வழிவந்த பண்பாட்டு தரிசனமும் இருக்க வேண்டும். அதற்கு அரசியல் தலைமைத்துவம் வேண்டும் பண்பாட்டுத் தலைமைத்துவம் வேண்டும்.

ஆனால் கொடுமை என்னவென்றால், நமது அரசியல்வாதிகள் தங்கள் கட்சிக்குள் வரும் விவகாரங்களையே தீர்க்க முடியாதவர்களாக, தங்களுடைய கட்சிக்காரனுக்கு எதிராகவே வழக்குப் போடுகிறவர்களாக, தங்கள் கட்சியைக் கொண்டுபோய் நீதிமன்றத்தில் நிறுத்துகிறவர்களாகக் காணப்படும் ஒரு சமூகத்தில், குடும்பங்களுக்குள் வரும் முரண்பாடுகள், குற்றச்செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுக்கும் விதத்தில் குடும்பத் தலைமைத்துவத்தின் முகாமைத்துவத் திறன்களைக் கட்டியெழுப்புவது யார்?

நன்றி: நிலாந்தன்

ஈரானை சிதைக்க மொசாட் சதித் திட்டம்: டெஹ்ரானில் ஆட்சிகவிழ்ப்பு தோல்வி!

25.03.2026

> **ஈரான் நாட்டின் பொருளாதாரத்தை முடக்கி, மக்களை வாழ முடியாத நிலைக்குத் தள்ளுவதன் மூலமாக பொருளாதார நெருக்கடியால் மக்கள் எழுச்சி பெற்று போராடுவார்கள் என அமெரிக்கா எதிர்பார்த்தது. ஈரான் மக்கள் தங்களின் சொந்த அரசுக்கு எதிராக வீதிக்கு வரும்படி தூண்டிய மொசாட் தீட்டிய சதித் திட்டம் தற்போது படுதோல்வி அடைந்துள்ளது**

மத்திய கிழக்கில் போர் தொடரும் நிலையில், ஈரானுக்குள் மக்கள் எழுச்சியைத் தூண்டி அதன் மூலம் ஆட்சியைக் கவிழ்க்க இஸ்ரேலிய உளவுத்துறையான மொசாட் (Mossad) தீட்டிய ரகசியத் திட்டம் படுதோல்வி அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்த அமெரிக்காவும் இஸ்ரேலும் பயன்படுத்தும் அதே சதித் திட்டம் தான் இங்கும் அரங்கேற்றப் பட்டது. மொசாட் தீட்டிய அதே பழைய திட்டம் புதிய களமான தெஹ்ரானில் திட்டமிடப்பட்ட குழப்பம் படுதோல்வி அடைந்துள்ளது.

தோல்வியில் மொசாட் கனவு:

ஈரான் நாட்டின் பொருளாதாரத்தை முடக்கி, மக்களை வாழ முடியாத நிலைக்குத் தள்ளுவதன் மூலமாக பொருளாதார நெருக்கடியால் மக்கள் எழுச்சி பெற்று போராடுவார்கள் என அமெரிக்கா எதிர்பார்த்தது. ஈரான் மக்கள் தங்களின் சொந்த அரசுக்கு எதிராக வீதிக்கு வரும்படி தூண்டிய மொசாட் தீட்டிய சதித் திட்டம் தற்போது படுதோல்வி அடைந்துள்ளது.

ஆபிரிக்க, அரேபிய நாடுகளில் நடைபெறும் ஆட்சி மாற்ற – சதித் திட்டத்தை ஜனநாயகப் போராட்டம் (Pro-democracy protests) என மேற்கு உலக ஊடகங்கள் சித்தரிப்பது வழமையாகும். ஜனநாயக முகமூடி அணிந்த இந்த அரசுகள் தற்போது மொசாட்டின் பெரிய பொய்க்கும் இதே போர்வையை வழங்கியுள்ளன.

ஈரான் இப்போது வீழ்வதற்குத் தயாராக உள்ளது. ஒரு சிறிய தூண் டுதல் இருந்தால் போதும் மக்கள் ஆட்சியைத் தூக்கி யெறிந்து விடுவார்கள் என்ற சமீபத்திய மொசாட் உளவுத்துறை அறிக்கைகளின்படி அதன் தலைவர் டேவிட் பார்னியா (David Barnea) டிரம்ப் மற்றும் நெதன்யாகுவிடம் உறுதியளித்திருந்தார். இந்தத் தவறான கணிப்பின் அடிப்படையில் அமெரிக்கா ஈரானுக்கு எதிராகப் போரில் உடனடியாக இறங்கியது.

மேற்கத்திய ஊடகங்கள் ஈரானில் பெரும் புரட்சி வெடிப்பது போல செய்திகளை வெளியிட்டாலும், களத்தில் நிலைமை வேறாகவே இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

ஈரான் மக்கள் ஒற்றுமை:

இஸ்ரேல்–ஈரான் இடையேயான போர் தீவிரம் அடைந்த நிலையில் உள்ளது. விடுதலை என்று கூறிக் கொண்டு ஒரு நாட்டை ஆக்கிரமிக்க நினைக்கும் இவர்களின் தந்திரங்களை ஈரான் தனது இராணுவ பலத்தாலும், மக்களின் உறுதியாலும் முறியடித்து வருகிறது. ஜனநாயகம் என்கிற போர்வையில் ஒரு நாட்டைச் சிதைக்க நினைக்கும் இவர்களின் அழுக்கு அரசியல் இதுவரை ஈரானிடம் எடுபடவில்லை என தற்போது இஸ்ரேலுக்கு புரிந்துள்ளது.

பெப்ரவரி 28 முதல் அமெரிக்க- இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல்களால் ஈரானில் 3500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக ஈரான் அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதில் குறைந்தது 300 குழந்தைகளாக உள்ளனர்.

அமெரிக்க- இஸ்ரேல் சேர்ந்து தாக்குதல் நடத்துவதால், பகிரங்க எச்சரிக்கை விடுத்து ஈரானும் பதிலடி தாக்குதல் நடத்துகின்றது. அடிக்கு அடி, பதிலடியாக ஈரான் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்களை தாக்கியுள்ளது. இதனை வளைகுடாவின் இறுதி யுத்தமாக சிலர் பார்க்கின்றனர். மத்திய கிழக்கில் ஆரம்பித்த போர் தற்போது முடிவுக்கு வருமா என்பது சந்தேகமே.

இந்த போரில் ஈரான் தோல்வியில் விழுந்தால் அது ஈரானுக்கு மட்டுமான தோல்வியல்ல ரஸ்யாவிற்கான தோல்வி மற்றும் சீனாவிற்குமான தோல்வியாக முடியும் என ஊகிக்கப்படுகிறது. இதேவேளை மேற்கத்திய நாடுகள் தாங்கள் பொருளாதார ரீதியாக விழும் போது வளைகுடா நாடுகளும் விழ வேண்டும் என்று சிந்திப்பதை போல் உள்ளது.

தெஹ்ரானில் திட்டமிடப்பட்ட ஆட்சி கவிழவில்லை. மொசாட் எதிர்பார்த்தது போல ஈரானிய அரசு சரிந்து விடவில்லை. மாறாக முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் பதில் தாக்குதல்களை ஈரான் நடத்தி வருகிறது. மேலும் அமெரிக்க இஸ்ரேலிய கூட்டுத் தாக்குதல்களுக்கு எதிராக ஈரானிய மக்கள் தங்களின் அரசுக்கு பின்னால் அணி திரண்டுள்ளனர்.

போர்க் காலத்தில் ஈரான் மக்கள் ஒற்றுமைப்பட்டுள்ளமை போல தெரிகிறது. தெஹ்ரானில் மக்கள் புரட்சி ஏற்படாததால் ஏமாற்றமடைந்த நெதன்யாகு அரசு தற்போது மொசாட் மீது அதிருப்தியில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெட்ரோ டாலர் பொருளாதாரம்:

மேற்கு நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, வளைகுடாவில் குவைத் மற்றும் பஹ்ரைன் போன்ற சிறிய வர்த்தக இராஜ்ஜியங்களை உருவாக்கி, பின்னர் ஈரான் என்ற பெயரில் ஒரு கற்பனையான எதிரியை உருவாக்கி வைத்துள்ளது. அவர்களிடம் கண்சாய் எண்ணெயை அமெரிக்க டாலரில் விற்கச் சொல்கின்றன. அதற்கு ஈடாக நாங்கள் உங்களைப் பாதுகாப்போம் என்றும் கூறுகின்றது.

உண்மையான கணிப்புகளில் அமெரிக்கா நீண்ட காலத்திற்கு முன்பே சரிவை நோக்கி செல்கிறது. ஆசிய நாடுகளைப் போல அது சரிந்துவிடாமல் இருப்பதற்கு ஒரே காரணம் பெட்ரோ டாலர் தான். மேலும் பாதுகாப்பிற்காக அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களையும் அமெரிக்க டாலரில் வாங்குமாறு மற்றய நாடுகளிடம் கோரிக்கை வைத்து வருகிறது. அமெரிக்காவின் பார்வையில் இது ஒரு தந்திரமான செயல்.

முக்கியமாக மற்ற நாடுகள் அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து வாங்க வேண்டிய எண்ணெயை அமெரிக்க டாலரில் வாங்குவதன் மூலம், உலகின் பிற நாடுகள் அமெரிக்காவின் கடனை அடைக்கின்றன என்பதே உண்மையாகும். எண்ணெயை போதுமான நாடுகள் வாங்கத் தயாராக இருப்பதால், அமெரிக்க அரசால் அதிக டாலர்களை அச்சிடவோ அல்லது வைப்பில் சேர்க்கவோ முடியும்.

இஸ்ரேலிய அணு சக்தி தளம் மீது தாக்குதல்:

தெற்கு இஸ்ரேலின் டிமோனா மற்றும் அராட் நகரங்களை ஈரான் ஏவுகணை மூலம் தாக்கியுள்ளது. டிமோனாவில் இஸ்ரேலின் முக்கிய அணு சக்தி தளம் அமைந்துள்ளதால் இந்த தாக்குதல் புது அச்சத்தை உருவாக்கியுள்ளது. இதற்கு இஸ்ரேல் தொடுத்த தாக்குதலே பதிலடி என்று ஈரான் கூறுகிறது.

ஈரானின் இந்த தாக்குதில் இஸ்ரேலில் குறைந்தது 180 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது. அராட் மற்றும் டிமோனாவில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அராட் (Arad) நகரில் 116 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 7 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். இந்நகர மையத்தில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. டிமோனாவில் (Dimona) 64 பேர் காயமடைந்து உள்ளனர்.

ஈரானின் இந்த திடீர் தாக்குதல் மற்றும் பாதிப்பை கண்டு அதிர்ச்சி அடைந்து இதை “கடினமான இரவு” என்று இஸ்ரேலிய பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை சர்வதேச நாடுகளுடன் இணைந்து தொடருவோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

அண்மைய ஈரானின் ஏவுகணை தாக்குதலின் போது இஸ்ரேலின் அயன் டோம் (Iron Dome) வான்பாதுகாப்பு அமைப்புகள் இயக்கப்பட்டன. ஆனால் சில ஏவுகணைகள் தடுக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இது இஸ்ரேல் வான்பாதுகாப்பு தோல்வியா என சந்தேகம் எழுந்துள்ளது.

ஈரான் நடான்ஸ் அணு வசதி மீது தாக்குதல்

ஈரான் தனது நடான்ஸ் அணு செறிவூட்டல் (Natanz Nuclear Enrichment Complex) வசதி மீது அமெரிக்கா-இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக கூறியுள்ளது. ஆனால் கதிரியக்க கசிவு இல்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக தான் அராட் (Arad) மற்றும் டிமோனாவில் (Dimona) தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது. நடான்ஸ் தாக்குதலுக்கு இஸ்ரேல் பொறுப்பல்ல என்று மறுத்துள்ளது. இஸ்ரேல் இராணுவம் இது குறித்து முழு அறிக்கையை இதுவரையில வெளியிடவில்லை. அமெரிக்க தரப்பிலும் இதுகுறித்து விளக்கம் கொடுக்கவில்லை.

தெஹ்ரான் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்கியுள்ளது. தெஹ்ரானில் உள்ள மாலெக் அஷ்தார் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை தாக்கியதாக அறிவித்தது. இந்த மையம் அணு ஆயுதங்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளுக்கான பாகங்களை உருவாக்க பயன்படுத்தப்பட்டதாக இஸ்ரேல் கூறியது.

ஈரான் அணு ஆயுதம் பெற அனுமதிக்க மாட்டோம் என்று இஸ்ரேல் இராணுவம் உறுதியளித்தது. ஆனால் இந்த தாக்குதல்கள் போரை புதிய கட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளன. ஆம் முதல் கட்டமாக ஈரான் தலைவர்கள் மற்றும் அவர்களது இருப்பிடம் மட்டுமே தாக்கப்பட்ட நிலையில், அடுத்தக்கட்டமாக கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தளங்கள் மீது ஈரான் – இஸ்ரேல் தாக்குதல் நடத்தின.

இந்த நிலையில் தற்போது இரு நாடுகளும் அணு சக்தி தளங்களை குறிவைத்து தாக்க துவங்கியுள்ளன. ஈரானில் Natanz, இஸ்ரேலில் Dimona பகுதிகளில் தாக்குதல்கள் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இரு தரப்பும் அணு வசதிகளை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தி வருவது உலக நாடுகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. சாதாரண மக்களுக்கு இது பொருளாதாரம், எரிசக்தி விலை உயர்வு, பாதுகாப்பு அச்சம் போன்றவற்றை தாண்டி புதிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கார்க் தீவை தாக்கி அமெரிக்கா கைப்பற்றுமா? ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி முடங்குமா?

14.03.2026

ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியின் முக்கிய மையமான கார்க் தீவை அமெரிக்கா கைப்பற்றி எடுக்கப் போகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இரு தினங்களுக்கு முன்னர் ஈரானின் கார்க் தீவு மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருப்பது, வளைகுடா யுத்தத்தை மேலும் மோசமடையச் செய்திருக்கிறது.

அமெரிக்காவின் ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான நிர்வாகம், ஈரானின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவை (Kharg Island) அமெரிக்க இராணுவம் கைப்பற்றும் திட்டத்தை பரிசீலித்ததாக சர்வதேச ஊடகங்களும் பாதுகாப்பு ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர்.

கார்க் தீவில் அமெரிக்கா தாக்குதல்

ஈரானின் கார்க் தீவு மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருப்பது, வளைகுடா யுத்தத்தை மேலும் மோசமடையச் செய்திருக்கிறது.



ஈரானின் மொத்த மசகு எண்ணெய் ஏற்றுமதியின் பெரும்பகுதி இந்த கார்க் தீவு வழியாகவே நடைபெறுகிறது. எனவே இந்த தளத்தில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதால் உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் பெரிய தடங்கல் உருவாகும் அபாயம் உள்ளது.

இதனால் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகள் திடீரென உயரக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஈரான் பதிலடியாக மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்க தளங்கள் மீது ஈரான் தாக்குதலை தீவிரப்படுத்தியிருக்கிறது.

ஈரானின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவு (Kharg Island) மீது அமெரிக்கா தாக்குதல்களை நடத்தினால், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவுடன் தொடர்புடைய அனைத்து எண்ணெய் மற்றும் எரிசக்தி கட்டமைப்புகளையும் சாம்பலாக்கி விடுவோம் என்று ஈரான் இராணுவம் முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தது.

கார்க் தீவு என்பது பாரசீக வளைகுடாவின் வடபகுதியில் அமைந்துள்ள சிறிய தீவு. சுமார் ஐந்து மைல் நீளமுள்ள இந்த தீவு, ஈரானின் முக்கிய கடல்சார் மூல எண்ணெய் ஏற்றுமதி நிலையமாக செயல்படுகிறது. ஈரானின் குஸெஸ்தான் (Khuzestan) மாகாணத்திலுள்ள நிலத்தடி எண்ணெய் களங்களிலிருந்தும் வளைகுடா கடல்பரப்பிலுள்ள எண்ணெய் களங்களிலிருந்தும் குழாய்கள் இத்தீவுக்குள் இணைக்கப்பட்டுள்ளன. இவை பெரும் சேமிப்பு தொட்டிகளுக்கும் ஏற்றுமதி தளங்களுக்கும் எண்ணெயை கொண்டு வந்து, நாளொன்றுக்கு பல மில்லியன் பேரல்கள் அளவிலான மூல எண்ணெயை உலக சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்ய உதவுகின்றன.

ஈரானின் மூல எண்ணெய் ஏற்றுமதி

ஈரானின் எண்ணெய் வருவாயில் 90% வரை இங்கு இருந்தே பெறப்படுகிறது. அத்துடன் ஈரானின் மொத்த மூல எண்ணெய் ஏற்றுமதியின் 90 முதல் 98 சதவீதம் வரை கார்க் தீவு வழியாகவே நடைபெறுகிறது. மேலும் ஈரானின் அரச வருவாயில் சுமார் காலாண்டு முதல் இரண்டில் ஒரு பகுதி வரை எண்ணெய் வருவாயிலிருந்தே கிடைக்கிறது. இந்த வருவாயில் முக்கிய பங்கினைப் பெறுபவர்களில் ஈரானிய புரட்சி படை அமைப்பும் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

ஈரான் போர் ஆரம்பிக்கும் முன்பு அமெரிக்காவில் விவாதிக்கப்பட்டதாக கூறப்படும் இராணுவத் திட்டம் தற்போது கசிந்து உள்ளது. சில பாதுகாப்பு ஆய்வாளர்கள் மற்றும் ஊடகத் தகவல்களின் படி, அமெரிக்க நிர்வாகத்தினுள் டிரம்ப் காலகட்டத்தில் கார்க் தீவை கைப்பற்றும் திட்டம் குறித்து ஆலோசனைகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த திட்டத்தில், அமெரிக்காவின் முக்கிய 82வது வான் படை பிரிவு (82nd Airborne Division) ஈடுபடக்கூடியதாக எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படி, கார்க் தீவு, அருகிலுள்ள நிலப்பரப்பு எண்ணெய் வழங்கும் நிலையங்கள், கடலடிப் குழாய்கள் என அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, நாளொன்றுக்கு சுமார் 2.7 மில்லியன் பீப்பா எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தக்கூடிய நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் திட்டமிடப்பட்டது.

கார்க் – ஈரானின் உயிர் நாடி:

கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடந்த 12 நாள் போருக்கு முன்பே,

ஈரானின் சாத்தியமான இலக்குகளின் பட்டியலில் கார்க் தீவின் பெயர் இடம்பெற்றிருந்தது. இம்முறை, டெஹ்ரான் மற்றும் கரஜ் எண்ணெய் கிடங்குகள் மீதான தாக்குதலுக்கு மறுநாள், இஸ்ரேலின் முன்னாள் பிரதமரும் அந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவருமான யாயிர் லேபிட்-இன் சமூக ஊடக பதிவைத் தொடர்ந்து, கார்க் தீவு மீதான கவனம் மேலும் அதிகரித்தது. கார்க் தீவில் உள்ள ஈரானின் அனைத்து எண்ணெய் வயல்களையும் எரிசக்தித் தொழில்துறையையும் இஸ்ரேல் அழிக்க வேண்டும். இது ஈரானின் பொருளாதாரத்தை அழித்து, அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்று அவர் எழுதியிருந்தார்.

இம்முறை போரில் கார்க் தீவை கைப்பற்றி ஆக்கிரமிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக மார்ச் 7-ஆம் திகதி அமெரிக்க அரசு அதிகாரிகளை மேற்கோள் காட்டி "ஆக்சியோஸ்" செய்தி இணையதளம் தெரிவித்துள்ளது. பென்டகனின் முன்னாள் மூத்த ஆலோசகர் மைக்கேல் ரூபின் கடந்த வாரம் "பொலிட்டிகோ"விடம் (Politico) பேசுகையில், கார்க் தீவின் முக்கியத்துவம் மற்றும் அதை ஆக்கிரமிக்கும் விஷயம் குறித்து டிரம்ப் நிர்வாக அதிகாரிகளுடன் பேசியதாகத் தெரிவித்தார்.

ஏவுகணைத் தாக்குதல்கள் மற்றும் குண்டுவீச்சுகளுக்கு அப்பால் ஈரான் மீதான அழுத்தத்தை டிரம்ப் அதிகரிக்க விரும்பினால், கார்க் தீவைக் கைப்பற்றுவது ஈரானிய ஆட்சியின் மிக முக்கியமான நிதி ஆதாரத்தைப் முழுமையாக முடக்கும் என்று கூறப்படுகிறது.

உலக பொருளாதார அபாயம்:

இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், ஈரானின் முக்கிய வெளிநாட்டு நாணய வருவாய் தடைபட்டு சில வாரங்களுக்குள் ஈரானில் பாரிய பொருளாதார நெருக்கடி உருவாகும் வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர். ஆனால் இதே வேளை, இந்த நடவடிக்கை ஈரானின் கடுமையான பதிலடி நடவடிக்கைகளை தூண்டி, வளைகுடா பகுதியிலுள்ள ஆற்றல் கட்டமைப்புகளுக்கு தாக்குதலுக்கு உட்படும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதுவே உலக பொருளாதாரத்திற்கும் ஏற்படும் மிகப்பெரிய அபாயம் என்றும் கூறப்படுகிறது.

மேலும் உலகளாவிய எண்ணெய் விலைகளில் திடீர் உயர்வு போன்ற விளைவுகளை உருவாக்கக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை தற்போது தொடரும் போரால் அமெரிக்காவின் அவசர எண்ணெய் கையிருப்பில் (Strategic Petroleum Reserve) சேமித்து வைக்கப்பட்டிருந்த

எண்ணெய்யை சந்தைக்கு விடுவிக்க டிரம்ப் உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலக சந்தையில் எண்ணெய் விலையை கட்டுப்படுத்தவும், எரிபொருள் விநியோகத்தில் ஏற்படக்கூடிய தடைகளை சமாளிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. குறிப்பாக மத்திய கிழக்கு பகுதியில் உருவாகியுள்ள போர் காரணமாக உலகளவில் எண்ணெய் வழங்கலில் சிக்கல் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

கார்க் தீவின் எண்ணெய் வயல்:

கார்க் தீவு கடலால் சூழப்பட்ட சுமார் இருபது சதுர கிலோமீட்டர் பரப்பளவு மட்டுமே கொண்ட ஒரு பவளத் தீவாகும். இது ஈரானின் தென்மேற்கில் அமைந்துள்ளது. அந்த நாட்டின் நிர்வாகப் பிரிவுகளில் புஷெர் மாகாணத்தின் ஒரு பகுதியாகும்.

இங்குள்ள எண்ணெய் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அருகே மான்கள் உலவுவதைக் காணலாம். இத்தீவு மான்களின் வாழ்விடத்திற்கும் இனப்பெருக்கத்திற்கும் சாதகமான இடமாகக் கருதப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கு விடப்பட்ட மான்களின் எண்ணிக்கை, சமீபத்திய அறிக்கைகளின்படி தீவின் கொள்ளளவை விட அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

மிகச் சிறிய அளவிலான தீவாக இருந்தாலும், ஈரானுக்கு கார்க் தீவு மிகவும் முக்கியமானது, குறிப்பாக எண்ணெய் ஏற்றுமதியில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. ஈரானின் முதன்மையான எண்ணெய் ஏற்றுமதி முனையமாக கார்க் தீவு திகழ்கிறது. நாட்டின் தெற்கே உள்ள எண்ணெய் வளமிக்க பகுதிகளுக்கு மிக அருகாமையில் இருப்பது, சாதகமான கடல் சூழல் மற்றும் பெரிய எண்ணெய் கப்பல்கள் வந்து செல்லத் தேவையான ஆழம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு மிகவும் பொருத்தமான இடமாக கார்க் தீவு கருதப்படுகிறது.

கார்க் தீவை ஈரானின் எண்ணெய் வயல்களின் மையப்புள்ளியாகக் கருதலாம். கச்சா எண்ணெயைச் சேமிப்பதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் இது ஒரு முக்கியமான தளம் என்பதே இதன் சிறப்பம்சமாகும். கார்க் தீவிற்கு மேற்கே சுமார் 75 கிலோமீட்டர் தொலைவில் ஈரானின் மிகப்பெரிய கடல்சார் எண்ணெய் வயலான அபுசார் அமைந்துள்ளது. இது பாரசீக வளைகுடாவில் ஈரானின் பெரும்பாலான எண்ணெய் உற்பத்திக்கான ஆதாரமாகும்.

அபுசார் எண்ணெய் வயலில் மூன்று முக்கிய உற்பத்தித் தளங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 80,000 பீப்பாய்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. அபுசார் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் கார்க் தீவில் அமைந்துள்ளது. இதன் காரணமாக, ஈரானின் மிகப்பெரிய எண்ணெய் சேமிப்பு மையங்களில் ஒன்று கார்க் தீவில் அமைந்துள்ளது.

வளைகுடா யுத்தத்தை மேலும் மோசமடையச் செய்யும் வகையில், ஈரானின் கார்க் தீவு மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரானின் மொத்த மசகு எண்ணெய் ஏற்றுமதியின் பெரும்பகுதி இந்த கார்க் தீவு வழியாகவே நடைபெறுகிறது. எனவே இந்த தளத்தில் பாரியசேதம் ஏற்பட்டுள்ளதால் உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் பெரிய தடங்கல் உருவாகும் அபாயம் உள்ளது.

ஈரானின் முதன்மையான எண்ணெய் ஏற்றுமதி முனையமாக கார்க் தீவு திகழ்கிறது. நாட்டின் தெற்கே உள்ள எண்ணெய் வளமிக்க சாதகமான கடல் சூழல் மற்றும் பெரிய எண்ணெய் கப்பல்கள் வந்து செல்லத் தேவையான ஆழம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு மிகவும் பொருத்தமான இடமாக கார்க் தீவு கருதப்படுகிறது

ஈகைச்சுடர்

அன்னை பூபதி

தமிழீழத்தில் அமைதிப்படை என்ற போர்வையில்
இந்தியப்படை புரிந்திட்ட அடக்குமுறைக்கு எதிராக
19.03.1988 அன்றிலிருந்து 19.04.1988 வரையிலான
சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில்
உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர்

தமிழீழ விடுதலை வரலாற்றில் ஏப்ரல்

பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது

18.04.1958 அன்று சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவிற்கும், தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவிற்கு மிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமான பண்டா-செல்வா ஒப்பந்தம் பண்டாரநாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது.



தந்தை செல்வா நினைவு நாள் –26.04.1977

தமிழரசுக் கட்சியின் நிறுவனரும், தமிழினத்தின் உரிமைகளை அகிம்சை வழிமுறை மூலம் பெற்றுவிடத் துடித்த தலைவர் கட்சிக்காகவும், இனத்திற்காகவும் அளப்பரிய தியாகங்களைச் செய்தவர் தந்தை செல்வா (எஸ்.ஜே.வி. செல்வநாயகம், பிறப்பு: 31.03.1898 - ஈப்போ, மலேசியா) அவர்களின் நினைவு நாள்.

பஸ்தியாம்பிள்ளையும் அவரது அணியினரும் அழிப்பு

தமிழ் இளைஞர் பலரை சித்திரவதை செய்வதில் முன்னிலையில் நின்ற வரும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் தீவிரமாகச் செயற்பட்டவருமான சிறீலங்கா காவல்துறை ஆய்வாளர் பஸ்தியாம்பிள்ளை தலைமையிலான பொலிஸ் அணியினர் முருங்கன் பகுதிக்கு அருகே மடு றோட் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமொன்றை 07.04.1978 அன்று சுற்றிவளைத்தனர். மாவீரர் லெப்.செல்லக்கிளி தலைமையிலான விடுதலைப் புலிகள் சமயோசிதமாக பஸ்தியாம்பிள்ளை குழுவினரை மடக்கி அவர்களைத் தாக்கியழித்து, அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது அறிக்கை

25.04.1978 அன்று முதன் முதலாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்திற்கும் உரிமை கோரி பத்திரிகைக் குறிப்பு (Press Release) வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு பட்டித்திடல் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டித்திடல் கிராமத்தில் சிறீலங்காப் படைகளால் 26.04.1981 அன்று 16 தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர்.

அரச செயலகத் தகர்ப்பு

02.04.1983 அன்று யாழ் மாவட்ட அமைச்சராக இருந்த விஜயக்கோன் தலைமையில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது சம்மந்தமான உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு நடைபெறுவதாக இருந்தது. கூட்டம் நடைபெறுவதற்கு சில மணித்துளிகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதல் அணியினரால் செயலகக்கட்டடம் தகர்த் தழிக்கப்பட்டது.

இராணுவத் தொடரணி மீதான அழித்தொழிப்புத் தாக்குதல்

சுண்ணாகம், தெல்லிப்பளை பகுதியில் தமிழ் மக்கள் மீது படுகொலைகள் புரிந்த சிறீலங்கா கஜபாகு ரெஜிமெண்டைச் சேர்ந்த இராணுவ வண்டி மீது மீது 09.04.1984 விடுதலைப் புலிகளின் படையணிகள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வைத்து கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இராணுவத் தொடரணி முற்றாகச் சிதைக்கப்பட்டது 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரின்றக் வண்டியொன்று முற்றாகச் சிதைக்கப்பட்டது.

யாழ் அடைக்கலமாதா ஆலயத்தின் மீது அரச படைகளின் தாக்குதல்

சிறீலங்கா அரசபடைகள், யாழ் கத்தோலிக்க சமூகத்தின் கலாச்சாரத்தோடு பின்னிப்பிணைந்த அடைக்கலமாதா ஆலயத்தின் மீது 09.04.1984 அன்று றொக்கட் தாக்குதலை நடத்தியதில் ஆலயம் பலத்த சேதமடைந்தது.

யாழ் நகரில் தமிழ் மக்களின் எழுச்சி

10.04.1984 அன்று சிறீலங்கா அரசு தனது இனவாத நலன்களுக்காக யாழ்நகரில் அமைந்திருந்த பௌத்த ஆலயமும், சிங்களப்பாடசாலையும் எழுச்சி கொண்ட தமிழ் மக்களால் தகர்க்கப்பட்டன.

பருத்தித்துறை காவல் நிலையத் தகர்ப்பு

கப்டன் லாலாரஞ்சன் தலைமையில் திரண்ட பொதுமக்களாலும், புலிவீரர்களாலும் பருத்தித்துறை காவல் நிலையம் தகர்க்கப்பட்டது.

யாழ் காவல் நிலையத் தகர்ப்பு

நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த யாழ் காவல்நிலையம் கேணல் கிட்டண்ணாவின் வழிநடத்தலில் 1985.04.10 அன்று தகர்க்கப்பட்டது.

மூத்த உறுப்பினர் கப்டன் லிங்கம் வீரச்சாவு

புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான கப்டன் லிங்கம் ரெலோ தேசத்துரோகிகளுடனான மோதலின்போது 29.04.1986 அன்று வீரச்சாவடைந்தார். வரலாற்றுப் புகழ்மிக்க திருநெல்வேலித் தாக்குதல் உட்பட விடுதலைப் புலிகளால் ஆரம்பகாலங்களில் இராணுவத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களில் இவர் பங்குகொண்டிருந்தார்.

அன்னை பூபதி அவர்களின் நினைவு நாள் – 19.04.1988

ஓர் இனத்தின் அரசியல் சுபீட்சத்திற்காக ஆக்கிரமிப்பு நாட்டிற்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டம் நடாத்தி உயிர் நீத்த உலகின் முதற் பெண்மணி அன்னை பூபதி (கணபதிப்பிள்ளை பூபதி, பிறப்பு: 03.11.1932 - கிரான்) அவார்.

திம்புப் பேச்சுவார்த்தை ஆரம்பம்

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையே பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை 10.04.1985 அன்று ஆரம்பமாகியது. சிறீலங்காவின் நயவஞ்சகத்தால் இப்பேச்சுவார்த்தை முயற்சி குழம்பியது.



லெப். கேணல் கிறேசி அவர்களின் வீரவணக்க நாள் – 19.04.1991

மன்னார் பெரியமடுப் பகுதி நோக்கி பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை எதிர்த்து நடந்த சமரில் லெப். கேணல் கிறேசி (கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை, வட்டக்கச்சி-கிளிநொச்சி, பிறப்பு: 19.08.1960) 19.04.1991 அன்று வீரச்சாவடைந்தார்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பம்

சமாதான முயற்சிகள் எப்பயனுமற்று தொடர்ந்தவேளை, சந்திரிகா அரசுடன் செய்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக தேசியத் தலைவர் அவர்கள் அறிவித்த 19.04.1995 அன்று விடுதலைப் புலிகளின் கடற்கரும்புலிகளால் முதலாவது தாக்குதல் திருமலைத் துறை முகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சிறீலங்காக் கடற் படையின் சங்காய் வகையைச் சேர்ந்த இரு பீரங்கிக் கப்பல்கள் அழிக்கப்பட்டன.

மூன்றாம் கட்ட ஈழப்போர்: திருமலையில் கரும்புலித் தாக்குதல் – 19.04.1995

சமாதான பேச்சுவார்தைகள் எப்பயனுமற்று தொடர்ந்தவேளை சந்திரிக்காவுடன் செய்யப்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக அறிவித்து தலைவர் போரை பிரகடனப்படுத்திய பின் புலிகள் நிகழ்த்திய முதலாவது தாக்குதலில் இவர்கள் வீரச்சாவடைந்தனர். திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி சிங்கள படையின் சங்காய் வகையைச் சேர்ந்த சூரயா, ரணசுறு பீரங்கிக் கப்பல்கள் இரண்டை மூழ்கடித்த கரும்புலித் தாக்குதலில் வீரவரலாறாகிய நான்கு கரும்புலிகளான மேஜர் கதிரவன் (கோவிந்தன் சிவராசா, பிறப்பு: 26.07.1963 - பரந்தன்), மேஜர் தணிகைமாறன் (அன்ரனி பெனடிற்க், பிறப்பு: 28.06.1970 - யாழ்), மேஜர் மதுசா (முருகேசு இராஜலட்சுமி, பிறப்பு: 25.08.1974 -திருகோணமலை), கப்டன் சாந்தா (விஜயதேவி சிவசுப்பிரமணியம், பிறப்பு: 25.08.1973 -புங்குடுதீவு) ஆகியயோர் அடங்குவர்.

திருக்கோணமலைத் துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்ட 'சூரயா' – அதிவேகப் பீரங்கிக் கப்பல்.

திருக்கோணமலையில் மூழ்கடிக்கப்பட்ட 'ரணசுறு' – அதிவேக பீரங்கிக் கப்பல்.

தமிழர் மீது சந்திரிகா அரசினால் பொருளாதாரத்தடை விதிப்பு

சந்திரிகா அரசினால் 1995.04.20 அன்று தமிழ்ப் பகுதிகளுக்கான பொருளாதாரத்தடை குறித்து 867/12 என்ற இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் 21 பொருட்களுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டது.

யாழ் வான்பரப்பில் 2 அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் 28.04.1995 அன்று அவ்ரோ விமானம் பலாலித் தளத்தினுள் சுட்டு வீழ்த்தப்பட்டது. வான்படையின் உயர் அதிகாரிகள் பலர் உட்பட 40 படையினர் கொல்லப்பட்டனர். மறுநாள் இன்னொரு அவ்ரோ விமானம் நவக்கிரியில் சுட்டுவீழ்த்தப்பட்டது இதில் பயணம் செய்த 50 வரையான படையினர் கொல்லப்பட்டனர்.

சிறீலங்கா கொழும்புத் துறைமுகத்திற்குல் கரும்புலித் தாக்குதல் – 12.04.1996

சிங்களப் பேரினவாத அரசு தமிழ்மக்கள் மீது நடாத்தும் இனப்படுகொலைக்கு வேண்டிய ஆயத தளபாடங்களை இறக்கும் சிறீலங்கா கொழும்புத் துறைமுகத்திற்கு ஓர்பெரும் அடி கொடுத்தனர் கரும்புலிகள். சிங்களத்தின் இதயப்பகுதியில் உச்ச பாதுகாப்பின் மத்தியில் 09 கடற்கரும்புலிகள் சிங்களத்தை அதிரவைத்தனர்.





இவ் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட வரலாற்று சாதைனைமிகு கரும்புலித் தாக்குதல் அணித் தலைவராக பங்கேற்ற கடற்கரும்புலி லெப். கேணல் ரதீஸ் (அருமச் சந்திரன் செந்தில்குமார், பிறப்பு: 01.08.1974 - கந்தர்மடம், வேம்படி -யாழ்ப்பாணம்), இவருடன் கரும்புலிகளான மேஜர் பொய்யாமொழி (விசுவாசம் டானியல், பிறப்பு: 23.05.1971 - திருமலை), மேஜர் ஜனார்த்தனன் (சிற்றம்பலம் கிருஸ்ணதாஸ் - பிறப்பு: 21.12.1971 - காங்கேசந்துறை),





மேஜர் பரன் (நாகேந்திரன் தங்கராசா, பிறப்பு: 25.09.1975 - பருத்தித்துறை), மேஜர் ரவாஸ் (திருச்செல்வம் கிளமென்ற், பிறப்பு: 28.08.1975 - சக்கோட்டை, அல்வாய் மேற்கு), மேஜர் ரதன் (வேலுப் பிள்ளை சுரேஸ்ராஜன், பிறப்பு: 23.12.1972 - திருமலை),

கப்டன் சுபாஸ் (மாரிமுத்து வசந்தகுமார், பிறப்பு: 28.01.1974 - திருமலை), கப்டன் மதனி (இராசரத்தினம் சுமதி, பிறப்பு: 14.04.1975 - வெற்றிலைக்கேணி), கப்டன் விக்கி (கணபதிப்பிள்ளை தெய்வ நந்தினி, பிறப்பு: 20.11.1975 - தாளையடி, மருதங்கேணி வடக்கு) ஆகியோரின் வீரவணக்க நாள்.

நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

கொக்குளாய் கடற்பரப்பில் கடற்கரும்புலித் தாக்குதல் – 18.04.1998

திருகோணமலையிலிருந்து கொக்குளாய் வரையான கடற்பரப்பில் சிறீலங்கா இராணுவத்திற்கும் கடற்புலிகளுக்கும் ஏற்பட்ட கடும் சமரின்போது கரும்புலித்தாக்குதலினை மேற்கொண்டு கப்டன் ஈழவேந்தன் (ஆறுமுகம் விரசிங்கம், பிறப்பு: 15.03.1978 -சுழிபுரம், கப்டன் பூங்குழலி (சாமிநாதன் சின்னமலர், பிறப்பு: 08.08.1976 - நெடுந்தீவு) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் ஈழவேந்தன்

கப்டன் பூங்குழலி

லெப். கேணல் செந்தாமரை (ரோசா) வீரவணக்க நாள் – 18.04.1998

கடற்புலிகளின் மகளிர் படையணித் தளபதியான லெப்.கேணல் செந்தாமரை (வசந்தி வேலாயுதம், திருகோணமலை, பிறப்பு: 08.02.1975) இவர் 18.04.1998 அன்று புடைவைக்கட்டு திருகோணமலை கடற்பரப்பில் சிறீலங் காக் கடற்படையின் கடற்கலங்கள் மீதான தாக்குதலின் போது வீரச் சாவடைந்தார்.

ஆனையிறவுப் பெருந்தள மீட்பு வரலாற்று நிகழ்வு

தமிழீழ தேசத்தில் 240 வருட காலமாக அடிமைச் சின்னமாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத்தலில் 22.04.2000 அன்று ஓயாத அலைகள் - 03 படையணிகளால் மீட்கப் பட்டது. 240 சதுர கிலோ மீற்றர் பரந்திருந்தும் 15000 இராணுவத்தினரை கொண்டிருந்தும் யாழ் குடாநாட்டின் வாசலில் பெரும் தடைகல்லாக இருந்ததுமான இப்படைத்தளம் மீட்கப்பட்டதானது தமிழர்களின் விடுதலை வரலாற்றில் வெற்றியின் மைல்கல்லாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட இப் பெருந்தள தாக்குதலில் வெற்றிக்கு வித்தாக 35 போராளிகள் விரச்சாவடைந்தனர்.

08.04.2002 – யாழ் செல்லும் புலிகளும்: யாழ். கண்டி வீதி திறப்பும்

தமது ஆக்கிரமிப்பை உறுதிப்படுத்த வன்னியை ஊடறுத்து யாழ் குடாநாட்டுக்கு பாதையமைக்க சிங்கள அரசு மேற்கொண்ட ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை முறியடித்தனர் புலிகள். இது புலிகளின் இராணுவ வெற்றி சிங்கள் ஆக்கிரமிப்பு நோக்கிலான முயற்சியை தோற்கடித்த விடுதலைப்புலிகள் சமாதான முயற்சி வாயிலாக மக்களின் போக்குவரத்துக்கு பாதை திறந்தனர். அப் பாதை வழியே யாழ் சென்ற புலிவீரர்கள் மக்கள் வெள்ளம் அன்புப் பெருக்கில் ஆரவாரித்து வரவேற்றது. இது புலிகளின் அரசியல் வெற்றி.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் சர்வதேச ஊடக வியலாளர் சந்திப்பு -10.04.2002

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாரகன் அவர்கள் 10.04.2002 அன்று

கிளிநொச்சியில் நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் 700-ற்கும் மேற்பட்ட செய்தி யாளர்களை சந்தித்து சுமார் இரண்டரை மணி நேரம் செய்தியாளர் மாநாட்டை நடத்தியிருந்தார். அங்கே பலதரப்பட்ட கேள்விகளுக்கும் அவர் விரிவான பதில்களை வழங்கியிருந்ததுடன் சமாதான முயற்சிகள் பற்றியும் ஊடகவியலாளர் தொடுத்த வனாக்களுக்கு விடையளித்தார்.

மாமனிதர் சிவராம் (தராகி) நினைவு நாள் – 29.04.2005

சிவராம் இனப்பற்றும் நேர்மையும் துணிச்சலும் நிறைந்த ஊடகப்போராளியும் இராணுவ ஆய்வாளருமாவார். சிங்கள பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார். 29.04.2005 அன்று கடந்தி கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். சிவராம் (தர்மரத்தினம் சிவராம், பிறப்பு: 11.08.1959 – மட்டகளப்பு) அவரது நற்பணிகளைக் கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் என்ற அதியுயர் தமிழீழத் தேசிய விருதை வழங்கி கௌரவித்தார்.

லெப் கேணல் கலையழகன் வீரவணக்க நாள் – 18.04.2007

விடுதலைப் புலிகளின் பல்துறைசார் போராளியாக நிகழ்ந்த லெப். கேணல் கலையழகன் (சிவபாதசுந்தரம் ஞானசீலன், பிறப்பு: 02.09.1976 - யாழ்) அவர்கள்பல முக்கிய தாக்குதலுக்கு முன்னின்று செயற்பட்டவர். அனைத்துலகத் தொடர்பகத் துணைப் பொறுப்பாளராக செயற்பட்டு 18.04.2007 அன்று முல்லை மாவட்டத்தில் நிகழ்ந்த எதிர்பாராத வெடிவிபத்தின் போது வீரச்சாவடைந்தார்.

www.sangathamil.ca

ஆனந்தபுரம் எதிரிக்கு மட்டுமல்ல இந்த உலகிற்கும் தமிழரின் வீரத்தை உணர்த்திய இடம் -04.04.2009

முல்லைத்தீவு மாவட்டம் ஆனந்தபுரம் பகுதியில் வல்லாதிக்க அரசுகளின் உதவியுடன் சிங்களப்படைகள் மேற்கொண்ட (இரசாயன நச்சுக்குண்டு) தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மூத்த தளபதிகளான பிரிகேடியர்களான கடாபி, தீபன், மணிவண்ணன், துர்க்கா, விதுசா மற்றும் கேணல்களான நாகேஸ், அமுதா, தமிழ்ச்செல்வி, ஐயனார், சேரலாதன், அகிலேஸ், அன்ரன் உட்பட பலநூறு மாவீரர்களின் வீரவணக்க நாள்.

ஆனந்தபுர முற்றுகைச் சமர்

(01.04.2009 முதல் 05.04.2009 வரை)

இவர்களுடன் ஆனந்தபுர முற்றுகை சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களும் அடங்குவார்.

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னத இலட்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்துவிடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கின்றது ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிடுகின்றது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

ஏப்ரல் 19 2026
ஈகைச்சுடர்
அன்னை
பூபதி
அவர்களின்
38ஆம் ஆண்டு நினைவில்
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
Annai Poopathy Kanapathipillai
கிரான், மட்டக்களப்பு
தமிழீழம்
மண்ணில்: 03.11.1932
ஈகைச்சாவு: 19.04.1988
உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத்
தழுவிக்கொண்ட முதல் பெண்மணி
Annai Poopathy was the first woman to embrace
martyrdom in the fasting struggle for Thamileelam
முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா சிங்களப்படைகளின்
முற்றுகை உடைப்புச்சமரின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரரின்
17ஆம் ஆண்டு
வீரவணக்கம்
03-05.04.2009
பிரிகேடியர்
துர்க்கா
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகாமம், யாழ்
(24.03.1971 - 03.04.2009)
பிரிகேடியர்
மணிவண்ணன்
அழகரத்தினம் துஸ்யந்தன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)
பிரிகேடியர்
கடாபி
ஆறுமுகம் விநாயகமூர்த்தி
கொற்றாவத்தை - வதிரி, யாழ்
27.02.1968 - 04.04.2009
பிரிகேடியர்
விதுசா
கந்தையா ஞானபூரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)
பிரிகேடியர்
தீபன்
வேலாயுதபிள்ளை பகீரதகுமார்
கண்டாவளை, கிளிநொச்சி
(08.01.1966 -05.04.2009)
சங்கத்தமிழ்
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"